# இனியும் நான் இராமன்தான்

முகில் வண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் நான் இராமன் தான்...

முகில்வண்ணன்

காந்தளகம்

68, அண்ணா சாலை, சென்னை 600002
தொபே: 0091 44 28414505, 28513096
மின்னம்பலம்: www.tamilnool.com, www.thevaaram.org
மின்னஞ்சல்: tamilnool@tamilnool.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

**காந்தளகம்**

சிறப்பு வெளியீடு

ஆனி, 2041

தலைப்பு: இனியும் நான் இராமன்தான்
ஆசிரியர்: முகில்வண்ணன் வே. சண்முகநாதன்
நெசவு நிலைய வீதி
பாண்டிருப்பு 01
கல்முனை, இலங்கை.
உரிமை ஆசிரியருக்கு
முதற் பதிப்பு: ஆனி, 2041 (15. 6. 2010)
அபுதஎ ISBN: 978-81-897-0832-5
இந்தியாவில் விலை: ரூ. 75

அச்சிடல் தயாரிப்பு:
காந்தளகம், 68 அண்ணா சாலை, சென்னை 600002
தொபே: 0091 44 28414505, 28513096
மின்னம்பலம்: www.tamilnool.com, www.thevaaram.org
மின்னஞ்சல்: tamilnool@tamilnool.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஈழத்தின் மிகச் சிறந்த படைப்பாளிகளுள் ஒருவரான முகில்வண்ணனின் சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

22 சிறுகதைகள். அனைத்தும் ஏற்கனவே எட்டு இதழ் களில், சஞ்சிகைகளில் வெளிவந்தவை. அச்சிறுகதைகளுள் பரிசும் பணமுடிப்பும் பாராட்டும் புகழுரையும் பெற்றவை சில.

குறுகிய கால எல்லைக்குள்ளான ஒரு நிகழ்வு, ஒரு பின்னல், ஒரு கரு; இவற்றைக் கற்பனையாகக் கலந்து, அறநோக்கு மிளிரப் புனைந்துள்ளார் முகில்வண்ணன். ஒவ்வொரு சொல்லையும் அளந்து தந்துள்ளார்.

காலத்தின் நிலைக்கண்ணாடியாய், சமூக நிலையின் மறுபதிப்பாய், பேச்சு மொழியின் வட்டார, கால வெளிப்பா டாய், வாழ்வியலின் ஊடகமாய், மனித உணர்வுகளின் பெட்ட கமாய், அவரது ஒவ்வொரு கதையும் வாசிப்பவரை மெய்மறக் கச் செய்வன.

வாசிக்கத் தொடங்கிய உடனேயே, மேலும் வாசிக்க ஆர்வத்தைத் தூண்டும் வகையில் திருப்பங்களையும் எதிர் பார்ப்புகளையும் அடுக்கி அடுக்கித் தந்துள்ளார்.

அவர் படைப்பில், கண்ணகி குமுறுவாள்; இராமன் வருவார்; கைகேயி காட்டாவாள்; பாரதக் கதை குறிப்பாகும்; திருவள்ளுவர் கூறுவன வலம்வரும்; பழமொழிகள் உலாவும்; திரைப்படப் பாடல் வரிகள் அலைபாயும்; நாட்டார் பாடல் தெம்மாங்கு பாடும்.

நினைவலைகளில் மீண்டும் மீண்டும் வந்து செல்லும் சிறந்த சூழ்நிலைகளையும் கதாபாத்திரங்களையும் உள்வாங்க, உள்ளே செல்லுங்கள், சுவையுங்கள்.

*மறவன்புலவு க. சச்சிதானந்தன்*
*சென்னை, ஆனி 1, 2041 (15.6.2010)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**இனியும் நான் இராமன் தான்** என்னும் இச் சிறுகதைத் தொகுதி எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதியாகும். ஏற்கனவே வெளிவந்த முதலாவது தொகுதி, தனி ஒரு பத்திரிகையில் வெளிவந்த கதைகளை அடக்கியது. இக் கதைகள் அனைத்தும் 1993 முதல் 1997 வரையான காலப்பகுதியில் இலங்கையின் பல பத்திரிகைகளிலும் எழுதப்பட்டவை.

ஆரம்ப காலத்தில், 1966 முதல் எழுதிய சிறுகதைகளை மூன்றாவது தொகுதியாக வெளியிட எண்ணியுள்ளேன். காரணம் இக் கதைகளின் பிரதிகள் அனைத்தும் 1978 சூறாவளியின் போது அழிந்து விட்டன. இவற்றின் பிரதிகளைச் சுவடிகள் திணைக்களத்தில் தேடி எடுக்க வேண்டியுள்ளது.

இச் சிறுகதைத் தொகுதியில் வெளிவரும் சிறுகதைகள் *வீரகேசரி, தினகரன், சூடாமணி, தினத்தந்தி, தாய்நாடு, நவமணி, மித்திரன்* ஆகிய வாராந்திரப் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வெளிவந்த கதைகளாகும்.

இலங்கையில் புத்தகம் வெளியிடுவது எவ்வளவு சிரமமான காரியம் என்பது பலருக்கும் தெரிந்த விடயமாகும். அப்படியிருந்தும் புத்தகம் வெளியிடும் முயற்சியில் எண்பதுகளில் இலக்கியவாதி என்று கூறிக் கொண்ட வியாபாரி ஒருவரால் பணமும் இழந்து புத்தகமும் வெளியிட முடியாமல் போனது. அதன் பின்னரும் ஒரு முயற்சி ஓர் எழுத்தாளரினால் முளையிலேயே கிள்ளப்பட்டுவிட்டது.

தற்சமயம் புலம் பெயர்ந்து பிரான்ஸில் வாழும் எனது மகன் பிரேம்நந்தகுமார், அப்பா உயிரோடு இருக்கும் போதே அவரது புத்தகத்தை வெளியிட வேண்டும் என்ற அவாவினால் இப்போது இரு புத்தகங்களை எனது கைகளில் தவழ விட்டிருக்கிறார். அதனைத் தொடர்ந்து இது மூன்றாவது புத்தகத்துக்கான முயற்சியாகும்.

இனி இச் சிறுகதைத் தொகுதிக்கு வருவோம். இச் சிறுகதைத் தொகுதியின் தலைப்பாக இருக்கும் **இனியும் நான் இராமன் தான்** என்னும் சிறுகதை *வீரகேசரி* வார வெளியீட்டில் வெளிவந்தது. இக் கதை வெளிவந்த பின்னர் தொடர்ந்து மூன்று வாரங்களாக இக்கதை பற்றிய விமர்சனம் வெளிவந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃது ஒரு அசாதாரண நிகழ்வு. வழக்கமாக ஒரு வாரம் மட்டுமே கடிதங்கள் வெளிவரும். இதற்குக் காரணம் இக் கதை வழமைக்கு மாறாக எழுதப்பட்டிருக்கிறது என்று சிறுகதை ஆசிரியர்கள் கருதியதேயாகும்.

இவ்வாறான கதைகள் பெண்ணின் நிலையில் தான் வெளிவந் திருக்கின்றன. அதுவே யதார்த்தமும் சரியும். இது ஆணின் நிலையில் எழுதியிருப்பதால் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இக் கதாபாத்திரம் இராமனாக அல்ல இராவணனாகவும் இருப்பதற்குத் தகுதியற்றது என்று ஒருவர் கூறியிருந்தார்.

இவ்வாறான கருத்துகள் கூறப்பட்ட போதும் பிரான்ஸில் இருந்து எனக்கு வந்த தொலைபேசி அழைப்பு, இராவணனாக மட்டுமல்ல இராம னாகவும் இருக்கத் தகுதியில்லை; அதற்கு மேலாக வைக்க வேண்டியவன் கதாநாயகன் என்று கூறியது. அதற்கான காரணங்களும் முன்வைக்கப் பட்டன. அஃது இராமனை இழிவுபடுத்துபவை. ஆனால் நான் எடுத்துக் கொண்டது இராமன் ஏகபத்தினி விரதன் என்ற ஒரு கருத்தில் மட்டுமே. என்னுடைய பதிலுக்குப் பத்திரிகை இடந்தரவில்லை.

இதனை அடுத்துக் கருத்துக் கூறிய ஒரு பெண் எழுத்தாளருக்கு நான் நேரடியாகவே எழுதினேன். பின்னர் அக் கருத்து ஏற்றுக் கொள்ளப் பட்டது. அப்போதுதான் நான் எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். எனது கதைக்கு நானே ஒரு விமர்சனம் எழுதியிருப்பதாகப்பட்டது. இனி அது பகிரங்க விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட இருப்பதால் மேலும் கருத்துக் கூற விரும்பவில்லை.

*வீரகேசரி*யில் வெளிவந்த ஏனைய கதைகள் **சுமை தாங்கிகள் இளைப்பாறுகின்றன, சாகக் கொடுத்தாலும், குங்குமம் சிரிக்கிறது** என்பவையாகும்.

சில மொட்டுக்கள், மலராமலே கருகிவிடுவது போல் கலைஞனைப் பாதிக்கும் கருத்துகள், கருக்கள் காலத்தினால் பாதிக்கப்பட்டுக் கருவிலே அழிந்து போய் விடுவதும் உண்டு. அவ்வாறு சிலவற்றை நானும் எழுதா மலே விட்டிருக்கிறேன். ஒரு குறுநாவலும் இவ்வாறு வெட்டுக் குத்துக்கு ஆளாகி வெளிவந்திருக்கிறது. அதன் பின்னர் அவ்வாறானவற்றை எழுதாமலே விட்டிருக்கிறேன். அப்போது தான் பிரசுரத்துக்கு ஏற்றவை எனக் கணிக்கப்படுவதுண்டு. இதுவே இன்றைய யதார்த்தமாகும்.

இலங்கை, *தினகரனில்* வெளிவந்த கதை, **பெண்மை விழித்துக் கொண்ட போது**. இக் கதை, கற்பனையில் வந்த கதையல்ல; கனவில் வந்த கதையாகும். அதனைக் கனவிலேயே உருவகித்து அதற்கான தலைப்பையும் வைத்திருந்தேன். பின்னர் காலையில் எழுந்ததும் எழுதி முடித்தேன். இது நம் நாட்டில் அன்றாடம் பல குடும்பங்களிடையே நடக் கும் கதை தான். ஆண்டாண்டு காலமாகக் கணவனிடம் அடிபட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமையாக இருந்த மனைவியை, அவளின் ஒரு குழந்தை விழித்தெழ வைக்கிறாள். நண்பிகள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொன்ன அவளால், தன் குழந்தை கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. இனி எந்தச் சமாதானமும் சொல்ல முடியாது, தான் மாறியே ஆகவேண்டும் என்ற முடிவை எடுக்க வைக்கிறது குழந்தை.

வழமையாக கதைக்கான கரு, மனதில் உருவாகியதும் அது சரியான வடிவம் பெறும் வரை, மனதிலே அடிக்கடி சிந்தனையில் இருந்து கொண்டிருக்கும். முற்றாக உரிய வடிவம் பெற்றதும், எழுத்து உருவம் பெறும். ஆனால் சில கதைகள் வித்தியாசமாக உடனடியாகவே எழுத்துருவம் பெறுவதுண்டு. அவ்வாறுதான் இக்கதையும் இரவில் கனவில் தோன்றி பகலில் கதையாகியது.

*தினகரனில்* வெளிவந்த அடுத்த கதை, **நியாயப்படுத்த முடியாத நியாயங்கள்.**

இலங்கை *தினத்தந்தி*யில் வெளிவந்த கதைகள், **பிள்ளைக் கனியமுது** (ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற கதை), **வெள்ளைப் புறா வொன்று, மருமகளுக்கு** ஆகியன.

இதில், **பிள்ளைக் கனியமுது** குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கத்தி னால் குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதற்காக வைக்கப்பட்ட போட்டியில் பரிசு பெற்ற கதை. இதுவும் ஒரு வித்தியாசமான கதையாகும். குழந்தைக் கட்டுப்பாட்டைக் கேட்க, நான் குழந்தை இல்லாத ஒருத்தி, குழந்தை ஒன்றைப் பெறுவதற்கு எடுக்கும் வழமையான நடவடிக்கைகளை எடுத்துக் காட்டி எழுதியிருக்கிறேன். குழந்தை பெறுவதற்கு ஒரு பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் இக் கதையில் எடுத்துக் காட்டியதன் மூலம் பரிசைத் தட்டிக் கொண்டது.

*நவமணி* பத்திரிகையில் வெளிவந்த கதைகள் **கண்ணகியல்ல நாங்கள், கைகாட்டிகள் நடப்பதில்லை, மூலதனம், வித்துக்குள் விருட்சம், ஊமைக் காயம்** என்பன.

**மூலதனம்** என்னும் கதை நமது குடும்பங்களிடையே காணப்படும் வழக்கம் ஒன்றினை வைத்து எழுதப்பட்டது. மூத்தமகன்தான் தந்தைக்குப் பின் குடும்பப் பொறுப்பை ஏற்பது வழக்கம். அதனை மூலதனமாக வைத்து உழைத்துச் சாப்பிடுவது மட்டுமின்றி அவனது திருமணத்தையும் வியாபார மாக்கி, வரும் சீதனத்தின் மூலம் அவனது சகோதரிகளை நிறைவேற்றுவ தும் வழக்காகும். இது சீதனத்தை எதிர்பார்க்கும் ஆண்களால் அல்லது சீதனம் கொடுத்து நல்ல மாப்பிள்ளை எடுக்க வேண்டும் என்று எண்ணும் பெற்றோ ரால் ஏற்பட்டதாக இருக்கலாம். ஆனால் அந்த ஆணுக்கு வயது ஏறுவதையும் அவனும் குடும்ப வாழ்க்கை வாழ வேண்டும் என்பதையும் பலரும் சிந்திப்பதில்லை. முடிவு இப்படியும் அமையலாம் என்பதையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதை கூறி நிற்கிறது.

*மித்திரன்* வாரமலரில் வெளிவந்த சிறு கதைகள் ஐந்து இச் சிறு கதைத் தொகுதியில் இடம் பெற்றிருக்கின்றன.

இப்போது பிறக்கும் குழந்தைகள் நுண்ணறிவுடையவர்களாக இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அவர்களின் பேச்சிலும் செயலிலும் புத்திக் கூர்மையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. பல சமயத்தில் நாம் வியந்து போகக் கூடியளவுக்கு அவை அமைந்து விடுவதும் உண்டு. இவ்வாறான பல நிகழ்வுகள் என்னைப் பாதிப்படையச் செய்தி ருக்கின்றன. அதன் விளைவே நாம் ஏற்கனவே கண்ட **பெண்மை விழித் துக் கொண்ட போது** என்ற சிறுகதையில் வந்த சிறுமி வித்தியாவும்; இது போன்றுதான் *மித்திரன்* கதைகளில் **அப்பா பாவம்** என்னும் கதையில் வரும் பவானியும். இச் சிறுமி தனது குடும்ப நிலையை உணர்ந்து தந்தை யின் அடியையும் வாங்கிக்கொண்டு எனது கண்களைக் கலங்க வைக்கிறாள்.

இவற்றைவிட ஏனைய கதைகள் *சூடாமணி, தாய்நாடு, சங்கமம்* போன்ற பத்திரிகைகளில் வெளிவந்தவை. அடுத்தது *அகிலம்* சஞ்சி கையில் ஆறுதல் பரிசு பெற்ற கதை **மீட்சி.** இந்தப் பத்திரிகைகள் சஞ்சி கைகள் அற்ப ஆயுளிலே வெளிவராமல் நின்றுவிட்டவையாகும்.

இனி வாசகர்களும் இலக்கியத் திறனாய்வாளர்களும் இந்தக் குறிப் புகளை வைத்துக் கொண்டு தங்கள் ஆய்வுகளையும் விமர்சனங்களையும் பக்கச் சார்பின்றி வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

இச் சிறுகதைத் தொகுதி சிறப்பாக வெளிவர முன்னின்று உழைத்த பதிப்பகத்தார், வெளியீட்டாளர், ஒப்பு நோக்காளர் அத்துடன் அணிந்துரை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

***முகில்வண்ணன் வே.சண்முகநாதன்***
***நெசவு நிலைய வீதி,***
***பாண்டிருப்பு 01,***
***கல்முனை,***
***இலங்கை.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியும் நான் இராமன் தான்

### சிறுகதைக்குச் *சிறுகதை எழுத்தாளர்*

***செல்வி றூத்சந்திரிகா ஆத்மராஜா* எழுதிய கருத்துக்கள் இவை:**

இனிய செந்தமிழ் வந்தனங்களோடு, தங்களுக்கு எழுதிக் கொள்வது..

தங்கள் மடல் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி.

தங்களை நான் எனது வயதை ஒத்த ஓர் இளைய வராகவே கருதினேன், **இனியும் நான் இராமன் தான்** கண்ட போது. ஆனால் தாங்கள் என் தந்தைக்கு ஒப்பானவர் என்பதை அதிர்ச்சியுடன் அறிந்து கொண்டேன்.

உங்கள் எழுத்து, உயிர்த்துடிப்போடு கதை சொல்லும் பாங்கு, அதில் கதம்பமாயிருக்கும் கருப்பொருளை ஜீவிதத் துடிப்போடு விறுவிறுப்பாய், சஸ்பென்ஸ், பரபரப்பான க்ளைமாக்ஸ்ஸோடு நீங்கள் நகர்த்திய பாணி, எல்லாமே என்னுள் பெரும் பிரமிப்பை உண்டு பண்ணின. அக்கதையால் ஆகர்ஷிக்கப்பட்டேன். உண்மையில் நான் இன்றுவரை பார்த்த சிறுகதைகளுள் என்னுள் மிகவும் தாக்கத்தை, அல்லது பிரமிப்பை உண்டு பண்ணியது, தங்கள் **இனியும் நான் இராமன் தான்** சிறுகதையே. கிட்டத்தட்டப் பத்துத் தடவைகள் ஒருவாரம் தொடர்ந்து வாசித்து வாசித்துப் பார்த்தேன். அக்கதையால் மிகவும் ஈர்க்கப் பட்டேன் என்பதே மெய்.

புதிய பார்வைக்கும், புதிய புரிதலுக்கும், புதிய சமூகக் கட்டமைப்பிற்கும் வித்திடக் கூடியவாறு மிக நேர்த்தியாகச் செய்திருக்கிறீர்கள்.

இக்கதை வாசகர் மத்தியில் அதிகமான பரபரப்பை ஏற்ப டுத்தி, தாக்கத்தை ஏற்படுத்தி, கணிசமாக விமர்சிக்கப் பட்டது. இதுவே உங்கள் எதிர்பார்ப்பிற்கும் நீங்கள் கையாண்ட உத்திக்குமான வெற்றி எனக் கருதுகிறேன். புதிய சமூகப் பார்வையை விதைத்த இக்கதை வடிவம் மிக உன்னதமான தெனவே கருதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனது அபிப்பிராயப்படி....**

இது பொய்யும் புனைவுமான ஒரு சிறுகதையல்ல, நிகழ்வின் பரிமாணம். ஓர் உண்மைச் சம்பவத்தினை ஜீவிதத்துடிப்போடு காட்டியிருக்கிறீர்கள் என்பதே மெய். நான் **தெளிவு** என்னும் ஒரு சிறுகதையை எழுதித் *தொடுவானம்* சஞ்சிகைக்கு அனுப்ப முனைந்த அன்றே தங்கள் **இனியும் நான் இராமன் தான்** கண்டு பேரதிர்ச்சி யடைந்தேன்.

இருவருடைய கருவூலமும், கதை நகர்த்திய பாணியும் எள்ளளவேனும் முரண்பட்டிருக்கவில்லை. ஆகவே நான் எழுதிய கதையைச் சகலவிதத்திலும் ஒத்திருந்த தங்கள் கதையைக் கண்டு கலவரப்பட்டேன்.

முகில்வண்ணன் எனும் புனைப்பெயரில் சம்பவ நபரே எழுதியதாகச் சந்தேகப்பட்டேன். ஏனெனில் நான் எழுதிய, உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட, கதையின் கதாநாயகன் ஒரு சிறந்த எழுத்தாளன், இலக்கியவாதி. எனவே ஜெயகாந்தனின், **சில நேரங்களில் சில மனிதர்** ***களில்*** வரும் கங்கா எனும் பெண், கதை ஒன்றைக் கண்டு, அதைத் தன் சரிதமாக எண்ணி வியந்து, கலவரப் பட்டு எழுதியவரைத் தேடி இறுதியிலே தான் தேடிக் கொண்டி ருப்பவரையே கண்டடைந்தது போலவொரு சம்பவமாய் எண்ணினேன். ஆனால் துரதிஷ்ட வசமாக நான் நினைத் ததற்கும் நிகழ்ந்துவிட்டதற்கும் முரண்பாட்டைக் காண்கிறேன்.

முகில்வண்ணன், ஓர் இளையவராகவும் கதையின் படைப்பாளியாயும், கதாநாயகனாகவும் உள்ளார் எனவும் எண்ணினேன், விமர்சித்தேன். இதுவே என் உண்மை நிலை. நான் நன்கு அறிந்த ஒரு சம்பவமும், எனக்கு நன்கு பரிச்சயமான இருவருமே தங்கள் கதையின் கருவூலங்கள் என்பது இன்னமும் என் அபிப்பிராயம்.

**எனது விமர்சனம் பற்றி....**

நான் இக்கதை புனைந்த தங்கள் உயர்ந்த நோக்கத்தை உணருகின்றேன். உறவுகள் மலினப்படுத்தப்படுவதே யதார்த் தமாகிப் போன சமகாலத்தில் உன்னதமான ஒரு பரஸ்பர அன்பின் அடிப்படையிலான மனித நாகரீகத்தைக் காட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சமூகப் பார்வைக்கு வித்திட்டிருக்கிறீர்கள்.

சுவர்ணா ஜெகனைச் சந்திக்கும் போதும், நட்புறவைப் பேணும் போதும், ஒரு புனிதமான நோக்கத்தையும், தெளிவான வழிமுறையையுமே கொண்டிருந்தாள் என்பது புலனாகிறது.

ஜெகனின் சுயத்தை, வாழ்வியல் அம்சங்களைப் பற்றி அறியாத நிலையில், சுவர்ணா ஜெகனுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டது, பரஸ்பர நம்பிக்கையிலான மனித நாகரீகத்தின் வெளிப்பாடாகும். அன்பினதும் உறவினதும் உள்ளார்ந்த விழுமியங்களை உணர்ந்த சுவர்ணாவின் எதிர்பார்ப்புகளைப் பச்சையாகக் கொச்சைப் படுத்தியது எதன் அடிப்படையிலான மனித நாகரீகம்?

சுவர்ணாவை விடத் தன் மனைவியையே கௌரவித்துக் காட்டியிருக்கிறார். ஜெகன் நல்லவர், பண்பானவர், பெண்மையைப் போற்றுகின்றவர்தான் எனினும் தனிமரமாக நிற்கும் சுவர்ணா எனும் நல்ல நட்பினை, உறவினை, ஆத்மார்த்த ஸ்நேகத்தை இழக்கத் துணியாது, அதேவேளை, தன்னைப் பற்றிய உயர் மதிப்பீட்டை வைத்து, சுவர்ணாவின் உறவின் நோக்கத்தைப் பலவீனமாகக் காட்டி, தான் நியாயவாதியாகவும், சுவர்ணாவின் எதிர்பார்ப்பு உணர்ச்சிபூர்வமானது மட்டுமே எனவும் காட்டியது துரதிஷ்டவசமானதே.

நீங்கள் ஜெகனாகவே உங்கள் ஆதிக்கத்தைக் காட்டி ஆண்பாலிலே, அதுவும் ஒரு பக்கவாதக்காரனாகவே படைத்திருப்பதுதான், என்னுள் விமர்சனம் எழுதத் தூண்டியது. மரபு ரீதியான ஒற்றைக்கண் பார்வையாகப் பார்த்தீர்கள் என்பதே என் குறை. இதுவே என் வாதம். நியாயமும் கூட. உங்கள் பக்க நியாயங்களை இதற்குப் பதிலாக எழுதும் போது குறிப்பிடுங்கள்.

நான் உங்கள் பாடசாலை நண்பரின் மகளே தான். வெகுசனத் தொடர்பு டிப்ளோமா, சட்ட டிப்ளோமா கல்வியாளராகவும் *தொடுவானம்* சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவும் தற்போது உள்ளேன். *தொடுவானம்* அனுப்பிவைக்கின்றேன் கிடைத்ததும் நிறைவாக விமர்சியுங்கள். எனது முகவரி மேலே உள்ளது. ஆக்கங்களும் அனுப்புங்கள். தங்கள் இலக்கிய ஸ்நேகம், அறிமுகம் கிடைத்ததையிட்டுப் பெரும் உவகை அடைகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேன். தங்கள் எழுத்தாற்றலை, கதை தரும் பாணியை மிகவும் நேசிக்கிறேன். இலக்கிய வளர்ச்சிப் பாதையில் பல மைல்கற்கள் தாண்டி தாங்கள் சாதனை காண வாழ்த்துகிறேன்.

**பிரியங்களுடன்,**

***றூத்சந்திரிகா ஆத்மராஜா***

***02.03.97.***

# நன்றி சொல்ல வேண்டும்

இச் சிறுகதைத் தொகுதியில் வெளிவரும் சிறுகதைகளை 1993இல் இருந்து 1997 வரை அன்புடன் வரவேற்றுக் களம் தந்து பிரசுரித்து ஆதரவு தந்தவை பின்வரும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளுமாகும்.

1. *வீரகேசரி*
2. *தினகரன்*
3. *நவமணி*
4. *மித்திரன்*
5. *சங்கமம்*
6. *தாய் நாடு*
7. *தினத்தந்தி*
8. *சூடாமணி*
9. *அகிலம்*

இவை அனைத்துக்கும் என் மனமார்ந்த நன்றிகளை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றில் சில இப்போது வெளிவராவிட்டாலும் அவற்றிற்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பத்திரிகை ஆசிரியர்களுக்கும் அதன் நிறுவனங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**இங்ஙனம்**

***முகில்வண்ணன் வே.சண்முகநாதன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை

பக்க எண்.

| | |
|---|---|
| பதிப்புரை | 3 |
| முன்னுரை | 4 |
| கருத்துரை – செல்வி றூத்சந்திரிகா ஆத்மராஜா | 8 |
| நன்றி சொல்ல வேண்டும் | 11 |
| ***தினத்தந்தி*** | |
| 1. பிள்ளைக் கனியமுது | 27 |
| 2. வெள்ளைப் புறா ஒன்று | 91 |
| 3. மருமகளுக்கு | 113 |
| ***தினகரன்*** | |
| 4. பெண்மை விழித்துக் கொண்ட போது | 35 |
| 5. நியாயப்படுத்த முடியாத நியாயங்கள் | 99 |
| ***சூடாமணி*** | |
| 6. அவளா சொன்னாள்? | 44 |
| ***தாய் நாடு*** | |
| 7. சொல்லத் துடிக்குது மனசு | 53 |
| ***வீரகேசரி*** | |
| 8. இளைப்பாறும் சுமை தாங்கிகள் | 59 |
| 9. இனியும் நான் இராமன்தான் | 13 |
| 10. சாகக் கொடுத்தாலும் | 74 |
| 11. குங்குமம் சிரிக்கிறது | 121 |
| ***மித்திரன்*** | |
| 12. சொல்லியழ யாருமில்லை | 67 |
| 13. அப்பாவும் மகனும் | 147 |
| 14. அப்பா பாவம் | 86 |
| 15. எனக்கு மருமகள் நீதான் | 159 |
| 16. அவள் | 169 |
| ***அகிலம்*** | |
| 17. மீட்சி | 175 |
| ***நவமணி*** | |
| 18. கண்ணகியல்ல நாங்கள் | 105 |
| 19. கைகாட்டிகள் நடப்பதில்லை | 139 |
| 20. மூலதனம் | 153 |
| 21. வித்துக்குள் விருட்சம் | 165 |
| 22. ஊமைக்காயம் | 183 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீரகேசரி*, பெப்ரவரி 1997

# இனியும் நான் இராமன் தான்

சுவர்ணாவுக்கு பெரும் சங்கடமாகப் போய் விட்டது. ஜெகனின் வருகையைத் தடுக்கவும் முடியவில்லை. விட்டு விடவும் முடியவில்லை. வீட்டாருக்குப் பதில் சொல்லவும் முடியவில்லை.

அப்படி என்ன உறவு?

ஒன்றுமில்லைத்தான். இல்லை என்றால் ஏன் அப்படி? ஒரு நாள் ரெலிபோனில் கதைக்கவில்லை என்றால் அன்று முழுவதும் சாப்பிடாத மாதிரி ஒரு நடுக்கம். ஒரு நாள் சந்திக்கவில்லை என்றால் ஒரு நாள் முழுவதும் கண் விழித்த மாதிரி ஒரு சோர்வு.

நேற்றுப் போல் இருக்கிறது, ஆனால் ஒரு வருடம் சென்றுவிட்டது.

அன்று, அவனது காரியாலயத்துக்குத் தனது கம்பனி விடயமாகக் கதைக்கச் சென்றிருந்தாள். முடிவில் ஜெகனு டன், உயர்ந்த பதவியில் இருக்கும் அவனுடன், கதைத்தே காரியத்தை முடிக்க வேண்டியிருந்தது.

காரியாலயம் மூடும் நேரத்தையும் கடந்து விட்டது. பஸ் ஸைப் பிடிக்க வேண்டும் என்று ஆலாய்ப் பறந்தாள் சுவர்ணா.

எதற்கு அவசரம்? காரியம் முடிந்துவிட்டது, மகிழ்ச்சி தானே? "நானே காரில் றொப் பண்ணி விடுகிறேன். மிஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவர் குட் நேம் பிளீஸ்.."

"சுவர்ணா"

"தங்கமான பெயர்..."

"உங்களுக்கேன் சிரமம்?"

"எங்கள் பிஸ்னஸ் பாட்னர் ஒருவருக்கு, இந்த உதவி யைச் செய்யவில்லை என்றால் எப்படி? எங்கள் கம்பனி கூட என்மீது கோபப்படலாம் அதுவும் இப்படி ஓர் அழகான பெண் ணுக்கு," என்று அவளை வெட்கப்பட வைத்து விட்டு, வெளியே வந்து காரை எடுத்து வந்து, அவள் முன் நிறுத்திக் கதவையும் திறந்து விட்டான்.

சுவர்ணா, கார் முன் சீட்டில் அவனுடன் பயணித்துக் கொண்டிருந்த போதும் அவன் கேட்டதும் விலாசத்தைக் கூறி விட்டு மௌனித்துவிட்டாள்.

சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. காரினுள் இழையோடிக் கொண்டிருந்த மெல்லிய இசையைப் பரப்பிக் கொண்டிருந்த, கசட்டின் இயக்கத்தை நிறுத்திய ஜெகன் கேட்டான்.

"ஏன் மௌனம்?...சற்று நேரத்துக்கு முன்னர் நான் இப்படி ஒருவரைப் பெற்ற கம்பனி மீது பொறாமைப்பட் டேன். இப்போது..."

"ஏன் உங்களைத் திணற அடித்து விட்டேனா?" என்று கேட்டுவிட்டு கிளுக் என்று சிரித்து விட்டு நாக்கைக் கடித் துக் கொண்டாள்.

"இல்லை, திறமையைக் கண்டு வியந்து போனேன்."

"நான் வாயைத் திறந்தால் வீட்டில் எல்லோரும் தம் வாயை மூடிவிடுவார்கள்."

"அப்படி என்றால்..?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் வாயாடி என்று பெயர் பெற்றவள்."

"பேச்சில் உங்களை வெல்ல முடியாதாக்கும்; எனக்கும் பேச்சுத் துணைக்கு நல்லதுதான்."

வீட்டுக்கு வந்த போது, தாய் தகப்பனுக்கு அறிமுகம் செய்து வைத்து, சிற்றுண்டி தேனீர் கொடுத்து, அனுப்பினாள் சுவர்ணா.

"தாங்ஸ்.. இதற்காகவே தினசரி வரலாம் போல் இருக்கிறது.." என்று கூறிச் சென்றான் ஜெகன்.

ஒரு பேச்சுக்குத்தான் இப்படிச் சொல்லிச் செல்கிறான் என்றுதான் அவள் எண்ணினாள்.

இப்படி ஆரம்பித்த உறவு இது.

நாள் செல்லச் செல்ல பேச்சுத்துணை என்று தேடி வருவதும், சிற்றுண்டி, தேனீருக்குப் பின்னர் இரவு 6-7 மணிவரை இருந்து கதைத்து விட்டுச் செல்வதும் வழக்கமாகி விட்டது. வழக்கமான கடும் உழைப்புக்குப் பின்னர் இது ஒரு றிலாக்ஸாக இருந்தது.

சில வேளைகளில் நேரே கோல்பேஸ் கடற்கரைக்குச் சென்று கதைத்து இருந்துவிட்டு வருவதும் உண்டு.

பெற்றோர் கண்டிக்கவில்லையா? என்று நீங்கள் கேட்பதிலும் நியாயம் இருக்கிறது..

முப்பது வயதைத் தாண்டிவிட்ட பெண்; சீதனம் இல்லாமல், கரையேறாமல், இன்னும் சீதனத்துக்காக உழைத்துக் கொண்டிருக்கும் போது, அந்தக் கவலை பெற்றோருக்குத் தான் தெரியும். முகமலர்ச்சியுடன் அவர்கள் வரவேற்று உபசரித்ததில் வியப்பொன்றும் இல்லை.

சுவர்ணா பேச்சுவாக்கில் தன் சுய விபரங்களை அவனிடம் ஒப்புவித்து விட்டாள். அவள் கூற முன்னரே நெற்றியில் குங்குமமும் கழுத்தில் தாலியும் இல்லை என்றதும் அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். வயதைக் கணிக்க முடியாமல் இளமை தடுத்து இருக்கலாம் என்றாலும் சீதனப் பேய் தடுப்பதால் வயது ஏறிக் கொண்டுதான் இருந்தது.

இப்படியாவது ஒரு சம்பந்தம் ஏற்பட்டுவிடாதா? எத்தனை ஆண்கள் தங்கள் குடும்பப் பொறுப்பினால் 40 வயது வரை கூடத் திருமணம் முடிக்காமல் இருக்கவில்லையா? ஜெகனுக்கு 40 வயது இருக்கும், என்ற அவர்களது அனுமானம் அப்படி எண்ண வைத்தது. காதல் என்று வந்துவிட்டால் சீதனத்தில் கடுமையாக இருக்கமாட்டார்கள். பையனும் காருமாக உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறான். அதனால் சுலபமாக இருக்கும் என்று எண்ணி ஏங்கின அந்தப் பெற்ற உள்ளங்கள்.

இதுவரைக்கும் அவனது குடும்ப நிலவரங்களை அவன் சொல்லவில்லை; அவளும் கேட்கவில்லை. அறிய வேண்டும் என்று விரும்பி ஒரு நாள் கேட்டாள்.

"என்னை உங்கள் வீட்டுக்கு ஒருநாள் அழைத்துப் போங்களேன்" என்று.

"வேறு வினையே வேண்டாம், ஆபீஸ் தொடர்புகள் வீடு வரைக்கும் வந்தால், கிடைக்கும் நிம்மதியையும் இழந்து விடுவேன்" என்றான்.

அவளுக்கு இப்போதும் விளங்கவில்லை. சில ஆண்கள் தங்கள் குடும்ப நிலையை மூடிமறைப்பது, கிடைக்கும் சந்தர்ப்பங்கள் நழுவிப் போய்விடும் என்பதாக இருக்கலாம்? ஜெகனும் அப்படித்தான் தன்னிடம் சொல்லாமல் மறைக்கிறாரோ? என்று எண்ணினாள் சுவர்ணா.

ஆண்களை மடக்குவதுதான் பெண்களுக்கு கைவந்த கலையாயிற்றே! சுவர்ணா அதில் வெற்றி பெற்றாள். ஆனால் அதற்கிடையில் மாதம் ஆறு கடந்து விட்டது. ஜெகன் மணம் முடித்தவன் என்றும் அவனுக்கு ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகள் உண்டு என்றும் அறிந்து கொண்டாள்.

எண்ணத்தில் இடிவிழுந்தாலும் அதிர்ச்சியைக்காட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாமல் சர்வ சாதாரணமாக எடுத்துக் கொண்டவள் போல் காட்டிக் கொண்டாள். இது அவனிடம் இருந்து வேறு பல விடயங்களை அறிந்து கொள்ள உதவும். மற்றது அறிந்தும் என்ன, அவனை விட்டுப்பிரிய முடியவில்லை. அத்தனைக்கு அன்பாக அக்கறையாக நடக்கிறானே. அப்படி இல்லை என்றால் இப்படி இருக்குமோ.. என்ற எண்ணம் வேறு அவளை அலைக்கழித்தது.

பெற்றோருக்கும் சொல்லவில்லை. அவர்கள் ஆசையில் ஏன் மண்ணை அள்ளிப் போடுவான்? என்றுதான் சொல்ல வில்லை. ஏதாவது ஒரு உறவை நிச்சயப்படுத்திக் கொண் டுதான் சொல்ல வேண்டும் என்று எண்ணி இருந்தாள்.

நாட்கள் நகர்ந்தன.

ஒன்றும் இல்லாத உறவாக இருந்தாலும் விலகிக் கொள்ள முடியவில்லை. இலேசான ஓர் ஒளிக்கீற்றுப் போல ஓர் எதிர்பார்ப்பு வேறு. பெற்றவர்களுக்குப் பொறுக்க முடியவில்லை. போதுமே 30 வருடங்கள் பொறுத்தது. அவரி டம் கேட்டு முடிவை எடுக்கச் சொல்லி சுவர்ணாவை நெருக் கினார்கள்.

சுவர்ணா எப்படிக் கேட்பாள்? பெற்றவர்களுக்கு என்ன வென்று சொல்வாள்? அவர் ஏற்கனவே மணம் முடித்து, இரு குழந்தைகளுக்குத் தகப்பன் என்று.

இருந்தாலும் அவளும் கேட்டுத் தெளிய விரும்பினாள். ஏன்? எதற்கு? இனி எப்படி? என்று அறிய விரும்பினாள். அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஜெகன் ரெலிபோனில் பேசிவிட்டுத்தான் வந்தான். சுவர்ணா காரியாலய முகப்பில் வழமை போல் அவனுக்காகக் காத்திருக்கவில்லை. ஏமாற்றத்துடன் கோல்பேஸ் சென்று இருந்துவிட்டு வீடு திரும்பி விட்டான்.

அடுத்த நாளும் அவளுடன் கதைக்க அவள் கிடைக்க வில்லை. அதற்கு அடுத்த நாள், அவனே காரியாலய முகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில் காவல் இருந்தான்.

சுவர்ணாவால் காணாது செல்ல முடியவில்லை. தோழிகள் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். வழமைக்கு மாறாக மௌனத்துடன் இரைச்சல் நிறைந்த கோல்பேஸ் கடற்கரைக்கு வந்தார்கள்.

சுவர்ணா ஒரு மாதிரியாக முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள்.

இதுவரை அவளைத் தொடாத, மிக அண்மையில் கூட உட்காராத ஜெகன், சற்று நேர மௌனத்தின் பின்னர் அவளருகே உட்கார்ந்தான்.

"என்ன நடந்தது சுவர்ணாவுக்கு நான் அறியலாமா?"

"எனக்கு ஒன்று தெரிந்தாக வேண்டும்?" என்று படபடத்தாள்.

"என்ன தெரிய வேண்டும் என்று கேட்டால் சொல்லுவனே.."

"நீங்கள் எதற்காக எனது வீட்டுக்கு வந்து போகிறீர்கள்? என்னுடன் ஏன் தொடர்பு வைத்து இருக்கிறீர்கள்?" சுவர்ணா கேட்டு விட்டாள். இதுவரை கேட்க முடியாமல் தவிக்க வைத்தவை. அறிய வேண்டும் என்று பல மாதங்களாகத் தேக்கி வைத்திருந்த கேள்விகள் இவை.

அவன் சிரித்தான் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்.

அவள் சீரியஸாகக் கேட்கிறாள். அவன் வினோதமாகச் சிரிக்கிறான். அவளுக்கு அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

"நான் சீரியஸாகக் கேட்கிறேன்; நீங்கள் சிரிக்கிறீர்கள்.."

"அப்படியா..?"

"நான் மட்டுமா, அக்கம் பக்கத்தவர்களும் கேட்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்."

"ஊர்ப் புறங்களில் தான் இப்படியான அவதூறு பேசு கிறார்கள் என்றால் கொழும்பு மாநகரிலுமா? நாகரிகமான நகர்ப்புறங்களில் புத்தி ஜீவிகள் புரிந்து கொள்வார்கள் என்று இருந்தேன். இங்கும் இப்படியா?"

"நம்மைச் சுற்றி நாலுபேர் எமது சமூகம் என்று இருக் கிறார்கள். அவர்கள் பார்வை எப்போதும் நம்மீது இருக்கும். அவர்களது அவதானமும் கண்காணிப்புமே ஒவ்வொரு தனி மனிதனையும் மனுசியையும் நல்வழிப்படுத்தக் காரணமாக இருக்கின்றன. இல்லாவிட்டால் ஒவ்வொருவரும் தன்னிச் சையாக காட்டுமிராண்டித்தனமாகக் கூட நடக்கலாம். கூட்ட மைப்பாக வாழும் சமுதாயத்தின் அனுகூலம் இதுவல்லவா?"

"உன்னிடம் எனக்குப் பிடித்த அம்சமே இதுதானே. இதனாலன்றோ உன்னை நாடிவரத் தொடங்கினேன். இப் போது, நீ, நமது உறவு எப்படியானது? என்று அறிந்து கொள்ள விரும்புகிறாய். இது வெரி சிம்பிள். வெறும் நட்பு ரீதியானது தான். உடன் பிறவாத சகோதரி என்று நான் சொல்லவில்லை. அதை விட மேலாக நான் உன்னைக் காத லிக்கவும் இல்லை. இப்படி எல்லாம் இல்லை என்றால், நெருக்கமாக எவ்வளவோ விடயங்களைப் பேசிப் பரிமாறிக் கொண்டோம் என்று நினைக்கலாம். வெறும் நட்புத்தான். வேறேதும் வித்தியாசமாக இதுவரை நான் நடந்ததில்லையே."

"வெறும் நட்புத்தான் வேண்டும் என்றால் நீங்கள் ஒரு ஆணைத் தேடிப் பிடித்திருக்கலாமே நான் ஒரு பெண். என்னை.." அவன் மேலே பேச விடவில்லை.

"அதுவா, போட்டியும் பொறாமையும் மிக்க இந்த உலகில், சுயநலம் மிக்க ஆண்கள் பலருடன் நட்புக் கொண் டிருக்கிறேன். அவர்கள் என்னுடன் கூடிக் குடித்துக் கும் மாளம் இட்டிருக்கிறார்கள். எனது ஏக்கத்தைத் தீர்க்க அவர்க ளால் முடியவில்லை.

"அன்பு, பரஸ்பர அன்பு, ஒன்றையும் எதிர்பாராத மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயம் மிக்க அன்பு, அதைப் பெண்கள் தான் தரமுடியும் என்று நம்பினேன். நீயும் நிரூபித்தாய். நட்புக்குப் பெண்ணே பாதுகாப்பானவள், ரகசியம் பேணக் கூடியவள் என்பது எனது அபிப்பிராயம்.

"அது சரி, ஒன்று கேட்கிறேன்.. இல்லைத் தெரியாமல் தான் கேட்கிறேன். பெண்ணுரிமை சமத்துவம் சரிநிகர் சமானம் பற்றி வாய் கிழியக் கத்துகிறோமே; இதற்கு நானும் பல பங்களிப்பைச் செய்திருக்கிறேன். ஓர் ஆணுடன் ஒரு பெண், ஆணைப் போல் சமத்துவமாக நட்புக் கொள்வதை ஏன் ஜீரணிக்க முடிவதில்லை? அந்த வகையில் எந்த வேறு பாட்டைக் காண்கிறீர்கள்?" என்று கேட்டான் ஜெகன்.

"ஓர் ஆணும் பெண்ணும், அவர்கள் அண்ணன் தங்கை யாக இருந்தாலும் கூட, அதைப் பொருட்படுத்தாமல் கண வன் மனைவி அல்லது காதலர்கள் என்ற கண்ணோட்டத்தில் தான் இன்று பலரும் பார்க்கிறார்கள். உடன் பிறவாத தங்கை என்று எவருடனும் பழக விடமாட்டார்கள். இதை எப்படி வேறுபடுத்திக் காட்ட முடியும். இந்த மனநிலை மாறாத வரை ஒரு ஆணும் பெண்ணும் பழகினால் அது கல்யாணத்தில் முடிவது தானே இயல்பு?"

"ஒரு பெண்ணான நீயே இப்படிச் சொன்னால், ஆணுக் குப் பெண் சரிநிகர் சமானம் என்ற சமநிலை அடிபட்டுப் போகும். அதற்காகப் போடும் கூட்டமும் கூச்சலும் வெறும் போலியாகிவிடும். இயற்கையை இதுவரை இருந்ததை உடைத்து மாற்றி, புதுமை செய்யவே நாம் விழைகிறோம் என்றால் அதற்கான நமது பங்களிப்பாக எதையாவது செய்ய வேண்டாமா? ஓ.கே. சமுதாய சமயக் கட்டுப்பாடுகளை மீற முடியாதவரை அவை நமக்குச் சாத்தியப் படாது என்றே தோன்றுகிறது. சரி இனி நமது விடயத்துக்கு வருவோம்..

"சுவர்ணா, உனக்குத் தெரியும், நான் ஏற்கனவே மணம் முடித்தவன், எனக்கு இரண்டு குழந்தைகளும் இருக்கின்றன என்று, அப்படி ஆரம்பத்தில் தெரியாவிட்டாலும் பின்னர் தெரிந்த பிறகும் உன்னிடம் ஏதும் மாற்றத்தை நான் காண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. நீ என்னை வெறுத்து ஒதுக்கவில்லை. சோ, நான் உன்னை ஒரு சின்ன வீட்டுக்குச் செட் அப் செய்வதாகக் கூட நீ எண்ணி இருந்திருக்கலாம்."

"நான்.."

அவளைப் பேசவிடாமல் கையமர்த்திய ஜெகன் பேசினான்..

"நீ வெளியே சொல்ல விரும்பாவிட்டாலும்.. உனது விருப்பம் அதுவாக இருக்கும் என்பதை ஏற்றுக் கொள்ளத் தயங்கினாலும்.. உண்மை அதுதான். நான் சின்ன வீடு செட் அப் செய்வதாக இருந்தாலும், அதற்கும் ஒத்துவர நீ தயாராக இருந்திருக்கிறாய் என்பது எனக்கு இப்போது புரிகிறது..

"அது எனது பிழை என்று நான் கூற வரவில்லை. இந்த நிலையிலேனும் நான் என்னை வெளிப்படுத்தவில்லை என்றால் நான் உனக்குத் துரோகம் செய்தவனாகி விடுவேன். எனது நலனுக்காக, நான் உன்னைச் சீரழிக்க விரும்பவில்லை. ஏனெனில், என்னதான் புதுமையாகப் பேசினாலும் பாரம் பரியம், சமுதாய அமைப்பு என்ற வட்டத்தை விட்டு நீயும் வர முடியாதவள்; ஒரு சராசரிப் பெண் என்றுதான் எனக்கு விளங்குகின்றது. பெண்களின் இயக்கங்கள் பெரிய அளவில் வெற்றி பெறமுடியாமல் போனதற்கு இதுவும் ஒரு காரணம் தான். எப்படியாயினும் பெண் ஒரு ஆணை மணம் முடித்துக் குடும்பம் நடத்த வேண்டிய தேவை சில கட்டுப்பாடுகளுக் குக் காரணமாக இருக்கலாம்..

"அது கிடக்கட்டும். நான் இந்த நிலையில் ஏன் உன் னுடன் மெனக்கெடுகிறேன் என்று நீ வியக்கலாம் அதற்குத் தான் வருகின்றேன்.

"எனது திருமணம் பேசிச் செய்த திருமணம். ஒரு தொழி லதிபரின் மகள்; கொழுத்த சீதனம்; நான் கேட்காமலே தரப்பட்டது இந்தக் காரும்; அவள் நல்ல அழகி; கொத்துக் குள் இருந்த மாம்பழம் போல. படிப்பிலும் குறைவில்லை; வேறு எந்தக் குறையும் சொல்வதற்கில்லை. பெயர் தாரணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் முடித்த புதிதில் எல்லாம் நன்றாகவே நடந்தது. கல்யாணத்திற்கு முன்னால் காதலித்தால் தான் காதலா? கல்யாணத்திற்குப் பின்னும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு காதலிக்கலாம். அந்த வாழ்க்கையே இனிக்கும் என்பது எனது எண்ணம்.

"பெண்ணுரிமைக்குப் பாடுபட்டவன் என்ற வகையில், எல்லா வகையிலும் சமத்துவம் கொடுத்து வந்தேன். அவளது சம்மதம் இன்றி, நான் அவளைத் தொட்டதும் இல்லை. இது ரூ..மச் என்று கூட நீ சொல்லலாம். அதுதான் என் சுபாவம். குடும்ப உறவில் எந்தக் குறையும் நான் வைக்கவில்லை எல்லாவகையான திருப்தியும் ஏற்படக் கூடியவாறு தான் நடந்து கொண்டேன். ஆரம்பத்தில் அவளும் திளைத்துத் தான் போனாள். அப்படித்தான் நான் நினைத்தேன். குழந்தைகள் பிறந்த பின்னர் சில மாற்றங்கள், என்னை திக்கு முக்காட வைத்தன.

"அன்போடு அதட்டினால் அதனையும் பொறுத்துக் கொள்வேன். ஆனால் இங்கு ஆணவத்தோடு அதிகாரமும் கூடிவிட்டது. தான் வைத்தது தான் சட்டம் என்றால் நான் என்னத்துக்கு ஆண்பிள்ளை என்று.

"எல்லாவற்றையும் சொல்ல முடியாவிட்டாலும் ஒன்றி ரண்டைக் குறிப்பிடுகின்றேன். வேலைக்களைப்பில் சென்று சோர்ந்து போய் படுத்துவிட்டாலும் எவளோ ஒருத்தியுடன் படுத்து விட்டு வந்திருக்கிறேன் என்று குத்திப் பேசுகிறாள். ஒரு சமயம் வேலை விடயமாக 2,3 நாட்கள் வெளியூர் சென்று வர வேண்டியிருக்கும். எங்கோ எவளுடனோ சுற்றப் போய் விட்டேன் என்று சந்தேகம் வேறு.

"எல்லாம் இந்தச் சதையின் உணர்ச்சிகளுக்குத் தீனி போடுவதில் தான் தங்கியுள்ளது என்ற எண்ணம். அதைவிட மேலான ஆத்ம திருப்தியான வாழ்க்கை இருப்பதை மறந்துவிட்டாள். மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள் என்பது போல், இந்த ஆசை அற்ற பின்னும் அந்த வாழ்க்கை கணவன் மனைவிக்கிடையில் இருக்கும் வரை தொடரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறது. அதை ஆழமாக நேசிக்காவிட்டால் வாழ்க்கை எப்படி இருக்கும்?

"இப்படி இருந்தும் குடும்பத்தைச் சின்னாபின்னப் படுத்த விரும்பவில்லை. அவளுக்கு வேண்டிய அத்தனையையும் நிறைவேற்றி வைத்தேன். அவளுக்கு வேண்டிய போது உறவும் கொண்டேன். அதற்காக நான் அலைந்து திரியவில்லை. நான் ஞானி இல்லை. என்றாலும் மனக் கட்டுப் பாடு இருந்தது.

"பிள்ளைகளுடன் அன்பாகக் கொஞ்சிப் பேசி விளையாடுவதன் மூலம் அனைத்தையும் மறக்கலாம் என்றால் அதற்கும் தடை. அவர்களுடன் விளையாடினால் அவர்களையும் கட்டுப்படுத்தி, என்னை நெருங்க விடுவதில்லை. நேரத்திற்கு சாப்பாடு, நேரத்திற்கு படிப்பு, நேரத்திற்கு படுக்கை என்று விரட்டி விடுகிறாள்.

"அந்த வேளையில் எல்லாம் எனக்கு ஞாபகம் வருவது, இந்தியாவில் இருந்து இங்கு வந்து சொற்பொழிவு நிகழ்த்திய நாவுக்கரசி இளம்பிறை மணிமாறன் அவர்கள் ஒரு பிரசங்கத்தின் போது கூறியது தான். அவருடைய பத்து நாள் பிரசங்கத்துக்கும் சென்றேன். வொண்டர்புள்.

"தசரத மன்னனிடம் கைகேயி வரம் கேட்ட போது அவன் இராமனைக் காட்டுக்கு அனுப்புவதைவிட வேறு ஏதாவது கேள் என்று கெஞ்சினானாம். அவள் விடாப் பிடியான மூர்க்கமாக இருந்தாளாம். தன் கணவனைப் பற்றி அவள் பொருட்படுத்தவேயில்லை. அப்போது தசரதன் கூறினானாம். உனது தாயைப் பற்றி அறிவேன். உனது தாய் எப்படிப் பட்டவள் என்று தெரியும். அப்படிப் பட்ட தாயின் வயிற்றில் பிறந்தவள் தானே நீயும். நீயும் அப்படித்தானே இருப்பாய். இதற்காகத் தான் தாயைப் பார்த்துப் பெண் எடு என்று கூறியிருக்கிறார்கள் என்று.

"இதை ஏன் கூறுகிறேன் என்றால், எனது மனைவி தாரணியின் தாய் கீறிய கோட்டை, மாமனார் தாண்ட மாட்டார். அவர் எவ்வளவு பெரிய தொழில் அதிபர் என்றாலும் வீட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்டாட்டியின் அதிகாரம் தான். இந்த நிழலில் இருந்து வளர்ந்தவள் தானே தாரணியும். அதே போல் என்னையும் ஆட்டிப் படைக்கலாம் என்ற எண்ணம் போலும். இங்கே தான், தாயைப் பார்த்துப் பெண் எடு, என்பது பொருந்துவதைக் காண்கிறேன்.

"ஆதிக்க வெறி இருந்தால், அவளை அடித்து நொருக்கிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பேன். பெண்மையின் மென்மையை நேசிப்பவன் நான், அதை இம்சைப் படுத்த விரும்பவில்லை. பெண்மை அழகுபெறுவது ஆண்மையின் அடைக்கலத்தில்தான். அதைப் பாதுகாக்க வேண்டியது ஆணின் கடமை என்ற எண்ணம் என்னைப் பலவழிகளிலும் தடுக்கிறது. இதனாலே எனக்குத் துன்பம் ஏற்படுகிறது.

"என்னுடைய ஏக்கம் எல்லாம் அன்புக்காக. அன்பு, புனிதமான அன்பு, அது வேண்டும் எனக்கு.

"எல்லோருடனும் அன்பாக இருக்க விரும்புகிறேன். என்னை யாராவது எப்போதாவது நேசித்துக் கொண்டே இருக்க வேண்டும், என்பது என் அவா. அதீத ஆசையாகக் கூட இருக்கலாம். பெற்றோரையும் ஒரே சகோதரியையும் இனக்கலவரத்திற்குப் பலி கொடுத்து விட்டுத் தனியான அனாதையாக இருக்கும் எனது ஆசையிது.

"பட்டப் படிப்பிற்காக பல்கலைக்கழகம் சென்று இருந்தால், நான் தப்பி இருக்கிறேன். இல்லையேல், என் வாழ்க்கையும் அரும்பிலேயே கருகியிருக்கும். அந்தப் பட்டத்தைப் பெற்றதால் தான், இன்று இந்த நிலையில் இருக்கிறேன். இல்லையேல், முகவரி இல்லாமல் தொலைந்து போயிருக்கக் கூடும்.

"சொல் சுவர்ணா, என் ஆசை நியாயமானதா இல்லையா என்று?"

ஆரம்பத்தில் என்னவெல்லாமோ கதைக்க வேண்டும், என்றிருந்த சுவர்ணாவுக்கு, இவ்வளவையும் கேட்ட பின்னர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் அடைத்துப் போய் விட்டது; கண்கள் பனித்து இருந்தது. அவனது பேச்சைக் கேட்க அவளது எண்ணங்களும் அவனுக்குச் சார்பாக ஓடிக் கொண்டிருந்தன. ஆனால், பதில் பேச நா வெழவில்லை. உங்களுக்குள் இவ்வளவு விடயங்கள் அமுங்கிப் போய் இருக்கிறதா? என்ற வியப்பே மேலோங்கி நின்றது.

"அன்புக்காக ஏங்கிக் கொண்டிருந்த போதுதான், உன்னைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. உன்னைக் கண்டதும், காந்தம் போல் என் மனம் உன் பின்னாலே ஓடி வரத் தொடங்கியது. ஏதோ விட்ட குறை தொட்ட குறை, என்று எண்ணினேன்.

"அதற்காக மற்றவர்கள் போல் அண்ணன் தங்கை உறவைக்கூறி அதன் புனிதத்தை நான் கெடுக்க விரும்பவில்லை. நீ என்னைத் தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாது என்று நான் அதிக கவனம் எடுத்துக் கொண்டேன். என்றாலும் நமது விவாதங்கள் சிலவேளை அந்தரங்க விடயங்களையும் தொட்டுச் சென்றது. நட்பு ரீதியில் அது பிழை என நான் எண்ணவில்லை. ஆனால், நீயாக எதையோ வளர்த்துக் கொண்டிருக்கிறாய்."

நெஞ்சைத் தொட்டுப் பார்க்கிறாள். "ஓம்.. ஓம்.." என்று இதயம் துடித்துக் கொண்டிருப்பது புரிந்தது.

"உண்மையாகச் சொல்லப் போனால், நீ என்னுடன் அன்பாக இருப்பதற்கு, ஒரு பரிசு தரவேண்டும் என்று விரும்பினேன். அதற்காக வாங்கிய தங்கச் சங்கிலி, எனது பர்ஸில் இன்னும் இருக்கிறது. இது புனிதமான அன்புப் பரிசுச் சின்னம். நீ தவறாகப் புரியவில்லை என்றால், இதனை ஏற்றுக் கொள்ளலாம்" என்று எடுத்து நீட்டினான்.

"சுவர்ணா சொன்னால் நம்ப மாட்டாய்; உனக்காகச் சில இடங்களில் திருமணம் பேசி இருக்கிறேன். ஒழுங்குகள் சரி வந்ததும் தான் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். இப் போது சொல்லும்படி ஆகிவிட்டது. உனது திருமணம் சரி வரும் மட்டும் தான் நான் வருவது என்றிருந்தேன். அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை விரைவில் இழக்க விரும்பாத எனது சுயநலத்திற்காக நான் வருந்துகிறேன். விரைவில் உனக்காக ஓர் ஏற்பாட்டைச் செய்து தருவேன்.

"நமது உறவு உடல் இச்சைக்கு அப்பாற்பட்ட உறவு. இது காதல் அல்ல. நான் அந்த நோக்கத்தில் உன்னைப் பார்த்ததே இல்லை. புனிதமான உறவு இது. உடல் இச்சையைத் தீர்க்க, இன்னும் எனக்கு மனைவி என்றொருத்தி இருக்கிறாள். நான் இதுவரை இராமன் தான். இனியும் நான் இராமன் தான்."

சிறிது நேரம் மௌனம். கடல் அலை இரைச்சல், சுண்டல் சத்தம், ஐஸ்கிறீம் ஹோர்ன் மக்களின் பேச்சு இரைச்சல் எல்லாம் எங்கோ வெகு தொலைவில் தொலைந்து விட்ட மாதிரி நிசப்தம் அவர்கள் இருவர் உள்ளத்திலும்.

வழமையான சுண்டல் பையன் வந்து, "ஐயா சுண்டல்" என்று நினைவுக்குக் கொண்டு வந்தான்.

"வேண்டாமப்பா.." என்றவன் எழுந்தான்.

அவனது கையில் இன்னும் அந்த தங்கச் செயின் இருந்தது.

"பீ சியர்புல் சுவர்ணா.. நீ விரும்பினால் இதை ஏற்றுக் கொள்ளலாம்... உனக்கு ஏதும் தவறாகப் பட்டிருந்தால் மன்னிக்கவும்.." என்று கையை நீட்டினான்.

எழுந்து பெற்றுக் கொண்ட சுவர்ணா, "ஏன் எனக்கு இன்று சுண்டல் இல்லை?" என்று கேட்டதுதான் தாமதம், ஓடிச்சென்று பையனைப் பிடித்து, இரு சரைகளில் சுண்டல் வாங்கிக் கொண்டு ஓடிவந்தான் ஜெகன்.

காரில் இருந்து சுண்டலைச் சாப்பிட்ட பின்னர், குளிர் பானமும் பருகிவிட்டுப் புறப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தினத்தந்தி*, ஏப்ரல் 1995

**ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற கதை**

# பிள்ளைக் கனியமுது

பிரமிளா, அந்த அரச மரத்தை இப்போது நூறுதரம் சுற்றி வந்து விட்டாள். இன்னும் எட்டுத்தரம் சுற்றினாலே அவளது எண்ணிக்கை முடியும். அவளுக்கு இப்போது தலை சுற்றுவது போல இருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு சுற்றிவிடத் தீர்மானித்தவளாக அரசமரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறாள். பிரமிளா ஓர் ஆசிரியை. இன்று போயா விடுமுறை ஆதலால் அவளுக்கு ஓய்வு. அந்த ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டி ருக்கிறாள். பக்கத்து வீட்டுத் தோழி சிவந்தி, இவள் பிரமிளா தன் சுற்றுக்களை முடித்துக் கொண்டு வரும்வரை அமைதி யாக ஒரு பக்கம் நின்று கொண்டிருந்தாள். அவளுக்குக் கால் கடுக்கத் தொடங்கியது.

பிரமிளா கல்யாணம் முடித்து கணவனுடன் தனிக் குடித்தனம் போனதும் குடும்பத்தைத் திட்டமிட்டாள். அவள் கணவன் பிரதாபனும் ஓர் ஆசிரியர். இருவர் உழைத்தால்தான் குடும்பம் ஓடும் என்ற இன்றைய நிலைக்கேற்ப இருவரும் உழைப்பாளிகளாகச் சேர்ந்து கொண்டனர். ஆரம்பத்தில் இரண்டு ஆண்டுகளுக்குப் பிள்ளை வேண்டாம் என்றாள். அதன் பின்னர், இரண்டு வருட இடைவெளி இருக்க வேண்டும் என்றாள்.

"எத்தனை பெறுவதாக உத்தேசம்" என்று கேட்டான் குறும் புன்னகையோடு பிரதாபன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தனை என்றாலும் கவலையில்லை. தமிழினம் அழிந்து போவதைப் பார்க்கும் போது, காந்தாரி ஒரே சூலில் நூற்றி ஒரு பிள்ளைகளைப் பெற்றது போன்ற பாக்கியம் எனக்குக் கிடைக்குமானால், ஒரு கின்னஸ் சாதனையே நிலை நாட்டி விடுவேன்" என்றாள் பிரமிளா.

"அடேயப்பா! சமுதாயப்பற்றில், உனக்குப் பிள்ளைப் பைத் தியம் பிடிக்காமல் இருந்தால் சரிதான்" என்றான் சிரித்தபடி அவள் கணவன். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பார்களே! எதை எவர் அதிகம் ஆசைப்படு கின்றார்களோ அவற்றைக் கொடுக்காமலும், வேண்டாம் வேண்டாம் என்பவர்களுக்கு அள்ளிக் கொடுத்துவிட்டு, அவர்கள் அல்லல்படுவதைக் கண்டு ஆனந்திப்பதுமே இறை வன் திருவிளையாடல் அல்லவா? இதற்கு ஆட்பட்டு அவன் ஆட்டிப்படைக்கும் விதத்தில் ஆடிக்கொண்டிருப்பதே இவ்வுலக மனித வாழ்க்கை எனப்படுவது.

பிரமிளாவும் இதற்கு விதிவிலக்கல்லவே! பிரமிளா தனது திட்டப்படி இரண்டு வருடங்களை இனிமையாகக் கழித்து விட்டாள். இனி அடுத்து வரும் வருடத்தில் பிள் ளையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள், ஏமாற்றமே! அது சாதாரணமாக இருக்கவில்லை. நெஞ்சைப் பாறாங்கல் கொண்டு தாக்கியது போல இருந்தது. வேண்டாம்! வேண் டாம்! என்று இருந்த பின்னர் வேண்டும்போது இப்படியா இடி விழவேண்டும்?

டாக்டரிடம் சென்ற போது தன்னிலையை வெளியிட் டாள். "அதற்கொன்றும் அவசரப்படத் தேவையில்லை. நீங்கள் பாவித்த மாத்திரைகள், உங்களுக்கு ஓவம் தயாரிக்கும் நிலையை அழித்து இருக்கலாம். அது மீண்டும் சுயமாக இயங் கச் சில காலம் எடுக்கலாம். இதில் கவலைப்படுவதற்கு ஒன்றும் இல்லை" என்றது சற்று ஆறுதலாக இருந்தது.

என்றாலும் வருடம் வருடமாகக் கழிய, அவள் நெஞ்சம் பாறையாக இறுகத் தொடங்கியது. பாடசாலைப் பிள்ளைகள் இதன் பயனை அனுபவித்தனர். விரக்தியின் விளிம்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவள் பிள்ளைகளை அடித்தும், காதைத்திருகியும், பேசியும், துன்புறுத்தத் தொடங்கினாள். அன்பு என்பதே நெஞ்சில் அற்றுப்போனது. வீட்டில் கணவனோடும் எடுத்த தெற்கெல்லாம் எரிந்து விழுந்தாள். சின்னச் சின்ன விஷயம் எல்லாம் பெரும் சர்ச்சையில் முடிவடைந்தது. இவள் மனைவி என்பதால் கணவன் பொறுத்துக் கொண்டான். மற்றவர்கள் ஏன் பொறுக்க வேண்டும்? அவளிடம் படிக்கும் அந்தப் பிஞ்சுள்ளங்கள் ஏன் அவஸ்தைப்பட வேண்டும்? பிரமிளா ரீச்சர் வரப் போறா என்றால் மாணவிகள் எல்லாம் பூனையைக் கண்ட எலியைப் போல அடங்கி விடுவார்கள்.

"ஐயோ அம்மா.. அவ அடிச்சா ரத்தம் கன்றிப் போகும். இந்த ரீச்சருக்கு பிள்ளைகள் பிறக்குமா?" என்று அந்தப் பிஞ்சு உள்ளங்கள் அங்கலாய்க்கத் தொடங்கின. பிறக்கக் கூடாது என்றே மானசீகமாக வேண்டிக் கொண்டன எனலாம்.

இது அவளுக்கு எங்கே தெரியப் போகிறது? பஞ்சாங் கத்தில் உள்ள விரதங்கள் அனைத்தும் அனுஸ்ட்டித்தாள். வீட்டில் வருடம் முழுவதும் மச்சம் என்பதே மறந்து போச்சு. மனைவியின் ஆசையை நிறைவேற்ற அவனும் ஒத்துழைத் தான். பிள்ளை பெற என்ன செய்யலாம்? நெருங்கிப் பழகுகின்றவர்கள் எல்லோரிடமும் கேட்பாள். அவர்கள் சொல்வதெல்லாம் அட்சரம் பிசகாமல் செய்து வந்தாள். அப்படியாவது பிள்ளை பிறக்காதா? என்ற ஏக்கம் தான் மிஞ்சியது. பக்கத்து வீட்டுப் பரிமளம் சொன்னதுதான் அரசமரத்தை 108 தடவை சுற்ற வேண்டும் என்பது. அதைத் தான் இப்பொழுது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாள், பிரமிளா.

பாடசாலையில் ஓய்வு நேரத்தில் பலதரப்பட்ட ஆசிரியை கள் ஒன்று கூடும் போது ஆளுக்கொரு கதை கதைப்பார்கள். அது அவள் மனதில் பலாப்பிசின் போல் ஒட்டிக் கொள்ளும். இப்போது அவள் மனதில் இருப்பவை.. பிள்ளைப் பேறில்லா தவர்கள் புத் என்ற நரகத்திற்குப் போவார்களாம் என்று கூறியி ருக்கிறாள் ஒருத்தி. பிள்ளையாரை அறுபது நாள் சுற்ற வேண்டும், இது இன்னொருத்தி. குளித்து முழுகிவிட்டு ஈர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடையுடன் அரச மரத்தைச் சுற்ற வேண்டுமாம். அப்படிச் சுற்றி வந்தால் பிள்ளை பிறக்குமாம், இது ஒரு விஞ்ஞான ஆசிரியை. பிள்ளைச் செல்வம் இல்லாதவர்கள் அடுத்த லோகத்தில் நற்கதி சேரார் என்று கூறப்பட்டிருக்கிறது என்று கூறினாள் தமிழ் கற்பிக்கும் ஆசிரியை.

இப்படி நாளும் பொழுதும் ஆளுக்கொன்றைக் கூறிக் கொண்டிருக்க அவளுக்கு விரைவில் விசர் பிடித்து விடும் போல் இருந்தது. ஆனாலும், இந்த நிலையிலும் தன்னால் என்னென்ன செய்து இதை நிவர்த்திக்கலாம் என்று ஓடி ஓடி எல்லாக் கோயில் குளத்தையும் சுற்றிச் சுற்றி வந்தாள் பிரமிளா.

நூற்றி ஒரு பிள்ளை பெறவும் தயாராக இருந்த அவளுக்கு இந்தக் கதி? கணவனுக்குத் தாங்க முடிய வில்லை. வீடு கலகலப்பு இழந்து மயானமாக இருந்தது.

"ஒரு பிள்ளை தத்து எடுத்து வளர்ப்போமா?" என்றாள் முடிவாக.

"ஏன் அவசரப்படுகிறாய் பிரமிளா? எந்தப் பாவப்பட்ட ஜென்மத்தையோ நாம் எடுத்து வளர்க்க வேண்டுமா?"

"அதற்கில்லை, பிள்ளை இல்லாதவர்கள் பிள்ளை எடுத்து வளர்க்கும் போது அவர்களுக்குப் பிள்ளை பிறந்து இருக்கிறதே! அது தான்?"

"நமக்கென்ன வயசா போய்விட்டது? இன்னும் முயற்சிக் கலாம். சோதனைகள் செய்து, மருந்து மாத்திரைகள் சாப் பிட்டுப் பார்க்கலாம். இனி இறைவன் விட்ட வழி" என்றான் பிரதாபன்.

அவளுக்குப் பொறுக்க முடியவில்லை. மலடி என்ற பெயரிலிருந்து விடுபடுவது எப்படி? இதற்கு அவளால் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. குழம்பிப் போயிருந்தாள் பிரமிளா.

அவளுக்கு அமுதம் போன்ற செய்தி கிட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலிருந்து முக்காலமும் உணர்ந்த முனிவர் ஒருவர் கொழும்பு வந்திருக்கிறாராம். இமயமலைச் சாரலில் இருபது வருடங்கள் தவம் இருந்தவராம். அவரைச் சந்திக்கவும் தரிசிக்கவும் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறதாம் என்ற செய்திதான் அது. அன்றைய தினசரியில் இது அவரது படத்துடன் வெளியாகியிருந்தது. அதைப் பார்த்ததும் மனதில் இனம் புரியாத ஒரு ஆறுதல் ஏற்பட்டது. ஏதோ இனம் புரியாத மனஅமைதி, எப்படியும் அவரை சந்திக்க வேண்டும் என்ற வைராக்கியம் நெஞ்சில் எழுந்தது. வீட்டுக்கு வரும் வரை நிம்மதி இழந்தவளாக இருந்தாள்.

"ஏனப்பா.. யாரோ ஒரு மகிமைமிக்க சாமியார் ஒருவர் இந்தியாவிலிருந்து வந்து கொழும்பில் நிற்கிறாராம். நாமும் போய் பார்த்து வருவோமே!" என்றாள் வந்ததும் வராததுமாக.

"கடவுளால் செய்ய முடியாததை அவரால் செய்ய முடியும் என்று நம்புகிறாயா?"

"என்னப்பா பேசுறீங்க? நம்பிக்கையை இழக்கக்கூடாது. அவர் சொன்னால் சொன்னது பலிக்குமாம். அவரிடம் ஆசியும் வாக்கும் பெற வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது. ஓம், என்று சொல்லுங்கோவன், போவோம்" என்று அவனை நெருங்கினாள்.

பிள்ளைப் பேறுதான் இல்லை என்றாலும் அவளது ஆசையை என்றாலும் நிறைவேற்றி வைக்க வேண்டாமா? அதற்காவது சம்மதிக்க வேண்டுமே! பின்னர் இந்த வீட்டில் நிம்மதி இருக்காதே! போவோம், என்று சம்மதம் தெரிவித்தான்.

சம்மதம் கிடைத்ததும் சிறு பிள்ளை போல் துள்ளிக் குதித்தாள். அவர்கள் சென்றிருந்த போது முனிவருக்கு பாதபூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது முடிந்ததும் ஒவ்வொருவராக அவரது பாதம் பணிந்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டிருந்தார்கள். சிலருக்குத் திருநீற்றை மட்டும் இட்டார். ஒரு சிலருக்கு ஒருசில வார்த்தைகள் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு என்ன சொல்வாரோ? ஏதும் சொல்லாமல் விட்டுவிடுவாரோ?" என்று அவளது நெஞ்சு பதைபதைத்துக் கொண்டிருந்தது. அவளது முறையும் வந்தது. அவரது பாதங்களில் விழுந்தவள் எழுந்திருக்கவில்லை.

"சுவாமி எனக்குக் குழந்தைப் பாக்கியமே இல்லை. எனக்கு அது உண்டா? இல்லையா? என்று நீங்கள். கூறி அருளவேண்டும். தத்து எடுத்து வளர்க்கலாம் என்றால் கணவருக்கு விருப்பம் இல்லை. என்னால் இந்த வேதனையைத் தாங்க முடியவில்லை."

"குழந்தாய் எழுந்திரு" என்றவாறு கண்களை மூடிக் கொண்டார். நிமிர்ந்தவள், விறைத்தவாறு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். என்ன சொல்லப் போகின்றாரோ? அவர் கண்களைத் திறக்கவேயில்லை. ஆனால் பேசினார்.

"பெண்ணே நீ குழந்தையாய் இருந்தபோது இன்னுமொரு குழந்தையை விரும்பவில்லை" (தாய் கூறுவது அவளுக்குத் தெரியும். உனக்குத் தம்பி வேண்டுமா? தங்கை வேண்டுமா? என்று கேட்டால், ஒன்றும் வேண்டாம் என்பாளாம்)

"வளர்ந்ததும் வேறு பிறப்பே வேண்டாம் என்றாய்." (அம்மா இன்னொரு பெண்ணைப் பெற்றுவிடாதிங்க; பிறகு வீட்டுச் சாமான்களில் இருந்து, எல்லாம் இரண்டாகப் பிரிக்க வேண்டும் இப்போழுது எல்லாம் எனக்கு மட்டும் தானே.)

"படிக்கும் போது பக்கத்து வீட்டுப் பிள்ளையைப் பிடிக்காதே உனக்கு." (என்ன இந்தச் சனியன்கள் ஒரே பாட்டும் கூத்தும், கும்மாளமுமாக இருக்குதுகள் படிக்கவும் விடுகுதுகள் இல்லை என்று விரட்டும் ஞாபகம் வருகிறது.)

"பெரியவளாகிய பின்னரும் வேறு குழந்தைகளைத் தூக்கிக் கொஞ்ச மாட்டாயே." (மூக்கில் ஓடும், மூத்திரம் பெய்து விடும், அசுத்தமாக இருக்கிறது, அசுத்தப்படுத்தி விடும் என்று தூக்குவது இல்லைத்தான்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பொழுது கூடச் சின்னம் சிறுசுகளைத் துன்புறுத்து கிறாயே! அன்பும் பாசமும்தான் அவர்களை ஆட்கொள்ள உதவும். குழந்தைகளைத் தெய்வமாகக் கொண்டாட வேண்டும். குழந்தைப் பாக்கியம் என்பது பூர்விக ஜென்ம பயன். அது இல்லை என்றால், கிடைக்காது. இருந்தால் வேண்டாம் என்று மருந்து மாயம் செய்தாலும் கிடைத்து விடும்.

"குழந்தைகள் வீட்டில் இருப்பது எல்லாச் செல்வமும் இருப்பது போலத்தான். அதனால்தான் அதனை மக்கட் செல்வம் என்கிறார்கள். பிள்ளைகளிடம் கனிந்து உருக வேண்டும். அவ்வாறு இல்லாதவர்களைத்தான் தத்து எடுத்து வளர்க்கச் சொல்வார்கள். அவர்கள் மனங்கனிந்து அன்பைப் பாசத்தைக் கொட்டி பராமரிக்கும் போது அவர்களும் தமக் கென்று ஒரு பிள்ளையைப் பெறத் தகுதி பெற்றுவிடுகின் றனர்.

"சிலருக்கு அவர்களது பூர்வ ஜென்மப் பயனின்படி நிரந்தரமாகவே பிள்ளைப் பலன் அற்றுப் போய்விடும். அவர்கள் நிரந்தரமாகவே அதற்காக ஏங்க வேண்டியவர் கள்தான். அதுதான் இறைவனின் சித்தம்.."

"பயந்தவளாக, சுவாமி.. நான்.. எனக்கு" என்றாள்.

"பயப்படாதேம்மா. உனக்குக் காலம் நெருங்கி விட்டது. உள்ளத்தை குழந்தையாக்கி விடு.. பிள்ளைகளிடம் கனிந்து உருகு. குழந்தைப் பாக்கியம் உனக்கு கிடைக்கவிருக்கின் றது. விரைவில் காமாட்சி போன்றொரு குழந்தையை நீ பெற் றெடுக்கப் போகிறாய். இதில் இறைவன் கடாட்சம் அன்றி எனது செயல் ஏதும் இல்லை. உனது குல தெய்வத்தை வணங்கு. உள்ளம் குழந்தையாகும் போது அதுவே குழந் தையாக உருவெடுக்கும்" என்று ஆசிர்வதித்தார்.

"சுவாமி எனது நிலையைப் பரிபூரணமாக உணர வைத்தீர்கள். இனி எந்தத் தவறுக்கும் இடம் வைக்க மாட் டேன் என்று மீண்டும் அவர் காலில் விழுந்து வணங்கினாள். ஆரம்பத்தில், என்ன? ஒரு பெண்ணுக்கு இவ்வளவு நேரமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஆத்திரப்பட்ட சனக் கூட்டம், ஏதோ விஷேசம் என்று அமைதியாக இருந்து கேட்டது. அவர்களில் பலருக்கு அது அறிவுரையாக இருந்திருக்கலாம்.

வெளியே வந்த பிரமிளா அந்த மண்டப விறாந்தையிலிருந்து அழுதாள். கண்ணீர் உருகி வழிந்தது. உள்ளம் குழந்தையாகிக் கொண்டிருந்தது. ஒரு குழந்தையை ஏற்கும் பரிபக்குவத்தை அடைந்து கொண்டிருக்கிறாள். அவள் கணவன், தேற்ற வேண்டிய அவசியமும் இல்லை. அழுது முடியட்டும் என்று காத்திருந்தான், அவன்.

பிள்ளைக் கனியமுது ஒன்று அவர்கள் கையில் விரைவில் தவழப் போகிறது. இது ஆனந்தமில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தினகரன்*, ஆகஸ்ட் 1996

# பெண்மை விழித்துக் கொண்ட போது

சாப்பாட்டைத் தட்டுக்களில் பரிமாறிய சரசு, தன் குழந்தைகளை அழைத்தாள். சிறுசுகள் இரண்டும் ஓடிச் சென்று தட்டின் முன்னால் அமர்ந்து சாப்பிடத் தொடங்கின! மூத்தவள் வித்தியா இன்னும் வரக் காணோம்.

"வித்தியா வாம்மா சாப்பிட.." குரல் கொடுத்தாள் சரசு.

"வேண்டாமம்மா.."

"ஏண்டி வேணாம்கிறே?..." ஓர் அதட்டல்.

"எனக்குப் பசிக்கல்ல.."

எட்டு வயசுப் பிஞ்சுக்கும் பசிக்காமல் இருக்குமா? இதுவரை இப்படி ஒரு சொல்லைக் கேட்டதில்லை அவள்; அதிர்ந்து போய் மகளருகே வந்தாள் சரசு.

படிக்கவுமில்லை, சும்மாதான் இருந்தாள். மகளுக்குப் பக்கத்தில் வந்தமர்ந்த சரசு, தலையைத் தடவியபடி கேட்டாள்.

"ஏனம்மா பசிக்கல்ல? இரவில் சாப்பிடாமப் படுக்கக் கூடாது மகள்!"

பெரியவர்கள் போல் எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் வித்தியா. அவளது கண்கள் அசைவற்று சூன்யத்தில் நிலைத்து நின்றிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாம்மா சாப்பிடலாம்" என்று குழந்தையைத் தூக்க முயன்றாள் சரசு.

"எப்படியம்மா உன்னால இப்படி இருக்க முடிகிறது?" பிள்ளை நினைத்ததைக் கேட்டே விட்டாள்!

"எதைக் கேட்கிறாள்.." அதிர்ந்தவளாக, குழந்தை வித்தியாவைத் தூக்க முயற்சித்த கைகள் நழுவி வரச் சிந்தித்தாள்.

"ஓ.. " தன் கணவன் வேலையிலிருந்து வரும் போதே, குடித்துவிட்டு வந்து, தன்னை அடித்துத் துன்புறுத்திக் காசு பெற்றுக் கொண்டு, மீண்டும் குடிக்கச் சென்று இருப்பதையும் மீண்டும் வந்து இந்த நாடகம் தொடரும் என்பதையும் வித்தியா அறிவாள். இது தினசரி நடக்கும் சர்வசாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

கணவனிடம் அடிவாங்கிய பின், கையில் இருந்த காசைக் கொடுத்துவிட்டு அழுது கொண்டு இருந்த சரசு, தன்னைச் சுதாகரித்துக் கொண்டு பிள்ளைகளுக்கு இரவு உணவைக் கொடுக்க ஆயத்தமானாள். அவன் வந்து மீண்டும் சத்தம் போடும் முன்னர், குழந்தைகளைத் தூங்க வைத்து விட வேண்டும் என்ற ஆதங்கம் வேறு.

ஆனால், அதனால் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து விடு பட முடியாமல் தவித்துக் கொண்டிருந்த வித்தியா கேட்டே விட்டாள்.

எத்தனையோ பேர் கேட்ட கேள்விதான். அவளுடைய நெருங்கிய தோழிகள், பாடசாலை நண்பிகள் பலரும் கேட்டதுதான். பச்சையாகவே கேட்டார்கள். எப்படியடி இந்த மனுசனுடன் குடும்பம் நடத்துகிறாய்? என்று.

ஒரு பெண் கணவனுக்கு அடங்கியவள் தான். அதற்காக இப்படி அடிபட்டு ஆக்கினைப்பட்டு அடிமையாக அவனுடன் வாழ வேண்டும் என்று விதியா? அதற்குள் அடுத்தடுத்துக் குழந்தைகள் வேறு. விட்டுட்டு விவாகரத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுவிட்டு தனியாகக் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக இரு என்று புத்திமதிகள் வேறு கூறினார்கள்.

இவர்களுக்கெல்லாம் சிரிப்பே பதிலாகக் கிடைக்கும். என்றாலும் அவள் மனதுக்குள்ளே பதில் ஓடிக் கொண்டிருக்கும். இப்படிப் பலநாள் நடந்திருக்கிறது. இன்று ஒன்று திரட்டிப் பார்க்கிறாள்.

இவர்களுக்கு எங்கே விளங்கப் போகிறது, அந்த இன்பம். அடிக்கிற கைதான் அணைக்கும் என்பதை இவர்கள் அறிவார்களோ என்னவோ? அந்த அணைப்பும் சுகமும் எனக்கெல்லோ புரியும்? சாதாரண மாமூல் வாழ்க்கையில் என்ன திரில் இருக்கிறது?

நடு இரவில் அவர் எழுந்து வெறி முறிந்து, செல்லம் கொஞ்சி அடிபட்ட இடங்களுக்கு முத்தம் கொடுத்து அள்ளி மூச்சுமுட்ட அணைக்கும் போது எலும்புகளே முறிந்து விடும் போல் இருக்கும். என்ன பலம்? என்ன வேகம்? எத்தனை ஆண்மை? இன்னும் இன்னும் வேண்டும் என்று எனது உள்ளம் ஏங்குவதை இவர்கள் எங்கே அறிவார்கள்? அடிமைத் தளை நீங்க வேண்டும், சமத்துவமாகச் சரிநிகர் சமமாக வாழ வேண்டும் என்று பேசிவிடலாம். கருத்தொருமித்த அன்பான இல்லற வாழ்க்கைக்கு இது ஒத்துவராது. ஒருவருக்கொருவர் ஒட்டாத இயந்திர வாழ்க்கைக்குச் சரிப்பட்டு வரலாம்.

ஆத்ம திருப்தி ஏற்பட அந்த அணைப்பும் அந்தச் சுகமும் அதற்காக எத்தனை அடியும்பட நான் தயாராக இருக்கும் போது இவர்களுக்கு என்ன வந்தது. கண்டறியாத பரிதாபம்?

குடிகாரக் கணவன் மனைவிக்குக் குழந்தைகள் அதிகம் இருப்பது ஏனென்பது கூட நான் குடும்பமாகிய பின்னரே தெரிந்தது. ஆரம்பத்தில் சிவப்பு முக்கோணம் இந்தச் சமாச்சாரம் எல்லாம் எனக்குத் தெரியவில்லை. தொடர்ந்து ஐந்து வருடங்களுக்குள் மூன்று குழந்தைகளையும் சிரமமின்றிப் பெற்றெடுத்து வந்தபோது தான் மருத்துவ மாது இந்த வழியைக் காட்டினாள். அதனால் நான்காவது இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களாக இப்போது தாமதாமாகிக் கொண்டிருக்கிறது.

அதற்குப் பதிலாக வட்டியும் முதலுமாக எங்களுக்கு வேண்டியது கிடைத்துக் கொண்டே இருக்கிறது. இடை வெளி இல்லாத நீண்ட இரவுகள். இதற்காக ஒரு சில அடிகள் பட்டாலென்ன?

குடிக்காத இரவுகளிலே அவர் அடிபட்ட பாம்பு போலச் சுருண்டு படுப்பார்.

குடித்தாலும் அடிபடத் தேவையில்லை. அதுவும் என்னால்தான் என்றுதான் சொல்ல வேண்டும். சம்பளம் எடுத்த அன்றே முழுத் தொகையையும் என்னிடம் கொண்டு வந்து தந்துவிடுவார். அதன் பின்னர் தனக்குத் தேவையா னதை என்னிடம் தான் கேட்டு வாங்குவார். அதற்குத் தகுந்தாற் போல் குடும்பச் செலவைச் செய்யாதது என்னு டைய பிழைதானே!

அவர் காசு கேட்டால் கொடுத்துத்தான் ஆக வேண்டும். இல்லை என்று சொல்லிச் சும்மா இருந்து விட முடியாது. எங்காவது கடன் பட்டாவது கொடுக்கத்தான் வேண்டும். அது வரையும் அடியும் ஏச்சும் விழும்.

இப்படித்தான் ஒரு நாள் தம்பியின் பெண்சாதியிடம் கடன் கேட்டு அழுது கொண்டு சென்ற போது, தம்பியும் இருந்து விட்டான் வீட்டில். அவன் என் நிலையைப் பார்த்துக் கோபப்பட்டுப் பொல்லை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

"இப்படி எத்தனை நாளைக்கு அடிபட்டுச் சாகப் போகிறாய்? அவனை அடித்து விரட்டி விட்டு உனக்கு விவாக ரத்து வாங்கித் தாரன். நிம்மதியாக இரு.. அந்தக் குடிகார னுக்கு என்ன மனைவியும் மக்களும்?" என்று.

அவனது காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடி அவனைத் தடுத்து நிறுத்தினேன். இவர்கள் சாப்பாட்டைத் தரலாம், உடுபுடைவையைத் தரலாம், நானும் சந்தோசமாக இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். ஆனால், ஒரு கணவன் தரும் சுகத்தைத் தர முடியுமா? என்ன இவர்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை.

குடும்பம் என்றால் நாலும் இருக்கும். அடியும் உதையும் பெரிசா? அதைவிட அன்பும் பாசமும் குடும்ப சுகமும் உயர்ந்தது என்பதை இவர்கள் எப்போது உணரப் போகிறார் கள்.

பல சந்தர்ப்பங்களில் இப்படி பலவாறு எண்ணி மகிழ்ந் தவள்தான் சரசு. அந்த நினைவலைகளில் தனது நோவையும் கஷ்டங்களையும் மறந்து விடுவாள் சரசு.

ஆனால், இன்று இந்தப் பிஞ்சு.. சின்னஞ் சிறிய வித்தியா, சரசை உசுப்பி விட்டாள். அடி வேரையே அசைத்து விட்டாள். சிறுவர்கள் குழந்தைகள்தானே என்று அலட்சிய மனப்பான்மையுடன் இருப்பது தவறு. அவர்கள் சிறுவர்களாக இருந்தாலும் வீட்டிலும் நாட்டிலும் தம்மைச்சுற்றி நடப்ப வற்றை உன்னிப்பாகக் கவனிக்கின்றார்கள். இவை அவர்கள் பிஞ்சு உள்ளத்தில் நிரந்தரமான பதிவை ஏற்படுத்தி விடுகின் றன. நடப்பவை கேடுகெட்ட அசம்பாவிதமாக இருக்குமா னால், அது அவர்களை வக்கிர புத்தியுள்ளவர்களாக, நாட் டுக்கு பயனற்ற பிள்ளைகளாக மாற்றிவிடுவதுடன் அவர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் பயனற்றவர்களாக வளர்ந்து ஆளாக வழிவகுத்துவிடுகிறார்கள். பின்னர் திருத் தும் முயற்சி பயனளிக்கப் போவதில்லை. ஆகவே, சிறுவர்கள் அனைத்தையும் கவனிக்கிறார்கள் என்று நாம் செயற்பட வேண்டும். இது விஞ்ஞான யுகத்தின் வளர்ச்சியின் ஒரு படி எனலாம்.. அவ்வாறு பத்திரிகையில் அண்மையில் படித்தது ஞாபகம் வந்தது.

இங்கு வீட்டில் நடப்பவற்றை வித்தியா மிகவும் உன் னிப்பாகக் கவனித்திருக்கிறாள் என்பதும், அதனால் அவள் உள்ளத்தில் ஏற்பட்ட தாக்கமே அவளது இந்தக் கேள்விக்குக் காரணமாய் அமைந்தது என்பதையும் புரிந்து கொண்டாள் சரசு.

தான் இவற்றைப் பொருட்படுத்தாமல் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், வளரும் குழந்தைகள் பாதிப்படைய விடக்கூடாது. இதற்கு மேலும் விட்டு வைக்கக்கூடாது. இன்றிலிருந்தே செயலில் இறங்க வேண்டும். எனது சுகதுக்கங்கள் இனி எனக்குத் தூசு என்று விழிப்படைந்தாள் சரசு.

வித்தியாவை எழுப்பிக் கூட்டிக் கொண்டு சென்று சாப் பாட்டைக் கொடுத்தாள். அவள் சாப்பிட்டதாகத் தெரிய வில்லை. பிசைந்து கொண்டே இருந்தாள். மகளையே பார்த் துக் கொண்டிருந்தாள். தட்டை எடுத்து ஊட்டி விட்டாள். அப்போது ஓரிரு வாய் சாப்பிட்ட குழந்தை எழுந்து விட்டது. அவளைக் கழுவிப் படுக்கைக்கு அழைத்துச் சென்றாள் சரசு.

குழந்தைக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டு தலையை நீவி விட்டாள்.

"வித்தியா என்னைப் பற்றிக் கவலைப்படாதம்மா, அப்பா என்னை அடிச்சாலும் என்னோடும் உங்களோடும் எவ்வளவு அன்பு தெரியுமா? அப்பா தர்ற காசை நான் கண்ட படி செலவழித்து விடுகிறேன். அதனால் தான் இப்படி அடிபட வேண்டி ஏற்படுகிறது" என்று என்னவெல்லாமோ சொல்லி சமாதானப்படுத்த முயன்றாள்.

குழந்தை தூங்கக் காணோம். அவளது மனம் தான் விழித்துக் கொண்டதே!

"தூங்கு மகள்" என்று கன்னத்தில் முத்தமிட்டாள் சரசு.

வித்தியா தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அவள் மூச்சுக் காற்று சுட்டது சரசுக்கு.

"ஏனம்மா நீங்கதான் இப்படி என்றாலும் எங்களையாவது காப்பற்றக் கூடாதா? நீங்கள்தான் பெண்மையை அடகு வைத்து விட்டீர்கள். நாங்களும் இந்தப் பெண்ணடிமைச் சமுதாயத்தில் கிடந்து சீரழிய வேண்டுமா? எங்களுக்கு விடுதலை வாங்கித்தர மாட்டியாம்மா?" என்று திக்கித் திக்கிக் கேட்டாளே பார்க்க வேண்டும்.

சரசுக்குச் சிறிது நேரம் நெஞ்சுக்குள் கனத்தது. சின்னஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுசு என்று எண்ணியிருந்தவள் எவ்வளவு பெரிய விடயத்தைக் கேட்டு விட்டாள்! இவ்வளவு தூரம் குழந்தையைப் பாதித்துவிட்டதா? இது அவளது மனதை ஆட்கொண்டிருந்தபடியால்தான் பசியும் நித்திரையும் அவளை விட்டுச் சென்று விட்டது என்று புரிந்தது சரசுக்கு. எட்டுக்குப் புரிந்தது ஓ.எல். படித்த தனக்குப் புரியவில்லையே இதுவரை! என்று வெட்கமாகவும் இருந்தது.

"யார் மகள், உனக்கு இதெல்லாம் சொல்லித் தந்தது?"

"பக்கத்து வீட்டு அக்காமார் அன்று ரேடியோவில் நடந்ததைக் கேட்டு விட்டு, நமது வீட்டையும் எங்களையும் பற்றித் தான் கதைத்தாங்க.. ரேடியோவில் சொன்னதைக் கேட்டுட்டு நானும் அங்கு இருந்தன். அந்த அக்காமார் எங்களைப் பார்த்து பரிதாபப் பட்டுக் கதைச்சாங்க."

"அதெல்லாம் ஒன்டுமில்ல மகள், நீ தூங்கு காலையில் எல்லாம் சொல்லித் தாறன்.." என்றாள். அவளுக்கு நித்திரை போய் விட்டது.

பெண்மை விழித்துக் கொண்டது..

இந்தச் சின்னஞ் சிறுசுகள் இப்படிக் கேட்கும்படி நான் நடக்க வேண்டுமா? என்னால் இவர்களது வாழ்க்கை இனியும் பாதிக்கக் கூடாது. அவளது சிந்தனை வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது.

பெண்மை என்பது ஒரு கணவனுக்கு மனைவியாக இருப்பது மட்டுமல்ல. குடும்பப் பொறுப்பை உணர்ந்து நடந்து, குடும்ப கௌரவம், மானம் மரியாதையையும் கட்டிக் காக்க வேண்டும். இதைக் கணவன் தான் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. அவன் தவறும் போது, அந்த இடைவெளியைத் தான் நிரப்ப வேண்டும். இதுவரை இதைப் புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேனே என்று தன்னைத் தானே கடிந்து கொண்டாள்.

வெறும் உடற்சுகத்துக்கோ தனது விருப்பத்திற்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனின் ஆசையை அடக்குவதற்கோ இதுவரை பெண் மையை அடகு வைத்து விட்டேன் என்று மனம் வருந்தினாள். இப்போது கூட இந்தப் பிஞ்சு தானே அதை உணர்த்தியி ருக்கிறாள்.

தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையை வாஞ்சையுடன் நோக்கினாள். அவளது எதிர்காலம் தனக்கு முன்னே பெரும் கேள்விக் குறியாக நின்றது. எழுந்தாள். கணவனுக்குச் சாப்பாட்டை எடுத்து வைத்தாள். முன் கதவைப் பூட்டாமல் சாத்தி வைத்தாள். தானும் சாப்பிடாமல் ஒரு டம்ளர் தண்ணீர் குடித்து விட்டுப் பிள்ளைகளின் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டு விட்டுப் படுத்து விட்டாள்.

இப்போது வித்தியா நன்றாகத் தூங்கி விட்டாள். அவளது பிரச்சனைக்கு வடிகால் கிடைத்து விட்டதே. நெஞ்சில் இருந்த பாரம் நீங்கிக் குழந்தை நன்றாக ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தது.

இப்போது சரசின் பசியும் நித்திரையும் எங்கோ சென்று விட்டது. பெண்மை விழித்துக் கொண்டதல்லவா? தனக்காக இல்லாவிட்டாலும் தன் குழந்தைகளுக்காகத் தனது தவறைத் திருத்திக்கொள்ள வேண்டியிருந்தது.

கணவன் வந்தான், கத்தினான். கதவைத் தட்டினான். அவள் எழுந்து போகவில்லை.

"சாப்பிட்டுப் படுங்க, காலையில் பேசுறேன்" என்று ஒரு குரல் கொடுத்தாள்.

அவன் பேசிக் கொண்டே இருந்தான்.

அவன் சாப்பிடவில்லை. கதவு பூட்டவில்லை. படுக்கை யில் படுக்கவில்லை. இவை எல்லாம் இதுவரை அவளது கடமையாக அல்லவா இருந்தது. இப்போது அவனுக்குப் புதுமையாக இருந்தது.

கத்திவிட்டுத் தூங்கிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டநடுநிசியில் வழமைபோல் விழிப்பு வந்தபோது பசித்தது. தடவிப் பார்த்த போது பக்கத்தில் சரசு இல்லை. முன் கதவு திறந்து கிடந்தது. படிப்படியாக ஞாபகம் வந்தது.

எழுந்து சாப்பிட்டுவிட்டுக் கதவைப்பூட்டிவிட்டுப் படுத்துவிட்டான்.

காலையில் சரசு பிள்ளைகளைப் பாடசாலைக்குப் புறப்படுத்திக் கொண்டிருந்த போது, அவன் எழும்பினான்.

கோப்பி ஆறிவிட்டது, என்று முணுமுணுத்தான்.

அடுப்பில் வைத்துச் சூடுகாட்டிக் குடியுங்க. இன்றி லிருந்து குடிச்சிட்டு வீட்டுக்கு வரக் கூடாது. வந்தால் இந்த வீட்டுக் கதவு திறக்காது. எனக்கு இதுவரைக்கும் நல்ல புருஷனாக இல்லாவிட்டாலும் இனி நீங்க இந்தப் பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் ஒரேயடியாக இல்லாமல் போனா லும் பரவாயில்லை என்று உறுதியான குரலில் சொன்னாள் சரசு.

ஆறிய கோப்பியையும் மறந்திருந்தான் அவன்.

வித்தியாவுக்கு முத்தமிட்ட சரசு, "...நீ பள்ளிக்குச் செல்லு மகள், தங்கச்சிகளைக் கவனமாகக் கூட்டிச் செல்" என்றாள். வித்தியா மகிழ்ச்சியுடன் வெளியேறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுடாமணி*, ஆகஸ்ட் 1995

# அவளா சொன்னாள்?

பாபு, மண்டையைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருந் தான். அவளா இப்படிச் சொன்னாள்?

அவனால் நம்ப முடியவில்லை.

இருக்காது. நிச்சயமாக இருக்காது. கௌரி அப்படிச் சொல்லக் கூடியவளல்ல, என்று அவனது உள்ளம் கூறிற்று.

அப்படியானால் தன் முன்னால் சொன்னது?

தலையைக் கொண்டு போய் எதிலாவது முட்டிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது, பாபுவுக்கு.

இத்தனைக்கும் கௌரி அவனது முறைப்பெண்.

அவனுக்கென்று நிச்சயிக்கப்பட்டு வளர்ந்தவள். சிறு வயதில் மணல்வீடு கட்டி அம்மா அப்பா விளையாட்டு, கூட்டாஞ்சோறு சமைத்து விளையாடியது முதல் பருவம் அடையும் முன்னர் அவனது தோளில் தொங்கி ஆடியதிலி ருந்து, வயதுக்கு வந்து பெரியவள் ஆகிவிட்ட பின்னர் பாபு அத்தானுடன் ஒளிவு மறைவு இன்றிச் சிரித்துக் கதைத்துப் பேசி விளையாடியவள். சண்டை சச்சரவுப்பட்டாலும் கோப தாபம் எல்லாம் ஓரிரு நாள் தான்.

அப்படிப்பட்டது கௌரி பாபு உறவு. அப்படிப்பட்டவள் இப்படிச்சொன்னாள் என்று அவனால் நம்ப முடியவில்லை. ஆனால் சொல்லிவிட்டாளே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எப்படியெல்லாம் நடந்து கொண்டார்கள் என்பது, புற்றுக்குள் இருந்து பாம்பு எட்டிப் பார்ப்பது போல் அடிக்கடி எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது.

அப்போது கௌரி பெரிசாகவில்லை. கௌரியின் தகப்பனார் பாபுவின் வீட்டுக்கு வந்திருந்த போது, பாபுவின் தந்தை, "பாபு படிப்பில் கவனம் இல்லை எப்போதும் விளை யாட்டுத்தான். விளையாட்டில் ரியூசனுக்கும் போகிறான் இல்லை" என்று குறைப்பட்டதைக் கேட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து கதைத்ததை கௌரியும் கேட்டுக்கொண்டி ருந்தாள். அம்மாவுக்குத் தான் பேச்சு எல்லாம்..

"இவனுக்கெல்லாம் பெண் கொடுக்கத் தீர்மானித்துப் போட்டாள். அவன் தறுதலையாகக் காவாலி கடப்புலியோட படிப்பை விட்டுட்டு விளையாடித் திரியிறானாம். இப்படிப் போனால் மாடு மேய்க்கத்தான் வேண்டிவரும். இவனுக்கெல் லாம் நான் என் பெண்ணைக் கொடுப்பேன் என்று நம்பியி ருக்க வேண்டாம்" என்று கூறினார்.

கேட்டுக்கொண்டிருந்த கௌரி அடுத்த நாள் பாபு விடம் பாடம் கேட்க செல்லவில்லை. பாபு அவளைத் தேடி வந்த போது அவள் இவற்றையெல்லாம் சொல்லி அழுதாள்.

முதலில் சிரித்தவன்.

பின்னர் சிந்தித்ததும் சீரியஸாகி விட்டான்.

"கௌரி நீ அழாதே, மாமா என்னைப் பிழையாக விளங்கி விட்டார். உனக்காக நான் படிக்கிறேன். மாமா என்னைத் தேடிவரும்படி படிச்சுக்காட்டுகிறேன்" என்று சென்றான்.

படிப்பில் மும்முரமாக இறங்கிவிட்டான்.

ஆனால் விளையாட்டையும் கைவிடவில்லை.

தொடர்ந்து வகுப்பில் முதலாம் பிள்ளை.

"எப்படியாம் கொப்பர்?" என்று கேட்டான் கௌரியிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மருமகனைப் புகழ்ந்து தள்ளுறார்" என்றாள் கௌரி.

"ஐயா யாரென்று காட்டுகிறேன் ஓ. எல்.லில் பார்" என்று சேர்ட் கொலரை தூக்கி விட்டுக்கொண்டான்.

ஜீ. சீ. ஈ (ஓ. எல்.) முடிவும் வெளிவந்தது.

பாபு ஒருவன் தான் அந்தப் பாடசாலையில் 4டி, 4சீ எடுத்துச் சித்தியடைந்தது. அந்தப் பாடசாலையில் மட்டு மல்ல அந்த வருடம் அந்தப்பிரதேசத்தில் அதுதான் சிறந்த பெறுபேறு.

மாமா குடும்பத்தோடு தன்னைத் தேடிவந்து மணிக் கூடு ஒன்று பிரசன்ட் பண்ணியது இன்னும் பசுமையாக இருக்கிறது.

அப்படித் தன்னைத் திருத்தியவள் கௌரி. அவள் இப்போது பெரிசாகி விட்டாள்.

இதன் பின்னும் மாமா எப்படி வாய்திறப்பார். எனது மருமகன் என்று பெருமைப்பட்டுக் கொள்ளுவார்.

இந்தப் பெருமையைத் தேடித்தந்தவள் கௌரி அப்படிப்பட்ட கௌரியா இப்போது இப்படி?

சீ.. இருக்க முடியாது. எங்கோ ஏதோ தவறு நடந்திருக் கிறது.

பாபு ஏ. எல். சித்தியடைந்துவிட்டு யுனிவர்சிற்றி செல்ல முடியாமல் வேலை தேடிக் கொண்டிருந்த போது, கௌரி ஓ.எல். எடுத்து விட்டு வீட்டில் நின்றிருந்தாள். அப்போதெல் லாம் பாபு வீட்டுக்கு வரும் போது ராஜ உபசாரம் கிடைக்கும். அவன் வந்ததில் இருந்து போகும் வரை, எதை எதைச் சாப் பிடக் கொடுக்கலாம் அத்தானுக்கு, என்று அரை மணித் தியாலயத்திற்கு ஒரு முறை ஏதாவது ஒரு தின்பண்டத்தைக் கொண்டு வந்து கொடுப்பாள்.

ஒவ்வொன்றையும் கொடுக்கும் போது இது இருதயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு நல்லது. இது கண்ணுக்கு நல்லது. இது சூட்டுக்கு நல்லது, இதில் இரும்புச்சத்து, இது இரத்தம் சுத்தம் செய்யும் என்று என்னென்னவோ காரணம் சொல்வாள்.

"நீ டாக்டருக்குப் படித்திருக்க வேண்டும்" என்பான்.

"படித்திருப்பேன், விட்டால்தானே, எங்கே உங்களை மிஞ்சி விடுவேன் என்றோ என்னவோ?" என்பாள்.

சாப்பாடு பரிமாறப் போனாலும் அன்புத் தொல்லையால் அவஸ்தைப் படுவான். சாப்பிட்டு முடிந்து எழுப்பப் போகும் போது இன்னுமொரு அகப்பை சோற்றைப் போட்டு "இது எனக்காகச் சாப்பிடுங்கள்" என்று கெஞ்சுவாள். வேறு வழியில்லாமல் சிரமப்பட்டுச் சாப்பிட்டுவிட்டு எழும்புவான். அவனுக்கு என்னன்ன பிடிக்கும் என்று இப்போதே அறிந்திருந்தாள்.

அந்தக் கௌரியிடம் இப்போது ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை அவன் ஆரம்பத்தில் கவனிக்கவில்லைத்தான். சந்தேகம் இருந்தால் தானே இவை புலப்படும். நாம் அன்பு கொண்டவர்கள் செய்யும் பிழைகள் கூடப் பிழையாகத் தெரிவதில்லை. அன்புள்ளம் அவ்வளவு பரந்ததல்வா?

அவள் இப்போது சொன்ன பிறகுதான் அவன் சிந்தித்துப் பார்க்கிறான்.

இப்போதெல்லாம் சாப்பாடு பரிமாறப் பக்கத்தில் நிற்பதில்லை. போட்டுத் தந்து விட்டுச் சென்று விடுகிறாள். வேறேதோ வேலை இருப்பது போல் காட்டிக் கொள்வாள். சாப்பாட்டில் முக்கியமாக இருக்கும் சின்ன வெங்காயம் காணாமல் போய் விட்டது.

இரண்டு வருடங்கள் இடைவெளி ஏற்படுத்திய மாற்றம் என்று அவன் பெரிதுபடுத்தவில்லை.

ஆனால் இப்போது சிந்திக்கும் போது தன்னில் அக்கறை இல்லை. அல்லது வெறுப்புத்தான் இதற்கு காரணமாக இருக்குமோ என்று தோன்றுகிறது. இத்தனை நாட்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வேண்டாத விருந்தாளியாகவா சென்று சாப்பிட்டு வந்தேன்? என்று எண்ணும் போதே வயிற்றைக் கலக்கிக் கொண்டு வருகிறது.

முன்னமே அறிந்திருந்தால் சாப்பிடாமலே விட்டிருக் கலாம். என்ன தவறு செய்து விட்டேன்? என்று கலங்கினான்.

ஆனாலும் எனது கௌரி அப்படி இருக்க மாட்டாள் என்று தான் அவனது அடி மனது உறுத்திக் கொண்டிருந்தது.

உடுப்பு விடயத்தில் கூட அவனது விருப்பத்திற்குத் தான் முதலிடம். அவன் போடக்கூடாது என்ற எதையும் அணிய மாட்டாள். வீட்டில் தாய் தந்தையர் எடுத்துக் கொடுத்த உடுப்புக்கள் என்றாலும் அத்தானிடம் காட்டி அங்கீகாரம் பெறாமல் அணிய மாட்டாள்.

இப்போது அவனைப் பொருட்படுத்துவதாகத் தெரிய வில்லை. இரண்டு வருடங்களுக்குப் பின் அவளுக்கென்று ஆசையாக வாங்கி வந்த உடுப்புக்களைக் கொண்டுபோய்க் கொடுத்த போது வழமைக்கு மாறாகப் பிரித்துப் பார்க்காமலே கொண்டு வைத்து விட்டாள். இதுவரை ஒரு மாதமாகி விட்டது. விருப்பு வெறுப்புப் பற்றி எந்த அபிப்பிராயமும் சொல்லவில்லை. ஒன்றையேனும் அணிந்து காட்டவு மில்லை..

இது என்ன மாற்றம்? எப்படி வந்தது இவளிடம்? என்று இப்போதுதான் சிந்திக்கத் தோன்றிற்று.

ஏன் இப்படி? அது தான் புரியவில்லை.

யார் வீட்டில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வீட்டில் வந்தால் போகும் வரை அவன் கண்ணெதிரே இருப்பது கௌரி மட்டுமே. மாமன் மாமி கூட மறந்து விடுவார்கள். மதியம் சாப்பிட்ட பின் எல்லோரும் ஒரு குட்டித் தூக்கத் திற்குச் சென்றாலும் அவள் மட்டும் அவனுடன் கதைத்துக் கொண்டே இருப்பாள். விகற்பமாக ஏதும் இருக்காது. சும்மா சிரித்துப் பேசிக்கொண்டிருப்பாள். ஆசை தீரப் பேசிடாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வளருமா?

ஆனால் அதிலும் இப்போது மாற்றம். கௌரியும் இப்போது தூங்கச் சென்று விடுவாள்.அவனுக்கு ஏன் வந்தோம் என்று இருக்கும். அன்பின் காரணமாக அவனுக்கு விளங்கவில்லை. விருப்பம் இல்லை என்பது.

இரண்டு வருடங்களாக நான் இல்லாததால் இந்தப் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டான். என்னதான் பழக்கம் ஏற்பட்டாலும் நான் வந்த பின்னர் அந்தப் பழக்கத்தை மாற்றவேண்டும் என்று அவள் முயற்சிக்க வில்லையே என்பது கூட அவனுக்குக் குறையாகத் தெரிய வில்லை.

அவள் உண்மையாகத் தூங்கவில்லை, இவனுடன் பேசிக் கொண்டிருப்பதைத் தவிர்க்கவே சென்றிருக்கிறாள், என்று தெரிந்திருக்க நியாயமில்லை.

அன்பு என்பது புனிதமானது. அது தூய்மையானது என்று கருதியிருந்தான் பாபு. அதுவே காதலாகிப் பரிணமித்த போதும் அது உள்ளத்தளவிலே இருந்தது.

கௌரி அவனுக்கென்று நிச்சயிக்கப்பட்டு விட்டவள் அவனுக்கு விருப்பம் இருந்தால் அவன் அவளுடன் எப்படி யும் பழகியிருக்க முடியும். அவளும் தடை விதித்திருக்க முடியாது.

கட்டுப்பாடுகள், தடைகள் இல்லாததால் அதை மீறிச் செயற்பட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்ட தில்லை. அவளை அணைத்திருக்கிறான் ஓரிரு முறை முத்தமிட்டு இருக்கிறான். ஆனால் அளவு மீறவில்லை.

காதல் இருந்தளவுக்குக் காமம் கட்டுமீறிப் பாய வில்லை. கிணற்று வெள்ளத்தை ஆற்று வெள்ளமா கொண்டு போய் விடப் போகிறது. என்றிருந்தாலும் அவள் எனக்குரிய வள் தானே, எப்போது இருந்தும் அனுபவிக்கலாம், எங்கே சென்று விடப் போகிறாள், என்ற மனோபாவமே மிஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றது. அவன் பெண்களைப் பற்றி அறிந்தது படித்தது அவ்வளவுதான்.

இப்போது, உள்ளூரில் வேலை கிடைக்காமல் இரண்டு வருட ஒப்பந்தத்தில் சவூதி சென்று வந்திருக்கிறான். அங்கிருக்கும் போது அவளும் ஆசையைக் கொட்டிக் கடிதம் எழுதியிருக்கிறாள். இதை விட அவன் அங்கு பார்த்த படங்களால் நீறு பூத்த நெருப்பாக இருந்தவன், அனல் விட்டு எரிந்து கொண்டவனாக வந்து இருக்கிறான்.

அவள் கொவ்வை இதழ்கள், ஆப்பிள் கன்னங்கள், இப்படி என்னவெல்லாம் எப்படி அனுபவிப்பது என்று திட்டமிட்டு வந்திருக்கிறான். அவளோ வெருண்ட மானாக அவனுக்குப் பிடி கொடுக்காமல் இருக்கிறாள்.

ஆரம்பத்தில், இவளது செயல்தான் விரைவில் திருமண ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று எண்ணத்தோன்றியது. அவளுக்கும் அந்த ஆசை இருக்காதா என்ன? இரண்டு மாத லீவில் வந்தவனுக்கு, அதற்குள் திருமணத்தை முடித்து விட்டுச் செல்ல வேண்டும் என்ற அவா இருந்தது.

ஆனால் அன்று அவன் வாழ்வில் மறக்க முடியாத நாள். அவளது மன வேறுபாட்டை உணர வைத்த நாள். என்றாலும் அதையும் காட்டிக்கொள்ளாமல் சென்று வந்தான். தவறாக எடை போடக்கூடாது. தன் அனுமானமும் தவறாக இருக்கலாம் அல்லவா என்று.

ஆனால் ஒன்று, நெஞ்சில் தைத்தது சொல் அல்ல, முள் என்று உணர்கிறான்.

ஒரு மாதமாகச் சென்று வருகிறான்.

அவள் சொன்ன வார்த்தைகளை அவன் பகிடி என்றுதான் எடுத்துக் கொண்டிருந்தான். நெஞ்சில் நிறைந்த அன்பும் ஆசையும் இருந்ததே அதனால்.

எத்தனை நாட்களுக்கு பூசி மெழுகிச் சமாதானம் கூற முடியும் அந்த அன்பு நெஞ்சத்திற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் பொறுத்தளவுக்கு அன்பு என்பது வேண்டும் போது மூடித்திறக்கும் பைப் தண்ணீர் போன்றதல்ல. மடை திறந்த வெள்ளம் போன்றது; அதற்கு அணையும் போட முடியாது அதுதானே வள்ளுவரும் அன்புக்கு உண்டோ அடைக்கும் தாள்? என்று கேட்டுவைத்தார்.

ஆனால் சில பேர், சில செய்கையினால், அந்த அன்பு ஊற்றுக்கு அணைகட்டிவிட்டால் சிறிது கசிவும் ஏற்படாது. இரு பக்கமும் தீவிரமாக இருப்பதே அந்த நல்ல உள்ளத்திற்கு சிறப்பு.

அந்த அன்பு இப்போது பொய்யானதாக, சந்தேகத் துக்குரியதாகத் தூக்கு கயிற்றில் தொங்கிக் கொண்டிருக் கிறது.

"கௌரி நான் உனக்காக வந்து காத்துக்கொண்டிருக் கின்றேன். நீ தூங்கி எழுந்து விட்டு வருகிறாய். இனித் தேனீர் ஊற்றித்தருவாய். நான் குடித்து விட்டு செல்ல வேண்டும் அப்படித்தானே."

"நீங்க என்னத்திற்கு எனக்காக காத்துக்கொண்டு இருக்க வேணும். ஏதும் கதைப்பது என்றால் அம்மா, அப்பாவுடன் கதைத்து விட்டுச் செல்லலாமே" என்று கூறி விட்டுச் சென்றாள்.

அதுவும் பகிடி என்றுதான் எண்ணுகின்றான்.

தேனீர் வந்து கொடுக்கிறாள்.

"கௌரி நான் இங்கு வருவது உனக்குப் பிடிக்கவில் லையா?" என்று கேட்கிறான்.

"எனக்கு விருப்பமில்லை.." என்று வாய் திறந்து சொல்லி விட்டாள்.

அவள் தானா சொன்னாள்? சுற்று முற்றும் பார்த்தான் அவனால் நம்ப முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன கௌரி சொல்கிறாய்? குரல் வெளியே வரவில்லை. அவள் உள்ளே சென்று விடுகிறாள்.

அவன் எழுந்து நடக்கிறான். பூ, பிஞ்சு, காய், இலை எல்லாம் உதிர்ந்து விட்ட மொட்டை மரமாக.

இன்னும் நம்ப வில்லை. அவளா சொன்னாள்? என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தாய் நாடு*, டிசம்பர் 1995

# சொல்லத் துடிக்குது மனசு

"இந்த மூதேவி, எந்த நாளில் வீட்டில் காலடி எடுத்து வைத்ததோ, அன்றிலிருந்து வீட்டில் ஒரு விசேஷமும் நடக்கறது இல்லை. ஒரு நல்ல நாள், பெருநாள் என்று ஒரு வீட்டிற்கும் மகிழ்ச்சியாகப் போக முடிவதில்லை. இந்தச் சனியனின் முகத்தில் யார்தான் முழிக்கப் போகிறார்கள்" என்று முணுமுணுத்தபடி மாமியார் புறப்பட்டுக் கொண்டிருப் பதைக் கேட்டுக் கொண்டிருந்தாள் சுமித்திரா.

என்னதான் நாலைந்து வருடமாகக் கேட்டுப் புளித்துப் போன வசனம் தான் என்றாலும், ஒவ்வொரு முறையும் மாமியார் வாயிலிருந்து அம்புகள் போல் புறப்பட்டு அவள் உள்ளத்தில் தைத்துக் கண்ணீரை வரவழைக்கத்தான் செய்தன.

இன்று அவர்கள் சொந்தத்தில் பூப்புநீராட்டு விழா வொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வந்தவள் "சுமி நீயும் வந்திடு என்ன?" என்று கூறி விட்டுத்தான் சென்றாள். ஆனால், அவள் வந்து சொல்லி விட்டுச் சென்றதிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வரை அவளை மாமியார் திட்டிக் கொண்டே இருந்தாள்!

"உன்னைப் போன்ற பிள்ளை இல்லாதவர்கள் அந்த இடத்துக்கெல்லாம் வரக்கூடாது. அங்க நாலு நல்ல நிகழ்ச்சி நடக்கும். நீயும் சுமங்கலிப் பெண்ணென்று எண்ணிக் கொண்டு உன்னையும் தண்ணி வார்க்கவும், அரப்பு வைக்கவும், ஆராத்தி எடுக்கவும் கூப்பிடுவார்கள். நீதான் பட்ட மரம் என்றாலும் அந்தப் பிஞ்சையும் பட்ட மரமாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாதே!" என்ற அறிவுரையுடன் காலையில் வழக்கமான புராணம் ஆரம்பமான போது அவளின் கணவன் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தான்.

அம்மா ஆறுதலாகத் தன்மையாகச் சொல்வதாகவே அவனுக்குப் பட்டது. அவன் இதைப்பற்றிக் கவலைப்படாமல் சென்று விட்டான். அவன் செல்லும் வரை மலர்ந்த முகத்துடன் அவனைக் காரியாலாயம் அனுப்பிவிட்டுக் கட்டிலில் வந்தமர்ந்து குலுங்கிக் குலுங்கி அழுதாள் சுமத்திரா. அவளுக்கு ஆறுதல் சொல்ல அந்த வீட்டில் யாரும் இல்லை.

"இந்த அழுகையும் முனிவும் தான் வேண்டாம் என்கிறது.. இதெல்லாம் என்னத்துக்கு, அழகைப் பார்த்துத் தானே எடுத்தேன். இப்படியாகுமென்று எண்ணினேனா? எத்தனை வருடம் கஷ்டப்பட்டு அவனை மணம் முடிக்கச் சம்மதிக்க வைச்சேன். இந்தச் சனியன் வயித்தில் ஒரு புழு பூச்சியும் இல்லாமல் இருக்கிறதே!

"வந்தவுடனே புருசனுக்கு மந்திரமும் போட்டுவிடுகிறாளுகள். அவனும் பம்பரம் போல் சுழலுகிறான். தாலியறுத்து வேறு ஒரு பெண்ணுக்கு கட்டுவோம் என்றாலும் கேட்கிறான் இல்லை. இந்தச் சொத்தின் வாரிசுக்கு எங்கே போறது? எங்கட கண்ணுக்குப் பிறகு எப்படி எல்லாம் ஆகுமோ?....." மாமியார் புலம்பிக் கொண்டிருந்தாள். சுமத்திரா மனம் குமுறிக் கொண்டிருந்தாள்.

நானா மலடி? எனக்கா பிள்ளை இல்லை. என்னுடைய வயிற்றிலா பிள்ளைக்கான புழு பூச்சி இல்லை இதைச் சொல்லி விட எனக்கு ஒரு நிமிடம் போதும், ஆனால் அவர்..

திருமணமான முதலிரவன்று எல்லோரையும் போல் பால் பழத்துடன்தான் அறைக்குள் காலடி எடுத்து வைத்தாள். தோழிகள் என்னவெல்லாமோ சொன்னாலும் அவளுக்கு பயத்தால் உடம்பு நடுங்கியது. வியர்த்தது. நடுங்கும் கரத்தினால் பாலைக் கொடுத்தாள் சுமத்திரா.

பாலை வாங்கிய சதீஷ் சொன்னான், "பயந்து நடுங்காதே சுமி. நான் உன்னை ஒன்றும் செய்யப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உன்னை பார்க்க வந்ததும், பிடித்தது என்று சொன்னதும் வெறும் பாசாங்குதான். இதெல்லாம் நான் என் பெற்றோரைத் திருப்திப்படுத்தச் செய்த ஏற்பாடு. உன்னை ஏமாற்றவில்லை.

"நான் திருமணம் முடிப்பதில்லை என்ற முடிவுடன் தான் முப்பத்தைந்து வயது வரை இருந்தேன். ஆனால், பெற்றோரின் நச்சரிப்பும், மிரட்டலுமே இறுதியாக என்னை இந்த ஏற்பாட்டைச் செய்ய வைத்தது. அதற்கு உன் ஒத்துழைப்பை வேண்டுவதே எனது இந்த வேண்டுகோள். நான் உன்னைக் களங்கப்படுத்த மாட்டேன். பிழை என்றால் என்னை மன்னித்து விடு சுமி."

நீங்களாக என்னை விரும்பி வரும்வரை நான் காத்து இருப்பேன், என்று சினிமா வசனம் பேசிக் கொண்டு ஒரு பக்கமாகப் படுக்கச் செல்லவில்லை. வைத்த விழி மூடாது, நாக்கு அண்ணத்தில் ஒட்டிக் கொண்டது போல் ஏதும் பேசத் தோன்றாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள் சுமித்திரா.

"சுமி உன்னுடைய எதிர்பார்ப்புக்கள் எல்லாம் வீணடித்து விட்டேன் என்று என்மீது கோபப்படாதே, எனக்குத் தெரியும் நான் செய்வது பிழை என்று. ஒரு பெண்ணின் வாழ்வு வீணாகும் என்று. ஆனால் இதை விட வேறு வழி எனக்குத் தோன்றவில்லை" என்று கூறி அழுதான் அவன்.

என்ன செய்தாலும் தன்னைத் தொட்டுத் தாலி கட்டிய கணவன் அவன். அவன் ஓர் ஆண்பிள்ளை அழுவதா? சுமி தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவனருகே சென்றாள். அவன் வாங்கி வைத்திருந்த பாலைக் கையால் எடுத்துக் கொடுத்தாள்.

"இதைக் குடியுங்கள் முதலில். இப்போது நான் உங்கள் மனைவி . உங்கள் உடமை. நீங்கள் எப்படியும் நடத்த முடியும். நானும் நீங்கள் சொல்வதைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன். உங்களில் பாதி நான் என்ற உணர்வுடன். கவலையை விடுங்கள்" என்று அவனுக்கு ஆறுதல் கூறினாள் சுமி.

எப்போதோ ஒரு நாள் தன் கணவன் மனம் மாறித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கையில் கணவன், மனைவி நாடகத்தை கனகச்சிதமாக நடித்துக் கொண்டிருந் தாள் சுமத்திரா.

இதே மாமியார், தான் காலையில் எழுந்ததும் முட்டைக் கோப்பி கொடுப்பது முதல் சத்தான உணவுகள் என்று தேடித் தேடி வாங்கிக் கொடுத்துச் சுமி, சுமி என்று உயிரை விட்ட மாமியார்தான், இன்று அவள் உயிரையே வாங்கிக் கொண்டிருக்கிறார்.

ஒரு வருடம் கழித்த பின்னர் அவள் கணவனும் மனம் மாறி இருப்பதாக அவளுக்குப் புரிந்தது. அவளுடன் நெருங் கிப் பழகுவதும், தொட்டுத் தொட்டுப் பேசுவதும் ஒரே கட்டிலில் படுப்பதுமாக மெல்ல மெல்ல நெருங்கி வருவதாக உணர்ந்தாள். என்ன இருந்தாலும் அவள் ஒரு பெண்ணல் லவா? அவனாகத் தன்னை நெருங்கும் வரை காத்திருந்தாள் சுமி.

ஒரு வருடம் கழித்த பின்னர் தான் தங்கள் நிலையை அறியாத மாமியாரின் நச்சரிப்புத் தொடங்கியது. "போதும் போதும் இனி என்றாலும், ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொடுங்க. காலங்கடந்த கல்யாணம் இது. இனியும் காலத்தைக் கடத்த வேண்டாம். எனக்குப் பேரப்பிள்ளை வேணும்.." என்று தொடங்கியது "ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போ. செக் பண்ணிப்பார்" என்று படிப்படியாக கூடிக் கொண்டே வந்தது.

ஒரு நாள் கணவனுடன் சந்தோசமாகக் கதைத்துக் கொண்டிருக்கும் போது, சுமி சொன்னாள் "மாமி பேரப்பிள்ளை யைக் கொஞ்ச ஆசைப்படுகிறா.." என்று.

"உனக்கும் ஆசை இருக்குமென்று எனக்கு தெரியும். அப்படியானால் ஒன்று செய்வோமா?" என்றான். கணவன் கூறுவதை என்ன, என்பது போல் ஏறிட்டு நோக்கினாள் சுமி.

"இப்போதுதான் செயற்கையாகக் கருத்தரிக்க வைக்கி றார்களே உன்னையும் கூட்டிச் சென்று அவ்வாறு செய்து விடட்டுமா?" என்று கேட்டதுதான் தாமதம். சுமி வெருண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெழுந்தாள்.

"நான் ஏன் அப்படிச் செய்ய வேண்டும். அப்படி என் கணவனுக்கு தகுதியில்லையா? நான் ஏன் மற்றவர்களின் பிள்ளையைத் தாங்கிப் பெற வேண்டும்? நீங்கள் விரும்பும் வரை நானும் பொறுத்திருப்பேன். ஆனால் மாமிதான் பாவம்" என்றாள்.

"சுமி நீ நினைக்கிற மாதிரி நடக்காது. மாமி பாவம் இல்லை. மாமியிடம் பேச்சுக் கேட்கப் போகும் சுமியைப் பார்க்கத்தான் பரிதாபமாக இருக்கப் போகிறது. இதை எப்படி நீ தாங்கிக் கொள்ளப்போகிறாயோ?"

"நீங்க கிழவனாலும் சரி, நீங்கள் விரும்பும் வரை நான் காத்து இருப்பேன். மாமியின் பேச்சு என்ன? எவர் எள்ளி நகையாடினாலும் எனக்குப் பரவாயில்லை உங்களைத் தவிர.." என்று தான் கூறினாள் அன்று. ஆனால் இன்று துடிக்கிறாள்.

"சுமி, நீ நினைப்பது போல் நமது வாழ்க்கையில் என்றுமே நடக்காது சுமி.."

என்ன இவர் இப்படித் திடமாகச் சொல்லுகிறார். என்னுடன் அன்பாக நெருங்கிப் பழகுகிறார் இன்னும் என்ன தடை? சுமிக்குப் புரியவில்லை. இவரென்ன சாமியாரா? இல்லை ஞானியா? குழம்பிப் போனாள்.

"சுமி, நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தர வேண்டும். நான் சொல்லுவதை யாரிடமும் சொல்வதில்லை என்று. அப்படிச் சொன்னால் அடுத்த கணமே நான் பிணமாவேன்" என்று கையை நீட்டினான்.

சற்றுத் தாமதித்த சுமி, கையிலடித்துக் கொடுத்தாள்.

"சுமி இளமையிலே நான் ஒரு சைக்கிள் அக்சிடென்ட் பட்டேன். அப்போது எனது ஆண் உறுப்புக்கள் பாதிக்கப் பட்டு ஒப்பரேசன் மூலம் குணமாக்கினார்கள். ஆனால், இதன் பின்னர் நான் ஆண்மை உணர்ச்சியை இழந்து விட்டேன். காலம் செல்லச் சரிவரும் என்ற நம்பிக்கையில் நான் யாரிடமும் சொல்லாமல் இருந்து விட்டேன். ஆனால் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் நெருக்குதலுக்குப் பின்னர் நான் யாருக்கும் தெரியாமல் டாக்டரிடம் காட்டினேன். எனக்கு ஆண்மை யுணர்ச்சி நரம்பு அறுந்து இருக்க வேண்டும் என்றும், காலம் கடந்து விட்டதால் இனிச் செய்வதற் கொன்றுமில்லை என்று கை விரித்து விட்டனர். இதனால் நான் திருமணத்தைத் தள்ளிப்போட்டுக் கொண்டு வந்தேன்.

"ஆனால், என்னைக் கேட்காமலே உன்னைப் பேசி ஏற்பாடெல்லாம் செய்த பின்னர் சம்பிரதாயத்திற்காகப் பெண்பார்க்க வந்து சரி என்றேன்." சுமிக்கு தலையிலே இடியிறங்கியது போன்றிருந்தது. இதைக் கேட்ட அதிர்ச்சியில் சுகமில்லாமல் வந்து விட்டது அவளுக்கு.

அதற்கு மேல் அவன் கூறிய தனது திட்டங்கள் எதையும் அவள் கேட்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. அவன் சொல்லிக் கொண்டே இருந்தான்.

பேச்சும் கேட்டுக்கொண்டிருக்கிறாள் சுமி. ஒரே ஒரு வசனம் உனது மகனுக்கு ஆண்மையே இல்லை. அதற்கு என்னை ஏன் திட்டித்தீர்க்கிறாய்? என்று கேட்டுவிட முடியும் சுமியால்.

ஆனால் அவள் கணவனை ஊரார் பழித்துப் பேசுவார் களே! அந்த அவமானம் தாங்க முடியாமல் தன்னுயிரை விட, தான் விதவைக் கோலத்தில் வாழ்வதா? அதைவிட இதுவே மேல் அல்லவா?

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், மாமியா ரின் ஏச்சுக்களைக் கேட்டுக்கொண்டு எதுவுமே சொல்ல முடியாமல் துடிக்கும் மனதுடன் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறாள் சுமி.

அவளுக்கு யார் எப்படி ஆறுதல் சொல்ல முடியும்?

இது தமிழ்ப் பெண்மையல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீரகேசரி*, ஒக்டோபர் 1997.

# இளைப்பாறும் சுமைதாங்கிகள்

பத்மா இரண்டு கைகள் நிறையக் காழாஞ்சிகளுடன் கமக்கட்டினுள் கைப்பையை வைத்தவளாக ஆலயப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்தாள்; இறங்கும் போது சேலை காலில் தடுக்கிவிட்டது. காழாஞ்சிகளுடன் குப்புற விழுமாறு தடுமாறியவளை எதிரே வந்த சிவச்சந்திரன், இரண்டு கைகளிலும் இருந்த காழாஞ்சிகளுடனும் சேர்த்துப் பிடித்துக் காப்பாற்றி விட்டான்.

நன்றி சொல்ல வாயெழவில்லை. அவள் நெஞ்சுடன் விழிகளும் படபடத்தன. சிறிது நேரம் எதிர்பாராது ஏற்பட்ட பதட்டத்திலிருந்து தன்னை விடுவித்த பின்னர், "நல்ல வேளை காழாஞ்சிகள் சிதறாமல் காப்பாற்றி விட்டீர்கள்" என்று நன்றிப் பெருக்குடன் கூறினாள் பத்மா.

"உள்ளே போய்ச் சற்று இருங்கள், ஒரு பேக் வாங்கி வருகிறேன், அதனுள் வைத்து எடுத்துச் செல்லலாம்" என்று கூறிவிட்டு வெளியேறினான், அவன்.

பேக்குடன் வந்து காழாஞ்சிகளை வாங்கிப் பத்திரமாக அடுக்கிவிட்டு நீட்டினான். தன்னையே விழித்த விழி மூடாமல் பத்மா பார்த்துக் கொண்டிருப்பது அப்போதுதான் புரிந்தது.

விழிகளை விழிகள் சந்தித்த போது ஒரு மின்னல் வெட்டி மறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 வருடங்களுக்கு முன்னர்..

சிவா அப்போது 30ஐக் கடந்து இருந்தான். குடும்பப் பொறுப்பு அவனுக்கு இருந்தாலும், அவனது வயதைக் கணக்கில் எடுத்து, அவனுக்கு ஒரு திருமணத்தை முடித்து வைக்க வேண்டும் என்று, அவனது தாய் பிடிவாதமாக இருந்த போதும், சிவா மறுத்தான்.

"இரு தங்கைகள் இருக்கிறார்கள், அப்பாவும் இல்லை, நான் அவர்கள் இருவரையும் கரையேற்றிய பின்னர்தான் என்னைப் பற்றிச் சிந்திப்பேன்" என்று கூறிவிட்டான்.

பெற்ற தாயோ அவன் வாதத்தை ஏற்றுக் கொள்ள வில்லை.

"அப்பா திடீரென இறந்து விட்டது உண்மைதான். உன்னை நம்பியா நாங்கள் பிள்ளைகள் பெற்றோம்? அவர்களுக்காக நீ உதவ வேண்டும்தான், அதற்காக நீ உன் வாழ்வைப் பாழாக்க வேண்டும் என்பதில்லை. அவரவர் தலைவிதிப்படி அது நடக்கும். உனக்கும் காலாகாலத்தில் ஒரு கல்யாணத்தை செய்து வைக்க வேண்டியது என் கடமை" என்று, தனது முயற்சியில் இறங்கினாள் அந்தத் தாய்.

சகோதரிகளும் அண்ணாவில் இருந்த நம்பிக்கையில், தாய்க்கு உடந்தையாக இருந்தார்கள். ஓர் அண்ணியை விரைவில் பார்க்க வேண்டும் என்று.

தரகர் சிவாவிடம் கதை கொடுத்த போது, "உழைக்கும் பெண்ணாகப் பாருங்கள், எனது உழைப்புக் குடும்பத்துக்குச் சில காலத்துக்குச் சேரவேண்டும்" என்று கூறிவிட்டான்.

"அதுக்கென்ன பார்த்தாப் போச்சு" என்ற தரகர், "ஒரு ஆசிரியை இருக்கிறாள்" என்று பொருத்தம் பார்த்துச் சரி வரவே, பெண் பார்க்க அண்ணாவை அழைத்துச் சென்றனர் தங்கைகள்.

அன்று பார்த்த பெண் ஆசிரியை, செல்வி பத்மாவதி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃது இவளா! அவனால் நம்ப முடியவில்லை..

பெண்ணை மாப்பிள்ளை வீட்டார் எல்லோருக்கும் பிடித்துப் போய் விட்டது. தங்கைகளுக்கு மகிழ்ச்சி பிடிபட வில்லை. சிவாவுக்கும் மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை. தனது தேவையும் ஓர் உழைக்கும் பெண் என்பதில் திருப்தி வேறு.

எல்லோரும் கை நனைத்துச் சாப்பாடு எல்லாம் முடித்து இருக்கும் வேளைதான் தரகர் வந்து மாப்பிள்ளையின் காதில் கிசுகிசுத்தார்.

"பெண் உன்னிடம் தனியாகக் கதைக்க வேண்டுமாம்."

நல்லது, தனது மனக்கிடக்கையையும் சொல்லி விடலாம், என்று யாரும் அறியாமல் அறைக்குச் சென்றான் சிவா.

அங்கே, "இது எனது தங்கைகள், தந்தை இல்லாத குடும்பத்தை வழி நடத்துவது எவ்வளவு கஸ்டம்? என்பது உங்களுக்கும் தெரிந்திருக்கும். அதனால் தான் உங்களிடம் பேசலாம் என்று அழைத்தேன். இவர்களுக்கு என்னை விட்டால் வேறு வழியில்லை.

"இவர்களுக்கு திருமணமாகும் வரை அம்மாவும் இவர்களும் என்னுடன் தான் இருப்பார்கள் எனது உழைப் பிலேயே இந்தக் குடும்பம் ஓடுகிறது. இவர்களை நட்ட நடுத்தெருவில் விட்டு வரத் தயாரில்லை. நீங்கள் இதை விரும்பினால் மேற்கொண்டு மற்றவற்றைப் பேசிச் செய்ய லாம்" என்று பளிச்சென்று கூறிவிட்டாள் பத்மா.

இடிமேல் இடிவிழுந்து விட்டதை உணர்ந்த சிவாவினால் எதுவுமே பேச முடியவில்லை.

"நீங்கள் உங்கள் முடிவை உடனே தெரிவிக்க வேண்டும் என்பதில்லை. நீங்கள் ஆறுதலாகச் சிந்தித்து முடிவை எடுக்கலாம். உங்கள் முடிவு எதுவானாலும் பரவாயில்லை மறைக்காமல் என்னிடம் சொல்லலாம். அதை ஏற்றுக்கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தயாராய் இருக்கிறேன்" என்றாள் பத்மா.

நான் சொல்ல வேண்டியதை அவள் சொல்லி விட்டாள், இதற்கு மேல் நான் என்ன சொல்ல வேண்டி இருக்கிறது? என்று எண்ணிய சிவா, நான் பின்னர் என் முடிவை அறிவிக் கிறேன், என்று கூறிவிட்டு வெளியேறினான்.

நன்றாகச் சிந்தித்த சிவாவுக்கு, ஒருவர் சுமையை ஒருவர் இறக்கிக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தால், இங்கு இருவரும் சுமையுடன் இருக்கிறோம்; எப்படி ஒரு வருக்கொருவர் உதவ முடியும்? ஒருவர் சுமையை ஒருவர் இறக்க உதவ முடியாவிட்டால், இந்தப் பந்தம் எந்த வகை யிலும் உதவப் போவதில்லை.

மாறாக இருவரும் சுமை தாங்க முடியாமல், வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளத் தான் வேண்டும். என்னால் அவளுக்கு உதவ முடியாவிட்டாலும் அவளது நோக்கத்தைப் பாழடிக்கக் கூடாது. எனது குறிக்கோள் எனக்கு எப்படி முக்கியமோ அவ ளுக்கும் அது முக்கியமானதுதான் என்ற முடிவுக்கு வந்த சிவா, ஒரு கடிதம் எழுதித் தரகர் மூலம் அனுப்பி வைத்தான்.

"இருவரும் சுமைதாங்கிகளாக இருக்கிறோம் ஆகவே ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருக்க முடியாது.

"இருவரது நோக்கமும் குறிக்கோளும் ஒன்றாக இருப் பதால், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க முடியாத நிலையில், இருவரும் ஒன்று சேர்வது இருவருக்கும் எந்த நன்மையையும் தரப்போவதில்லை. அதுமட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறித்து இதனை ஒத்திப் போடவும் இயலாது என்று நினைக்கிறேன்.

"ஆகவே இருவரும் வெவ்வேறு வழிகளை நாடுவது நல்லது என்று நான் கருதுகின்றேன். நீங்கள் தவறாக எடுத் துக் கொள்ள மாட்டீர்கள் என்று நினைக்கின்றேன்" என்று சுருக்கமாக அக்கடிதத்தில் எழுதியிருந்தான் சிவா.

மனதுக்குப் பிடித்த ஒரு பெண்ணை, விட்டுக் கொடுப் பது கஸ்டமாகத் தான் இருந்தது. என்றாலும் வேறு வழியிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவில்லை. இந்த மனக் கஸ்டம், அவனை வேறு பெண் பார்க்கச் சொல்ல இடம் தரவில்லை.

ஓயாது உழைப்பில் ஈடுபட்டிருந்த போது, தனது திரு மணத்தை மறந்திருந்தான். தங்கைகளுக்கும் திருமணம் எதுவும் நடைபெறுவதாகவில்லை. அதற்குத் தனது பொரு ளாதார நிலையே காரணம் என்பதை உணர்ந்த சிவா சில காலத்தின் பின்னர் திரை கடலோடியும் திரவியம் தேடப் புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

காலம் உருண்டோடியது...

இரு தங்கைகளுக்கும் வீடு கட்டி நல்ல சீதனத்தோடு வாழ்வமைத்துக் கொடுத்து விட்டான். இனி எந்தப் பொறுப் பும் இல்லை. தாய் பேரப் பிள்ளைகளையும் கண்டு விட்ட திருப்தியில் இருக்கிறாள். அவனும் இப்போது சிறப்பாக இருக்கிறான். இப்போது அவனைப் பற்றிக் கவலைப்படு வார் யாரும் இல்லை.

வயது 55ஐக் கடந்து விட்டாலும் ஒழுங்கான வாழ்க்கை வாழ்ந்ததாலோ என்னவோ, இப்போதுதான் நரை அங் கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்ற ஆரம்பித்து இருந் தது. மற்றப்படி மகிழ்ச்சியான வாழ்க்கையில் முகம் செஞ் செழிப்பாகவே இருந்தது.

இந்த நிலையில் பத்மாவை மீண்டும் சந்திப்போம் என்று எந்த எதிர்பார்ப்பும் இருக்கவில்லை. எதிர்பாராமல் ஏற்பட்ட சந்திப்புப் பழையவைகளை நினைவூட்டிற்று. தட்டுத் தடுமாறிய சிவா,

"நீங்க.. நீங்கள்.. அந்தப் பத்மாவா" என்றான்.

"ஆமாம் அதே பத்மாதான். செல்வி பத்மாதான்." அவள் கண்கள் பனித்தன..

அவனுக்குச் சங்கடமாகப் போய்விட்டது. ஏன் கேட் டோம் என்றாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குறிப்பிட்ட காலக்கெடு வைக்க முடியாமல் பிரிந்த நாம் இன்று சந்திக்கின்றோம்."

"எனது கடமைகள் எல்லாம் முடிந்து விட்டன."

"உழைத்து உழைத்துக் களைத்த நான்.. உயர்ச்சி பெற்று அதிபரானாலும். இன்று இனப் பிரச்சினைகளால் இடம் பெயர்ந்து, ஒட்டி ஒதுங்க இடம் இன்றி, இன்று ஓய்வை நாடிக்கொண்டிருக்கிறேன்.

"ஓய்வுக்கு விண்ணப்பித்து விட்டுக் கல்வித் திணைக் களத்துக்கு அலைந்து கொண்டிருக்கிறேன்." வழமை போல் தன் நிலையை பளிச்செனை விளக்கினாள் பத்மா.

"ஒட்டி ஒதுங்க இடமில்லை என்கிறீர்கள் இத்தனை காழாஞ்சிகள் அர்ச்சனை செய்திருக்கிறீர்களே?" எண்ணிய தைக் கேட்டு விட்டான் சிவா.

"ஓ! இதுவா.. தங்கைகளின் குழந்தைகளுக்கு. இன்று ஒருத்தியின் பிறந்த நாள், அதுதான். அவர்களுடைய இனி மையான வாழ்வுக்கு நான் இடைஞ்சல் என்று கருதியதால் ஒதுங்கிக் கொண்டேன். அவர்கள் தாங்களும் தங்கள் குழந் தைகளுமாகச் சந்தோசமாக இருக்கிறார்கள். அவர்கள் என்ன தான் என்னை ஒதுக்கினாலும் குழந்தைகளை வளர்த்த பாசம் என்னை விட்டு வைக்கவில்லை, அதுதான்."

வயதும் அனுபவமும் அவர்களைத் தாங்கள் புதியவர் கள் என்றோ, ஆண் பெண் என்றோ, வித்தியாசமின்றி சகஜமா கப் பேசவைத்துக் கொண்டிருந்தது.

"ஏன் உங்களால் திருமணம் செய்து கொள்ள முடிய வில்லை?"

"எப்படி முடியும் இத்தனை வயதுக்குப் பின்னும் எனக் காக ஒருவர் காத்துக் கொண்டிருப்பார் என்று எப்படி நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியும்? அது கிடக்கட்டும். நீங்கள் மனைவி மக்களுடன் நலமாக இருக்கிறீர்களா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களைப் போலத்தான் நானும். கடமைகளை முடித்துவிட்ட திருப்தியில் தனி மரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அம்மாதான் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறா. தனக்கும் வயதாகி விட்டது என்றும் தன்னை மக்கள் பார்த்துக் கொள்ளுவார்கள் என்றும் உன்னை யார் பார்க்கப் போகிறார்கள்? உனக்கென்று ஒரு பற்றுக்கோடும் இல்லாமல் எப்படி எல்லாம் கஸ்டப் படப்போகிறாய், நான் சொன்னதைக் கேட்காமல் இப்படியே இருந்து என்ன செய்யப் போகிறாய்? என்றும் ஒரே ஒப்பாரிதான் வீட்டில். ஆறுதல் தருவதெல்லாம் இந்த ஆலயங்கள் தான்" என்றவன்.

பத்மாவை உற்றுப் பார்த்தான் கண்களில் கண்ணாடி ஒன்றே மாற்றம். இத்தனை வயதுக்குப் பிறகும் ஒரு பெண்ணால் எப்படி உடம்பைக் கட்டாக வைத்துக் கொண்டிருக்க முடிகிறது? வியப்பாக இருந்தது அவனுக்கு. சதைகளில் தொய்வு ஏற்பட வில்லை. தலைமுடி கூட நரைக்க வில்லை.

அவனது பார்வை அவளைத் தலை குனிய வைத்தது. வயது ஏறிவிட்டாலும் நாணமும் விடை பெற்றுவிடுமா என்ன?

"கொஞ்சம் இருங்கள் இதோ வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு அவசரமாக வணக்கத்தை முடித்துக் கொண்டு ஆலயத்தைச் சுற்றி வலம் வந்தான். அவனது மனம் என்றுமில்லாதவாறு மகிழ்ச்சியில் திளைத்திருந்தது.

இருவருமாகப் பத்மா தங்கியிருந்த லாட்ஜுக்குச் சென்றனர்.

"நான் உள்ளே வரவில்லை. ஒரு நாள் வீட்டுக்கு வாருங்கள். நாங்கள் இங்கேதான் வீடு வாடகைக்கு எடுத்து இருக்கிறோம். நாலைந்து வருடமாக.. சம்மதம் என்றால் நானே வந்து கூட்டிச் செல்கிறேன்" என்றான் சிவா.

தலையை ஆட்டிச் சம்மதம் தெரிவித்தாள்.

வீட்டுக்கு வந்த சிவா தாயிடம் நடந்ததைக் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதான அந்தத் தாய்க்கும் மகிழ்ச்சி பிடிபடவில்லை.

"அந்தப் பிள்ளையை ஒருக்காக் கூட்டி வா, நான் பார்க்க வேணும். எப்படிப் பார்க்கப் போகிறேன், கண்ணும் மங்கிவிட்டது. இன்னார்க்கு இன்னார் என்று இறைவன் எழுதி வைத்தது பொய்யாகுவதில்லை.

"பார்த்தாயா, அன்று நடக்கவில்லை, இனி என்றும் நடக்காது என்றும் கூறமுடியாது. வயதானால் ஊன்றுகோல் தேவை, அதுபோல் வயதான வாழ்க்கைக்கும் ஒரு பற்றுக் கோடு தேவை. அந்தப் பற்றுக் கோடு இல்லையெனில், வாழ்க்கையில் நிம்மதி என்பது இருக்காது.

"ஓடி ஆடி உழைத்த உடலுக்கு ஓய்வும் தேவை. அது நமக்கென்று சொந்தத்தில் தான் கிடைக்கும். மற்றவர்கள் எவராலும் தர முடியாது. நான் கண் மூடும் முன் நீ அந்தப் பிள்ளையுடன் சேர்ந்து கொள்.

"அந்தப் பிள்ளையும் களைத்துப் போய் இருப்பாள். அவளுக்கும் ஒரு ஆறுதல் தேவை. அதனை நீ ஒருத்தன் தான் கொடுக்க முடியும். இனி என்ன குடும்ப வாழ்க்கை எங்களுக்கு என்று எண்ணாதே. இனித்தான் ஒருவருக் கொருவர் உதவி தேவை.

"ஓய்வும் அமைதியும் ஆதரவும் இருவருக்கும் கடைசி காலத்தில் தேவை. அதை நீங்கள் தான் ஒருவருக்கொருவர் கொடுக்க முடியும்.

"மற்றவர்களை நம்பி இருக்க முடியாது. அதெல்லாம் உங்களிடம் பணம் இருக்கும் வரைதான். இனி நான் ஆறுத லாகக் கண் மூடுவேன்" என்று ஆனந்தித்தது அந்தத் தாயுள்ளம்.

சுமைதாங்கிகள் இரண்டும் ஒன்றை ஒன்று தாங்கி ஓய்வு கொள்ள நாடி நின்றன. இனியும் தடை இருக்க முடியுமா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மித்திரன்*, மே 1993

# சொல்லியழ யாருமில்லை

"நான் யாருக்கு, என்ன துரோகம் செய்தேன்; யார் குடியை நான் கெடுத்தேன். எனக்கு ஏன் இப்படி நடக்க வேண்டும். எல்லோருக்கும் நல்லதைச் செய்து, நல்லதே நடக்க வேண்டும் என்று எண்ணிச் செயல்படும் எனக்கா இந்தச் சோதனை. இறைவா! நான் என்ன குறை வைத்தேன் நீயேன் என்னை இப்படிச் சோதிக்கிறாய்..?

"சோதிக்கிறாயா? நான் நினைத்தேன் என்றால் எல்லோரையும் வெட்டிச் சாய்த்துவிட்டுச் சிறை செல்லவும் தயார். நான் என்ன செய்தாலும் நீயே பொறுப்பு. ஆமாம் இறைவா நீயே பொறுப்பு.."

இப்படி மேசையில் தட்டிச் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தான் விவேக்.

அப்போதுதான் நண்பன் ரமேஷின் காதில் இப்பேச்சு விழ, அவன் அப்படியே ஸ்தம்பித்து நின்றான். உள்ளே விவேக் யாருடனோ பேசிக்கொண்ருடிக்கின்றான் என்று முதலில் நினைத்த ரமேஷுக்கு, பின்னர்தான், விவேக் தனியாகத் தனக்குத்தானே பேசிக் கொண்டிருக்கின்றான் என்று விளங்கியது. என்றாலும் உள்ளே செல்லத் தயங்கி யவாறு நின்று கொண்டிருந்தான்.

இந்தச் சமயத்தில் ரமேஷ் அருகில் வந்த விவேக்கின் வீட்டு வேலையாள் மெதுவாகச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளே வேற யாரும் இல்லை ஐயா! இப்ப சில நாளாக ஐயா இப்படித்தான்! எப்படியும் ஒரு இரவுக்கு ஒரு போத்தல் குடிப்பார். பிறகு இப்படித்தான் தனக்குத்தானே பேசிக்கொண் டிருப்பார். அம்மா வீட்டுக்குப் போய் வந்ததிலிருந்து இப்படித் தான் இருக்கிறார். ஒருவரிடமும் ஒன்றும் சொல்வதில்லை" என்றான் அவன்.

சிறிது நேரம் யோசித்துக் கொண்டு நின்றான் ரமேஷ். உள்ளே செல்வதா, அல்லது வெளியே போவதா என்பதே அவனது மனப் போராட்டமாக இருந்தது.

அப்போது போத்தல், கிளாஸ் எல்லாம் உருண்டு விழுந்து உடையும் சத்தம் கேட்கவே, வேலைக்காரன் விரைந்து கதவை அகலத் திறந்து கொண்டு உள்ளே செல்ல, இதுதான் சந்தர்ப்பம் என்று, ரமேஷும் உள்ளே சென்றான்.

"வா மச்சான் வா!" என்று வேகமாக எழும்பி, விழப்போக, ரமேஷ் தாவிச் சென்று அவனைத் தாங்கிப் பிடித்துக் கட்டிலில் அமர்த்தினான்.

"ஒரு மாசம் உனக்குக் கடிதம் எழுதி; இப்பதான் வர உனக்கு நேரம் கிடைச்சுதோ? எனக்கு யார் இருக்கிறார்கள்? எனக்கு ஆறுதல் சொல்ல யார் இருக்கிறார்கள்? யாரிடம் சொல்லி அழுவேன்? அவளால் சொந்த பந்தம் எல்லாம் இழந்து விட்டேன். இருக்கும் நீயோ தொலைதூரத்தில்" சொன்னவன் கட்டிலில் விழுந்து விட்டான்.

அவனை நீட்டி நிமிர்த்தி வளர்த்திய ரமேஷ், "அதை யெல்லாம் நாளைக்கு கதைக்கலாம். முதலில் நீ கொஞ்சம் படு. நான் இங்கு சில நாட்கள் நிற்கப் போகிறேன். லீவில் தான் வந்திருக்கின்றேன்" என்றான்.

ஏதோ முணுமுணுத்தபடி அமைதியானான் விவேக்.

கொழும்பில் ஒரு கடை முதலாளி விவேக். அவனும் ரமேஷும் பாடசாலை நண்பர்கள். ரமேஷ் கண்டியில் ஒரு தனியார் கம்பனியில் வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் கண்டிக்கு ரமேஷைப் பார்க்க வந்திருந்தான் விவேக். கண்டி, திருவிழாக் கோலம் கொண்டிருந்த நேரம் அது. ஒரு கலையரங்குக்கு இருவரும் சென்றிருந்த போது ரமேஷின் நன்பன் ஒருவனின் தங்கை, அந்தக் கலையரங்கில் நடனமாடிய பின், அதே அலங்காரத்துடன் தனது அண்ணனோடு வீடு செல்லக் காரில் ஏற, வந்திருந்தாள். அப்போது விவேக்கும் ரமேஷும் கலையரங்கில் இருந்து வெளியே வந்து கொண்டிருந்தனர்.

"ஹலோ ரமேஷ்" என்று அவன் கூப்பிட..

"ஹலோ? நாட்டியமாடியது.. உன்.?" என்று ரமேஷ் கேட்க..

"யேஸ், என் தங்கை லாவண்யா தான்" என்றான் அந்த நண்பன்.

"மீட் மைபிரண்ட் விவேக். கொழும்பில் இருந்து என்னைப் பார்க்க வந்திருக்கிறான். அது தான் கூட்டி வந்தேன்" என்று அறிமுகம் செய்தான் ரமேஷ்.

ரமேஷும் அந்த நண்பனும் பேசிக் கொண்டிருக்க லாவண்யாவும் விவேக்கும் பேசிக்கொண்டிருந்தனர்.

"உங்கள் நாட்டியத்தை மிகவும் ரசித்தேன். மீண்டும் பார்க்க வேண்டும் போல் இருந்தது. உங்களைச் சந்தித்துக் கதைப்பேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள். நாட்டியத்திற்கு ஏற்ற உடல்வாகு" என்றான் விவேக்.

அவள் சிரித்துக் கொண்டே இருந்தாள்.

"நீங்கள் கொழும்புக்கு வரும் போது, கட்டாயம் என் கடைக்கு வரவேண்டும். உங்களை நான் மீண்டும் சந்திக்க விரும்புகின்றேன்" என்று கூறித் தனது விசிட்டிங் கார்டை அவளிடம் கொடுத்தான் விவேக்.

அவளும் அவள் அண்ணனும் விடைபெற்றுச் சென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். அவர்கள் சென்ற திக்கையே பார்த்த வண்ணம் இருந் தான் விவேக்.

"விவேக், வீட்டுக்குப் போகலாமா?" என்று கேட்ட போது தான் அவன் சுயநினைவுக்கு வந்தான்.

"இந்த இன்ப அதிர்ச்சியில் இருந்து என்னால் மீளவே முடியவில்லை. உனக்கு அவர்கள் வீடு தெரியும் தானே. நாளை நான் புறப்படும் முன்னர், ஒரு முறை சென்று வருவோம்" என்று கூறியபடியே விவேக் காரில் ஏறி அமர்ந்தான். வீடு செல்லும் வரை அவன், லாவண்யாவைப் பற்றியே கதைத்துக் கொண்டு வந்தான்.

அடுத்த நாள், அவர்கள் லாவண்யாவின் வீட்டுக்குச் சென்றபோது, அவள் மட்டும் தனியே இருந்தாள். தோட்டத் தைப் பார்ப்பது போல் ரமேஷ் செல்ல, விவேக் தனியே கதைத்துக் கொண்டிருந்து விட்டுப் புதிய உற்சாகத்துடன் திரும்பினான்.

கொழும்பிலுள்ள தனது கடைக்குச் சென்ற விவேக், தினமும் ஒரு தடவை கண்டிக்குப் போன் எடுத்து, ரமேஷிடம் லாவண்யாவைப் பற்றி அறுக்கத் தொடங்கினான். வேறு வழி யில்லாமல் அவர்களுக்குள் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத் தான் ரமேஷ்.

அடுத்த மாதம் கொழும்பு சென்ற லாவண்யா, குடும் பத்துடன் விவேக்கின் கடைக்குச் சென்றாள். விவேக் அவளுக் குத் தங்கச் செயினைப் பரிசாகக் கொடுத்தான். அதன் பின் ரமேஷின் உதவி இல்லாமலேயே அவர்கள் உறவு வளர்ந்தது.

லாவண்யாவைத் திருமணம் செய்யப் போவதாக வீட்டில் சொன்னபோது அவன் தாய், தந்தையர் அதற்கு மறுப்பு தெரி வித்தனர். இன்னும் ஒரு முதலாளியான அவன் மாமனார், தன் மகளையே அவன் கட்டிக்கொள்ள வேண்டும் என்று, சண்டைக்கு வந்தார். இந்த நிலையில், இவர்கள் எல்லா ரையும் உதறித்தள்ளிவிட்டு, விவேக் கண்டி வந்து லாவண் யாவைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு கொழும்புக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டி வந்து, தனி வீடெடுத்து அவளுடன் தனிக் குடித்தனம் தொடங்கினான்.

திருமணம் நடந்து இப்போது ஒரு வருடம் தான் சென்றிருக்கும். அதற்குள் இவர்களுக்கு என்ன பிரச்சனை என்று அறியாது குழம்பிக் கொண்டிருந்தான் ரமேஷ்.

அடுத்த நாள் ரமேஷ் அதிகாலையிலே எழுந்து அவசர அவசரமாகக் குளித்து விட்டு வந்து அமர்ந்தான். வேலைக் காரன் வந்து தேனீர் கொண்டு வைத்து விட்டுச் சென்றான்.

"என்ன மச்சான் என்ன நடந்தது?" என்று கேட்டு வைத்தான் ரமேஷ்.

"என்ன நடக்க வேண்டும்? எல்லாமே நடந்துவிட்டது. எனது வாழ்க்கையே முடிந்து விட்டது" என்றான் விவேக்.

"நீயாகத் தேடிக் கொண்டது. இவ்வளவு விரைவில் கசந்து விட்டதா?"

"நானாகத் தேடிக் கொண்டதால் தானே நாதியற்றவனாக நான் இருக்கின்றேன். எனது மனக்குறையைச் சொல்ல ஒருவ ரும் இல்லை. எனக்கு ஆறுதல் கூற எவரும் இல்லை."

"அப்படி என்ன?"

"சொல்கிறேன். திருமணம் முடித்து வந்ததில் இருந்து கடை வேலையை 4–5 மணிக்கு முடித்து விட்டு வரும்படி கூறுவாள். புதிதாகையால் நானும் கணக்குகளை அடுத்த நாள் காலையில் பார்க்கலாம் என்று கூறிவிட்டு, வந்து விடுவேன். நாள் செல்லச் செல்ல இதுவே பழக்கமாக வேண்டும் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் கடையை, தொழிலை விட்டு என்னால் இருக்க முடியவில்லை. நான் 8 மணிக்கு மேலே தான் வீட்டுக்கு வரக்கூடியதாக இருக்கும். ஞாயிற்றுக்கிழமை மட்டுமே எனக்கு விடுமுறை. அதில் அவள் விரும்பும் இடங்களுக்கு எல்லாம் கூட்டிச்செல்வேன் இருந்தும் அவளுக்குத் திருப்தி இல்லை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு நாள் காலில் ஒரு சிராய்ப்பு ஏற்பட்டதும் உடனே தனது அம்மா வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று அடம் பிடித்தாள். கூட்டிக் கொண்டு விட்டு வந்தேன். சென்றவள், ஒரு மாதத்திற்குப் பின், நான் சென்று கூட்டி வரும் வரை வரவே இல்லை. இத்தனைக்கும் வீட்டில் நான் தனியே என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்.

"இப்படியாக, ஒரு வருடத்தில் மூன்று முறை வீட்டுக் குச் சென்று விடுவாள். குடும்ப உறவில் நான் அவளுக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை என்ற மனத்திருப்தி எனக்கிருக்கிறது. இவை எல்லாம் சிறு பிரச்சனை. மாற்றி விடலாம் என்றிருந்தேன்."

"ஆமாம், நீங்கள் இருவரும் மனந்திறந்து பேசினால் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம்.."

"ஆமாம், நான் முற்றுப்புள்ளி வைத்து விட்டேன்."

"என்ன விவேக் சொல்கிறாய்?"

"ஆமாம். முடித்துவிடத் தீர்மானித்து விட்டேன்."

"கடைசியாகச் சென்றபோது கர்ப்பமாக இருந்தாள். சத்தி எடுக்கத் தொடங்கினாள். வீட்டில் உதவி செய்ய ஒரு வரும் இல்லை என்று கொண்டு போய் விட்டு வந்தேன். சென்றவள் வரவே இல்லை. ஒரு மாதத்தின் பின் கூட்டி வரலாம் என்று சென்றிருந்த போது, கேட்ட செய்தி என்னை அதிர்ச்சியடைய வைத்தது. பிள்ளையை அழித்து விட்டாளாம். இப்போது சுகமாம். படத்திற்குச் சென்றிருக்கிறாள் என்று சொன்னார்கள். இத்தனைக்கும் ஒரு வார்த்தை மூச்சு!

"நான் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவள் ஒருவனுடன் சிரித்துக் கதைத்தபடி உள்ளே வந்தாள். என்னைக் கண்டதும் உள்ளே ஓடினாள். அவன், அந்த நாட்டிய ஏற்பாட்டாளர். வீட்டிற்கும் வந்து சென்றிருக்கிறான். என் னைக் கண்டதும் சொல்லிக் கொள்ளாமலே வெளியேறி விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் சத்தம் போட்டதில், உங்களுடன் சிறைக்கைதி போல வாழ எனக்கு இஷ்டமில்லை, என்று ஒரே வசனத்தில் சொல்லி விட்டாள். ஏன் வீட்டிலே சத்தம் போடுகிறீர்கள் என்று அவள் அண்ணன் கூட கேட்டுவிட்டான்."

"நீ என்ன சொன்னாய்?"

"நான் என்ன சொல்ல இருக்கிறது. இரவோடு இரவாகக் கொழும்பு வந்துவிட்டேன். இன்னமும் யாருக்கும் தெரியாது. யாருக்கு இதைச் சொல்வேன்..

"காதல் வேகத்தில் பல ஆண்கள் செய்வதைத் தான் நானும் செய்தேன். பெற்றோர் எப்போதும் தம் பிள்ளைகளுக்குக் கெடுதல் செய்ய மாட்டார்கள் என்பதை மற்றவர்களைப் போல என்னாலும் அப்போது உணரமுடியவில்லை. இப்போது நான் யாருமற்ற அநாதை. தன்னம் தனிமரம். சொல்லியழக் கூட யாருமில்லை. எனக்கு நானே பேசிக் கொண்டேன். குடித்துக் குடித்து என்னையே அழிக்கத் தீர்மானித்து விட்டேன். இது தான் நானே எனக்கு வழங்கிய தண்டனை.

"நீதான் எனக்கு ஒரு நல்ல நண்பன் என்பதால், உன்னை அழைத்தேன், சொல்லியழ. நான் இதற்கு மேல் என்ன செய்யமுடியும்?" என்றான் விவேக்.

இதற்குப் பின்னர் என்ன சொல்ல இருக்கிறது. அவன் தான் முடித்துவிட்டேன் என்கிறானே! பேச எதுவுமின்றி மௌனமாக இருந்தான் ரமேஷ்.

பெருமூச்சு விட்ட விவேக் கூறினான், "ஆடிய கால்கள் ஆடிக் கொண்டே இருக்கும்" என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீரகேசரி,* மார்ச் 1997

# சாகக் கொடுத்தாலும்

தவமணி வெட்ட வெளியில் கண்களை நிலை குத்தியிருந்தாள். அவள் பார்வை, சூன்யத்தில் நிலைத்திருந்தது. அவளுக்கு இந்த உலகில் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. பார்வை இவ்வாறு இருந்தாலும் கண்கள் நீரைத் தாரையாக வார்த்துக் கொண்டிருந்தன.

தவமணிக்கு இந்த உலகில் யாரை நம்புவது? எதை நம்புவது? என்றே தெரியவில்லை.. தனது அன்புக்குப் பாத்திரமான கணவன்; தன்னைக் கண்மணி போல் நேசிக்கும் பாதுகாக்கும் கணவன்; அவனா இப்படி? அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

சின்னஞ்சிறிய குடும்பத்தில், இப்படி ஒரு புயல் வீசும் என்று அவள் எதிர்பார்த்தாளா?

என்ன?

நெஞ்சில் ஏற்பட்ட சலனம், அவளை எங்கெல்லாமோ அழைத்துச் சென்றது

தனது குழந்தைகள் இருவரும், முகப்பவுடர் ரின்னைக் கொட்டி, ஆளுக்காள் முகத்தில் அள்ளி அப்பிக் கொண்டு, பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்தார்கள். தவமணி சுய நினைவில் இருந்திருந்தால், இந்நேரம் முதுகில் அப்பளம் பொரிந்து இருக்கும.

தவமணி, தன் கணவன் சந்திரனுடனும் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருடனும் சந்தோசமாகக் குடும்பம் நடத்திக் கொண்டி ருந்தாள். அவர்கள் தாங்களும் தங்கள் பாடுமாக தெளிந்த நீரோடை போல் எந்தச் சலனமுமின்றிக் குடும்ப வாழ்க் கையை ஓட்டிக் கொண்டிருந்தனர். அந்த நிம்மதியை சந்தோ சத்தை அழிக்கவென்றா வந்தாள் ருக்குமணி?

தவமணி தாய் வீட்டுக்குக் கணவனுடன் சென்றிருந்த போது ருக்குமணி கேட்டாள்; அக்கா நானும் உன் கூட வரட் டுமா? அங்கு வந்து நின்று படிக்கப் போறன். அடுத்த முறை பிரத்தியேகமாக ஏ. எல். எழுத வேண்டும். இங்கு நின்றால் படிக்க முடியாது. அம்மா, ஒரே வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்லிக் கொண்டிருப்பா என்று.

"ருக்கு, அத்தானிடம் கேள்; அவர் சரி என்றால், வர லாம்" என்றாள், தவமணி. ருக்குமணி தனது தங்கைதானே வேண்டாம் என்றா சொல்லப் போகிறாள்? ருக்குமணிக்கு அங்கே ஒரு காதலன் இருப்பது, அந்த அக்காவுக்குத் தெரிந் திருக்க நியாயம் இல்லை. அவள் படிக்கத்தானே வருகிறாள், என்பதற்கு எந்தக் களங்கமும் கற்பிக்க, அந்தப் பேதைக்குத் தெரியவில்லை.

"அத்தானா? அவரா இல்லை என்று சொல்லப்போகி றார். நீ ஓ.கே. என்றால் சரிதான், அத்தானிடம் பெமிசன் எடுப்பது சிம்பிள்" என்று அத்தானிடம் ஓடினாள்.

"அன்ரா, அன்ரா" என்று பிள்ளைகளும் அவள் பின்னால் ஓடின. தன் குழந்தைகளுடன் அவளும் ஒரு குழந்தையானாள் சந்திரனிடம்.

அவனிடம் கேட்ட போது, "ருக்கு! மாமி ஓம் என்றால் சரிதான். எனக்கென்ன ஆட்சேபனை? நீ வந்தால் அக்கா வுக்குத் துணையாகவும் பிள்ளைகளுக்கு ஒத்தாசையாகவும் இருப்பாய்தானே?"

"என்னத்தான் நீங்க?.... இதற்குத்தானா உங்களிடம் வந்து கேட்டனான். நீங்க, உங்கட ஆசை மாமியிடம் சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ருக்கு அங்கு வந்து இருந்து படிக்கட்டும் என்று அதுக்கு அப்பீல் இருக்காது. பிளீஸ் கேளுங்கத்தான்"

"சரி" என்றதும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு விளையாட ஓடிவிட்டாள்.. சரியான விளையாட்டுப்பிள்ளை என்று எண்ணிக்கொண்டான் சந்திரன்.

அடுத்த நாள் பெட்டியோடு இவர்கள் கூடவே வந்து விட்டாள். அவர்கள் குடும்பத்தில் அவளும் ஒருத்தியாகி விட்டாள். தவமணி அவளை வீட்டு வேலை எதுவும் செய்ய விடவில்லை. எப்போதும் படிப்புத்தான். மாலை வேளைகளில் பிள்ளைகளுடன் விளையாடுவதுதான் அவள் வேலை. அவ ளுக்கு விருப்பமான அனைத்தையும் அத்தான் வாங்கி வர, அக்கா தயார் செய்து கொடுத்தாள். எந்த வீட்டில் இல்லா தது? என்றாலும் இங்கு அவற்றை எல்லாம் மிஞ்சி ஒரு படி மேலே இருந்தது

ஆசை மச்சியின் விருப்பு வெறுப்புகளை அத்தான் அட் சரம் பிசகாமல் செய்து வந்ததில் அக்காவுக்குப் பெருமைதான். என்றாலும் சிலவேளை கோபிப்பாள்.

"நான் எத்தனை தரம் சொல்லியிருப்பேன் வாங்கிவந் தீர்களா? மச்சாள் காலையில் சொன்னவுடன் மாலையில் வேலைவிட்டு வரும்போது மறக்காமல் வாங்கி வந்துவிட்டீர் கள் அவ்வளவுதான் என்னில் அக்கறை.." முகம் நீண்டுவிடும்.

அவளைச் சமாதானப் படுத்த அவன் அன்று முழுவதும் சிரமப்பட வேண்டியிருக்கும். அந்த ஊடல் அன்று இரவே தணியும்.

ஒரு மாதத்திற்குப் பின்னரே தனது திட்டத்தைச் செயற் படுத்தத் தொடங்கினாள் ருக்குமணி.

"அத்தான் நான் ரியுசனுக்குப் போகவேணும். எனது சைக்கிளை வீட்டில் இருந்து எடுத்து வாருங்கள்" என்றாள். எள் என்னும் முன்னர் எண்ணையாகி விடுபவன் அல்லவா? சந்திரன். அடுத்த சனி ஞாயிறு விடுமுறையின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிள் வந்து சேர்ந்து விட்டது.

மற்றும்படி ரியுசனுக்கு சென்டர் தேடி எடுத்ததும் அட்மி சன் எடுத்ததும் எல்லாம் அவளாகவேதான். எல்லாம் அவள் தனது வசதிக்கேற்றாற் போல் அமைத்துக் கொண்டாள்.

இரு ஆத்திகர்களை அப்பாவிகளாக்கித் தனக்கு வேண் டியதைச் சாதித்துக் கொண்டாள் ருக்குமணி.

மாதங்கள் பல கடந்தன..

என்னதான் நம்பிக்கை இருந்தாலும் நமது பிள்ளை களாக இருந்தாலும் ஒரு வயதுக்கு வந்த பின்னர் அவர்க ளில் அவதானமாக இருக்கவேண்டும். இது வீட்டிலுள்ள பெரியவர்களின் கடமையாகும். எனது பிள்ளைதானே, என்னை மிஞ்சி நடக்க மாட்டான் என்பதெல்லாம் சுத்த அபத் தம். காலமும் நேரமும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் அவர்களை மாற்றி மறைமுகமாக எதுவும் செய்யத் தூண்டலாம். வெள்ளை உள்ளம் கொண்டவர்களாயினும் சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்துச் செய்வதை மறைத்து வேசம் போடவே செய்வார்கள். அதுவும் காதல் என்ற ஒன்று பெண் களுக்கு வந்துவிட்டால் அவர்கள் திட்டத்தையும் கள்ளத் தையும் மாற்றுவதென்பது கடினமானது.

காலம் கெட்ட கேட்டுக்கு யாரை, யார் குறை கூறுவது? அவர்கள் ருக்குமணியில், அபாரமான, இல்லை, அலட்சிய மான, நம்பிக்கை வைத்து இருந்ததில் எதையும் கண்டு கொள்ளவில்லை.

ஆனால் அவள் அப்படி வந்து நின்ற போது அதிர்ந்து போனார்கள். பேசுவதற்கு நாவெழவில்லை.

ஒருநாள், நேரமாகியும் ருக்குமணி வீட்டுக்கு வர வில்லை. மாலை வகுப்பு இருந்தாலும் வந்து சாப்பிட்டு விட்டுத்தான் செல்வது வழக்கம். ஆனால் இன்று வராததில், தோழிகளுடன் சேர்ந்து சாப்பிட்டுவிட்டுத்தான் நின்றிருப் பாள், என்று எண்ணிக் கவலைப்படாமல் இருந்து விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை, சில ஆண்களின் உதவியுடன் மாணவிகள் சிலர் அவளை அழைத்து வந்த போதுதான் அவர்களுக்கு அதிர்ச் சியாக இருந்தது.

தலை கலைந்து இருந்தது.. பின் பக்கம் இரத்தம் வழிந்து காய்ந்து போய் இருந்தது. அவளது பார்வை எவரிலும் இருக்கவில்லை.. தன்பாட்டில் கதைத்துச் சிரித்துக் கொண் டிருந்தாள்.

"ருக்கு, ருக்கு உனக்கு என்னம்மா நடந்தது" என்று ஒப்பாரி வைத்தபடி அவளை அழைத்துச் சென்றாள் த மணி.

அழைத்து வந்தவர்களிடம் விசாரித்தான் சந்திரன்.

இன்று காலை ரியுசனுக்கு வரவில்லை. சிலர் வந்து உங்கள் மாணவி ஒருத்தி, மூளை கலங்கிய நிலையில் பாழடைந்த கோவிலடியில் நிற்பதாகக் கூற, நாங்கள் எல்லோரும் சென்று பார்த்தபோது, அது ருக்கு; சைக்கிளும் அங்கேயே கிடந்தது!. அவளுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவளுக்கு எங்களைத் தெரியவில்லை. எங்களுடன் வரமறுக்கவே, இவர்களையும் உதவிக்குக் கூட்டி வந்தோம் என்று சுருக்கமாகக் கூறி முடித்தனர்.

ருக்குமணி தன் காதலனுடன் சுற்றித் திரிந்தது அவர்களுக்குத் தெரியும் என்றாலும் யார் சொல்வது? நமக்கேன் வம்பு என்று பேசாமல் விடை பெற்றுச் சென்றனர்.

இரண்டு அப்பாவிகளும் சேர்ந்து பாவித் தாயை அழைத் தனர். தாய் வந்ததும் வீடே அல்லோலகல்லோலப்பட்டது. தாய் ஒப்பாரி வைத்து ஊரைக் கூட்டிக் கொண்டிருந்தாள்.

அக்காவும் அத்தானும் சொல்வதை உடனே கேட்பாள். மறுகணம் வேறு ஏதோ செய்வாள். அவர்கள், அவளை ஒரு குழந்தைக்கு மேலாகப் பார்க்க வேண்டியிருந்தது. சில வேளை, அத்தான் இருப்பதையும் கவனியாமல் அலங்கோல மான உடுப்புடன் வந்து நிற்பாள். தவமணி கண்டால் பதறிப் போவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர்கள் பலரிடம் காட்டிப் பார்த்தனர். பல விதமான சோதனைகள் நடத்தப்பட்டன. பலன்தான் பூஜ்ஜியம். "தலையில் பலமாகப் பட்ட அடியினால் ஏற்பட்ட அதிர்ச்சிதான் இந்தச் சித்த சுவாதீனத்துக்குக் காரணம். இன்னுமொரு அதிர்ச்சி மூலமே மீண்டும் சுயநினைவுக்குக் கொண்டு வரவேண்டும்" என்று கூறிவிட்டனர். அவள் எந்த அதிர்ச்சிச் செய்தியையும் உணரக்கூடிய நிலையில் இல்லை. ஏதோ பெயருக்கு வைத்தியம் செய்தனர்.

"இது எப்படி ஏற்பட்டது? என்ன நடந்தது?" என்று அறிய மூளையைப் போட்டு குழப்பிக் கொண்டிருந்தனர், அக்காவும் அத்தானும் தாயும். அவர்களுக்கு விடைதான் கிடைக்கவில்லை. தெரிந்தவர்கள் யாரும் இல்லையே சொல்ல..

இருந்த கீறல் காயங்களில் இருந்து யாரும் கள்ளனுகள் நகைகளைப் பறிக்க மல்லுக் கட்டி இருக்கலாம் என்று அனுமானித்தார்கள். என்றாலும் அவள் அணிந்திருந்த கழுத்துச் செயினும் காதில் போட்டிருந்த தோடும் அப்படியே இருந்தன..

அக்காவும் அத்தானும் அவளைப் பூப்போலப் பார்த்துக் கொண்டனர். அவளுக்கு எதுவும் பொருட்டாக இருக்கவில்லை. தாயார் இவர்கள் கவனிப்பில் திருப்திப் பட்டவராக வீட்டுக்குச் சென்று விட்டார்.

அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டவள் அவர்களுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியைக் கொடுத்தாள். ஆமாம் இப்போது வாந்தி எடுக்கிறாள். இந்த அதிர்ச்சியில் அவர்களுக்கு மூளை குழம்பாதது ஆச்சரியம் தான்!

டாக்டர் வேறு அவளை உண்டாகி இருக்கிறாள் என்பதை நிரூபித்துவிட்டுச் சென்றிருக்கிறார். தலை சுற்றியது தவமணிக்கும் கணவனுக்கும். அதன் தாற்பரியமே புரியாமல் பிள்ளைகளுடன் அடித்துப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தாள் ருக்குமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையில் ஆழ்ந்து இருந்த தவமணிக்கு இருந்தாற் போல் ஏதோ வந்துவிட்டது. காளி ரூபம் எடுத்துவிட்டாள். ருக்குமணியைப் பிடித்து அடி அடியென அடிக்கத் தொடங் கினாள்.

"யாருடி இதற்குக் காரணம்? எப்பிடியடி இது நடந்தது? பைத்தியம் என்றாலும் குணமாகி விட்டால் சரி. இதற்கு எப்படியடி விடிவு ஏற்படும்? சொல்லுடி.. சொல்லுடி" என்று அடித்தாள் தவமணி.

வெளியே இருந்து வந்த சந்திரன் அவளைத் தடுத்து நிறுத்த, கருடனைக் கண்ட கோழிக் குஞ்சு போல், அவன் கைகளுக்குள் தஞ்சம் புகுந்தாள் ருக்குமணி.

"உன்னைச் சும்மா விடமாட்டேன்டி. கொன்று போடு வேன். யார் என்று சொல்லு? இதற்குக் காரணம் யாரென்று சொல்லுடி?" என்று அடிக்கக் கையை ஓங்கிக் கொண்டு சென்றாள்.

பயந்து நடுங்கியவள் அத்தானைக் காட்டிவிடுகிறாள். தவமணியின் கை தானாகவே கீழே வந்தது.

ருக்குமணி என்ன நிலையில் இருக்கிறாள்? என்ன விளங்கிச் சொன்னாள்? என்பதைப் பற்றித் தவமணி சிந்திக்க வில்லை. தனது கணவனா? என்ற ஏக்கமே ஏற்பட்டு நெஞ்சம் கனன்று கொண்டிருந்தது.

அன்றிலிருந்து அவள், கணவனுடன் கதைக்கவே இல்லை. ஆரம்பத்தில் இதைப்பொருட்படுத்தாத சந்திரன், பின்னர் தவமணியின் நடத்தையில் இருந்து சிந்திக்கத் தொடங்கினான். அப்போதும் அவனுக்கு மனைவிமேல் நம்பிக்கை இருந்தது. அவள் ஏதோ கிறுக்குத் தனத்தில் தன்னைக் காட்டியிருக்கிறாள். அவள் எதுவுமே விளங்காமல் நடந்து கொண்டிருக்கிறாள். உண்மை ஒருநாள் வெளிவரும் போது உணர்ந்து கொள்வாள்.. உண்மை வெளிவராமலா போய்விடும்? அவளுக்குப் பித்தம் தெளிந்ததும் சொல்லா மலா இருக்கப் போகிறாள்? என்றுதான் சந்திரன் எண்ணிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான்.

என்றாலும் தவமணியின் மௌனமும், வேண்டா வெறுப்பான செய்கைகளும், குத்தல் பேச்சுக்களும் அவனை என்னவோ செய்தன. இதனை வளர விட்டால் ஆபத்து என்று எண்ணினான் சந்திரன்.

தவமணியின் மௌனத்தைக் கலைத்து நிலையை விளங்கப்படுத்த வேண்டும் என்று பேச்சுக் கொடுத்தான்..

"மணி, ஏன் இப்படி இருக்கிறாய்? இங்கே நில் உன்னிடம் கொஞ்சம் பேசவேணும்" என்றான்.

"என்னிடம் பேச வேண்டியதில்லை, எனக்கு எந்த விளக்கமும் தேவையில்லை" என்று வெட்டிவிட்டுச் சென்றாள் தவமணி.

"மணி, நான் சொல்வதைக் கேள்.." என்று பின்னாலே சென்றான் சந்திரன்.

"நீங்க என்னத்தைப் பேசுறது? நான் என்னத்தைக் கேட்பது?"

"நீ ஏன் என்னோடு பேசாமல் இருக்கிறாய் என்றுதான் எனக்கு விளங்கவில்லை?"

"ஓ! சின்னப் பாப்பா, ஒன்றும் தெரியாது, வாய்க்குள் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாது."

"மணி நீ."

"என்னோட பேசாதீங்க. நீங்களும் ஒரு மனுசனா?" கேட்டே விட்டாள்.

"எனக்கு எண்ணிப் பார்க்கவே வெட்கமாக இருக்கிறது அவள் இருக்கும் நிலையை எண்ணிப் பார்க்காமல் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி விட்டீங்க. உங்களுக்கு இது கேவலமாகத் தெரியல்ல" என்று காட்டமாகப் பேசியவளுக்கு, அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதழுது, "ஏன் நான் உங்களுக்கு என்ன குறை வெச்சேன். இரவா, பகலா, எதற்கும் மறுக்கவில்லையே. அப்படி இருக்க, இப்படிக் கேவலங் கெட்ட செயலைச் செய்திட்டு என் முகத்தில் விழிக்க வெக்கமாக இல்லை..?" என்று கேட்டாள் தவமணி.

ஒரு பெண், தன் கணவனைச் சாகக் கொடுத்தாலும் போகக் கொடுக்க மாட்டாள், என்று கூறுவார்கள். அது தங்கையானால் என்ன அவளும் ஒரு பெண் தானே! அவள் தன் கணவனைப் பகிர்ந்து கொள்ள எப்படி அனுமதிப்பாள்? தவமணியும் அவ்வாறுதான் பார்த்தாள்.

தமிழ்ப் பெண்கள், கணவனைத் தெய்வமாக மதிக்கிறார்கள் என்று கூறுவார்கள் அந்தத் தெய்வம்கூடப் பிழை செய்யுமா? தெய்வத்தைத் தவறான வழியில் செல்ல அனுமதிக்க, எந்த அப்பாவிப் பெண்ணுமே தயாரில்லை. எனது கணவன் எனக்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும் என்று எண்ணுவாள். அதற்காக எந்தத் தியாகத்தையம் செய்யத் தயங்க மாட்டாள்.

சில சந்தர்ப்பங்களில் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள் என்று குற்றம் சுமத்துவதுண்டு. இதுகூட, அவர்கள் தங்கள் கணவன் மீது கொண்டுள்ள ஆழமான அன்பினாலே ஏற்படுகின்றது. கணவனைப் பிழையான ஒரு நிலையில் வைத்துச் சிந்தித்துப் பார்க்கும் நிதானம், ஆறுதல், அவகாசம், அவர்களுக்கு இருப்பதில்லை. கணவனைப் பிழையாக மற்றவர்கள் பேசிவிடக் கூடாது என்பதிலும், பிழை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதிலும் சிலவேளை நிதானம் இழந்து விடுவதுண்டு.

இன்று தவமணி, தனது தங்கை கூறியது, தனது கணவன் மீது பழியைப் போட்ட போது, அவள் ஒரு பைத்தியம் என்று சொல்கிறோம். தெரியாமல் சொல்லியிருப்பாள், அதில் ஏதும் உண்மை இருக்குமோ என்பதைச் சிந்தித்துப் பார்க்காமல், தனது கணவன் பிழை செய்துவிட்டான் என்ற ஆத்திரம் கண்ணை மறைக்கப் பேசிவிட்டாள்.

இதைவிட, விஸ்வரூபம் எடுத்தது அத்தான் அவளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு மீறி அன்பாக இருந்ததும் இதனால்தானோ.. என்பதுவேறு, விடயத்தைப் பூதாகரமாக மாற்றிவிட்டிருந்தது.

"மணி, நீயுமா?" என்ற சந்திரனுக்கு அதற்கு மேல் நாவெழவில்லை. என்னை நன்றாக அறிந்த நீ! இத்தனை நாள் என்னுடன் கூடி வாழ்ந்த நீயுமா! அதை நம்பிவிட்டாய்? அவள் தான் பைத்தியம் என்ன சொல்கிறோம். நீ என்ன கேட்கிறாய் என்று விளங்காமல் சொல்லிவிட்டாள் என்றால், அதை உண்மை என்று நீயும் நம்பி விட்டாயா ? இது தானா நீ என்னைப் புரிந்து கொண்ட தன்மை? இதற்கு மேலும் நான் என்ன பேச ..? உண்மை ஒரு நாள் வெளிவரத்தான் போகிறது. அப்போது காலம் தாமதமாகி விட்டாலும் நீ அதை உணரப்போகிறாய். அப்போது வருந்திப் பயன் இல்லை.. என்று எண்ணி மனம் வெதும்பினான் சந்திரன்.

யாரோ செய்த பாவத்துக்கு பழியைச் சுமக்கிருன் சந்திரன். கேடு வரும் என்று விதியிருந்தால் அது எந்த ரூபத் திலும் வரலாம். ஒன்றைச் செய்துதான் பழி பாவத்தைத் தேட வேண்டும் என்றில்லை. சேர வேண்டிய காலத்திறகு எப்ப டியோ வந்து சேர்ந்துவிடும் என்பதை உணர்ந்தான் சந்திரன்.

இனியும், இதற்குப் பிறகும், அவள் முகத்தில் எப்படி விழிப்பது ? அவளே கேட்டு விட்டாளே ? அவனுக்குத் தலை சுற்றியது. தன்னை முற்றிலும் அறிந்தவள், தன் மீது சந்தேகப் பட்டதுடன், நெஞ்சைச் சுடும்படி பேசியும் விட்ட பின்னர், தான் கூறும் எந்த விளக்கமும் எடுபடாது என்று நினைத்தான் சந்திரன். தன் மீது இத்தனை பாசமாக, அன்பாக, இருந்த மனைவி இப்படிக் கேட்டுவிட்டது, நெஞ்சைக் குடைந்து கொண்டிருந்தது. அவள் அடிக்கடி சொல்லும் வார்த்தை நினைவுக்கு வந்தது.

"என்னுடனும் பிள்ளைகளுடனும் தவிர, நீங்கள் வேறு யாருடனும் அன்பாக இருக்கக் கூடாது. அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. அப்படி ஒரு நிலமை வந்தால் நீங்கள் என்னைத்தான் இழக்க வேண்டி ஏற்படும்"

"உன்னுடைய தங்கைதானே, நம்மை நம்பி வந்து இருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளிடம் நாம் அன்பாக இருப்பது தவறா?"

"ஆ! அதுவும் அளவோடு இருக்கவேணும். அவள் சொல்வதை எல்லாம் செய்ய வேண்டிய அளவுக்கு வரவேண்டியதில்லை. உங்கள் பிள்ளைகளிடம் அந்த அன்பைச் சொரியுங்கள்" என்பாள்.

சாதாரண நிலையிலே இப்படிப் பட்டவள், இப்போது எரிமலையாக வெடித்து உள்ளம் குமுறிக் கொண்டிருப்பாள், என்பதைச் சந்திரன் அறியாதவனா என்ன?

தான் என்ன பேசுகிறோம் என்று சீர்தூக்கிப் பார்க்காமல் படபட வெனப் பேசிவிட்டுக் கட்டிலில் விழுந்து அழுதாள் தவமணி.

மாலை மங்கிய வேளையில் பிள்ளைகளுக்கு முத்த மிட்டு விட்டு வெளியில் இறங்கி நடந்தான் சந்திரன். எங்கே போகிறோம் எதற்காகப் போகிறோம் என்ற சிந்தனையின்றி நடந்து கொண்டிருக்கிறான் சந்திரன்.

அவனை அழைத்து ஆறுதல் கூற ஒருவரும் இல்லை. அறிந்தவர்கள், அவன்மீது காறித் துப்புவார்களே தவிர ஆறுதலா கூறுவார்கள் ? உண்மை, பொய், எது என்று எண்ணிப் பார்த்தா குற்றம் சுமத்துகிறார்கள்? பல பேர் தாங்கள் எண்ணுவதே சரி என்று எண்ணிவிடுவதுதானே இயல்பு. தங்களை விடப் பெரிய நீதிபதிகள் இல்லை என்று எண்ணித்தானே பலரும் செயற்படுகிறார்கள்.

செய்யாத குற்றத்திற்காகக் குடும்பத்தைப் பிரிந்து, மனைவி மக்களை இழந்து, வீடு வாசலைத் துறந்து, பொருள் பண்டம் எல்லாவற்றையும் கைவிட்டு, நட்ட நடுத்தெருவில், தன்னந் தனியே நடந்து கொண்டிருக்கிறான், சந்திரன்.

யாராவது அவனை அழைத்து ஆறுதல் கூறி தலையிட்டு விசயத்தை விளக்கி குடும்பத்தைச் சேர்த்து விடுங்களேன். காதலன் என்று வந்த காமுகனிடம், தனது கற்பை இழந்து விட்டாள் ருக்குமணி என்று கூறுங்களேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்குமணி சுயநினைவு வந்ததும் கூறாமலா இருக்கப் போகிறாள் ? அதற்கிடையில், அவன் ஏதும் செய்து விடாமல் இருக்கத் தடுங்களேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மித்திரன்,* ஏப்ரல் 1993

# அப்பா பாவம்!

வேலைதேடி அலுத்தவனாய் வீட்டுக்கு வந்த மணியம் அலுப்போடு வெளித் திண்ணையிலே அமர்ந்தான். அப்போது பிற்பகல் மூன்று மணியிருக்கும். அவன் மதியம் சாப்பிட்டிருக்க மாட்டான் என்பது அவனது மனைவிக்கு நன்கு தெரியும்..

மதியம் ஒரு இறாத்தல் பாண் வாங்கித் தானும் எட்டு வயது மகள் பவானியும் சாப்பிட்டுவிட்டு, அவனுக்கென்று வைத்த ஒரு துண்டுப் பாணுடன் தேனீரையும் ஊற்றிக் கொண்டு, தொட்டுக் குடிப்பதற்குக் கொஞ்சம் சீனியையும் கையில் ஒரு பேப்பரில் எடுத்துக் கொண்டு, வந்து திண்ணையில் வைத்தவள், "சாப்பிடுங்கோ" என்றாள்.

தினமும் தான் அவன் இப்படி வேலை தேடித் திரிகிறான். அவனுக்கு வேலை கிடைத்த மாதிரியில்லை. கிடைக்கும் வேலையோ அவன் செய்யக் கூடிய மாதிரி இல்லை. ஒரு பஸ் கண்டக்டராக, வேலை பார்த்து, பரிசோதகர்களால் பிரச்சனைக்குள்ளாக்கப்பட்டதன் காரணமாக வேலை இன்றி இருக்கின்றான் மணியம். அந்தக் காற்சட்டையையும் சேட்டையும் மாட்டிக் கொண்டு திரிவதால் அவனுக்கு வேலை கிடைப்பதாக இல்லை. அவனும் விடாப்பிடியாகத் தேடிக் கொண்டுதான் இருக்கின்றான்.

இன்றும், வழமையான பல்லவிதான் பாடுவான், என்று அவனுடைய மனைவிக்குத் தெரியும். ஆகவே, அவள் ஏதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்காமலே அன்றைய சாப்பாட்டைக் கொடுத்தாள். காலை, பகல், இரவு என்று பிரித்து விதவிதமான சாப்பாடு சாப்பிட்டுப் பல மாதங்களாகிவிட்டன.

இரண்டு வருடமாக வேலை இல்லாததில் இருந்த வற்றை எல்லாம் விற்றுச் சாப்பிட்டாகிவிட்டது. கடன் பட்டவர் எவருக்கும் திருப்பிக் கொடுக்காததில் எவரும் மனம் இரங்கிக் கொடுப்பதாக இல்லை. ஆகவே காலை, இரவு என்பது எல்லாம் இல்லாமல் போய், மதியம் ஒருவேளை கிடைப்பதைக் கொண்டுவயிறை நிரப்பிக் கொள்வார்கள். மிகுதியைத் தண்ணீர் நிரப்பும்.

"முதல்ல கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்றான் களைப்புடன் அமர்ந்திருந்த மணியம். செம்பு நிறைய நீர் கொண்டு வந்து வைத்தாள். முடியும் மட்டும் குடித்துவிட்டு மிகுதியை முகத்தை அலம்பிக் கொண்டான்.

சாப்பிட அமர்ந்தவன் கண்களில் மகள் தென்பட்டாள்.

"பவானி, இங்கே வா பாடசாலைக்குப் போனாயா?" என்று கேட்டான்.

"அவளுக்கு.." என்று மனைவி பதில் சொல்லப் புறப்பட, "நான் உன்னிடம் கேட்கவில்லை. நீ வாயை மூடிக் கொண்டிரு. நீ பொய் சொல்லச் சொல்ல பிள்ளையும் பொய் சொல்லப் பழகி விடும்" என்றான் மணியம்.

பவானி எட்டு வயதுச் சிறுமி. துடுக்கான பெண் என்று பெயர் பெற்றவள். படிப்பில் கெட்டிக்காரி.

பவானி வந்து மௌனமாகத் தகப்பன் முன்னால் நின்றாள். சாப்பிடப் போனவன் அதை நிறுத்தி விட்டு அவளை விசாரிக்கத் தொடங்கினான்.

"பவானி இன்று பள்ளிக்குச் சென்றாயா? நேற்றும் வயிற்றுக்க வலிக்குது என்று பள்ளிக்குப் போகல்ல. இன்று காலையில் போகும் போது என்ன சொல்லி விட்டு போனனான். இண்டைக்குக் கட்டாயம் பள்ளிக்குப் போக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று சொன்னனான் அல்லவா?"

மௌனமாக நின்றிருந்த பவானி "ஓம்" என தலையை ஆட்டினாள்.

"ஏன் போகவில்லை?"

பதில் இல்லை.

"நான் கேட்கிறன். நீ ஊமையாய் இருந்தால் எப்படி? ஏன் போகல்ல?" என்று அவளைப் பிடித்து உலுக்கினான்.

"உனக்கு என்ன திமிர். நாலு சாத்துச் சாத்தினால் புத்தி வரும்" என்று எழுந்து சென்று வேலியில் ஒரு கம்பை முறித்துக் கொண்டு வந்தான் மணியம்.

"அவளை அடிக்காதிங்கப்பா" என்று மனைவி கூற.

"நீ போடி அங்கால" என்று பவானியைத் தாறுமாறாக அடித்தான் மணியம். அவனுக்கு வேலை கிடைக்காத கோபத்தையும் ஆற்றுவதற்குப் பவானி மேல் வந்த கோபம் வடிகாலாயிற்று. மனைவி வந்து தடுத்த போது அவளுக்கும் அடி விழுந்தது. கம்பு முறிந்ததும் வீசிவிட்டு வந்து திண்ணையில் அமர்ந்தான் மணியம்.

பவானி கிழே கிடந்து துடித்தாள். "அம்மா அம்மா" என்று அலறினாள்.

குழந்தையை அள்ளி எடுத்து சென்ற தாய் அந்த மனிசனுக்கு என்ன பேய் பிடித்து இருக்கிறதோ. இந்தப் பிஞ்சைப் போட்டு இப்படி அடித்து வைத்து இருக்கிறது என்று கூறி கண் கலங்கினாள்.

அடித்த இடமெல்லாம் தடித்துப் போய் வீங்கி இருந்தது. அந்தத் தாய்க்கு மனசு கேட்கவில்லை. மஞ்சளும் உப்பும் கலந்து காய்ச்சிப் பூசவும், வீட்டில் மஞ்சள் இல்லை. அடுத்த வீட்டில் சென்று மஞ்சள் கொஞ்சம் கடன் வாங்கி வந்து, அரைத்து, உப்பும் கலந்து கொதிக்க வைத்துப் பூசினாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுக்கு.

பூசும் போதும் பவானி "நோகுதம்மா.." என்று அழு தாள். "தொடாதேம்மா.." என்றாள்.

"ஏன் மகள் இத்தனை அடியையும் வாங்கினாயே. இது உனக்குத் தேவையா? அப்பா பாடசாலைக்குப் போகச் சொன் னவர்தானே. போயிருந்தால் இப்படி அடிக்கமாட்டாரே" என்றாள் தாய்.

குழந்தையை அடித்துத் தனது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்ட மணியம், சாப்பிட மனம் இல்லாமல், தாயும் மகளும் கதைப்பதைக் காதில் போட்டுக் கொண்டு, ஏதோ யோசனை யில் ஆழ்ந்து இருந்தான்.

"இந்த அடி, எனக்கு மட்டும் தானே அம்மா, வலிக் குது"

"என்னம்மா சொல்கிறாய். பாடசாலையிலும் அடிச்ச வங்களா? ஏதும் சொன்னவங்களா?"

"அப்பா பாவம்மா. அப்பாவுக்கு வேலை இல்லைத் தானே. அதுதானே நமக்கு கஷ்டம். அதனாலதானே நீங்க எனக்குக் கிடைச்ச யூனிபோம் துணியை, விற்றுச் சாப்பாட் டுக்கு எடுத்தனீங்க. இந்தக் கஷ்டம் டீச்சருக்குத் தெரியா தம்மா. யூனிபோம் இல்லாமல், திங்கட்கிழமையிலிருந்து யாரும் பள்ளிக்கு வரக் கூடாது என்று சொல்லிவிட்டவங்க."

"அவங்க சொன்னாங்க. இவ்வளவு நாளும் துணி வாங்கக் காசு இல்லை என்று இருந்தீங்க. இப்ப அரசாங்கம் இலவசமாக யூனிபோம் தந்து இருக்குது. இனிக் கலர் சட்டை போட்டு வர முடியாது. ரோசமுள்ள தாய் தகப்பன் என்றால் உடனே யூனிபோம் துணியில் சட்டை தைத்து கொடுக்க வேணும். இதைத் தைச்சுக் கொடுக்க வக்கில்லாத தாய் தகப்பன் கையாலாகாதவர்கள். அவர்கள் எப்படி பிள்ளைக ளைப் படிப்பிக்கப் போகிறார்கள்? என்றெல்லாம் டீச்சர் பேசினவ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னைப் பேசியிருந்தால் பரவாயில்லை அப்பாவை பற்றிப் பேசினா. நான் யூனிபோம் இல்லாமல் போனாக் கெட்டவார்த்தையில அப்பாவைப் பேசுவாங்க டீச்சர். அது நமக்கு அவமானம் தானே. யூனிபோம் துணியை விற்றுப் போட்டோம் என்று எப்படிச் சொல்வேன். மற்றவர்கள் முன்னி லையில் அப்பா அவமானப் படலாமா? அதுதானம்மா பள்ளிக் குப் போகல்ல. அப்பா அடிச்சா என்ன, நம்ம அப்பாதானே.." என்று அவள் கூறிக்கொண்டே இருக்கும் போதே, புயல் போல உள்ளே வந்து, மகளை அள்ளி அணைத்தான் மணியம்.

"என்னை மன்னிச்சிடு மகள். அப்பாவுக்கு அவமானம் வந்திடக்கூடாது என்றா? நீ பள்ளிக்குப் போகவில்லை. நான் பாவி. உன்னைக் கண்மண் தெரியாமல் அடித்து விட்டேன்!" என்று கண் கலங்கினான் மணியம்.

நாளையில் இருந்து காற்சட்டையைக் கழற்றி விட்டு, மில்லில் கூலி வேலைக்குச் செல்வதற்கு தீர்மானித்தான் மணியம்.

வெளியில் இருந்த பாணை, காகம் கொத்திக் கொண்டு போனது கூட அவனுக்குக் கவலையில்லை. பசியும் இல்லை. குழந்தை பவானியை மாறி மாறிக் கொஞ்சினான் மணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தினத்தந்தி*, ஜூலை 1995

# வெள்ளைப் புறா ஒன்று

அந்த வீடு கல்யாணக் களைகட்டி இருந்தது. வீட்டிலும் சனம் கூடியிருந்ததால் கலகலப்பிற்குப் பஞ்சமிருக்க வில்லை. நெருங்கிய உறவினர்கள் பலர் வந்து சேர்ந்து இருந் தனர். கல்யாண ஒழுங்குகளில் பலர் மும்முரமாக இருந்தனர்.

கல்யாணத்திற்கு இன்னும் ஒரு கிழமைதான் இருந்தது. கல்யாண மண்டபத்திற்கு ஓடர் கொடுத்து முற்பணமும் செலுத்தியாகிவிட்டது. அதைச் சோடிக்க வேண்டிய ஒழுங்கு களைச் சிலர் செய்து கொண்டிருந்தனர். மேளம் ஒரு கூட்டமா இரண்டு கூட்டமா என்பதில் இன்னமும் இழுபறி இருந்து கொண்டிருந்தது. மாப்பிள்ளை வீட்டார் ஒரு கூட்டத்திற்கு இணங்கினால் இரண்டாக ஏற்பாடு செய்யலாம். மண்டபத்தில் ஒன்றும் மாப்பிள்ளை அழைப்புக்கு ஒன்றுமாக பாவிக்கலாம் என்பது பெண் வீட்டார் அபிப்பிராயம். ஆனால், அதற்கு மாப் பிள்ளை வீட்டார் இன்னும் பச்சைக் கொடி காட்டவில்லை.

காட்ஸ் மேசையில் பரப்பிக் கிடந்தது. இருக்கும் லிஸ்ட் படி பெயர்கள் எழுதுவதும் அவற்றை உரியவர்களிடம் ஒப்ப டைப்பதும் ஓர் இளைஞர் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவ்வப்போது பெரியவர்கள் சிலர் வந்து இந்தப் பெயரையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டுச் சென்றனர். மாப்பிள்ளை வீட்டாருக்கு தேவையான காட்ஸ் கொடுக்கப்பட்டிருந்தது. அதை அவர்கள் செந்தக்காரர்க ளுக்கு வழங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பிறம், மாப்பிள்ளை தோழனுக்கான உடுப்புகள், என்பன சமையலுக்கான ஆட்களும் பாத்திரங்களுக்கும் சொல்ல வேண்டியவர்களை பெண்ணின் தகப்பனார் இரவு பத்து மணியளவில் சொல்லிக் கொண்டிருந்தார். நாளைக் காலையில் சென்று சொல்லிவிட வேண்டும் என்று.

மாப்பிள்ளை மாலையே வந்து பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தார். பேச்சுவார்த்தை முடிந்து, பெண்ணைப் பார்த்துச் சம்மதம் பெற்ற பின்னர், நிச்சயதார்த்தத்திற்காகத் தட்டுக்களும் பரிமாற்றிக் கொண்ட பின்னர், யார் யாரைக் கட்டுப்படுத்துவது? மாப்பிள்ளை வேலை முடிந்து வீடு வந்ததும், எப்போது மாலையாகும் என்று காத்திருப்பார். மாலையில் மலரும் நோய் அது என்பதனாலா? அல்லது மற்றவர் கண்ணில் படக்கூடாது என்றா?

எப்படியோ மாலை வரும், அவர் செல்வது இரவு பத்து மணிக்குக் கேற்றைப் பூட்டும் போதுதான்.

படிப்படியாகப் பழக்கம் முன்ஹோலில் இருந்து படுக் கையறைவரை சென்று விட்டது. அதற்கு மேலும் விளக்கம் தேவையில்லை. சில வேளைகளில் இரவுச் சாப்பாடும் முடிந்து விடும்.. குட்டித் தூக்கமுமாக்கும்?

என்னதான் பேசுகின்றார்களோ? என்று அலுத்துக் கொண்டனர் பெரியவர்கள். சம்மதம் பேசிய கல்யாணம் இது. ஏற்கனவே காதலித்து இருந்தால், பேச வேண்டியவற்றை பேசித் தீர்த்திருப்பார்கள். அப்படிச் சந்தர்ப்பம் இல்லாததால் இப்பொழுது பேசிக் கொண்டிக்கிறார்கள். அவர்களுக்குள் ஆயிரமிருக்கும் நமக்கேன்?

நமக்கேன் என்று விட்டு விடலாமா? முடியாதே! விஷயமே அதில்தானே தங்கி இருக்கிறது. அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஆரம்பிப்பதில் இருந்து எவ்வாறு அமைத்துக் கொள்வது? என்று திறம்பட நடந்து கொள்வது என்று திட்டம் போட வேண்டாமா? கச்சேரி ஆரம்பமே இப்போதுதானே!

அனிதா ஏற்கனவே ஊமைச்சி என்று பெயர் பெற்றவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளையுடன் எப்படிப் பேசப்போகின்றாளோ என்றுதான் கவலைப்பட்டனர் வீட்டார்.

மாப்பிள்ளை வரத்தொடங்கி ஒரு கிழமை வரை, அனிதா பேசிய எல்லாம் "ம், சரி" என்ற சத்தங்களும், இல்லை என்பதற்காகக் காட்டிய சமிக்ஞைத் தலையாட்டலும்தான்.

பொறுக்க முடியாமல் குமார் கேட்டான். "என்ன ஊமையா? இல்லைப் பேசக்கூடாது என்றிருக்கிறாயா?" என்று.

அதற்கும் சிரிப்புத்தான் பதில். பக்கத்தில் அமர்ந்து இருப்பதும் முத்துப் பல் வரிசைச் சிரிப்புமே குமாரைக் கிறங்க வைத்திருந்தது.

அப்போது பெண்ணின் தாயார் அந்தப்பக்கம் வரவே, "நான் மாமியிடம் கேட்கப் போகிறேன். நீ என்ன ஊமையா?" என்று கூறி எழுந்தான் குமார்.

எழுந்தவனை இழுத்து அமர்த்திய அனிதா பேசினாள். "அம்மாவிடம் என்னத்தைக் கேட்பது? நான் தான் பக்கத்தில் இருக்கிறேனே!" என்றாளே பார்க்க வேண்டும்.

குமார் அங்கும் இங்கும் தேடினான். "ஒன்றையும் காணவில்லை" என்றான்.

"என்னத்தை?"

"ஏதும் முத்துக்கள் உதிர்ந்தனவா?" என்று பார்த்தேன்.

எழுந்து ஓடியவள், மீண்டும் வந்த போது காப்பிக் கப் கையில் இருந்தது.

பிறகு பேசக் கேட்பானேன். "இப்படி இருந்தவர்களா இப்போது இப்படிப் பேசுகிறார்கள்?" என்று வியந்து போனார்கள் வீட்டிலுள்ளவர்கள்.

"அத்தான் கெட்டிக்காரர்தான்! அக்காவைப் பேச வைத்து விட்டாரே" என்றாள் அனிதாவின் தங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியார் தடுத்தாலும் கேட்கவா போகிறார்கள். அதைப்பற்றி யார் கவலைப்பட்டது. இப்போது பெண்ணின் பெற்றோரின் கவலையெல்லாம் இருவரும் தனியே அறைக்குள் இருக்கத் தொடங்கி விட்டனர் என்பதாகத்தான் இருந்தது.

பெண்ணைப் பெற்றவர்கள் மடியில் நெருப்பைக் கட்டியவர்களல்லவா? வாயு பகவானே, சிவனின் நெற்றிக் கண்ணில் வந்ததைத் தாங்க முடியாமல் சரவணப் பொய்கை யில் விட்டதாகப் புராணம் கூறுகின்றது.

இவர்களைக் கல்யாணத்தில் இறக்கி வைக்கலாம் என்று மாப்பிள்ளை வீட்டாரோடு பேசி ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். அதன்படி திருமண ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பத்து மணியாகி விட்டது. மாப்பிள்ளை எழுந்து போய்விட்டதால். அனிதா அழுதபடி அறைக்குள் சென்றுள். பெண் கண் கலங்கினால் பெற்ற வயிறு துடிக்காதா என்ன?

"என்ன பிள்ளை அழுது கொண்டு போகிறாள்?" என்று கேட்டாள் தாய், தகப்பனிடம்.

"அவங்களுக்குள் எத்தனை இருக்கும் விட்டுவிடு" இது தகப்பன்.

சர்வசாதாரணமாக அவர் செல்லிவிட்டு இருந்து விட்டார். விடிந்தும் விடியாததுமாக இப்படி ஒரு பூகம்பம் வெடிக்கும் என அவர் கண்டாரா என்ன? ஆடி அசைந்து நடு நடுங்கிப் போனார்.

"அப்பா நான் சொல்கிறேன் என்று கோபிக்காதீர்கள். எனக்கு இந்தத் திருமணம் வேண்டாம். தயவு செய்து ஏற்பாடுகளை எல்லாம் நிறுத்துங்கள். .."

அவருக்குப் பகலிலே நட்சத்திரங்கள் வெள்ளியாய் மின்னின. "ஏன்! எதற்காகச் சொல்கிருய்..?" என்று கேட்க நாவெழவில்லை. என்னை நீங்கள் தெண்டித்தால் உங்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பிள்ளை இல்லை என்று எண்ணிக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு குளிக்கச் சென்ருள்.

தாயார் பின்னாலே சென்று "என்னம்மா சொல்லுகிறாய்?" என்றாள் பதறியபடியே.

"கொஞ்சம் பால் வைச்சு விடம்மா முழுகப்போறன்" என்றாள் அனிதா.

"திருமணத்திற்குத்தாண்டி பால்ல அரப்பு வைச்சு முழுகுவாங்க."

"நான் அந்தத் திருமணத்தையே தலை முழுகிவிடப் போறன் அம்மா."

"என்னடி சொல்கிறாய், எல்லாம் ஏற்பாடு செஞ்சாச்சு!"

"எனக்குத் தெரியுமம்மா. அதுதான் அதையெல்லாம் கேன்சல் பண்ண அப்பாவிடம் சொல்லிவிட்டேன்."

"எவ்வளவு காசு பணமெல்லாம் செலவாச்சு?"

"கவலைப்படாதம்மா அந்தக் காசை நான் உழைச்சுத் தாறேன். இனி நான் வேலைக்குப் போகப் போறன்."

"காசென்ன காசு. இப்படி உன் வாழ்க்கை?"

"அம்மா எத்தனையோ பெண்களுக்கு மணவறையில் திருமணம் நிக்கலையா? அந்தப் பெண்கள் எல்லாம் வாழல்லையா? நீ போய் இதப் பெரிசா எடுத்திட்டு"

"அப்பிடி என்ன நடந்திட்டுது. ஆம்பிள்ளைகள் அப்படித்தான் அவசர புத்தியில் ஏதும்.."

"உனக்குத் தெரியாதம்மா. இவரோட வாழ்வதை விட, குடிகாரன் வெறிகாரனோட வாழ்ந்திடுவேன். சரியான சந்தேகப் பேர்வழி."

குடும்பத்தில் இல்லாததா? நாமதான் நிவர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவேணும். அதுக்குப் போய் திருமணமே வேண்டாம் என்றால் எப்படி? எல்லாம் கல்யாணத்திற்கப்புறம் சரிவரும்."

"நல்ல காலம் கலியாணத்திற்கு முன்னரே அறிந்தது. பின்னர் என்றால் எனது வாழ்க்கை நரகம் தான்."

"அது தான் என்ன என்று கேட்கிறேன்."

"அம்மா, அன்று ஒரு நாள் இவர் வந்து இருக்கும் போது சுந்தரியக்காட அத்தான் வந்து இருந்தவர். கேற்றடியில் மோட்டார் சைக்கிள் வந்து நின்றதும், ஓடிப் போய் கதைச்சு அனுப்பினனான். அவரும் நானும் நிற்பது இவருக்குத் தெரியல்ல. இருட்டு.. வெளியில் இவர் வந்து பார்த்து இருக்கிறார். எங்களைத் தெரியல்ல. அத்தான் போனதும் நான் வந்தன். இப்படி ஆண்பிள்ளைகளுடன் கதைப்பதை வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படி இருட்டுல என்ன தனியாகக் கதை. இஞ்ச கூட்டி வந்து கதைத்து அனுப்பி இருக்கலாமே.. என்றார். நானும் என்னுடைய பிழைதான் என்று ஏற்றுக் கொண்டன். ஆனால், பிறகும் பல முறை அத்தானுடன் எனக்கு ஏதும் தொடர்பு உண்டா? இனிமேல் அப்படி எல்லாம் நடக்கக் கூடாது என்று கூறும் போது இவருக்குச் சந்தேகம் இருக்கிறது என்று எனக்குத் தெரிஞ்சு போச்சு.

"அத்தான், என்னை மோட்டார் சைக்கிள்ல அவங்கட வீட்ட கூட்டிப் போய் வந்ததை அறிந்தால், எப்படி என்னைப் பற்றி நினைப்பார், என்று எண்ணிவிட்டுப் பேசாமல் இருந்து விட்டேன். நாம் அவர்ர விருப்பம் போல் நடந்தால் சரிதானே என்று.

"அப்படிச் செய்யக் கூடாது இப்படிச் செய்யக்கூடாது, அந்தச் சட்டை போடக்கூடாது இந்தக் கவுன் அணியக் கூடாது என்று எத்தனை சட்டம் போட்டார் என்று தெரியுமா? வருங்காலக் கணவர் என்று பொறுத்துக் கொண்டேன். கால் தெரியாமல் கை தெரியாமல் உடுக்கிற காலமா இது? சரி என்று விட்டுப் பிடித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று எமது வீட்டில் கார்ட் எழுதிக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுப் பையன் மகேஷ், பேனை முடிந்தது என்று கேட்டு வர அறைக்குள் போய் பேனை எடுத்து வரப் போனேன். அவனும் அறைக்குள் வந்து விட்டான். லாச்சிக்குள் இருந்த பேனையைக் காணோம். தேடி எடுத்துக் கொடுத்து விட்டு வந்தேன்.

"என் மீது எரிந்து விழுந்தார். ஏன் இத்தனை நேரம்? பேனை எடுத்துக் கொடுக்க இத்தனை நேரமா? பெடியனுகளோட அறைக்குள் என்ன வேலை என்று கேட்டு விட்டார். இதற்கு நான் என்ன சொல்வது நான் அழுது விட்டேன். அவர் எதையும் பொருட்படுத்தாமல் என்னவெல்லாமோ சொல்லி விட்டுப் போய் விட்டார்."

கதைத்தபடி முழுகிவிட்டு வந்த மகளின் தலையை துவட்டியபடி தாய் பேசினாள்.

"பெண்கள் தானம்மா பணிந்து போகவேணும். நடந்ததுக்கு மன்னிப்புக் கேள். இனி மேல் இப்படி எல்லாம் நடக்க மாட்டேன் என்று சொல். எல்லாம் சரியாகி விடும். நாங்களும் மாப்பிள்ளைக்கு சொல்கிறோம்."

கையைத்தட்டி விட்டு எழுந்த அனிதா, தாயைக் கோபத்துடன் பார்த்துச் சொன்னாள். "என்னுடைய மகள் கற்புத் தவறாதவள், வேறு ஒருவனுடனும் பேசாதவள், என்று போய்ச் சொல்லம்மா போ" என்று கத்தி விட்டு அறைக்குள் சென்றாள். சென்றவள் கட்டிலில் கிடந்து ஒப்பாரி வைக்கவில்லை. அலுமாரியில் சரஸ்வதிப் பூசை ஒன்றின் போது உடுத்திய வெள்ளைச் சேலையை தேடி உடுத்திக் கொண்டு அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

அதிர்ந்து போன தாய், சிறிது நேரம் சிலையாக நின்றாள். மகள் என்ன சொல்கிறாய் விளங்கவில்லைத் தாய்க்கு. அனிதா கத்திய சத்தம் கேட்டு உள்ளே வந்த தகப்பன், தாயைச் சுய நினைவுக்கு கொண்டு வந்தார்.

பத்திர காளியாக மாறிய தாய், அறைக்குள் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளை பிடித்து உலுக்கினாள். "ஏன் என்னுடைய மகளின் கற்புக்கு என்ன?"

"அதைத்தான் அம்மா சந்தேகப் பட்டுவிட்டுப் போகிறார். நீ எப்படி எத்தனை பேரோடு பழகினாலும் என்ன? முதலிரவின் போது தெரியும்தானே? உனது கற்பு எல்லாவற்றையும் நிருபித்து விடும் அதன் பின்னர் பார்த்துக் கொள்கிறேன். என்ன செய்வது என்று எனக்குத் தெரியும்! என்று கூறி விட் டுப் போனார் அம்மா. இதற்குப் பிறகும் அவருடன் சேர்ந்து வாழ வேண்டுமா நீயே சொல்லம்மா?" கலங்கினாள் மகள்.

மகளை அணைத்து ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள் தாய். வெளியே இருந்து கேட்ட தந்தை, மௌனமாக விலகிக் கொண்டார்.

வெள்ளையாடையணிந்து கொண்டு தொண்டர் மருத்துவ சேவைக்கு வந்த அழைப்பை தேடி எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அனிதா. அவள் நெஞ்சில் களங்கமில்லை. கண்ணில் கலக்கமில்லை. திடம் இருக்கிறது. எதையும் வெல்லும் திறன் இருக்கிறது. அவளது நடையில் திறக்காத வழியும் திறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தினகரன்*, நவம்பர் 1997

# நியாயப்படுத்த முடியாத நியாயங்கள்!

இதென்ன இதிகாச காலமா! குந்தி மந்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்துக் கர்ணனைப் பெற்றாள் என்பது போலச் சொல்ல? ஆவியுடன் கூடினாள் என்றாலும் எப்படிக் கருத்தரிக்க முடியும்?

ஊர் மக்களின் ஆராய்ச்சியோ, இவளது கள்ளப் புருஷன் யார்? என்பதிலேயே இருந்தது. அவள் உறங்கிய போது, ஊர் விழித்துக் கொண்டது. அவனைப் பிடித்து இவளுக்குக் கட்டி வைத்து விட வேண்டும் என்றார்கள். அப்படி எந்தவொரு ஆணின் நடமாட்டமும் அவள் வீட்டுக்கே இருக்கவில்லை. அவளும் வெளியே எங்ஙனும் செல்வதில்லை. அப்படியானால் எப்படி?

இது மட்டும் புரியாத புதிராகவே இருந்தது.

ஊர்ப் பழி அவளைத் துரத்தியது. குத்தல் பேச்சுக்களும் நக்கல்களும் எங்கு சென்றாலும் அவள் இதயத்தை ஈட்டியால் தாக்கின. அதனால் வீட்டிலே அடைபட்டுக் கிடந்தாள்.

காய் பழுத்தால், மரத்தில் இருப்பதில்லையே! காலம் கனிந்தது. அழகான ஆண் மகவொன்றைப் பெற்றெடுத்தாள் அவள். ஊர் என்ன சொன்ன போதும், இது கணவனால் கிடைத்தது என்ற நம்பிக்கையில் மட்டும் மாற்றம் காணவில்லை. அது எப்படிச் சாத்தியமாகும் என்பதை எண்ணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க மறந்து விட்டாள்; மறுத்து விட்டாள் எனலாம்.

இருந்தாலும் ஊர், வாயை மூடிக் கொண்டிருக்குமா? ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தாலும் இப்போது அவற்றை அலட்சியம் செய்யத் தொடங்கினாள் பவளம்.

இப்போது அவளுக்கு ஒரே ஒரு பிரச்சனை. பிள்ளைக் குப் பதிவு வைப்பதுதான். ஆண் குழந்தையானதால் எதிர்கா லத்தில் ஊரின் பழிச் சொல்லால் அவன் வாழ்க்கையே பாழா கிவிடும் என்பதே கவலையாக இருந்தது. அவன் தகப்பன் இல்லாத பிள்ளையா? அவனுக்கு இனிஷியல் இல்லையா?

பதிவுக்காரர் இறந்து விட்ட அல்லது காணாமல் போய் விட்ட அவளது கணவனின் பெயரைப் போட மறுத்து விட்டார். தேசத்துப் பிள்ளையாகத்தான் பதிய முடியும் என்று விட்டார். அல்லது ஆதாரத்துடன் வரும்படி கூறிவிட்டார்.

ஏமாற்றத்துடன் வீடு திரும்பினாள். எவரிடம் சென்று உதவி கேட்கலாம்? எந்த முகத்துடன் செல்லலாம்? எவர் அவ ளுக்கு உதவப் போகிறார்? அவளுக்கு விளங்கவே இல்லை.

கணவனைத் தேடித் தரும்படி உதவி கேட்டுச் சென்ற போது, பணமும் பொருளும், புடவையும் தந்து உதவிய கோவில் தலைவரும் சம்சாரமுமே அவள் மனக்கண் முன் வந்து நின்றனர். இதற்கு அவரால் என்ன செய்ய முடியும்? கேட்டுத்தான் பார்ப்போமே!

அதன் பிரதிபலன்தான் அவர் கொடுத்த பத்திரம். ஆனால், அதுவே அவருக்கே எதிராக மாறியிருந்தது. அவரது சொந்த வாழ்கையை எதுவும் செய்யவில்லை. என்றாலும் பொது வாழ்வைப் பாதிக்கவே செய்தது. பெருமையுடன் பல தலைமைப் பதவிகளில் இருப்பதால் ஒரு சிறு களங்கமும் அவரைப் பெரிதாகப் பாதிக்கவே செய்யும்.

இந்த நிலையில்தான் கோயில் பொதுக் கூட்டம் கூட்டுவதற்கான அறிவித்தல் விடுக்கப் பட்டிருந்தது.

சந்திகளில் குந்திக் கொண்டிருந்த எதிரிகள் குண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைத் தட்டிக் கொண்டு எழும்பித் தயாரானார்கள். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதுதானே இவர்கள் வேலை.

இன்று கூட்டத்தில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறும் என்று எதிர்பார்த்துப் பெருங் கூட்டம் காத்திருந்தது.

தலைவர், கரை மடித்த சால்வையைத் தோளில் போட்டுக் கொண்டு செயலாளருடன் வந்து கொண்டிருந்தார். வழமையாக நிர்வாகம் முன்னரே வந்து, பொது மக்களுக்கா கக் காத்துக் கொண்டிருக்கும். இன்று நிலைமை வேறு.

தலைவர் வந்ததும் சபையில் நிசப்தம் நிலவியது. அவர் வந்து அமர்ந்ததும், கச முச என்று தமக்குள் பேசிக் கொண் டனர். செயலாளர் சத்தம் போட்டார். "அமைதியாக இருங்கள், தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமாகும்" என்று.

தேவாரம் படித்து முடிந்ததும், கூட்டம் மீண்டும் அமை தியைக் குலைத்தது.

தலைவர் தலைமை உரையை ஆரம்பித்ததும், கூட்டத் தில் ஒருவன் தலையைக் குனிந்து கொண்டு, "கௌரவத் திற்குக் களங்கம் ஏற்படுத்திக் கொண்ட தலைவர் எப்படித் தலைமை தாங்க முடியும்?" என்று கேட்டுவிட்டான்.

"தலைவரை மாற்ற வேண்டுமானால் பொதுக் கூட்டத் திற்கு அதிகாரம் இருக்கிறது. கூட்டத்தை நடாத்த விடுங்கள். உங்களுக்கு வேண்டியவரை நீங்கள் தலைவராக நியமித்துக் கொள்ளலாம்" என்றார் தலைவர்.

கூட்டத்தில் கூச்சலும் குத்தல் பேச்சுக்களும் எழுந்தன. "நடந்ததற்கு எங்களுக்கு விளக்கம் தேவை" என்று கத்தினான் ஒருவன்.

தலைவர் சால்வையை உதறித் தோளில் போட்டுக் கொண்டு எழுந்து நின்றார். அவர் முகத்தில் கோபக்கனல் தெறித்தது. தலைவர் வெளிநடப்புச் செய்யப் போகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு வெற்றி என்று எக்காளமிட்டது எதிரணி.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு அவர் பேச முற்பட்டதும் கூட்டம் அமைதி அடைந்தது. என்னதான் சொல்லப் போகிறார் என்று பார்ப்போமே! என்பதற்காகத்தான்.

"நீங்கள் எதிர்பார்த்தது போல் நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. நான் குற்றம் செய்திருந்தால், தோளில் போட்டிருக்கும் சால்வை, எனது முகத்தை மறைத்து இருக்க வேண்டும். உங்கள் முன் குற்றவாளியாகத் தலைகுனிந்து நிற்க வேண்டியளவுக்கு நான் குற்றம் செய்துவிடவில்லை.

"அப்படியானால் பவளத்தின் பிள்ளைக்கு நான் ஏன் பதிவு வைத்தேன்? அவன் தந்தை யார்? என்று நீங்கள் அறிய விரும்புகிறீர்கள் என்பது எனக்கு விளங்குகிறது. சமுதாய நடப்புகளில் நீங்கள் அக்கறை காட்டுவது கண்டு எனக்கு மகிழ்ச்சி.

"பவளம் கணவனை இழந்து இத்தனை வருடம் வாழ்ந்தாளே! அவளுக்கு உங்களில் யாராவது மனமுவந்து ஏதாவது உதவி செய்து இருக்கிறீர்களா? தயவு செய்து கையை நெஞ்சில் வைத்துச் சொல்லுங்கள்.

"அவள் இவ்வாறான நிலைக்குத் ஏன் தள்ளப்பட்டாள்? என்பதை இந்தச் சமூகம் சிந்திக்க மறந்ததேன்? அவளுக்கு மறுவாழ்வு அளிக்க உங்களில் எவராவது முன்வந்தீர்களா? ஏன் இதைப் பற்றி இந்தச் சமுதாயம் கவலைப்படவில்லை. அவள் தலைவிதி அது. அவள் எக்கேடு கெட்டுப் போனால் என்ன?

"அப்படியானால் அவள் எவனைக் கட்டிக் கொண்டால் என்ன? எப்படிப் பிள்ளை பெற்றால் என்ன? அது பற்றிச் சமூகத்திற்குக் கவலையில்லையா? நல்லது செய்ய முடியா விட்டாலும், சமூகத்தில் கெட்டது நடக்கக் கூடாது என்ற ஆர்வத்தைப் பாராட்டலாம்.

"சமூகம் விட்ட பிழைக்காக, பவளம் செய்தது சரி என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதாட வரவில்லை. தவறுதான். ஆனால் தவறுகள் திருத்தப்பட வேண்டும்.

"அவள் கணவன் இல்லாமல் பிள்ளைத்தாச்சியாகியதற்குச் சொன்ன காரணத்தை ஊரைப்போல் நானும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவள் மாப்பிள்ளை கொண்டது தவறுதான். அதற்காக இந்த உலகத்தில் வந்துதித்த பாலகன் என்ன செய்வான்? ஏதும் அறியாதவனுக்கு இத்தண்டனை நியாயமானதா? இதைப்பற்றித்தான் நான் சிந்தித்தேன். நல்லதைச் செய்யும் போது நாம் எதற்கும் பயப்படத் தேவையில்லை.

"நான் அந்தப் பையனின் எதிர்காலம் சிறக்க வேண்டும். அவனுக்கு ஓர் இனிஷியல் வேண்டும் என்பதற்காகப் பதிவு வைத்தேன். அவன் பின்னாளில் சமுதாயத்தில் ஒரு கெட்டவனாக உலாவுவதை நான் விரும்பவில்லை. எனது பெயரைத் தாங்கியவன், எனது மகனாக வளர வேண்டும். இன்னும் சில மாதங்களில் அவனை என்னுடனே அழைத்துக் கொள்ள இருக்கிறேன்.

"மற்றப்படி நீங்கள் நினைப்பது போல் அவளுக்கு என் மூலமாகக் குழந்தை உண்டாகவில்லை. நான் அவளை வைத்திருக்கவில்லை. இப்போது பதிவு வைத்ததும் அவளை வைப்பாட்டியாக வைத்திருக்கவோ அல்லது இரண்டாம் தாரமாகக் கட்டிக் கொள்ளவோ இல்லை. இதை நன்றாக உணர்ந்து கொள்ளுங்கள். சமுதாயத்துக்கு ஒரு நல்லவனை அளிக்க வேண்டும் என்பதற்காக, ஒரு கெட்டவனை, சமூக விரோதியை உண்டாக்கி விடக்கூடாது என்பதற்காகச் செய்தேன்."

கூட்டம் அமைதியடைந்தது.

இங்கே தலைவர் நீதி விசாரணைக்காக நிறுத்தப்பட்டிருப்பதை அறிந்து, பவளம் மகனுடனும் தாயுடனும் உள்வீதி மதிலுக்கு வந்து அழுது, அமைதியைக் குலைந்தாள்.

"நான் செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேடித்தந்த அந்தத் தெய்வத்தை தண்டிக்காதீர்கள். எனக்கு என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனை வேண்டுமானாலும் தாருங்கள், ஏற்றுக் கொள்கிறேன்" என்று கத்தினாள்.

தலைவர் கூட்டத்தை விட்டு வெளியே நடந்தார். வெளிவீதிக்கு வந்ததும் பவளம் ஓடிவந்து, அவர் கால்களில் விழுந்தாள். "ஐயா இந்தப் பாவியை மன்னியுங்க, ஐயா என்னால் உங்கள் கௌரவத்துக்கே இழுக்கு ஏற்பட்டதே" என்று குழந்தையைக் காலடியில் போட்டுவிட்டுத் தலையி லடித்துக் கொண்டிருந்தாள்.

"பவளம் நீ பிழை செய்திருக்கலாம். ஆனால் நான் எந்தப் பிழையும் செய்யவில்லை. எனக்கு நான் நீதிபதி. எனக்கு நியாயம் எனப்பட்டதை நான் செய்தேன். சமூகம் ஏற்றுக் கொள்கிறதோ இல்லையோ எனக்கு நியாயமாகப் பட்டது இதுதான். நீ கவலைப்படாமல் போ" என்றவர் தனியே வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுக் கலைந்து கொண்டிருந் தது. சமுதாயத்திற்கு நியாயப்படுத்த முடியாத நியாயத்தைக் கூறிவிட்டுச் சென்றார் அவர். அது பிழையா? என்ற சர்ச்சை இப்போது அவர்களிடையே எழுந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நவமணி*, டிசம்பர் 1996

# கண்ணகியல்ல நாங்கள்

கோபி இன்று தன் பெயரையிழந்து மாப்பிள்ளை என்ற பட்டப் பெயருடன் வலம் வந்து கொண்டிருந்தான்.

வெளி நாட்டிலிருந்து வந்தவன். மாப்பிள்ளையாகித் திருமணம் முடித்த பின்னர் இன்று வெளிநாட்டுக்கான பயணத்தை ஆரம்பிக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். பெண் வீட்டிலே மாப்பிள்ளை தங்கிருந்ததால், அவருடன் சேர்ந்து செல்ல, மாப்பிள்ளை வீட்டார் ஒரு வாகனத்தில் வந்து தயாராக இருந்தனர். பெண் வீட்டார் தாம் செல்ல ஒரு வாகனம் ஒழுங்கு செய்திருந்தனர்.

இரு வாகனங்களும் வீதியோரம் நின்றிருந்தன. வீட்டில் இரு பக்கத்தாரும் சேர்ந்து கூட்டம் கூடி இருந்தது. வீட்டில் ஒரே கலகலப்பு, ஓட்டமும் நடையுமாகப் பலரும் உற்சாகமாகத் திரிந்தனர். வீட்டில் மகிழ்ச்சி களைகட்டி இருந்தது.

இந்த ஆரவாரம் எதுவும் தெரியாமல் மாப்பிள்ளையும் பெண்ணும் அறையில் அடைபட்டுக்கிடந்தனர். பிரியப் போகும் சோடி கதைத்துக் கொண்டிருந்தது. எல்லோரும் புறப்பட ஆயத்தம் என்றதும் அவர்களைப் பிரிக்கலாம் என்ற அபிப்பிராயத்தில் யாரும் அவர்களைப் பொருட்படுத்தவில்லை.

கோபி தான் விட்டுப் பிரியப் போகும் மனைவி அருகில் இருந்தான். புறப்பட எல்லா ஆயத்தங்களும் சரி. யாழினி கண்கள் குளமாக நின்றிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணப் பேச்சின் போது பேசிய பேச்சுக்கள், அவள் நெஞ்சத்திரையில் படமாக ஓடின.

மாப்பிள்ளை திடீரென லீவில் வந்ததால், திருமண ஏற்பாடுகள் ஒன்றையும் நாங்கள் கவனிக்கவில்லை. இல்லையேல் பெண்ணைப் பேசி அறிவித்து ஸ்பொன்சர் ஒழுங்குடன் வரச் சொல்லியிருக்கலாம். இப்போது பெற்றோரின் வற்புறுத்தலின் பேரில் தான் சம்மதம் தந்தான். அவர்கள் நாட்டின் யுத்த நிலையில் இன்னும் பல காலம் வாழும் நிச்சயமற்ற தன்மையினால் ஏற்றுக்கொண்டிருக்கிறான். இல்லையேல் அடுத்த வருடம் வந்துதான் திருமணம் முடிக்க ஏற்பாடு. நல்ல பையன் பெற்றோருக்காக விட்டுக் கொடுத்திருக்கிறான். திருமணம் முடிந்ததும் ஒரு கிழமையில் செல்ல வேண்டும். வந்த லீவும் முடிந்து விட்ட நிலையிலே இந்தச் சம்பந்தம் சரி வந்தது. போனதும் ஸ்போன்சர் நடவடிக்கைகளில் தான் இறங்குவான். எப்படியும் பெண் நாலு மாதத்தினுள் ஜேர்மனி சென்று விடலாம். வருடக் கணக்கில் காத்துக் கொண்டிருக்கத் தேவையில்லை என்று தரகர் நீட்டி முழங்கியதை யாழினியும் கேட்டுக்கொண்டுதான் இருந்தாள்.

வெளிநாட்டு மாப்பிள்ளைகள் பற்றி ஏற்கனவே கேட்ட கதைகள் வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. வெளிநாட்டு மாப்பிள்ளையை மணம் முடித்து வெளிநாடு செல்ல மனம் இல்லாததால், இதுவரை வந்த வெளிநாட்டுச் சம்பந்தங்களைத் தவிர்த்து வந்தவள் தான் யாழினி. இதனால் வயது இருபத்தேழு என்று இப்போது கூறுகின்றார்கள். இனி என்ன செய்வது? இன்னும் இன்னும் பெற்றோருக்குப் பாரமாக இருக்க விரும்பவில்லை. இந்தச் சம்பந்தம் பொருத்தம் சரி என்றதும் தட்டிக் கழிக்கவும் முடியவில்லை. பெற்றோரின் ஏக்கப் பெருமூச்சைக் குறைக்க வேண்டும் என்று இப்பொழுது தீர்மானித்துச் சம்மதம் தெரிவித்தாள் யாழினி.

வெளிநாடு செல்வதென்றாலும் நாலு இலட்சம் தேவை. அந்தச் செலவையே சீதனமாக கேட்ட போது பேரம் பேசி மூன்று இலட்சத்தில் முடிவாகியது. யாழ்ப்பாணத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து வேலை நிமித்தம் கொழும்பில் குடியேறிச் செட்டில் ஆகி விட்ட குடும்பம் யாழினியுடையது. இப்போது பென்சன் எடுத்து விட்ட போதும் யாழ் நிலைமை காரணமாகத் தொடர்ந்து கொழும்பிலேயே தங்கிவிட்டனர். சேமிப்புடன் பென்சன் தொகையும் சேர்த்து வைப்பிலிட்டு வட்டியைத் தந்து கொண்டிருந்த பணம் இப்போது சீதனமாகக் கொடுக்கப்பட்டது. சீதனம் போக மீதி, திருமணச் செலவுக்குப் பயன்பட்டது.

சீதனக் காசில் இரண்டு இலட்சம், மாப்பிள்ளை பெண் இருவரது கணக்கிலும் வைப்பிடப்பட்டது. மிகுதி ஓர் இலட்சம், தாலி கூறைக்காக எடுக்கப்பட்டது. மாப்பிள்ளை வெளிநாடு சென்றதும் அதையும் அனுப்பி வைப்பார் என்று கூறப்பட்டது. இனியென்ன மாப்பிள்ளையின் உழைப் பெல்லம், உங்களுக்குத் தானே என்று மாப்பிள்ளை வீட்டார் பெருமையடித்துக் கொண்டனர்.

நல்லதொரு சம்பந்தம் கிடைத்ததில் பெண் வீட்டாருக்குப் பெருமை பிடிபடவில்லை. பன்னிரண்டு வருடங்களாக வெளிநாட்டில் பணி புரிந்து, ஏற்கனவே வீட்டுக்கு 50 இலட்சம் உழைத்துக் கொடுத்திருக்கிறானாம். கை நிறையச் சம்பளம் எடுக்கும் வேலையில் இருக்கிறார். இனி என்ன குறை? எங்களுக்கு எதுவும் தரத் தேவையில்லை. அவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தால் சரிதான்; அவர்களும் ஒத்துக் கொண்டனர்.

திருமணம் குறைந்த ஆட்களுடன் டாம்பீகமாக நடந்தேறியது. யுத்தச் சூழ்நிலையைக் காரணம் காட்டி சொந்தக்காரர் ஒரு சிலரே திருமணத் திருவிழாவில் பங்குபற்றினர். அது பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இனி வரும் காலத்தில் இதையெல்லம் யார் கவனிக்கப் போகிறார்கள். சகல சடங்குகளும் போலியாகித் திருமணச் சம்பந்தத்தில் ஈடுபடும் இருவரும் ஒன்று சேர்வதுடன் கூட நிறைவு பெறலாம். இப்போதுகூடப் பெண்ணை மட்டும் வைத்துச் சடங்கை முடித்து வெளிநாட்டுக்கு அனுப்பும் வழக்கம் யாழில் வந்து விட்டது. இனி எப்படி எப்படியோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை திருமணத்தின் போது, தாலிக்கொடி கட்டியது மட்டுமின்றித் தனது கழுத்தில் கிடந்த மூன்று பவுண் சங்கிலியைப் பெண்ணுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார்.

நாம் மாப்பிள்ளைக்கு என்ன செய்வோம், எதைக் கொடுப்போம், என்று பதறினர் பெண்ணைப் பெற்றோர்.

வெகு விமர்சையாக நிறைவேறி விட்ட திருமணத்தில், இன்று ஒரு வாரம் ஓடிமறைந்து விட்டது. மாப்பிள்ளை, லீவும் முடிந்து டிக்கட்டும் ஓ. கே. பண்ணிவிட்டார். புறப்பட நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது,

கோபி யாழினியின் கண்களைத் துடைத்துவிட்டான்.

"யாழினி இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கிறது. நீ திடமாக இருந்தால் தான் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடைபெறுவேன்.

"சொல்லுங்கோவன், நான் திடமாகத் தான் இருக்கி றேன்"

"இப்பவே இப்படி கண் கலங்கிக் கொண்டிருந்தால் எப்படி? உமக்கு சொல்லி இருக்கிறேன் இது எனது விருப்பத் திற்கு மாறாக நடந்த கல்யாணம் என்று. பெற்றோரின் வற்புறுத்தலுக்காக செய்தது. அதற்கென்ன, இனி அப்படியே நாம் வாழலாம் என்றுதான் நீயும் சொன்னாய். அதில் உள்ள சிக்கல்களைத் தான் நான் இப்போது உனக்குச் சொல்லப் போகிறேன்.

"இலங்கைக்கு இதுதான் எனது இறுதிப் பயணம் என்று பலருக்குத் தெரியாது. எப்படியோ தட்டிக் கழித்து விட்டுச் செல்லாம் என்றால் முடியவில்லை. வகையாக மாட்டிக் கொண்டு விட்டேன். மற்றவர்கள் சொல்வது போல் நான் சென்றதும் உன்னை அங்கு எடுக்கப் போவதில்லை..."

இன்ப அதிர்ச்சி தருவான் என்றால் இதய அதிர்ச்சியல் லவா தந்து கொண்டிருக்கிறான். ஏக்கத்துடன் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் உம்மை நான் ஏமாற்ற விரும்பவில்லை. அங்கு சொன்ற பின்னர் உமக்குப் போன் கோல் கூட எடுக்க முடியுமோ தெரியவில்லை. அதுதான் முன்னமே எல்லாம் விபரமாகச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று சொல்கிறேன். அது தான் நான் உம்முடைய சீதனக்காசைத் தொடல்ல. உமது கொடிக்குப் போக மிகுதி செலவுக்கு எடுத்த பணத்துக்குத் தான் செயினைத் தந்த நான். மற்றது வங்கியில இருக்கிறது. உமக்கு வேண்டிய மாதிரி நீர் எடுத்துச் செலவழிக்கலாம். என்னிடம் இருந்து பணம் எதையும் எதிர்பார்க்க வேண்டாம்."

என்ன இவன் சொல்கிறான்? அவளுக்கு விளங்கவில்லை. ஆனால், ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்பதை உள்ளுணர்வு உறுத்திக் கொண்டிருந்தது.

"போனதும் ஒரு கடிதம் போடுவேன். அதுவும் புறக்டர் மூலமாக. உமது வசதிக்காகத் தான் அதுவும். அதற்குச் சில மாதமாகலாம். அதுவரை நீர் பொறுத்து இருக்க வேண்டும்."

இடைமறித்தவள் கேட்டால், "அப்படியென்றால் நீங்கள்?"

"நான் வழமை போல் ஜேர்மனியில் எனது வாழ்க்கையைத் தொடருவேன். அதுபோல் நீயும் இங்கு நல்லபடியாக வாழ வேண்டும் என்பதுதான் எனது கவலையும் வேண்டுதலும்."

"நீங்கள் இருக்கும் போது எனக்கென்ன கவலை." இன்னும் சில ஐயங்களைத் தீர்க்க வேண்டியிருந்தது யாழினிக்கு.

"ஐயோ யாழினி, உமக்கு நான் என்ன சொல்லுறன் என்று விளங்க வில்லை. நான் தான் போகப் போறனே!"

அவள் மனம் விழித்துக் கொண்டது. இப்போது உசாராகிவிட்டாள்.

நான் ஏற்கனவே அங்கு திருமணம் முடித்து, எனக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது. இங்கு ஒருத்தருக்கும் இது தெரியாது. சாதி விட்டுச் சாதி மாறிக் கல்யாணம் செய்ததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டாரிட்டைச் சொல்ல முடியல. அதுதான் மறைச்சநான். ஆதலால் இந்த விபரீதம் ஏற்பட்டது. அதுக்கென்ன இப்ப. நான் போனதும் பிரிந்து வாழ எனது சம்மதத்தை அறிவிப் பேன். நீர் கோட்டில் கேஸ் பைல் பண்ணிப் பிரிவை எடுத்த தும் வேற திருமணம் செய்து வாழலாம்."

ஓம், நீங்க எச்சில் படுத்திட்டுப் போக நான் இங்கு வேறு ஒருத்தருடன் இரண்டாம் தாரமாக வாழவோ என்ன வக்கிரமமான மனசு இந்த மனுசனுக்கு? உடம்பு லேசாக நடுங்கியது அவளுக்கு.

"என்ன அப்படிப் பார்க்கிறாய். இதெல்லம் வெளி நாட் டில் சகஜம். வெளிநாட்டுக்குப் போன நாங்கள் வெளிநாட் டுக் கலாச்சாரத்தை கடைப்பிடிக்காட்டி எப்படி? இனி இதெல்லாம் இங்கு பாஷனாகி விடும். இது சிம்பிள். கவலைப்படாதே..

கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். திடமாக இருக்க உறுதி பூண்டாள். அப்பாவிப் பெண்களைக் கன்னி கழித்துவிட்டுத் தாங்கள் தனியாக இஷ்டம் போல் வாழலாம் என்று எண்ணும் ஆண்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று அவள் மனம் துடித்தது.

அவன் என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருந்தான். அவள் மனம் அவற்றில் லயிக்கவில்லை. பெண்களைப் பேதை என்றும் பேடி என்றும் இந்த ஆணினத்திற்கு என்றும் அடிமைப்பட்டுப் பெண்ணினம் சீரழிவதை விரும்பாத புதுமைப் பொண்ணவள். பெண்ணடிமையை விரும்பாத தனக்கு நேர்ந்த இந்த அவமானத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தானே இப்படி ஏமாற்றப்பட்டு, காலங்காலமாகக் கண்ணீர் வடித்து கொண்டிருந்தால் சாதாரணமான மற்றைய பெண்கள் எப்படிக் கலங்குவார்கள். இவற்றையெல்லாம் முளையிலே கிள்ளி எடுக்காததால் தான் பெண்ணினம் இந்தச் சாபக்கேட்டுக்குள்ளாகி இருக்கிறது. பெண்களின் விடிவுக்கு அவர்களே பாடுபடவேண்டும். அவர்களுள் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலராவது வழிகாட்டியாக அமைய வேண்டும். மற்றவர்களை நம்பிப் பலன் இல்லை. தன்னுடன் ஆரம்பமாகட்டும் பாடம் என்று முடிவு கட்டினாள் யாழினி.

தன்னைச் சுதாகரித்துக் கொண்ட யாழினி, "எனக் கென்ன கவலை? கெஞ்சம் இருங்க ரிங்ஸ் எடுத்து வாறன்" என்று உள்ளே சென்றவள், குளிர் பானத்துடன் ஒரு கத்தியையும் மறைத்து எடுத்துக் கொண்டு வந்திருந்தாள்.

குளிர் பானத்தை நீட்டினாள். அவன் கிளாஸைத் தூக்க, தட்டைக் கீழே போட்டுவிட்டுக் கத்தியால் ஓங்கிக் குத்தினாள். ஒரு குத்து. கிளாஸ் தட்டுப்பட்டுக் கீழே விழுந்து உடைந்த சத்தத்துடன், "ஐயோ அம்மா" என்ற ஓலமும் கலந்து கேட்டது. கோபி ஓட்டமாக வெளியே ஓடி வந்தான். வயிற் றில் குத்து ஆழமாகப்படவில்லை என்றாலும் இரத்தம் பெருக்கெடுத்தது.

யாழினி பத்திரகாளியாகக் கத்தியுடன் ஓடி வந்து கொண்டிருந்தாள். வீடே அல்லோல கல்லோலப்பட்டது.

கூச்சலும் அவலக்குரலுமாக வீடு களேபரப்பட்டுக் கொண்டிருந்தது. பலரும் பல விதமாகக் கதைத்துக் கொண் டிருந்தனர்.

யாழினி மூர்க்கமாகக் கத்தியுடன் நின்று கொண்டி ருந்தாள். அவளைப் பல பேர் சேர்ந்து பிடித்துக் கொண்டிருந் தனர்.

"என்னை விடுங்கள், என்னை விடுங்கள், அவன் தப்பிப் போகப் போகிறான். அவனைக் கொன்றால்தான் சரி" என்று திமிறிக் கொண்டிருந்தாள்.

"இந்தப் பைத்தியத்துக்கா அவனைக் கட்டி வைத் தீர்கள்?" என்று ஒரு குரல் கேட்டது.

"என்ன நடந்தது? என்ன நடந்தது?" என்று பலரும் கேட்டுத் திரிந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண் பிள்ளை என்றால் என்ன கிள்ளுக்கீரையா? ஆண்கள் நினைத்த மாதிரி ஆட்டுவிக்க நாங்கள் என்ன பொம்மைகளா? தனது விருப்பத்திற்கு ஒரு பெண்ணை ஜேர்மனியில் கட்டிக் கொண்டு, இங்கு அம்மையப்பன் ஆசைக்கு வேறாரு பெண். அவன் ஒரு கிழமை படுத்துப் போட்டுப் போக, விலகி நான் வேறொருவனோடு படுக்க வேணுமாம். அந்தக் காலத்துக் கண்ணகியல்ல நாங்கள். இந்தக் காலப் போராட்ட வீராங்கனைகள். அடிபட்டு நொந்து எல்லாம் இழந்து, வாழ வழி இன்றித் தமிழினம் செத்துக் கொண்டிருக்கும் போது, இங்கு நம்மவனே நம்மைச் சுரண்டி வாழ்வையும் சீரழிக்கின்றான். அவன் போன பின்பு, என்னை வேற கல்யாணம் செய்து கொள்ளட்டுமாம். இதற்கு மேல் எனக்கு வாழ்க்கை தேவைதானா? என்னை விடுங்கள் அவனையும் அழித்து விட்டு நானும் சாகிறேன்" என்று கத்தினாள் யாழினி.

"என்ன? அங்கு திருமணம் முடித்தவனா? எங்கே அவன்?" என்று இப்போதுதான் பெண் வீட்டார் திரும்பிப் பார்க்க, அவனைக் காயத்திற்கு மருந்து போடக் கொண்டு போய்விட்டனர். எஞ்சியிருந்த மாப்பிள்ளை வீட்டாரும் இப் போது நழுவிக் கொண்டிருந்தனர்.

"தமிழ்ப் பெண்கள் இப்படிக் காலங்காலமாக ஏமாற்றப் பட்டுச் சீரழிவதா? தமிழ்ப் பெண்கள் வாழ்வதா? மாழ்வதா? வாழ்வதாயின் இனிப் போராட்டம் ஒன்றே வழி" என்று புறப்பட்டு விட்டாள் யாழினி. இன்று இல்லாவிட்டாலும் நாளை அவள் பின்னால் வரும் ஓர் அணி. ஆண்களின் அட்டூழியங்கள், அடக்கு முறைகளுக்கு அப்போது ஒரு விடிவு வரும்.

அப்போது, பெண்ணா, அவர்கள் நெருப்பு என்று ஆண்கள் கூறும் நாளும் வரத்தான் போகிறது. வழி திறக்கப் புறப்பட்டு விட்டாள் யாழினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தினத்தந்தி*, செப்டெம்பர் 1995

# மருமகளுக்கு!

அன்புடன் சுமதிக்கு எழுதிக் கொள்வது..

என்ன? அன்புள்ள மருமகள், இப்படியாகி விட்டதே! என்று பார்த்தீர்களா? அந்த உறவுதான் இப்போது கேள்விக் குறியாகி விட்டதே.

மாமா, ஏன் இப்போது முன் போல், வீட்டிற்கு வருவதில்லை, நிற்பதில்லை, சாப்பிடுவதில்லை என்பதை அறிவதில் இத்தனை நாட்களுக்குப் பின்னராவது அக்கறை வந்திருக்கிறதே!

நீங்களே திட்டம் போட்டு நடத்திவிட்டு, இப்பொழுது அவற்றில் எவை எவற்றை நான் புரிந்து கொண்டேன் என்பதை அறிவதற்காகவும் இருக்கலாம் என்று நான் உணர்கிறேன்.

நீங்கள் என்னுடன் அன்பாய் நடந்த வரை, என்னில் எந்த மாற்றத்தையும் கண்டிருக்க மாட்டீர்கள். ஆனால் சொல்லால் செயலால் உங்கள் நடைமுறையால் நீங்கள் என்னைத் தாக்கத் தொடங்கியதும் முதலில் வேதனைப்பட்டேன். எனது இதயத்திலிருந்து இரத்தம் வடிந்தது.

தங்கள் திட்டம் போட்ட நடவடிக்கைகளுக்கு, என்னைத் தவறாகப் புரிந்து கொண்டது தான் முதற் காரணம். வேறு யாரும் அப்படிப் புரிந்து கொண்டிருந்தால், நான் கவலைப்பட்டிருக்கமாட்டேன். என்னுடன் நீண்ட நாள் பழகி என்னைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொண்டதாக, நான் எண்ணியிருந்த, நீங்கள் இப்படி நடந்து கொண்டது வருத்தம்.

இந்தத் திட்டமிட்ட செயற்பாட்டின் தாக்கம், எனது அன் பான மருமகளின் மூலம் ஏற்பட்டது. அடுத்த காரணம், என்னு டைய மருமகள் என்று நான் வாய் நிறையப் பெருமையுடன் சொல்லிக் கொண்டது உங்களுக்கு விருப்பமில்லையோ என்னவோ?

10–10 –93 அன்று எனக்கு மறக்க முடியாத நாள். என் இதயத்தில் முள் தைத்த நாள். அன்று தான் முதன் முதலாகத் தாக்குதல் பேச்சளவில் தொடங்கியது. என்றாலும் பகிடி என்றுதான் நான் முதலில் எடுத்துக் கொண்டேன். ஆனால் தொடர்ச்சியான பேச்சு என்னைச் சீரியஸாக வைத்து விட்டது. அதன் பின்னர் ஒவ்வொரு பேச்சையும் செயலையும் நுணுக்கமாக ஆராய முற்பட்டேன்.

நான், மற்றவர்கள் மனமறிந்து நடப்பவன். உங்கள் செயல்கள் மூலம், உங்களை நாடி பிடித்து அறிந்து கொண்டேன்.

மருமகளின் வாயைக் கிண்டி மகிழ்ச்சியடைபவன் நான். அந்த வாயில் வரும் சொற்கள் என் இதயத்தை இப்படி முள்ளாய்த் தைக்கும் என்று நான் எண்ணவில்லை. ஒன்றா இரண்டா சொல்ல? படிப்படியாகப் பேச்சே நின்று விட்டது. நான் உங்களுடன் பேசா விட்டால் நல்லது என்ற நிலையை இதன் மூலம் தோற்றுவித்து விட்டீர்கள். உங்கள் திட்டம் வெற்றிதான். சாப்பிடாததற்குக் காரணம் கேட்டிருக்கிறீர்கள். நான் சொல்லித் தான் தெரியவேண்டும் என்றால் சொல்கிறேன். ஆனால், முற்றுமுழுதாகச் சொன்னால் என்னை ஓர் எளியவன் என்று எண்ண வைக்கும்.

ஒரு நேரச் சாப்பாட்டிற்கு இவ்வளவு செலவழிக் கிறீர்களே என்று கூறியது வெறும் பசப்பு வார்த்தை என்று பின்னர் அறிந்து கொண்டேன். ஒரு நேரச் சாப்பாட்டிற்காக நான் அங்கு வந்து போகும் பஸ் காசே போதும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அந்தளவிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சாப்பாட்டை ஒறுத்து இருந்தேன். நீங்கள் நோய் வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியிலிருந்து வந்த பின்னர் உங்கள் நோயைக் குணமாக்க நான் எடுத்த முயற்சியில் எனது செலவில் அந்த மருந்தைச் செய்ய வேண்டும் என்பதற்காக வேறு சாப்பிடுவதையே நிறுத்தி விட்டேன். ஞாயிறு ஒருநாள் மதியம் மட்டும் உங்கள் வீட்டில் சோறு சாப்பிட்டேன். ஆனால், அதை வழங்குவதில் உங்களுக்குள்ள சிரமம் அல்லது நிர்ப்பந்தம் எனக் கருதினேன். அதைப் புரிந்து கொண்டதில் எனக்கு சாப்பிட விருப்பம் வரவில்லை.

முன்னர் உங்கள் அன்பான உபசரிப்பில் திக்குமுக்காடிப் போகும் எனக்கு, அந்த மகிழ்ச்சியில் சாப்பிட முடியாமல் போனது. பின்னர் வேண்டா வெறுப்பான நடவடிக்கை என் தொண்டையை அடைத்தது. கண்களைத் திறந்தது. என்ன உறைப்பா? என்று கேட்டீர்கள். நான் எத்தனையோ கதை களில் துக்கம் தொண்டையை அடைத்தது என்று எழுதி இருக்கிறேன். அனுபவ பூர்வமாக உணர்ந்தது இப்போது தான்.

சாப்பாட்டுக்காக ஆவலாய்ப் பறப்பவன் நான் அல்ல. உங்கள் அன்புக்காக, நான் விரும்பாத சாப்பாடுகளைக் கூடச் சாப்பிட்டவன். அதன் பின், நான் இப்படி எப்படி மாறினேன் என்பதற்கு, ஆரம்ப கால நடவடிக்கை ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுவது நல்லது. அது, அந்த மறக்க முடியாத நாளுக்குப் பின் வந்த பௌர்ணமிக்குப் பின்னர், நான் வந்த போது நீங்கள் வைத்த சிற்றுண்டித் தட்டின் போது நடந்தது.

நித்தம் போனால் முத்தம் சலிக்கும் என்பதை நிதர்சன மாக உணர்ந்து கொண்டேன். நான் எங்கோ இருந்தேன். நீங்கள் கொண்டு வந்து வைத்த தட்டு எங்கோ இருந்தது. பின்னர் கொண்டு வந்து வைத்த தேனீர் எனக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டது. அப்பொழுது கூட அந்தத் தட்டு அங்கேயே இருந்தது. இது பல வித எண்ணங்களை எனக்குள் ஏற்படுத்தி விட்டது.

சற்று நேரத்தின் பின் வந்த உங்கள் அப்பா, என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தட்டை இங்கே வைத்து இருக்கிறது என்று கூறியவாறு எனக்குப் பக்கத்தில் எடுத்து வைத்தார். அதற்கு நீங்கள் கூறிய பதில், உங்கள் சலிப்பைக் காட்டியதுடன் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்த வடு நெஞ்சில் பதிந்தாலும் அதையும் மறந்து வந்து நின்று சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இந்தப் பதில் நினைவு வரும்போதெல் லாம் சாப்பிடாமல் இருந்தேன்.

இதற்கு மேலாக எண்ட மருமகள் நன்றாகச் செய்து தருவாள் என்ற அற்ப ஆசையில் ஒரு பொருளை வாங்கி வந்திருந்தேன். அதைச் சிற்றுண்டியாகத் தயாரித்து வைத்து விட்டு, நான் பின்னர் சாப்பிடுகிறேன் என்றதுக்கு, விரும்பினால் சாப்பிடட்டும் என்ற பதிலை நான் என்னுடைய மருமகள் வாயிலிருந்து எதிர்பார்க்கவில்லை. இது தந்த தாக்கம் வேறு. இதற்குப் பிறகும் நான் சாப்பிடவில்லையே என்று நீங்கள் கவலைப்படுவது எத்தனை அபத்தமானது?

இப்படி இன்னும் பல நிகழ்வுகள். அவை எல்லாவற் றையும் சொல்ல முடியாவிட்டாலும் இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் அமைந்த நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிட வேண்டும். தேவைக்காக சாப்பாட்டை வெறுத் தேன். நினைத்ததை நிறைவேற்ற வேண்டும். தேவை என்பதற்காகப் பட்டினியும் கிடந்தவன். இவை எவரும் அறியாதது. அப்படிப்பட்ட நான், தங்கள் வீட்டில் சாப்பாடு இருந்தும், ஒரு நாளல்ல இரண்டு நாட்கள். அதுவும் ஒரு நாள் முழுவதும் மறு நாள் மதியமும் சாப்பிடாத நிலையில் பட்டினி கிடந்து உங்கள் அன்பு, கருணை, இரக்கத்தைப் பரீட்சித்து இருக்கிறேன். இதன் பிறகும் எனக்கு எப்படிச் சாப்பிட மனம் வரும்? இதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும்.

சாப்பாடு எடுத்து மேசையில் வைத்திருந்ததுதானே! விரும்பினால் சாப்பிட்டிருக்கலாம்தானே! நாங்களென்ன பட்டினியா இருக்கச் சொன்னோமா? அம்மா எத்தனை தரம் சொன்னவ? என்று நியாயமான காரணத்தை நீங்கள் சொல்லலாம். ஆனால் என் எதிர்பார்ப்புப் பரீட்சையின் முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கல்லவா தெரியும்!

உங்களுக்குப் புரியும். நித்திரை கொள்பவனைத் தான் எழுப்பமுடியும். நித்திரை போல் பாசாங்கு செய்பவனையல்ல. அதன் பிறகு, உங்கள் வீட்டில் சாப்பிடச் சொல்லும் போது, ஔவையார் என் முன் தோன்றி, உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் வீட்டில் உண்ணாமை கோடி பெறும் என்று கூறிக் கொண்டிருந்தார். நான் எப்படிச் சாப்பிடுவேன்.

நான் உங்களுக்கு வேண்டாத விருந்தாளியாகி விட்ட பின்பு, உங்களுக்கும் ஏன் என்னை உபசரிக்கும் சிரமம். எதையும் தவிர்ப்பது நல்லதல்லவா? தேனீர் மட்டும் குடித்தேன்! என்று கேட்கிறீர்கள். உங்கள் அம்மா அப்பா அவர்களது உபசாரம் என்னை ஒரு அந்நியனாக உணர வைத்த போதும் பெரியவர்களைக் கனம் பண்ண வேண்டும் என்பதற்காக அதை நான் விரும்பா விட்டாலும் அருந்தினேன் இதுதான் உண்மை.

நெஞ்சைத் தொட்டுக் கேளுங்கள். இந்த இரண்டு வருடத்தில் எத்தனை தரம் என்னைச் சாப்பிடச் சொல்லி இருக்கிறீர்கள்? தெரியுமா உங்களுக்கு ஒரே ஒரு நாள், திகதி கூட ஞாபகம். அந்த ஒரு நாள், "சாப்பிடுங்க மாமா" என்று சொன்ன சொற்களைப் பொக்கிஷமாகச் சேமித்து வைத்திருக் கிறேன். இனிமேலும் அதைக் கேட்க முடியாதல்லவா?

இது போதுமா? இன்னும் வேண்டுமா? இரண்டு வருட நிகழ்வுகள் அல்லவா? சொல்லி முடியுமா? இப்போது எனது காரியம் நியாயமானது என்பதற்கு இந்தக் காரணங்கள் போதும் என்று நினைக்கிறேன்.

நான் முன்னரைப் போல வருவதில்லை, நிற்பதில்லை, என்பதற்கு காரணத்தை அறிய விரும்புவீர்கள்.

நிற்கும் போது பட்டினி கிடக்க வேண்டும் என்பது மேலே நிறுவிய காரணம். அதுவும் உங்களுக்குப் பரவா யில்லை என்றால் அடுத்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வருகை, 23 மணித்தியால இருப்பு, உங்களுக்குப் பல சிரமங்களைத் தந்ததை அறிந்தேன். உங்களைக் கட்டுப்படுத்திக் குசினிக்குள் அல்லது அறைக்குள் அடைத்து வைத்து, உங்களுக்கு விருப்பமானவர்களுடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது, சிவ பூசையில் கரடி புகுந்த மாதிரி, நான் பல முறை உள்ளே விரட்டியிருக்கிறேன். என்னை உபசரிப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்களையும் நீங்கள் உபசரிப்பது தவிர்க்கப்பட்டது. உங்களுடைய சுதந்திரமான இயல்பான நடமாட்டத்தை எனது வருகை மிக மோசமாகக் கட்டுப்படுத்தியது. இதை நான் விரும்பவில்லை.

இன்னுமொரு காரணம் சொல்ல வேண்டுமானால், தங்கள் குடும்ப இரகசியம், தனிமை, பேணப்படுவதற்கு நான் தடையாக இருந்திருக்கிறேன். இது மனதுக்கு மிகவும் சங்கடமான விடயம். நிச்சயம் அதற்கு நான் இடம் அளிக்க வேண்டும்.

இதை எப்படிச் சொல்கிறேன் என்றும், இது எப்படி எனக்குத் தெரியும் என்றும், நீங்கள் வியப்படையலாம். ஆனால், உண்மை அதுதான்.

நான் நித்திரையாகி விட்டேனா? என்று திரையை விலக்கிப் பார்த்துப் பின்னர் நடுச்சாமத்தில் அதிகாலையில் உங்கள் பெற்றோருடன் பேச வேண்டிய நிலைமை இருந்தது. உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியும்.

நீங்கள் அந்த நேரம் நித்திரையாக இருந்திருக்கலாம். திரையை விலக்கிப் பார்த்து, மாமா நல்ல நித்திரை, என்று கூறியது உங்கள் தம்பிதான். இது, மீண்டும் என்னை வேண்டாத உறவு என்பதை உணர வைத்தது.

இவை எல்லாவற்றிலும் பல விடயங்கள் என்னை அந்நியப்படுத்தத் திட்டம் போட்டு எடுத்த நடவடிக்கைகள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இதற்குக் காரணம் எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நிலை என்பதும் எனக்கு விளங்கும். தங்களுக்குக் கிடைக்க இருப்பதை எதிர்பார்த்து, ஏற்கனவே வெட்டி விட எடுத்த முயற்சியின் பயனே இவையெல்லாம். பரவாயில்லை. ஆனால், எனது ஆசை மருமகளை வைத்தா பழிவாங்க வேண்டும்? இந்தக் கேள்விக்கு எந்தச் சமாதானமும் என்னைத் திருப்பதிப் படுத்த முடியாது.

நான் சம்பந்தப்பட்ட எந்த விடயமும், உங்களைச் சம்பந்தப்படுத்தியே பேசப்பட்டன. செய்யப்பட்டன. என்னிடம் சொல்லப்பட்டன. என்னை உபசரிப்பதில் ஆரம்ப கால முதல் அக்காவும் நீங்களுமே முன்னின்றவர்கள். அக்கா போன பின்னர், நீங்கள், இப்போது உங்கள் பெற்றோரின் செயல்கள் செயற்கையாகவும் அந்நியத் தன்மையையும் உணரவைக்கின்றது.

எனக்கு எந்த விதமான கோபமும் இல்லை. ஏதும் பிரச்சினை இல்லாமல் தானே விலகி நிற்கிறோம். தேவையான போது சந்திக்கவும் பேசவும் மட்டும் வரலாம் தானே. நீங்கள் எந்தக் காரணங்களையும் விபரீதமாக எண்ணிக் கவலைப்படத் தேவையில்லை. உண்மையை அறிந்திருந்தால் சரிதான்.

ஆரம்பத்தில் என்னுடைய மருமகள் என்ற நிலையில் நானாக எடுத்துக் கொண்ட உரிமையும் சலுகையும் என்னை உங்கள் மீது கோபப்படவும் சண்டையிடவும் வைத்து, அந்த உரிமை சலுகை அனைத்தும் அற்ற நிலையில் கோபிப்பதற்கும் உரிமையற்று அந்நியப்படுத்தப்பட்டு நிற்கிறேன். அது தானே உங்களுக்கு வேண்டும்.

நான் தனி மரமானால் யாருக்கு என்ன நஷ்டம்?

நான் பின்னால் பின்னால் வந்து கதைத்த போதும் கதைக்காமல் விட்ட பிறகு, இன்று என்ன எதிர்பார்ப்பு? விருப்பமென்றால், கதைக்கலாம், சாப்பிடலாம், வரலாம், நிற்கலாம் என்று. அதுவே இன்று விசுவரூபம் எடுத்து விட்டது.

சாப்பிட்டாலென்ன? வந்தாலென்ன? கதைத்தாலென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நிலைக்கு வந்த பிறகு காரணம் அறிந்தென்ன பயன்?

இத்தனைக்கும் பிறகும் என்கொரு ஆதங்கம். எனது அன்பு என்றும் களங்கமில்லாதது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இரு பக்கப் பரிமாற்றமே அன்பை வளர்க்கும். ஒருவர் அன்பாய் இருப்பதில் அர்த்தமில்லை என்ற நிலையில் விலகுதல் சரிதானே!

எப்போதாவது வேறு எவரையேனும் மாமா என்று அழைக்கும் போது, என் நினைவு வருமானால் அதற்காக நான் இறைவனுக்கு நன்றி சொல்வேன். நினைவு கூட வராத அளவுக்கு நயவஞ்சகம் எதுவும் நான் செய்யவில்லை என்ற திருப்தியோடு பிரிகிறேன்.

சகல சௌபாக்கியங்களோடு, நலமாக, நீடூழி வாழ வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இப்படிக்கு

அன்புள்ள மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரகேசரி ஜூலை 1997**

# குங்குமம் சிரிக்கிறது



பவித்ரா பூச்சூடிப் பொட்டிட்டுப் புறப்பட்டுக் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தாள். மகாலெட்சுமி போல் அவள் செல்வதைப் பார்த்துப் பெண்களே பொறாமைப் படுவார்கள். அவளுடைய வெளி அழகைத்தான் அவர்கள் பார்த்தார்களே தவிர, அவளது நெஞ்சம் அழுவதை அவர்கள் பார்த்தார்களா? இல்லை. அவள் ஏன் ஆலயத்திற்குச் செல்கிறாள்? என்று அவர்களுக்குத் தெரியாது. தனது அழகின் பெருமை பிடிபடாமல் ஆட்டம் போட்டுத் திரிகிறாள் என்று தான் சொல்வார்களே தவிர அவளது குறையை அறிந்திருக்கமாட்டார்கள்.

அவள் அண்ணன் சரவணன்தான் என்ன செய்வான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னால் முடிந்தளவு சிறப்பாகத்தான் கல்யாணத்தை நடத்தி வைத்தான். இந்த ஆட்டக்காரி இப்படித் திரியுறதுக்கு அவன் என்ன செய்வான்? ஒரே செல்லம் வேற..

இப்படிப் பலதும் பத்தும் அவளைப் பற்றி அலசு வார்கள். இப்படி அலசுபவர்களில் ஒருத்தி பவித்ராவிடம் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்றோ அல்லது அவளுடன் பேச வேண்டும் என்றோ விரும்பினால் அல்லது பேசியவளில் ஒருத்தியுடன் மனஸ்தாபப்படும் போதோ, "உன்னைப்பற்றி இன்னார் அப்படி பேசுவாள்" என்று அள்ளி வைத்து விடுவதும் உண்டு.

பவித்ராவின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டால், அவள் நாலு வார்த்தை நறுக்கெனப் பேசுவதைப் பார்க்கச் சந்தோஷமாக இருக்குமல்லவா? எனக்கா பேசினாய் வாங்கிக் கட்டிக்கொள் என்று வத்திவைத்தவர்கள் சந்தோஷப்படுவார் கள்.

பவித்ரா கணவனை விட்டு வந்து விட்டாள் என்பது மட்டும் தான் ஊராருக்குத் தெரியும். அதனால் கணவன் அடித்து விரட்டி விட்டான் என்றுதான் பேசிக்கொண்டர்கள். அதற்கான காரணத்தை அவர்கள் ஆராயவில்லை. வெறும் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி, தங்கள் மனம் போனபடி விமர்சிக்கத் தொடங்கினார்கள்.

பவித்ரா வீட்டுக்குப் பெட்டியுடன் வந்து சேர்ந்த போது சரவணன் பதறிப்போனான்.

"என்ன பவி அத்தான் வரவில்லையா? ஏன் நீ தனியே வந்தனீ? அத்தான் இல்லாமல் வீட்டுக்கு வரக்கூடாதென்று, எத்தனை தரம் உனக்குச் சொல்லியிருக்கின்றேன்."

"பயப்படாதே அண்ணா, இந்த முறை நான் காசுக்கோ பணத்துக்கோ வரவில்லை. நீ கஷ்டப்படுகிறாய், அதுதான் கொஞ்ச நாள் உனக்கு உதவியாய் இருந்து விட்டுப்போகலாம் என்று வந்திருக்கேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தான் இதற்குச் சம்மதித்தாரா? அவரை விட்டு நீ தனித்து இருப்பது எனக்கு விருப்பமில்லை. நான் விசரன் என்று நினைக்காதே. நாளைக்கே நீ சென்று விடவேண்டும்" என்றான்.

"அண்ணா, நீ எனக்காகச் செய்தவைகளை நினைக்கும் போது உனக்கு நான் இன்னுமின்னும் சிரமம் தந்து கொண்டு.."

"அதெல்லாம் ஒரு அண்ணனின் கடமைதான். அதுக்காக நீ, அதுவும் மணம் முடித்த பெண், கணவனைப் பிரிந்து இங்கு வந்து நிற்பது, சரியில்லையம்மா. உனக்காக இன்னும் என்ன செய்ய வேண்டுமோ, அதையும் செய்ய வேண்டியது எனது கடமை. நான் உன்னை நன்றாக வாழவைப்பேன் என்று அம்மாவுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா?" என்றான் சரவணன்.

"அண்ணா" அவன் கைகளுக்குள் இருந்து அழுதாள் பவித்ரா.

தந்தை இறந்த பின்னர் தாய் இடியப்பம் பிட்டு அவித்து விற்றுத்தான் இருவரையும் படிப்பித்தாள். லச்சுமி இல்லாமல் இருந்ததாலோ என்னவோ அங்கு சரஸ்வதி நிரந்தரமாகக் குடிகொண்டு விட்டாள். ஒருநாள் மாறி ஒருநாள் தான் சோறு சாப்பிட்டாலும் அவர்கள் படிப்பில் சூரத்தனமாகவே இருந்தார்கள். அண்ணனும் தங்கையும் அந்தப் பாடசாலையின் பெருமையை நிலைநாட்டினார்கள். குடும்ப நிலை கருதி, மேற்கொண்டு படிக்க விரும்பாத சரவணன் ஓ. எல்.லுடன் வேலை தேடத்தொடங்கினான். அதிபரோ தொடர்ந்து படிக்கும் படி வற்புறுத்தி விடுகைப் பத்திரம் தரமாட்டேன் என்றார். அவன் வீட்டு நிலைமையை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் கேட்பதாக இல்லை.

இவர்கள் புத்திமதி, தன் வீட்டுக்குச் சோறு போடாது என்பதை அறிந்த சரவணன், வேலை தேடும் படலத்தில் இறங்கினான். பல இடங்களிலும் வயது காணாது என்றார்கள். பல இடங்களில் பணம் கேட்டார்கள். சிபாரிசு கேட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையும் படிப்பையும் தவிர, வேறொன்றையும் அறியாத சரவணன், தனது சொந்தக்காரர் என்று சொல்பவர்களிடம் எதையும் கேட்டுச் செல்லவில்லை.

சொந்தக்காரர் என்று பெயருக்குத் தான் இருந்தார்களே தவிர, எவரும் எந்த உதவியும் செய்யவில்லை. கடையப்பம் வாங்கக் கூடத் தங்கள் வீட்டுக்கு வராதவர்களா தங்களுக்கு உதவப் போகிறார்கள்?அது தெரிந்துதான், தாய் உயிருடன் இருக்கும் போதே, பிள்ளைகளிடம் சொல்லி வைத்தாள். "நான் செத்த பிறகுகூட நீங்க சொந்தமென்று எவரிடமும் உதவி கேட்டுச் செல்லக்கூடாது" என்று. தாய் உயிருடன் இருக்கும் போதே தொழிலெடுத்து, இருப்பாட்டிச் சாப்பாடு போட வேண்டும், என்று இரவு பகலாகச் சிந்தித்து வருந்தி அலைந்தான் சரவணன்.

அடிக்கடி எம்.பி.யையும் சென்று பார்த்து வருவான். அடிக்கடி காரியாலயம் வந்து நின்று பழகிப் போன முகம், அவருக்குக்கூடப் பரிதாபமாக இருந்தது.

ஒரு கூட்டுத்தாபனத் தலைவருக்குக் கடிதம் கொடுத்து விட்டார். ஊரிலேயே என்பதால் வாங்கிச் சென்றான். அவனுடைய நல்ல காலத்திற்கு வேலை கிடைத்தது. சம்பளம் குறைவுதான் என்றாலும் தனது முயற்சியினால் முன்னேறலாம் என்ற தைரியத்தில் சேர்த்து விட்டான். தங்கச்சியையும் படிக்க வைத்துத் தாய்க்கும் சோறு போட முடியும் என்ற தைரியம் வந்ததும் தாயைக் கடையப்பம் செய்யும் வேலையிலிருந்து நிறுத்தி விட்டான்.

நெருப்பைத் தின்ற உடம்பு என்பதாலோ என்னவோ, ஓய்வு பெற்றதும் தாய் படுத்த படுக்கையாகி விட்டாள். தாயை உபசரிப்பதில் மக்கள் இன்பம் கண்டனர். தாய் தமக்காகப் பட்ட பாட்டுக்கு இதையாவது செய்யக் கிடைத்ததே என்று திருப்திப் பட்டுக்கொண்டனர். தாய் சுகமாக இருந்து அனுபவிக்க முடியவில்லை என்பதுதான் கவலையாக இருந்தது.

பூப்படைந்ததை ஊருக்குப் பறைசாற்றி சடங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதை விரும்பாத பவித்ராவின் விருப்பம் போலத் தாய், அயலவர் நாலுபேரை அழைத்துத் தண்ணீர் வாத்ததுடன் சரி. சொந்தமென்று யாரையும் அழைக்கவில்லை.

"மகன், பவியை நல்லாப் படிப்பிச்சு வைச்சுக் கல்யாணம் முடிச்சுக் குடுத்துக் கண்கலங்காமப் பார்க்க வேண்டியது உன்னுடைய பொறுப்புத்தான். அதைப் பார்க்க எனக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ என்னவோ நீதான் அவளைப் பார்க்க வேண்டும்" என்று அடிக்கடி தாய் கூறிக்கொண்டிருந்தாள்.

"ஏனம்மா இப்படியெல்லாம் சொல்றீங்க? அதெல்லாம் நீங்களுமிருந்து பார்ப்பீங்க. பவியை விட்டா எனக்கு யார் இருக்கிறா? அவளுக்குத் தேவையானதைச் செய்யாம வேறயாருக்குப் செய்யப் போறன் நீங்க கவலைபடாதீங்க."

"இல்ல மகன், இண்டைக்கோ நாளைக்கோ நான் கண்ணை மூடிவிடுவேன் என்றுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது. சாகிறதுக்கில்ல, உங்களைத் தனியே விட்டுப் போகப் போகிறேன், எண்டுதான் கவலை. இந்தப் பாவியின் வயிற்றில் வந்து பிறந்ததால நீங்க தனிச்சுப் போயிட்டீங்க. அதுதான் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. நீங்க நல்லா வாழ்றதைப் பார்க்கவும் இந்தப் பாவி கொடுத்து வைத்திருக்கின்றேனோ தெரியவில்லை" என்று தாய் சொல்லிச் சொல்லி இருந்தாற் போல் கண்ணை மூடிவிட்டாள்.

ஏ. எல். படிக்க மறுத்த பவித்ராவைச் சரவணன் தெண்டித்துப் படிக்க வைத்தான். "எனக்கேதும் கஷ்டமில்லை. எனக்குத்தான் படிக்கக் கிடைக்கவில்லை. நீயாவது படித்துப் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும். சரவணனின் தங்கச்சி என்ற பெயரைப் பாடசாலையில் எனக்கு எடுத்துத் தாற மாதிரிப் பல்கலைகழகத்திலும் பெயர் வாங்கித் தரவேணும்."

"சரவணன்ட தங்கச்சி என்று சொல்லும் போது, எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா? அண்ணா, நீ ஆண் பிள்ளை, நீ தான் படித்திருக்க வேணும். என்னைப் படிக்க வைத்து என்ன பயன்? நீ படிச்சிருந்தா, நல்ல உத்தியோகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பாயே, இப்படிக் கஷ்டப்படத் தேவையில்லையே" என்பாள் பவித்ரா.

"பவி, நமக்கு அமைந்தது அவ்வளவுதான் என்று திருப்திப்பட வேண்டும். அம்மாட ஆசையையும் நிறைவேற்றி எண்ட ஆசையையும் நிறைவேற்ற நீ படிக்க வேண்டும். வேற எதிலும் மெனக் கெட்டுப் படிப்பைப் பாழடித்து விடாதே."

நான் என்ன செய்ய? தமிழ் மன்றமா.. என்னைத் தான் தலைவராக்குகிறார்கள். இல்ல, விளையாட்டா நான் தான் தலைவி; மாணவர் தலைவி என்றும் எல்லாவற்றிலும் என்னைத்தான் முன்னுக்குப் பிடிச்சு விடுவார்கள் நான் என்ன செய்ய."

"நீ, நல்ல கெட்டிக்காரி என்பதால் அப்படிச் செய்கிறார்கள். அது உனக்குப் பெருமையாக இருக்க வேணும்."

"அப்படியும் சொல்றீங்க இப்படியும் சொல்றீங்க."

"நான் அதைச் சொல்லல்ல."

"ஓ! வேற, காதல் கீதல் எண்டா, நான் சரவணன்ட தங் கச்சி, அந்த நினைவு எனக்கு எப்போதும் இருக்குமண்ணா. என்னிட்ட யார் நெருங்குவார்கள், பயப்படாதண்ணா."

"சே, எண்ட தங்கச்சியைப் பத்தி எனக்குத் தெரியாதா?... சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னனான்." உன்னைப் பொடியன் கள் சுற்றுகிறார்கள் என்று எப்படிச் சொல்வான் அவன்.

இப்படிப் பலதையும் வெளிப்படையாகப் பேசும் அண்ணன், தங்கை தான் அவர்கள். வேறு உறவு இல்லாததால் தங்கள் பிரச்சினைகளை அவர்களே தீர்க்க வேண்டியிருந்தது.

"அண்ணா, உனக்கு உதவியாக நானும் உழைத்தால் நமது பொருளாதார நிலையை உயர்த்தலாம். அதுதான், ரீச்சிங் வேலைக்கு விண்ணப்பிக்கலாம் என்று நினைக்கிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு நீ உதவ வேண்டாம் நீ வேலைக்கு மனுப்போட் டாலும் பரவாயில்லை."

"எனக்குச் சீதனம் தர, நீதான் கஷ்டப்படப் போறாய், அதுதான்."

"சீதனத்துக்காக உழைக்கப் போறன் எண்டு சொல்லு றாய்."

"இல்லண்ணா, உத்தியோகத்தைக் காட்டி அதையும் சீத னமாக கொடுத்தால் உனக்குக் கஷ்டம் குறையும் அதுதான்."

"எனக்குக் கஷ்டம்தான் பவி. விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பார்களே, அதுபோல, நமது தகுதிக்குத் தகுந்த மாதிரி மாப்பிள்ளையைத் தேடிப்பிடித்துக் கட்டி வைப்பேன் கவலைப் படாதே."

"என்னை நல்லா வைக்க வேணும் என்று நீங்க நினைக்கிற மாதிரி, நீங்க நல்லா இருக்க வேணும் என்று எண்ணுவது தவறாண்ணா?"

"இல்லல்ல, எண்ட தங்கச்சி நல்லா சீரும் சிறப்பாக வாழ்றதைப் பார்த்து, எண்ட கஷ்டம் எல்லாம் தீர்ந்திடும். அதன் பிறகென்ன கவலை? எண்ட மருமகளுக்கும் நான் உழைத்துச் சீதனம் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன்."

"அப்படி யென்டா உங்க கல்யாணம்.."

"இல்லப் பவி, அத்தனை ஆசை. அதைத்தான் சொன் னேன்."

வருடங்கள் உருண்டோடி விட்டன.

பல சம்பந்தங்களும் பேசி வந்தன. ஏதோ ஒரு காரணத் தால் தட்டுப் பட்டுக் கொண்டே வந்தன. சம்பந்தங்கள் பேசிவரத் தொடங்கியதும் வீட்டைத் திருத்திப் புதுப்பித்தான். தங்கைக்குச் சீதனமாகக் கொடுக்க வேண்டிய வீடல்லவா? மறு சீரமைத்ததில் புது வீடு போல் மெருகேறியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா, தனது சேமிப்பு முழுவதையும் அதில் செலவழித் ததில் மனக் கஷ்டம் தான்.

அண்ணாவுக்கு உதவலாம் என்றுதான் வேலைக்கு விண்ணப்பித்தாள். முதலில் ரீச்சிங் மட்டும்தான் என்றிருந் தாலும், பின்னர் எதுவானாலும் சரி, என்று முயற்சித்தாள். நேர்முகப் பரீட்சைக்கு ஒன்றிரண்டுக்குத்தான் வந்தது. காசு கொடுத்துச் செய்யலாம் என்று முயற்சித்துப் பார்த்தான் சரவணன். அதுவும் ஒன்றிரண்டு இடம்தான் என்றும், அதற்கும் ஏற்கனவே ஆட்களை மனதில் வைத்துக் கொண்டு தான் நேர்முகப் பரீட்சைகளைச் சாட்டுக்கு நடத்தியிருக் கிறார்கள் என்றும் தெரியவந்தது.

இவ்வாறு, ஒரு முறை இன்டர்வியூக்குச் சென்ற போது, காரியாலத்தில் ஓர் இளைஞன், பவித்ராவைக் கண்வைத்து விட்டான். அவர்களை அறிந்து செய்தி அனுப்பியிருந்தான். மாப்பிள்ளையை விசாரித்துப் பார்த்ததில் நல்ல பையன், நல்ல குடும்பம், நல்ல பழக்கவழக்கம், உயர்வு பெறக்கூடிய தொழில் என்பதில் சரவணனுக்குப் பிடித்துப் போய்விட்டது.

பவித்ராவிடம் வந்து சொன்னதும், "அண்ணா, நீ பேசிப் பழகிப் பார்த்து, நல்லவர் எண்டாச் செய். உன்னுடன் ஒத்துப் போகக்கூடியவராக இருக்க வேண்டும். நான் பார்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. உனக்குப் பிடித்தா எனக்குச் சரிதான். அவர்கள் கேட்பதையும் கொஞ்சம் கவனித்துக்கொள்" என்று கூறிவைத்தாள்.

சோடிப் பொருத்தம் சாதகப் பொருத்தம் சரிவந்ததில் சரவணனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. எப்படியும் இந்தச் சம்பந்தத்தைச் செய்து விடுவது என்று பாடுபட்டான் சரவணன். அவர்கள் கேட்டது, அவனது தகுதிக்கு மேலே இருந்தது. அவனது நிலையை விளங்கப்படுத்திக் கொஞ்சம் குறைத்துக் கொண்டான். சம்பந்தத்தை விட, மனம் இல்லாமல் இருந்தது.

குறைத்தாலும் அந்தக் கோரிக்கைகளை நிறைவு செய்யக் கூடிய வழியையும் காணாது தவித்தான். திருமணச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவும் பெண் வீட்டாருடன் என்று விட்டுவிட்டதில் பெரும் சிரமப் பட்டான். கடனும் கைமாற்றும் திருமணச் செலவிற்கும் நகைக்குமே போதுமானதாக இருந்தது கேட்ட காசு கொடுக்க வேண்டுமே. அவனுக்குத் தெரிந்த ஒரே வழி வேலையை விட்டால், சேமலாபநிதிப் பணம் கிடைக்கும் என்பதுதான். ஆகவே அதை எடுத்துத் திருமணத்தை நடத்தி விட்டு வேறு வேலை தேடிக் கொள்ளலாம். இப்போது இந்த வேலை அனுபவம் இருப்பதால் எளிதாகத் தேடிவிடலாம் என்று எண்ணிச் செயற்பட்டான்.

எப்படிச் செலவைச் சுருக்கமாகச் செய்த போதும் நாலு பவுண் காப்புச் செய்து கொடுக்க முடியவில்லை. பெரிசு பண்ணி மாப்பிள்ளை வீட்டார் கல்யாணத்திற்குப் பின்னர் செய்து தரச் சொல்லிவிட்டனர். திருமணம் சிறப்பாக நடந்தேறியது. அவர்கள் பேச்சுப்படி, பெண்ணை மாப்பிள்ளையின் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டனர். மாப்பிள்ளையும் வீட்டில் ஒரே பிள்ளை என்பதால், வீடுவளவு, பொருள், பண்டம், எல்லாம் அவனுக்குத்தானே என்பது தான் அவர்கள் காட்டிய காரணம்.

தனித்துப் போன சரவணன், வேலையும் இல்லாமல் கடன் பளுவினாலும் பெரும் கஷ்டப்பட்டான். வீட்டில் தன்னந்தனியே இருப்பதும் தங்கையின் பிரிவும் அவனைத் தாக்கத் தொடங்கின. எதிலும் ஆர்வமற்றுச் சோர்வாகவே இருந்தான்.

பவித்ரா கணவனுடன் சந்தோஷமாக இருந்தாலும் அண்ணனின் நிலையை எண்ணிக் கவலைப்பட்டாள். அவள் சாப்பிட்டது எதுவும் ஒட்டவில்லை. அண்ணா எப்படி இருக்கிறானோ என்ற கவலையும் இருந்தது. அவன் வேலையை விட்டு விலகித்தான் தனது திருமணத்தை முடித்தான் என்பது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. இல்லையேல் அதற்கு விட்டிருக்கமாட்டாள்.

மூன்று மாதம் சென்றிருக்கும். "அண்ணாவிடம் சென்று காப்பை வாங்கி வா" என்று மாப்பிள்ளை வீட்டார் கூறியதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்துப் போனாள் பவித்ரா.

"அண்ணா காசு கிடைத்ததும் செய்து தருவார், நான் போய்க் கேட்கத் தேவையில்லை" என்று அவள் செல்லியும் அவர்கள் கேட்கவில்லை.

இனி அண்ணனைப் பற்றிக் கவலைப் படாமல் என்னைப் பற்றியும் நமது குடும்பம் பற்றியுமே கவலைப்பட வேண்டும். அதுதான் நமக்கு நல்லது என்று கடுப்பாகக் கணவன் பேசியது, அவளது நெஞ்சில் முள்ளால் குத்தியது போல் இருந்தது.

வீட்டுக்குச் சென்ற போதுதான், அண்ணாவின் உண்மை நிலை அறிந்தாள். அவளது இதயத்தில் இரத்தம் கசிந்தது. அழுதழுது கண்கள் வீங்கின.

அவளையும் அழைத்துச் சென்ற சரவணன், ஒரு மாதத்தில் செய்து தருவதாகத் தவணை பெற்றுக் கொண்டு வந்தான். தங்கையின் நல்வாழ்வைத் தவிர வேறு ஏதும் பெரியதாகத் தெரியவில்லை.

ஆறு மாதம் சென்றிருக்கும். மாப்பிள்ளைக்குப் பதவி உயர்வு கிடைத்ததும், கார் வாங்க வேண்டும் என்றதும் பவித்ராவின் சீதன வீட்டை விற்க வேண்டும் என்று கேட்டனர். முதலில் பவித்ரா அதற்கு இணங்கவில்லை. அண்ணாவிடம் கேட்க வேண்டும் என்றாள்.

"உனக்குப் புருஷன் நான்தான்; அண்ணா இல்லை. நான் சொல்வது போல் நடக்க வேண்டும் எனக்கு இங்கு இரண்டு வீடு இருக்கின்றன. அந்தப் பழைய வீட்டில் யார் இருக்கப் போகிறார்கள்?"

அவளுக்குச் நெஞ்சத்தில் பல எண்ணங்கள் முட்டி மோதினாலும், அவற்றை வெளியே கொட்டினால் குடும்ப உறவு, பிரிவைத்தான் ஏற்படுத்தும் என்று தன்னைப் பெரும் சிரமப்படுத்திக் கட்டுப்படுத்திக் கொண்டாள். வீட்டை விற்றால் அண்ணாவின் நிலையை அவளால் எண்ணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவும் முடியவில்லை. அவர்கள் கரைச்சல் பொறுக்கவும் முடியவில்லை. வேறு வழியின்றி வீட்டுக்கு வந்தவள், அண் ணாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

"அண்ணா, நான் சொன்னனே, வெளியே பார்த்தால் அழகாகத்தான் இருப்பார்கள். பழகிப்பார்த்து முடிவெடுக்கச் சொன்னேனே. நீங்க அவசரப்பட்டு விட்டீங்க. இப்பபாருங்க என்னால உங்களுக்கு எவ்வளவு கஷ்டம் என்று."

"எனக்கென்ன கஷ்டம்? உனக்குரியதை நீ வீற்று எடுத் துக் கொள்."

அண்ணா, உங்கட நிலைமை என்ன?... வேணாம் அண்ணா, என்னை விரட்டி விட்டாலும் நான் உங்களோட வந்திருக்கிறன். வீட்டை விற்க வேணாம். உங்களை இன்னும் கஷ்டப்படுத்த நான் விரும்பவில்லை."

"எண்ட பவி நல்லா இருந்தா, நீ மகிழ்ச்சியா இருந்தா, நான் எந்த நிலையிலும் மகிழ்ச்சியாக இருப்பேண்டா. நீ கவலைப்படாத. இது உனக்குரியதுதானே. இதை அவர்கள் விரும்பியது போல் செய்து கொள்ளட்டும்."

"நான் மகிழ்ச்சியாக இருப்பேன், என்று நினைக் கிறீர்களா?... அண்ணாவை நடுரோட்டில் விட்டு, மகிழ்ச்சி யாக இருக்கக் கூடிய பிறவியல்ல இந்தப் பவித்ரா. அணு அணுவாகச் செத்துப் போய் விடுவேண்ணா.."

அவளைச் சமாதனப்படுத்தி அழைத்துச் செல்லப் போதும் போதும் என்றாகிவிட்டது.

ஒரு மாதத்தில் வீடு விற்பனையாகிய போது நடுத்தெரு வுக்கு வந்த விட்ட சரவணனுக்கு, வீட்டை வாங்கிய பெரிய வர் மூன்று மாதத் தவணை கொடுத்தார். வேறு இடம் பார்க்கச் சொல்லி, அவர்களுக்கு இல்லாத பெருந்தன்மை அவருக்கிருந்தது.

அந்த மூன்று மாதத்தினுள், அரசு வழங்கிய காணியில், ஒரு குடிசை வைத்துக் கொண்டு, அடுத்த ஊருக்குப் போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டான் சரவணன். வேலையும் கிடைக்கவில்லை. பக்கத்துக் கிராமத்துக்குச் சென்று வாழ்க்கையை ஒருவாறு ஓட்டிக் கொண்டிருந்தான்.

அண்ணாவுக்கு ஒரு திருமணம் செய்து வைத்தால், பெண் வீட்டுக்குச் சென்று அண்ணா நிம்மதியாக இருக்க லாம் என்று சில முயற்சிகள் வீட்டாருக்குத் தெரியாமல் செய் தாள் பவித்ரா. அதுவும் கைகூடாத நிலையில் வீட்டுக்குத் தெரிந்து பிரச்சினையாகி விட்டது. அந்த எண்ணத்தையும் கைவிட்ட அவளால், சாப்பிடவோ தூங்கவோ முடியவில்லை.

அவளது உள்ளம் கனன்று கொண்டிருந்தது. தனக்காக எல்லாவற்றையும் இழந்து விட்ட அண்ணாவுக்காகத் தான் என்ன செய்வது? அவர் அளித்த வாழ்வை அனுபவித்துக் கொண்டு, அவர் படும் இன்னல்களைப் பார்த்துக் கொண்டு வாழாவிருப்பதா? எந்த வகையிலும் உதவ முடியவில்லை என்றால் எதற்கு இந்த வாழ்வு?

அண்ணாவின் இரத்தத்திலும் வியர்வையிலும் அன் பிலும் வளர்ந்த நான், பெண்ணாக இருப்பதால் அவருக்கு உதவ முடியாதா? இப்படியும் ஒரு வாழ்வா? அண்ணாவுடன் சேர்ந்து வாழக்கூடியவரையல்லவா நான் எதிர்பார்த்தேன். அண்ணாவே தேடித் தந்தது அல்லவா இந்த வாழ்வு? முள் வழியில் நடக்கும் அண்ணாவின் செருப்பையும் அல்லவா கழற்றி விட்டார்கள்.

என்மீது இருக்கும் அன்பினால் அதுகூட அவருக்கு விளங்கவில்லை. ராமன் மீது பரதன் வைத்திருந்த அன்பினால் அவரது பாதுகையை வாங்கி, ராமனைக் காட்டு வழியிலும் கல்லிலும் முள்ளிலும் நடக்க விட்டது போல், நானும் அவரை நடுத்தெருவில் அல்லவா விட்டிருக்கின்றேன். இந்த வீட்டில் இருப்பவர்கள் எல்லாம் அவரை மறந்து விடலாம். என்னை யும் மறந்து வாழச் சொல்வது என்ன நியாயம்? இந்த உயிர், இந்த உடம்பை விட்டுப் பிரியும் வரை நான் மறக்க முடியுமா? இந்த வீட்டில் இருந்து அவருக்கு உதவமுடியவில்லை என்றால் எதற்காக இந்த வாழ்க்கை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா, நீ தந்த பூவும் பொட்டும் என்னை வாழ வைக்கவில்லையண்ணா. என்னைப் பார்த்துச் சிரிக்கின்றது. எதற்காக இப்படிக் கஷ்டப் பட்டாய்? எனக்கேன் இப்படி ஒரு வாழ்வைத் தேடித் தந்தாய்? என்னை நன்றி கெட்டவ ளாக்கி விட்டாயே. இனி நான் வாழ்ந்தும் என்ன பயன்? என்று எண்ணிப் புலம்பியழுவாள் பவித்ரா யாரும் இல்லாத நேரங்க ளில்.

கனவில் கூட அண்ணா வந்து, "பவி, சாப்பிட்டிட்டுப் படுத்துத் தூங்கம்மா. என்னைப் பற்றிக் கவலைப் படாதே. உன் வாழ்க்கையைப் பாழாக்கி விடாதே" என்று கூறத்தான் காண்பாள்.

இந்த நேரத்திலா அந்த அதிர்ச்சிச் செய்தி வரவேண் டும்? காரியாலத்தில் இரண்டு லட்சம் ரூபாய் சோட்டேஜ் என்றும் உடனடியாகச் செலுத்த வேண்டும் என்றும் உடனடியாகக் கட்டாவிட்டால் வேலையும் இழந்து பொலி ஸாலும் பிடிபட வேண்டிவரும் என்ற நிலையில் சோகத்துடன் வீடு வந்தான் அவள் கணவன். அவளிடம் எதுவும் சொல் லாமல் வீட்டினுள் தாய் தகப்பனுடன் கிசு கிசுத்தார்கள். அதன் பின்னரே செய்தி அவளுக்கு கிட்டியது. அதுவும் "கொண்ணை யிடம் போய் ஒரு ஐம்பதினாயிரம் வாங்கி வா" என்று சொல் வதற்காகத்தான் சொல்லப்பட்டது.

பவித்ரா முதலில் தன்மையாகத்தான் சொன்னாள். "அண் ணனிடம் ஏது காசு? எல்லா வகையிலும் கடனாளியாக இருக்க, வீடு வளவும் இல்லாமல் அலைந்து திரிகிறார். நாம் ஏதும் உழைக்கும் வழியையாவது காட்டியிருந்தால் உரிமை யுடன் சென்று கேட்கலாம். நாம்தான் ஏதும் உதவவில்லை. மேலும் உபத்திரவம் கொடுக்காமல் இருக்கலாம் அல்லவா? வேண்டுமானால் எனது நகைகளை எல்லாம் தருகிறேன். அவற்றை ஈடு வைத்து எடுங்கள்" என்றாள் பவித்ரா.

"அது எங்களுக்குத் தெரியும். அதையும் சேர்த்துத்தான் கணக்குப் பார்த்தோம். ஒன்றரை இலட்சம் எடுக்கக் கூடிய தாக இருக்கிறது. மிகுதி ஐம்பதாயிரம் வேணும். போய் வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா என்று சொன்னால், பெரிய தத்துவம் பேசுகிறாய். உனக்கு நானா பெரிசு? அண்ணாவா பெரிசு? இந்த நேரத்தில் உதவாட்டிப் பின்னர் எதற்கு? நல்லா யோசித்துப் பேசு. போய் வாங்கிவரப் போறாயா இல்லையா?..."

"அவரென்ன காசு மரம் என்று எண்ணி விட்டீர்களா? போய்த் தேவையான நேரமெல்லாம் பிடுங்கிற்று வர? அவர் உழைக்க வழியில்லாத போது, உதவ முடியாத நமக்கு, என்ன உரிமை இருக்கிறது, உதவி கேட்டுப் போக? அவர், தான் வாழ வழியில்லாமல் இருக்கும் போது, 50 ஆயிரத்துக்கு எங்கே போவார். அவரிடம் இருந்தால் எனக்கென்றால், தான் விழுங்கியதையும் கக்கித் தருவார். அப்படிப்பட்டவர் எனது அண்ணா."

"உனக்கு அண்ணா தானே பெரிசு. நான் இந்தக் கஷ்டத்தில் இருக்கும் போது, நீ அண்ணா புராணம் பாடுகிறாய். உனக்கு நான் தான் கணவன். நான் இல்லாவிட்டால், உனக்கு இந்தப் பூவும் பொட்டும் தாலியும் கிடைத்திருக்காது."

"என்ன பெரிய தியாகம் செய்துவிட்டீர்கள்? அண்ணா காசும் நகையுமாகச் சீதனம் தந்ததால்தானே நீங்க தாலி கட்டினீங்க? இதில் பெரிசா என்ன செய்தாகச் சொல்றீங்க? அண்ணாவின் உழைப்பில் வந்ததுதான் இவையெல்லாம். நீங்க இல்லாட்டி, இன்னொருத்தர் இந்த இடத்தில் வந்திருப்பார்."

"என்னடி அதிகமாகப் பேசுகிறாய்? சீதனம் வாங்குவது உலக வழக்கம்தான். கொண்ணன் என்ன பெரிசாத் தந்திட்டார்? என்று பெருமை பேசுகிறாய்? கொண்ணர் பெரிசென்றால் போடி வெளியே" என்று கையை ஓங்கிக் கொண்டு அடிக்க வந்தான்.

"கையைக் கீழே போடுங்க. மரியாதை கெட்டுப் போகும். எனக்கும் அடிக்கத் தெரியும். நீங்க சொல்ற நேரம் எல்லாம் போய்க் காசு வாங்கி வந்தால்தான் இந்த வீட்டில் இருக்கலாம் என்றால், அதற்கு நானும் ஆளில்ல. நீங்க வேறாளைப் பார்க்கலாம்." பவித்ரா இப்படிச் சொன்னதும் பிரமித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் நின்ற தாயும் தகப்பனும், ஓடிவந்து மகனைப் பிடித்துக் கொண்டனர். அவனுக்கு இன்னும் உசார் வந்தது.

"போடி வெளியே நாயே, உனக்குச் செருப்பால அடிப்பன்" என்று திமிறினான்.

"நான் உங்க வீட்டு நாயல்ல. நீங்க என்னை விரட்டி விட்டவுடன் ஓடிவிட. நான் முறையாக வந்தனான். சீதனக் காசு, வீடு விற்ற காசு, நகைகள் எல்லாம் தந்தால்தான் போவேன். இப்படிப்பட்ட கேடுகெட்ட குடும்பத்தில் வாழ்வதைவிடச் சாகலாம்." அவர்கள் இருக்கும் நிலையில் அவள் போட்ட குண்டு நன்றாக வேலை செய்தது. எல்லோரும் கப்சிப். அதற்கு மேல் எதுவும் பேச வழியில்லாமல் போய்விட்டது.

"நீங்கள் அண்ணாவுக்குச் செய்த கொடுமைகள் எல்லாம் என் நெஞ்சுக்குள்ளே எரிமலையாக குமுறிக் கொண்டுதான் இருந்தன. அண்ணா சொன்னபடியால் தான் பொறுத்துக் கொண்டிருந்த நான், இனியும் பொறுப்பதில் அர்த்தம் இல்லை. இந்த வீட்டில் இருப்பதில் அர்த்தம் இல்லை. நான் புறப்படுகிறேன். எல்லாவற்றிக்கும் ஆயத்தப் படுத்துங்கள். எல்லாம் தந்து முடிந்தவுடன் விவாகரத்துக்கும் ஆயத்தப்படுத்துங்கள்." என்று அறைக்குள் சென்று தனது உடமைகளையும் தன் வசம் இருந்த நகைகளையும் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டாள் பவித்ரா. இதுவரை குமுறிக் கொண்டிருந்த எரிமலைக்கு வழிந்தோடச் சரியான வடிகால் கிடைத்ததும் அமைதியானாள். இனியாவது இப்படியானவர்கள் சிந்தித்து நடக்க வேண்டும் என்பதே அவள் அவா. இப்படியானவர்களுடன் வாழ்வதில் பிரயோசனம் இல்லை என்பது அவள் வாதம்.

மாமியார் அறைக்குள் வந்து, "அவன் ஏதோ தெரியாமல் பேசிவிட்டான் பிள்ளை, நீ ஒண்டையும் பெரிசாக எடுத்துக் கொள்ளாத. இந்த நகையையும் எடுத்துச் சென்றால் எங்கட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை என்னவென்று யோசிச்சுப்பார் பிள்ளை" என்றார்.

"உங்கள் குடும்பத்தின் சகவாசமே இனி எனக்கு வேண்டாம். இப்படிப்பட்டவரோட நான் வாழத் தயாரில்லை. உங்களுக்கு இப்போது எனது நகை தேவைப்படுகிறது. அதனால, உருகுகிறீர்கள். பிறகு வேலிக்குப் புறத்தியாகி விடுவேன். உங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா? நான் போறது போறதுதான்" என்று கூறியவள் பெட்டிகளுடன் வாசலுக்கு வந்தாள்.

"இன்னும் ஒரு மாதத்தவணையில் எனது உடமைகள் எல்லாம் வந்து சேர வேணும். இல்லையேல் வக்கீல் நோட்டீஸ் அனுப்ப வேண்டியிருக்கும். காசுக்கும் நகைக்கும் கல்யாணம் கட்டிக்கொண்டு பெருமைப் பேச்சு வேற கல்லையும் புல்லையும் கட்டிக்கொண்டு வாழ்ந்த காலம் வேறு. இப்போது கலியுகம். எங்களுக்கும் மானம் ரோஷம் இருக்கு. இதை மதிக்கத் தெரிந்தவர்களுக்குத் தான் மனைவியாக வாழ விரும்புறன்" என்று கூறிவிட்டு ஆட்டோவைக் கூப்பிட்டு ஏறிச் சென்று விட்டாள் பவித்ரா.

அண்ணாவின் குடிசைக்கு வந்து இறங்கியதும் முதலில் பதறிப்போனாலும், தங்கை ஏதும் நியாயமாகத்தான் செய்வாள் என்பதில் நம்பிக்கையிருந்தது அவனுக்கு. தனக்கு உதவியாகக் கொஞ்ச நாள் இருந்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன் என்று சென்னாலும் அவன் நம்பத்தயாராக இல்லை. ஏதோ நடந்திருக்கிறது. விட்டுப் பிடிக்கலாம் என்றிருந்தான் சரவணன்.

ஒரு கிழமையில், அவள் விசயம் முழுவதையும் சொல்லி வைத்தாள். தலையிலடித்துக் கொண்ட சரவணன், "அம்மா இல்லாமல் அண்ணனின் செல்லத்தில் வளர்ந்த பிள்ளை என்பதைக் காட்டி விட்டாய். பிள்ளை வளர்ப்பைப் பற்றித்தான் கூறுவார்கள்."

"அண்ணா, பலரும் எதையும் கூறுவார்கள் என்று பயப்படும் நிலையில், நான் இல்லை. நான் நினைத்தது சரி என்று செயற்படத் துணிந்து விட்டேன். சமூகத்துடன் எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீச்சல் போடத்தயாராக வந்திருக்கின்றேன். அண்ணா உனக்கும் கூட உனது அன்புக்குத்தான் அடிமை நான். என்னை மன்னிச்சுக் கொள் அண்ணா. இனி நீயே அவரிடம் கொஞ்சிக் கூத்தாடி என்னை அழைத்துப் போகச் சொல்லலாம் என்று கனவு கூடக் காணாதே. இனி நான் அவருடன் சேர்ந்து வாழப் போவதில்லை. நீ என்னை வாழ வைத்து பார்த்து விட்டாய். இனி நான் உன்னை வாழவைத்துப் பார்க்கப் போகிறேன். எனது முயற்சி எதற்கும் தடை சொல்லாதே அண்ணா."

தங்கையின் பேச்சின் வேகமும், தீர்மானமான குரலும், அவனை ஏதும் பேசவிடவில்லை. அவள் ஏற்னவே எல்லாவற்றையும் தீர்மானித்து விட்டவள் போல் பேசிக் கொண்டிருந்தாள்.

"நீ பூவும் பொட்டுமாய் மங்களகரமாக வாழவேண்டும் என்று தான் விரும்பினேன். நீ விவாகரத்துச் செய்து கொண்டு வாழா வெட்டியாக, மூளியாக வாழப் போகிறேன் என்று கூறுகிறாயே பவி."

"நீ தந்த பூவும் பொட்டும் என்றும் நிலையாக இருக்கும் அண்ணா. அவர் செத்தாலும் இதை நான் இழக்கமாட்டேன். இது நீ தந்தது. நீ இருக்கும் வரை நான் வாழா வெட்டியில்லை. கணவன் இல்லாதவளாக இருக்கலாம். ஆனால் வாழாவெட்டியில்லை. இது பற்றி இனி நீ கவலைப்படகூடாதண்ணா. என்றைக்கும் உனது கண்முன் நான் இப்படியே இருப்பேன்."

ஏதோ திடசங்கற்பம் பூண்டவள் போல், அவள் பேசிக் கொண்டிருந்தாள். இதற்கு மேலும் அவனால் என்ன பேசுவதெனறு தெரியவில்லை.

தாலியை மாலையில் கோர்த்துக் கொண்டு, கொடியை அடகு வைத்து, அண்ணாவுக்கு வேலை எடுத்துக் கொடுத்து விட்டாள். தனக்கும் வேலைக்கு முயற்சித்துக் கொண்டிருந்தாள். அண்ணாவுக்குப் பெண் கூடப் பார்த்துத் திரிகிறாள்.

"நீ எப்பவும் இப்படியே இருக்கப் போகிறாயா பவி?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கென்ன பிள்ளையா குட்டியா? இதுக்காகத் தானே நான் பிள்ளை கூடப் பெத்துக்கொள்ளாம இருந்த நான். இப்படியானவர்களுக்குப் பிள்ளை பெறுவது கூடப் பாவ மண்ணா. அப்படி ஒத்திப் போட்டு வந்தது எவ்வளவு நல்லது என்று இப்போது தெரிகிறது. பிள்ளை வேண்டாம் என்று எனது உள்ளுணர்வு கூறிக் கொண்டிருந்தது இதற்குதான் போலும். இல்லாவிட்டால் இப்போது நீதான் கஷ்டப்பட் டிருக்க வேண்டும். என்னைப் பற்றிக் கவலைப் படாதே. அண்ணா. நான் சந்தோஷமாக வாழ்வேன்.

அவளது நெற்றியில் குங்குமம் இப்போது முன்னதை விடப் பளிச்சென்று தெரிந்தது. குங்குமத்தைப் பூவைத் தாலியைப் பறித்து விடுவேன் என்று கூறும் போக்குக் காட்டும் ஆண்கள் இனிச் சிந்திக்க வேண்டும்.

தன்மானமுள்ள ஒரு பெண்ணைத் தன் அண்ணாவுக்கு மனைவியாகத் தேடுகிறாள், பவித்ரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நவமணி*, டிசம்பர் 1996

# கை காட்டிகள் நடப்பதில்லை!

"என்ன மகள், நீ இன்னும் இப்படியே இருக்கப் போறியா? உழைக்கிற பெண்ணென்றாலும் எப்பவும் இப்ப டித் தனியே இருக்க முடியுமா? எப்படியும் உனக்கென்று ஒரு ஆண் துணையை நீ தேடிக் கொள்ள வேண்டாமா? நான் ஒரு கைம்பெண். என்ன செய்ய முடியும்? நீ மூத்தவள். உன்னைக் கட்டிக்கொடுத்தால் தானே, உனது தங்கச்சி ரம்யாவுக்கும் ஒருவனைத் தேட முடியும்.

"நீ இப்படியிருந்தால் அவள் என்ன செய்வாள்? உன்னு டைய உழைப்பில்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். அதற்காக நீ, வாழ்க்கை முழுவதும் இப்படி எங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்க, நீ என்ன ஆண் பிள்ளையா?

"ஆண் பிள்ளையென்றால் எந்த வயதிலும் கல்யாணம் கட்டிக் கொள்ளலாம். ஆனால், பெண் பிள்ளைகள் அப்படி யல்ல, பருவத்தே பயிர் செய்ய வேண்டும் என்று கூறி யிருக்கிறார்கள். நான் எத்தனை சம்பந்தம் பேசி வந்திருக் கிறேன். நீ ஏன் இப்படி இன்னும் பேசாமல் இருக்கிறாய்.

"அந்தப் பொடியன் சுரேஸ், உன்னைக் கட்டியபின், குடும்பப் பொறுப்பைத் தானே எடுத்துக் கொள்வதாகக் கூறி னானே. நீ அதற்கும் சம்மதிக்கவில்லை. நீ இப்படியே இருப்ப தைப் பார்க்க எனக்குத்தான் பொறுக்க முடியவில்லை. உன்னைப் பெண்ணாகப் பெற்றதற்கு, ஒரு பெடியனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெத்திருக்ககூடாதா?..."

அம்மா, இப்படி எத்தனை நாளுக்குத்தான் புலம்பிக் கொண்டிருப்பீங்க? எனது முடிவைத்தான் நான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே. அப்படி இருக்க, இன்று மீண்டும் இந்தப் பல்லவியைப் பாட ஆரம்பித்து விட்டீர்களே.

"ஓ! அவள் பார்வதிக்கு இன்று திருமணம் நடக்கிறது. அதுதான் நீங்களும் உங்கள் வீட்டிலும் நாதஸ்வரம் கேட்க வேண்டும் என்று விரும்புகிறீங்களாக்கும். அதற்குத் தான் நானும் முயற்சிக்கிறேன் முதலில் தங்கச்சிக்கு ஒருவனைத் தேடிக் கட்டிக் கொடுக்கிறேன். அதன் பின் என்னைப் பற்றி யோசிக்கலாம்.

"இந்த எனது தீர்மானத்திலிருந்து நான் மாறப் போவ தில்லை. நான் எந்த ஆணையும் நம்பத்தயாராக இல்லை. அதைவிட, அவர்கள் தயவில் நமது குடும்பம் இருப்பதை விரும்பவில்லை. சுயமரியாதையுடன் வாழ விரும்புகிறேன். எனக்கு தொழில் இருப்பதால், கை நிறையச் சம்பாதிப்பதால், எனக்கு ஒருவேளை சீதனம் கேட்காத மாப்பிள்ளை கிடைக் கலாம். ஆனால், தங்கச்சிக்கு அப்படியொரு மாப்பிள்ளை கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை. இப்போது என்றாலும் எனது உழைப்பு இருக்கிறது. நானும் ஒருவனைக் கைப் பிடித்து விட்டால் அதுவும் கைமாறிப்போகும். அப்போது நமது விருப்படி எதுவும் செய்ய முடியாது. நடுத் தெருவுக்கு வந்தி டுவோம்.

"இப்படி ஒரு நிலைமை நமது குடும்பத்திற்கு வரக் கூடாது என்பதற்காகத் தான் நான் எனது கொள்கையில் உறுதியாக இருக்கிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் நான் மாறப் போவதில்லை. தங்கச்சிக்கு ஒரு மாப்பிள்ளை பாருங் கள். சீதனத்தோடு என்றாலும் பரவாயில்லை. என்னால் முடிந்த வரை கடன்பட்டாவது கல்யாணம் முடித்து வைக்கிறேன். அதை விட்டுவிட்டு என்னைப் பற்றி புலம்பிக் கொண்டிருக் காதீர்கள். நீங்கள் என்ன சொன்னாலும் நான் மாறப் போவ தில்லை," என்று தீர்மானமாகச் சொல்லிய ரமணி, தனது கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையைத் தோளில் மாட்டிக் கொண்டு, குடையைத் தேடி யெடுத்துக் கொண்டு, செருப்பைச் செருகிக் கொண்டு, காரியாலயம் புறப்பட்டாள் ரமணி.

செக்கு மாடு போல் வழமையான காரியங்களில் அவ ளது கைகளும் கால்களும் ஈடுபட்டன.

"என்னடி புள்ள இவள் சொல்லிட்டுப் போறது? அடி மேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்று சொல்லுவாங்க. இவள் இப்படி வைராக்கியமாக இருக்கிறாள். நான் இப்படி இல்லையே, எனக்குப் பிறந்த பிள்ளையாடி இப்படி?..."

"அக்கா சொல்றதைக் கேட்டுக் கேட்டு எனக்குப் புளிச் சுப் பேச்சுது. அவட குணம் தெரியும் தானே. அவ சொன்னாச் சொன்னது தான். நமக்காகத் தான் உழைக்கிறா. நாம நல்லா இருக்க வேண்டும் என்பதுதான் அவவின்ர விருப்பம். நாமும் கூடியகெதியில் அவவை விட்டுப் பிரிய வேணும். அப்பதான் அவ கல்யாணம் முடிப்பா. எனக்குக் கல்யாணம் முடிப்பா. எனக்குக் கல்யாணம் முடிஞ்சா, நான் உங்களையும் கூட்டிட் டுப் போயிடுவேன் என்றாள் ரம்யா.

ஓ! இவள் சொல்வதும் சரிதான். ரம்யாவுக்கு ஒருத்த னைக் கட்டிக் கொடுத்து விலகிக் கொண்டால், ரமணி தனக் கொரு துணையைத் தேடிக் கொள்வாள். அப்போது வாற மருமகனிடம் சொல்லி அவளுக்கொரு மாப்பிள்ளையை தேடிக் கட்டிக் கொடுத்து விட்டால்... என்று அந்தத் தாயும் சிந்தனையை விரித்தாள்.

ஒரு சில வருடங்கள் சென்றன.

ரமணி, தன் உழைப்பால் வீட்டைத்திருத்திப் புதுப் பொலிவுறச் செய்தாள். ரம்யாவுக்கு மாப்பிள்ளையும் சரி வரும் போல் இருந்தது. வீட்டை அடமானம் வைத்துத் திருமணம் நடத்தலாம் என்றால், வீட்டைச் சீதனமாக எழுதிக் கேட்கிறார் கள். வேறு வழிகளை நாடினாள். காரியாலயத்தில் கடன் எடுத் தாள். வேறு தெரிந்தவர்களிடம் கடன் பட்டாள். ஒருவாறு திருமணத்தை ஆடம்பரம் இன்றி நடாத்தி விட்டாள். ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் எதிர்பார்த்ததிற்கு மேலாகக் கடன் தலைக்கு மேல் இருந்தது. சில வட்டிக் கடன்கள், இவளை வாட்டிவதைத்துக் கொண்டிருந்தன. இப்போதுதான் தன் உறுதியில் நிலை குலைந்து கவலைப்படத் தொடங்கினாள் ரமணி.

சம்பளத்தில் சமாளிக்க முடியாத போது தனது நகை ஒவ்வொன்றாகக் கழற்றிக் கொடுத்தாள். வெளிக்கடன்களை இவ்வாறு ஒவ்வொன்றாகக் குறைத்துக் கொண்டு வந்த போது, புதுப் பிரச்சினையென்று தலைதூக்கியது.

"அக்காவுக்கு என்ன செலவு? நகைகளைக் காண வில்லை. சம்பளக் காசும் வீட்டுக்குத் தருவதில்லை. இனி மேல் சம்பளக் காசு வீட்டுச் செலவுக்குத் தர வேண்டும்" என்று கட்டளை பிறப்பித்தான் ரம்யாவின் கணவன்.

திருமணமாகாத உழைக்கும் தமக்கையின் வருவாயும் நகையும் சொத்தும், தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் சேரும் என்ற அவனது எதிர்பார்ப்பு வீட்டில் பூதாகரமான பிரச்சினை யாக வெடித்தது.

வீட்டில் இந்தப் பிரச்சினையும் வெளியில் கடன் பிரச்சி னையும் அவளை வாட்டி வதைக்க தொடங்கின. சொல்லியழ யாருமில்லாத நிலை. தாயிடம் சொல்லவும் முடியவில்லை. இந்த நேரம் பார்த்துத் தாயும் நோயில் கிடந்தாள்.

இப்போது தான் தனக்கு ஒரு ஆண் துணை இல்லை யென்ற குறை தெரியலாயிற்று. தனக்கென ஒருவன் இருந் தால் தன்னைத் தவிக்க விடுவானோ?.. என்று ஏங்கியது அந்தப் பேதை உள்ளம்.

இப்போது அவளுக்கு ஆறுதல் சொல்லக் கூடிய உள்ளம் ஒன்று ஜேர்மனியிலிருந்து வந்திருந்தது. தனது அண்ணை மணம் முடிக்காமல் வெளிநாட்டில் இருப்பதாயும் தான் அழைத்துச் சென்று அண்ணைக்குத் திருமணம் முடித்து வைக்க விரும்புவதாகவும் கூறிச் சம்மதம் கேட்டான் செல்வம்.

கடனைப் பற்றியும் தன்னைப்பற்றியும் விளக்கமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னாள் ரமணி. கடன் எல்லம் வெளிநாடு சென்று ஒரு மாதத்தில் அனுப்பி வைக்கலாம் என்ற ஆறுதல் வார்த்தை அவளை நிம்மதிப் பெருமூச்சு விட வைத்தது.

ஆனால், தாய்.

தாயை ரம்யாவின் கணவனுடன் விட்டுச் செல்ல ரமணி விரும்ப வில்லை. தன் நிலையை, ரமணி தாயிடம் சொன்னாள். தாயோ தன்னைப் பற்றிக் கவலைப்படாமல் நீ செல்லென்று வற்புறுத்தினாள். ரமணிக்குத் தான் மனம் வரவில்லை.

இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும் போது, மகள் ஒரு நல்ல முடிவை எடுக்கட்டும் என்றோ என்னவோ தாய் கண்களை மூடிக் கொண்டாள்.

செலவேடு செலவாகத் தாயின் கடமைகளை நிறை வேற்றினாள். இப்போது பரம திருப்தி. செல்வதற்கான ஏற்பாடுகளைச் செல்வம் கவனிக்கும் போது, கடன்காரர்க ளைக் கண்டு விசயத்தை தெளிவுபடுத்தினாள். செல்வத்திட மும் தான் வந்து உழைத்துக் கடன்களைக் கொடுத்த பின்னரே திருமணம் செய்வேன். அதற்கு முன்னர் தன்னை நிர்ப்பந்திக் கக் கூடாது என்ற நிபந்தனையுடன்தான் புறப்பட்டாள் ரமணி.

தான் ஒரு கடன்காரியாக வாழ்க்கைப் பட்டு வாழ்க்கை முழுவதும் இந்த அவச் சொல்லுடன் வாழ அவள் விரும்ப வில்லை. தனது சுயமரியாதையையும், கௌரவத்தையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆணுக்கு அடிமையாக்கி விடக்கூடாது என்பதில் ரமணி கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறாள். அவள் அதை எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

வெளிநாடு சென்று சேர்ந்த பின்னரே அவளைத் தனக்காக அழைத்து வந்திருக்கிறான் என்று செல்வத்தின் அண்ணனுக்குத் தெரிய வந்தது. அவனோ இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. திருமணத்திற்குச் சம்மதிக்கவும் இல்லை. ஆரம்பத்தில் பேசினால் பெண்ணைக் கூட்டி வரவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. எப்படியும் கூட்டிச் சென்றால் அவன் மனதை மாற்றி விடலாம் என்ற தைரியத்தில்த் தான் செல்வம், ரமணியை அழைத்த வந்திருந்தான்.

குணம், நல்ல குணமான மாப்பிள்ளைதான். என்றாலும் 45 வயது கடந்துவிட்ட தனக்கு, இனியொரு திருமணம் தேவையில்லை என்று தீர்மானித்திருந்தான். ஆகவே, குணத்தை அவ்வளவு இலேசாக மனமாற்றம் செய்ய முடியவில்லை.

ரமணி, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வேலை பெற்று உழைக்கத் தொடங்கினாள். கடன் களைக் கொடுத்து விடலாம் என்ற முழுமூச்சுடன் ஈடுபட் டாள். குணத்தின் மனமாற்றத்தை ஏற்படுத்தும் பொறுப்பை ரமணியிடம் ஒப்படைத்த செல்வம், இருவரும் வேலையில் லாமல் இருக்கும் போது தானும் குடும்பத்துடன் வெளியேறி, இருவரும் தனித்து இருக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தான்.

மாதங்கள் பல கடந்தன.

எறும்பூரக் கற்குழியும் அல்லவா? குணம் தனது சம்ம தத்தை தெரிவித்தும் விட்டான். இந்த நேரம் பார்த்துத்தானா அவளது தலையில் இடி விழ வேண்டும்?

தங்கை ஒரு மாதத்திற்கு முன் எழுதிய கடிதம் இப் போது தான் அவளது கரம் கிடைத்தது. அது கொண்டு வந்திருந்த செய்தி அவளை நிலைகுலைய வைத்தது.

இராணுவம் முன்னேறிய போது, தங்கள் வீட்டில் ஷெல் விழுந்து ரம்யாவின் கணவன் இறந்துவிட, தானும் தன் குழந்தையும் காயங்களுடன் தப்பி, ஒரு மாதம் மருத்து வமனையில் இருந்து விட்டு, இப்போது அகதி முகாமில் இருப்பதாகவும், வீட்டில் இருந்து ஒரு துரும்பு கூட எடுக்கவில்லை என்றும், யாரும் அற்ற அனாதைகளாக எங்கு செல்வது என்று தெரியாத நிலையில் இருப்பதாகவும் அக்கடிதச் செய்தி தெரிவித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணியை இப்போது ஆற்றப் பலர் இருந்தனர். கையில் பணமும் இருந்தது. ரம்யாவையும் குழந்தையையும் இங்கு எடுப்பதற்கு ஒழுங்கு செய்கிறேன், கவலையைவிடும் என்றான் குணம்.

இலங்கையில் இப்போது எல்லோரது நிலையும் இப்படித்தான். இதனால் கவலைப்படுவதில் அர்த்தம் இல்லை. அதை விடக் குணம் உடனே அவளையும் குழந்தையையும் எடுக்க ஏற்பாடு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். இதுவே பெரும் ஆறுதலாக இருந்தது.

சில மாதங்களின் பின், ரம்யாவும் குழந்தையும் ஒரு ஏஜன்சி மூலம் ஜெர்மனி வந்து சேர்ந்தனர். தங்கையின் நிலை கண்டு கலங்கினாலும் அவள் தன்னுடன் வந்து சேர்ந்து விட்டதில் மகிழ்ந்தாள் ரமணி.

அத்தான், அத்தான் என்று குணத்துடன் உரிமையுடன் பழகினாள் ரம்யா. குணம் வீட்டில் இருக்கும் நேரம் எல்லாம், ரம்யாவின் குழந்தை அவனுடன் ஒட்டிக் கொண்டிருந்தது. இதனால், குழந்தையால் யாருக்கும் கஷ்டம் இருக்கவில்லை. குணமும் குழந்தையுடன் மிகவும் பாசமாகப் பழகினான். ரமணி இவற்றைக் கவனித்து மெல்ல மெல்ல ஒதுங்கத் தொடங்கினாள். இதை யாரும் பொருட்படுத்தாதது அவளுக்கு வசதியாகப் போய்விட்டது.

நிலைமை ஓரளவு சீரடைந்ததும், செல்வம் திருமணப் பேச்சை எடுத்தான். இனி மேலும் தள்ளிப் போட முடியாது என்றான். ரமணி தன் நிலையை வெளிப்படுத்தினாள். செல்வம் வெகுண்டெழுந்தான்.

அவள் தன்மையாகத் தன் நிலைமையை விளக்கிய பின்னர், ரம்யா வந்த பிறகு, குணம் தன்னை நாடாததும், ரம்யாவும் குணமும் சேர்ந்து குழந்தையுடன் விளையாடுவதில் இருந்து, வெளியே சென்று வருவது வரை, குணம் தன்னைக் கவனிக்காததையும் எடுத்துக் காட்டிய போதுதான் அது சரியென உணரத் தலைப்பட்டான் செல்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நடைமுறையை நோட்டம் விட்ட பின்னர் ரமணி சொன்னது சரியெனப்பட்டது. ஆனால், இதைக் குழப்பிவிட வேண்டாம் என்றும், அவர்களை அப்படியே சேர்த்து விடுவதே நல்லது என்றும், "நான் தனியே வாழப் பழகி விட்டேன். எனக்கு இதுவரை எந்தப் பாதிப்பும் ஏற்பட்ட தில்லை. இனியும் தாங்கிக் கொள்வேன். ஆனால், ரம்யா பாவம். அவளால் தாங்கிக் கொள்ள முடியாது. அவளுக்கும் ஒரு துணை தேவை. குணம் என்னை மணந்து, குழந்தை பெற்று ஆனந்திக்க முடியாது. நானும் அந்த வயதைக் கடந்து விட்டேன். ஆகவே, அவர்கள் இருவரையும் சேர்த்து வைப்பதே நல்லது எனக் கருதுகிறேன். அவர்கள் என்ன நோக்கத்துடன் பழகினாலும் சரி, அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நெருக்கமாகப் பழகுவதால் அவர்கள் இரு வருமே சேர்ந்து வாழத் தகுதியானவர்கள். ஆகவே, நாம் இருவரும் அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்கவேண்டும். இதற்கு நீங்களும் எனக்கு உதவ வேண்டும்," என்று செல்வத் திடம் கேட்டாள் ரமணி.

இவள் என்ன பெண்? என்று பிரமித்த செல்வம், வேறு வழியின்றி இருவரையும் சேர்த்து வைக்கும் வழியை ஆராயத் தொடங்கினான்.

தங்கை சிறப்பாக வாழ்ந்தால் போதும். தான் எப்படியே வாழ்ந்து விடலாம் என்று முடிவு கட்டினாள் ரமணி. தங்கையின் நல் வாழ்வுக்காக தனது கணவனையும் விட்டுக் கொடுக்கத் தயாராகி விட்டாள் ரமணி. இனிக் குணம் என்ன சொன்னாலும், அவனது கால்களில் விழுந்தாவது அவனைச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு கொண்டிருந் தாள் ரமணி.

மற்றவர்களுக்கு வழிகாட்டும் கை காட்டிகள், தாமும் நடப்பதில்லையே! மற்றவர்கள் வாழ வழிகாட்டும் தீபம் தாம் வாழ்ந்து இன்புறாமல் அழிந்தே போகின்றது. ஏன் இந்தக் கொடுமை? இத்தனை வயதுக்குப் பிறகும் தனது இதயத் தைத் திறந்து, இனிமைக்கு வழிவிட்டவளுக்கு மீண்டும் இறுக்கி மூட வேண்டி ஏற்பட்டது ஏன்? ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மித்திரன்,* ஏப்ரல் 1993

# அப்பாவும் மகனும்

நகரிலே பெரிய நகைக் கடை அது. அங்கே தங்கராசு ஒரு விற்பனையாளன். அன்று காலையில் அவன் முன் வந்த மர்ந்த ஓர் இளம் பெண் அவனிடம் அழுதழுது ஏதேதோ கூறினாள்.

இதைக் கவனித்த முதலாளி, "வீட்டில் இருந்து ஆட் கள் வந்தா உள்ளே கூட்டிக் கொண்டு கதைத்து அனுப்புவது தானே வியாபார நேரத்தில்" என்று சத்தமாகக் கூறினார்.

ஐந்து வருடமாக வேலை செய்யும் அவனுக்கு இல்லாத சலுகையா? இதுதான் சந்தர்ப்பம் என்று, அவளை உள்ளே அழைத்துச் சென்று, குளிர் பானமும் கொடுத்து, அவளது அழுகையை மாற்றி அனுப்பினான், தங்கராசு.

முதலாளிக்குத் தெரியாது அவள் யாரென்று. உரிமை யுடன் வந்து அழுதழுது கதைக்க யாரோ சொந்தம் என்று எண்ணிவிட்டார். ஆனால் அவனது கடையில் நண்பர்கள் சிலருக்குத் தெரியும் அவள் அவனது காதலி என்பது.

அவள் சென்றதும், விஷயம் அறிந்த நண்பர்கள் மெல்ல மெல்ல உள்ளே வந்து "என்னவாம்?" என்று அவனைக் கேட்டனர்.

"அவள் வீட்டிலே திருமணப் பேச்சு நடக்கிறதாம். எமது காதல் விடயம் அவர்களுக்குத் தெரியாதாம். பேச்சு முற்றுப் பெற முன்னர் என்னை வந்து கேட்கட்டுமாம். இல்லையேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிச் செல்லட்டுமாம். இல்லாவிட்டால் சாவேன் என்று கூறுகிறாள்" என்றான்.

"அதற்கு நீ என்ன சொன்னாய்?"

"அப்பாவிடம் கேட்டு முடிவு சொல்கிறேன் என்று கூறி இருக்கிறேன்."

"என்ன அப்பாவிடமா?" என்று எல்லோரும் வியப்புடன் கேட்டனர்.

"ஏன் அப்பாவிடம் கேட்கக் கூடாதா? எனக்கு அப்பா வைத் தவிர வேறு யாரும் இல்லையே!" என்றான்.

"அப்பாவிடம் எப்படிக் கேட்பாய்? நான் ஒரு பெண் ணைக் காதலிக்கிறேன் அவளையே கட்டிக்கப் போறேன் என்று நேரடியாகக் கேட்கப் போகிறாயா?"

"இல்லை, நான் இன்றே அப்பாவுக்குக் கடிதம் எழுதப் போகிறேன்" என்றான் அவன்.

"நல்ல துணிச்சல்காரன் தான் நீ" என்று நண்பர்கள் அகன்று விட்டனர்.

அன்றிரவே தகப்பனுக்குக் கடிதம் எழுதிப் போட்டான் தங்கராசு. விபரத்தை அவளுக்கும் அறிவித்தான்.

சில நாட்களுக்குப் பின்னர் ஒருநாள் ஒருவர் கடை வியாபார நேரத்தில் வந்து, ஹலோ என்று தங்கராசுவுடன் கைகுலுக்கிக் கொண்டு, முன்னால் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தார். அவரது கையில் ஒரு சிறிய பேக் இருந் தது. வயது ஐம்பது இருக்கும். ஆனால் தலை இன்னமும் நரைக்கவில்லை. உடம்பும் கட்டுமஸ்தாக இருந்தது.

வந்தவர் கதைத்து இருந்து விட்டு, மீட்டும் ஹலோ சொல்லி கைகுலுக்கி விடை பெற்று எழுந்து விட்டார். யாரோ வாடிக்கையாளர் என்று அவரைப் பொருட்படுத்தவில்லை.

மதிய சாப்பாட்டுக்காகச் சில நண்பர்களுடன் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்குச் சென்ற போது தங்கராசு கூறினான், "அப்பா வந்து போனார்" என்று.

"எப்போது எங்கே சந்தித்தாய்?" என்று கேட்டனர்.

"ஏன்? கடையிலே தான்."

"யார் அந்த ஹலோ மனிதரா?"

"ஆமா அவர்தான் எனது அப்பா.."

"நல்ல இங்கிலிஷ் பாணிக் குடும்பம் போல நீங்கள்." என்றான் ஒருவன்.

"நாங்கள் சோஷியலாகத் தான் பழகுவது. பெயருக்குத் தான் அப்பா, மகன். அப்பா சொல்வார், தோளுக்கு மூத்தால் தோழன் என்று. அப்படித்தான் நாங்கள் பழகுவது. உங்களுக் குத் தெரியுமா அப்பா இரண்டாவது கலியாணம் செய்தது என்னைக் கேட்டுத்தான்."

நண்பர்கள் வாயைப் பிழந்து கேட்டுக்கொண்டிருந் தனர்.

"அம்மா மரணமான பின்னர், வீட்டில் ஒரு வேலைக் காரி வைத்துத்தான் என்னை வளர்த்தார் அப்பா. நான் மட்டும் தான் ஒரே பிள்ளை. அப்போது அப்பாவுக்கு எஸ்ரேட்டில் சுப்ரிரன்ட் வேலை. நான் படித்துப் படிப்பைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி, இந்தக் கடைக்கு வேலைக்கு வரும் வரை, அப்பாவும் நானும்தான் இருந்தோம்.

"நான் கடைக்கு வேலைக்குச் சேர்ந்து சில மாதங்க ளின் பின் மீண்டும் ஊருக்குச் சென்ற பின் அப்பா கூறினார்.

"மகன் எனக்குத் தனியே இருக்கப் போர் அடிக்குது, யாரையாவது துணைக்கு வைத்துக் கொள்ளலாம் என்றிருக் கிறேன் என்று கூறினார்.

"நீங்கள் ஏன் தனிமையில் கஷ்டப்பட வேண்டும். வைத்துக் கொள்ளலாமே! என்று நானும் கூறிவிட்டேன். பிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா ஒரு படத்தைக் காட்டி, இந்தப் படத்தில் இருக்கும் பெண் எப்படி? என்று கேட்டார்.

"எனக்கு இப்ப என்ன அவசரம், அப்பா, என்றேன்.

"உனக்கில்லை எனக்குத்தான். இவளைத் தான் துணைக்கு வைத்திருக்கலாம் என்றிருக்கிறேன். எதற்கும் நீ வந்ததும் கேட்டுச் சொல்கிறேன் என்று கூறி விட்டேன். இவள், நமது கே. பி. யின் மகள். கல்யாணம் கட்டிப் புருஷன் ஒரு வருடத்தில் மண் சரிவில் மாண்டு போனான். எப்படி நல்லா இருக்கா? என்று அப்பா கேட்டார்.

"அப்பா இந்த அர்த்தத்தில் கேட்பார் என நான் எதிர்பார்க்கவில்லை. அந்த அதிர்ச்சியில் இருந்து மீள எனக்குச் சற்று நேரம் பிடித்தது.

"என்ன •மகன், பேசாமல் இருக்கிறாய். உனக்கு விருப்பமில்லை என்றால் வேணாம் என்றவர், அத்தோடு நிறுத்தி விடுவார் என்று எதிர்பார்த்தேன். தொடர்ந்தவர் வேறு பெண்ணைப் பார்க்கலாம் என்றார்.

"என்ன, எனக்குப் பெண் பார்க்க வேண்டிய வயதில் அப்பா பெண் பார்க்கிறாரே என்று எண்ணுகிறாய். நீ இருக்கும் வரை, எனக்கு துணை இருந்தது. நீ இல்லாமல் இந்தக் குளிரும் தனிமையும் என்னை ரொம்பவும் வாட்டுது. குளிருக்குப் போத்தல் துணை. தனிமைக்கு யார் துணை? என்றார்.

"நானும் யோசித்துப் பார்த்தேன். அப்பா நேரடியாகப் பேசியது எனக்குப் பிடித்திருந்தது. வேறொரு கன்னிப் பெண்ணைக் கொண்டு வந்து நிறுத்துவதிலும் பார்க்க இந்தப் பெண்ணுக்கு வாழ்வு கொடுப்பதுவும் ஒரு வகையில் நன்மை என்று எனக்குத் தோன்ற நானும் சரி என்று கூறிவிட்டேன்.

"நான் நிற்கும் போதே முடித்து விடுவது நல்லது. இல்லையேல் எனக்கு அடுத்த லீவு இன்னும் மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களின் பின்னர்தான் கிடைக்கும் என்று நான் சொன்னதும் அடுத்த நாளே நானும் அப்பாவும் கே. பி. யின் வீட்டுக்குப் போய்ச் சம்பந்தம் பேசி இரண்டொரு நாளில் கச்சேரியில் பதிவுடன் வீட்டுக்குக் கூட்டி வந்தோம்" என்று கூறி முடித்தான் தங்கராசு.

"நல்ல அப்பனும் மகனும்" என்றனர் நண்பர்கள்.

"என்ன கதை இன்னமும்? கெதியாக வாங்க" என்று முன்னால் இருந்த ஒருவர் வந்து சத்தமிட்டுச் சென்றார்.

"அது கிடக்கட்டும், உன்னுடைய விஷயத்திற்கு வா. இன்றைக்கு உன்னிடம் வந்த அப்பா, என்ன சொல்லி விட்டுச் சென்றார்?" என்று ஒரு நண்பன் கேட்டான்.

"என்ன சொல்வார், சம்மதம் தான்" என்றான் மற்ற நண்பன்.

"இல்லை. அப்பா சொன்னார், நேரே போய் ஒரு வார்த்தை கேட்கட்டுமாம். அப்படி இல்லையென்று சொன்னால், அவளும் விரும்பினால், பொலிஸில் முறைப்பாட்டைக் கொடுத்து விட்டுக் கூட்டி வரட்டுமாம். மிகுதியை ஊரில் வைத்துக்கொள்ளலாமாம். இதற்காகக் கவலைப்பட வேண்டாமாம். இதெல்லாம் காலா காலத்தில் செய்யவேண்டியது தான் என்று கூறி விட்டுச் சென்றார்" என்றான் தங்கராசு.

"இப்படி இருக்கும் போது, ஒருத்தி என்ன நாலு பேரையே காதலிச்சு இருக்கலாம். எங்கடை வீட்டில என்றால் காதல் என்று மூச்சு விடக் கூட முடியாது" என்றான் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நவமணி*, மே 1997

# மூலதனம்!

அன்புள்ள மலருக்கு,

அன்புள்ள என்ற சொல்லைப் பாவிக்கவும் அருகதையற்றவன், பழக்க தோசத்தால் எழுதிவிட்டேன். எந்த முகத்துடன் உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுவது என்ற போராட்டத்தில் வெற்றி பெற்ற பின்னர் எப்படியாவது எழுதிவிடுவது என்று எழுதுகிறேன்.

பிரான்ஸ் நாட்டில் இருக்கும் உன்னை மணக்கப் பொருத்தம் பார்த்து, தாய்லாந்தில் பதிவுத் திருமணத்தோடு கோவிலில் மாலை மாற்றியதும், மோதிரம் மாற்றியதும், நான்கு நாட்கள் உன்னுடன் ஆனந்தமாகக் கதைத்துப் பேசியதும், பின்னர் நீ பிரான்ஸ் பறந்து போக நான் இலங்கை வந்து சேர்ந்தேன். இதுவரை தான் அறிந்திருப்பாய்.

வந்ததும் கடிதம் போடுவதாகவும் ஸ்பொன்சர் செய்வதற்குத் தேவையான ஆவணங்களையும் அனுப்புவதாகவும் கூறிக் கொண்டு வந்தவன். இத்தனை மாதமாக ஏன் கடிதம் போடவில்லை என்று வியந்து போய் இருப்பாய். அதை விளக்கவும், நமது திருமணப் பந்தத்தில் ஏற்பட்ட தடையை விளக்கவுமே இந்தக் கடிதம்.

ஏற்கனவே பேசிய பேச்சுக்களுக்கு மேலாக, நான் உன்னிடம் சில விடயங்கள் பற்றிப் பேசிவிட்டு வந்தேன். அது தான் எனது விதவை அக்காவும், இன்னும் திருமணம் முடிக்கக் காத்திருக்கும் தங்கைக்கும் பண உதவி செய்ய வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது. நீ அண்ணாவிடம் கதைத்து முடிவைச் சொல்லுவதா கக் கூற நான் கேட்டுக் கொண்டு வந்துவிட்டேன்.

இங்கு வந்ததும் திருமணப் படங்களைப் பார்த்துப் பலரும் பரவசப்பட்டனர். ஆனால் எனது அக்கா, அத்தானின் ஆதங்கமே வேறு விதமாக இருந்தது. அத்தானும் சவூதி போய் வந்து வேலையின்றி இருப்பதைக் குறிப்பிட்டிருக் கிறேன். அக்கா உன்னிடம் இருந்து முடிவு வரட்டும் என்று என்னைக் கடிதம் போடுவதில் இருந்து தடுத்து விட்டா. ஆனால் எனது கடிதம் வராமல் நீ கடிதம் எழுதமாட்டாய், என்பது எனக்கு மட்டுமே தெரிந்து இருந்தது.

பதில் கிடைக்காத ஆத்திரத்தில் அக்கா வேறு முனைப்புகளில் இறங்கினா. சாஸ்திரியிடம் ஏதோ நினைச்ச காரியம் ஒன்று கேட்டுப் போனா. அவ கேட்டு வந்ததின் படி எனக்கு ஏழரைச் சனிக்காலம் என்றும், செவ்வாய் பாதிப்பு இருப்பதாகவும் அதற்குச் சாந்தி செய்ய வேண்டும் என்றும், அது மட்டுமன்றித் திருமணம் முடித்துக் குடும்பமாக இருந்து பிள்ளைபெற்ற பின்தான் தாலி கட்ட வேண்டும் என்றும் புதுவிதமான சாத்திரக் குறிப்பு எழுதி வாங்கி வந்திருந்தா. இதற்கு இங்குள்ள உங்கள் சொந்தக்காரரிடம் கொடுத்துச் சாந்தி செய்யச் சொல்ல மாப்பிள்ளைக்கு இருக்கும் தோசத்தை நீங்கள் தானே செய்ய வேண்டும் என்று நியாயமாகத் தான் கேட்டார்.

இதனால் ஆத்திர மடைந்த அக்கா, இந்தத் திருமணம் பொருத்தமில்லை என்றும் பெண்ணுக்குச் செவ்வாய் தோசம் இருப்பதால் எனது தம்பியின் உயிருக்கு ஆபத்து என்றும், இந்தத் திருமணம் நடக்கக் கூடாது என்றும் கூறினார்.

இதில் பகிடி என்ன வென்றால், நினைச்ச காரியம் பார்த்த சாத்திரியை உனக்குத் தெரிந்திருக்கும், அவர்தான் நமது பகுதியில் பிரபலமான ஒரே ஒரு சாத்திரியார். அவர் தான் ஏற்கனவே பொருத்தம் பார்த்தது என்று அவருக்கு ஞாபகமில்லை. பெண்ணுக்கு 7இல் செவ்வாய் இருந்தாலும் குற்றமில்லை, எனக்கும் செவ்வாய்க் குற்றம் இருப்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தும் என்று கூறியவரும் அவரே. இப்போது நினைச்ச காரியத்தில் 7இல் செவ்வாய் உள்ள பெண்ணை மணக்கக் கூடாது என்று கூறினார் என்கிறார் அக்கா.

இதன் பிறகு அக்காவின் நடவடிக்கைகளைப் பார்த்த போதும், என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. என்னை வைத்துப் பணம் சம்பாதிப்பது தான் நோக்கம் என்று புரிந்தது. என்னை 34 வருடங்கள் ஊட்டி வளர்த்தவர்களின் கட்டுப் பாட்டில் இருந்து எப்படி நான் திடீரென்று வெளியேற முடியும்? இப்போது சில வருடங்களாகத் தான் நான் உழைத்துக் கொடுக்கிறேன்.

ஆணாதிக்கம் தான் பெண்களை அடிமையாக வைத்தி ருக்கிறது என்று பலர் பேசவும், எழுதவும் பார்த்திருக்கின் றேன். உண்மையில் நடைமுறையில் வேறு விதமாக இருக்கக் காண்கிறேன். மாமியாரும், மச்சாள்மாருமே பெண்ணடிமைத் தனத்திற்குக் காரணியாக இருக்கிறார்கள் என்பது நான் கண்ட உண்மை.

இதன் பிறகு, அக்கா அந்தக் கடிதத்தை, உங்கள் அண்ணாவுக்கு எழுதினார். அதில் பதிவு மட்டும் நடந்தது நல்லதாகப் போய்விட்டது. இதை இத்துடன் கட்பண்ணி விடுவோம் உங்கள் மோதிரத்தை அனுப்பி வைக்கின்றோம் என்று குறிப்பிட்டு இருந்ததைப் பார்த்தபோது எனக்குத் சிரிப்புத்தான் வந்தது.

அக்கா தமிழர் கலாச்சாரத்தை எப்படி மதிக்கிறார் என்பது தான் அது. சட்டப்படி நடத்திய திருமணத்தை எப்படி மோதி ரத்தை கழற்றிக் கொடுப்பதன் மூலம் கட்பண்ண முடியும் என்று அக்கா ஏன் சிந்திக்கவில்லை என்று எனக்கு விளங்க வில்லை. இத்தனைக்கும் அவ அரசாங்கத்தில் பணிபுரியும் ஒரு பெண் உத்தியோத்தர்.

அதில் இன்னொரு விஷேசம், நான் போட்ட மோதி ரத்தைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை. அது கூட உங்கள் சொந்தக்காரர் ஒருவர் கடனுக்கு செய்து தந்தது தான். அதன் காசு இன்னும் கொடுக்கவில்லை. காசுக்காக அவர் அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிடம் பெற்றுக் கொள்ளட்டும் என்று எண்ணினாரோ என்னவோ, எனக்கு அவரையும் பார்க்க முடியவில்லை.

அந்தக் கடிதம் உங்களிடம் ஏற்படுத்திய பாதிப்பையும் அதன் பிறகு உங்கள் சொந்தக்காரர்களுக்கும் எங்களுக்குமிடையில் நடந்தவைகள் அனைத்தையும் அறிந்திருப்பாய்.

அவர்களின் எதிர்பார்ப்புப் புஸ்வாணமாகிவிட்டது. நீங்கள் காசு தர இணங்கி வருவீர்கள் என்று எதிர்பார்த்தா. ஆனால் நீங்கள் பிரிவுக்கு கேட்டு எழுதியிருந்தீர்கள். பல பெண்கள் இருக்கும் வீட்டில் அண்ணன் அல்லது தம்பியே மூலதனமாக இருக்கிறான். இந்த மூலதனத்தின் மூலமே பல பெண்கள் கரைசேர வேண்டியிருக்கிறது. இதுவே இன்று பெரும் வியாபாரமாகவும் இருக்கின்றது. என்னை, அந்த மூலதனத்தை, இழக்க அக்கா விரும்பவில்லை.

எனது அத்தானுக்கு வெளிநாடு செல்லக் காசு தேவைப்பட்டது. எனது விதவை அக்காவுக்கும் காசு தேவை. எனது அடுத்த தங்கைக்குப் பேசிய மாப்பிள்ளை ஜெர்மனி செல்லக் காசு கொடுக்க வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் இருந்த மூலதனம் நான் மட்டுமே. என்னையும் இழந்து விட்டால்? பயங்கரமான பூதமாக எங்கள் குடும்பம் முன் நின்ற கேள்வியிது.

ஆனால், ஒரு பெண்ணுக்குச் செய்யும் பாவம் பொல்லாதது என்றும், அவளது கண்ணீர் கூரிய வாளை ஒத்தது என்பதையும் ஒரு பெண்ணே உணரவில்லை.

இதனால் ஏற்பட்ட பின் விளைவுகளையும் எனது முடிவையும் உனக்கு அறிவிக்கவே இதனை எழுதுகின்றேன்.

எனது பயணத்தையும் பார்ட்டியையும் எதிர்பார்த்து இருந்த நண்பர்கள் முன்னர் மறைமுகமாக சுட்டிக் காட்டினார்கள். இப்போதெல்லாம் நேரடியாகவே பேசுகிறார்கள், காறித்துப்புகிறார்கள்.

அன்றொரு நாள் நான் வாசிகசாலைக்குச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெளியே வந்த போது வெளியில் நின்ற நண்பர்கள் பேசியதை நேரடியாகவே கேட்டேன்.

"ச்சீ. இவனெல்லாம் ஒரு மனிசனா? பொன்னையன்.. இவனுக்கெல்லாம் ஒரு கல்யாணம். இவன் கெட்ட கேட்டுக்கு இவனுக்கு பிரான்ஸில பெண்ணும் கொடுத்து பிரான்சுக்கு எடுப்பித்து வீடு வேலை எல்லாம் தேடிக் கொடுக்க இருந்தாங்களே.." வேறு கெட்ட வார்த்தைகள் எல்லாம் பேசினார்கள். வீட்டுக்கு வந்த போதுதான் தெரிந்தது, இவ்வளவு தூரமும் பைசிக்களைத் தள்ளிக் கொண்டே வீட்டுக்கு வந்திருக்கிறேன் என்று.

இதனிடையில் ஒரு பேரிடி விழுந்தது.. கடன் வாங்கிக் கஸ்டப்பட்டு அத்தானை மீண்டும் வெளிநாடு அனுப்பி னோம். அவர் ஒரு மாதம் வேலை செய்து சம்பளக் காசு அனுப்ப முன்னரே ஒரு அக்ஸிடென்டில் இறந்து போனார். அந்த அக்கவும் இப்போது விதவை.

ஒரு பெண்ணுக்குப் பூவையும் பொட்டையும் கொடுக்காமல் தடுத்ததற்கு அவளுக்கு இந்தத் தண்டனை என்று ஊரார் பேசிக் கொண்டார்கள்.

என்னுடைய சம்பவத்திற்கும் இந்த நிகழ்ச்சிக்கும் பின்னர், கடைசித் தங்கைக்கு மாப்பிள்ளையை ஜெர்மனிக்கு அனுப்பக் காசு தருவதாகக் கூறி வைத்த பதிவு ஊசலாடியது.

என்னால் ஆற்றோரம் நடந்து செல்ல முடியவில்லை. ஆற்றில் யாரோ என்னைப் பிடித்துத் தள்ளுவது போல இருக்கும். கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குளிக்கக் கூட முடியவில்லை. கிணற்றுக்குள் விழுந்து விடுவேனோ என் றொரு பயம். நண்பர்களைக் கண்டால் கதைக்க முடிய வில்லை. அவர்களைக் கடந்து வந்ததும் பின்னால் அவர்கள் என்னை விரட்டிக் கல் எறிவது போன்ற பிரமையில், இளைக்க இளைக்கச் சைக்கிளை மிதித்துக் கொண்டு, சென்ற வேலையையும் மறந்து வீடு வந்து விடுகிறேன்.

இப்போது தங்கையின் கணவன் வேறு ஒரு சம்பந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி வெளிநாடு செல்ல இருக்கிறான். அவர்கள் பதிவு இல்லாமலே பணம் கொடுத்து உதவுகிறார்கள். எங்கள் பதிவை அழித்து மறு பதிவு வைக்க ஏற்பாடாம்.

இனி அவளும் ஒரு கன்னி விதவை. பதிவு முடிந்த பின்னர் பல மாதங்கள் அவன் வீட்டுக்கு வந்து சென்றிருக்கிறான். இதனால், அவளை மனமுவந்து ஏற்றுக் கொள்ள எந்த ஆணும் முன்வரப் போவதில்லை என்பது தெரிந்த விடயமே. நானும் ஒரு தபுதாரனே. ஆக மொத்தம் இப்போது வீட்டில் எல்லோரும் விதவைகளே. என்னை மூலதனமாகப் போட்டு அவர்கள் அறுவடை செய்தது இதுதான்.

இவர்களைக் காணச் சகிக்கவில்லை. ஊரார் பேச்சைக் கேட்கவும் முடியவில்லை. எல்லோரும் உனக்குச் செய்த கொடுமைக்காகத்தான் என்று கூறுகிறார்கள். பெண்பாவம் பொல்லாதது என்றுதான் நான் உணர்ந்து கொண்டேன்.

உன்னை மணம் முடித்தால் நான் இறந்துவிடுவேன் என்று அக்கா பொய்யாக சொன்னார். இப்போழுது அனைவரும் துணையிழந்து இருக்கிறார்கள். உன்னை மணம் முடித்தாலும் முடியாவிட்டாலும், நான் இறப்பது திண்ணம் என்பது எனக்குத் தெரியும்.

இந்தப் பொய்மையான வட்டத்தினுள் இருந்து என்னால் விடுபட முடியவில்லை. ஆனால் இந்தக் கண்ராவிகளையும் பார்த்தக் கொண்டு இருக்கமுடியவில்லை. ஆகவே நான் எனது இறுதி முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு இப்போழுது வந்து விட்டேன். உனக்கு வாழ்வுதர முடியவில்லை என்றால், இனி இந்த உலகில் வாழ்ந்தும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டேன். அதை அறிவிக்கவே இந்தக் கடிதம். என்னை மன்னிக்கவேண்டும் என்றோ, மன்னிப்பாயா என்றோ கேட்பதற்காக அல்ல. அந்த அருகதையும் எனக்கில்லை. உன்னை மொட்டிலே கருக விட்டவன் நான். இனி இந்த உலகில் வாழ்வதற்குத் தகுதியற்றவன். இதுவும் நான் எடுத்த முடிவல்ல. ஊர், உலக நிர்ப்பந்தத்தால் எடுக்க வேண்டி ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை அறிந்த பின்னராவது என்றாவது நான் வருவேன் என்ற எதிர்பார்ப்பை ஆதங்கத்தை விட்டுவிட்டு வேறு வாழ்க்கையை நீ அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது கடைசி ஆசை. உன்னிடம் அதற்கான தகுதியும், தராதரமும் இருக்கின்றன என்பதால் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கடிதம் கிடைக்க முன்னரே சிலவேளை உனக்கு செய்தி கிட்டியிருக்கக்கூடும். எனது பிணம் மட்டக்களப்பு வாவியில் மிதப்பதாகப் பத்திரிகைகளிலும் செய்தி வரும். நச்சுக் காய்களைச் சாப்பிட்ட பின்னரே ஆற்றில் குதிப்பேன், தப்புவதற்கு எந்த இடமும் வைக்காமல்.

இதன் மூலம் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் உணர்ந்து கொள்ளட்டும், பெண்பாவம் பொல்லாதது என்று. யார் உணராவிட்டாலும் எனது அக்கா உணரவேண்டும். எனது விதவைச் சகோதரிகளை எண்ணிக் கலங்கியபடியே என் வாழ்வு முடியும்.

போய் வருகிறேன்.

இப்படிக்கு,

உனக்கும் ஊருக்கும் உதவாத,

ஈஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மித்திரன்*, ஏப்ரல் 1993

# எனக்கு மருமகள் நீதான்!

ஸ்பொன்சர் விசா கிடைத்துவிட்டது என்றும், மாலதியை வெளிநாடு அனுப்புவதற்காக உடனடியாகக் கூட்டி வரும்படியும் கொழும்பிலிருந்து தகவல் வந்து பதினைந்து நாட்களாகின்றன. அன்றிலிருந்து தான் முயற்சிக்கிறார்கள். ஆனால் முடியவில்லை.

மாலதி, தூதரகம் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கவனித்து, எல்லாம் முற்றாகியதும், ஊரில் அனைவருக்கும் பயணம் சொல்லி விட்டு வருவதற்கு, மாமியுடன் யாழ்ப்பாணம் சென்றாள். சென்றவள் சென்றவள் தான். அன்றிலிருந்து அங்கு பாஸ் எடுக்கச் சில நாட்கள் அலைந்து, எடுத்த பின்னரும் பயணத்திற்காக கிளாலிப் பாதைத் தடை காரணமாக, வர முடியவில்லை. இப்போது விசா சரி வந்து விட்டது என்று தகவல் வந்த பின்னர், வீட்டில் எல்லோருக்கும் பாஸ் கிடைக்காதபடியால் மாலதியின் தாய் மட்டும் பயணம் அனுப்புவதற்கு வருவது என்று ஏற்பாடாயிற்று. தந்தையும் தங்கையும் ஊரிலே தங்கிவிட்டனர்.

ஒருவாறாகக் கிளாலிப் பயணத்துக்காக அறிவித்தல் கிடைத்ததும் எல்லோரும் பயந்து பயந்து உயிரைத் தற்காலிகமாக இறைவனிடம் ஒப்படைத்து விட்டுப் பயணப்பட்டனர். மாமியாரும் மருமகளைக் கவனமாகக் கொண்டு வந்து சேர்ப்பதில் அக்கறையுடன் செயற்பட்டாள்.

வரும் வழியில் நடுக்கடலில் சண்டை ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புக்காக வந்தவர்கள் சண்டையில் ஈடுபட, படகோட்டிகள் பயந்து பயந்து படகைச் செலுத்தினர். இருபக்கமும் சொரிந்த நெருப்புத் துண்டங்கள் கடல் நீரையே கொதிக்க வைத்திருக்கும். இதய ஓட்டம் காதுக்குக் கேட்க, இனி எடுப்பது மறு பிறவிதான் என்று, வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டிய படி, மக்கள் யாழ். இருந்து கிளாலிப் பாதையை ஒரு மாதிரியாகக் கடந்து விட்டனர்.

வந்து கரை சேர்ந்தவர்களில் நோர்வே செல்லும் மணமகள் மாலதியும் தாயும் அவளின் மாமியாரும் அடங்குவர். பட்ட கஷ்டங்களிலும் மருமகளைப் பத்திரமாகக் கொண்டு வந்து இக்கரை சேர்ந்து விட்டோம் என்பதில் நிம்மதியாகவும் பெருமையாகவும் இருந்தது.

அந்த நிம்மதியோடு கொழும்பு நோக்கிப் பயணமானார்கள்.

கொழும்புக்கு வந்ததும் மணமகனின் தாயார் தனது நோர்வேயில் இருக்கும் மகன்களுடன் கதைத்துப் பயண ஏற்பாட்டைக் கவனித்தார். அவரின் மகன் மூத்தவன் ரமேஷும் இளையவன் சதிஷும் நோர்வேயில் பல வருடங்களாக வேலை செய்து வருகின்றனர். அவர்களின் உழைப்பில் குடும்பம் தன்னிறைவைக் கண்டது. அதன் பின்னர் இருவருக்கும் மணம் முடிப்பதென வீட்டில் தீர்மானம் ஆயிற்று. பிள்ளைகள் தான் அம்மா பிள்ளைகளாச்சே. அம்மாவுக்குப் பெண் பிடித்தால் சரிதான் என்று எழுதிவிட்டார்கள்.

மணமகனின் தாயாரும் தரகரிடம் சொல்லி ஊர் ஊராகப் பெண் பார்த்துத் திரிந்தார். ஒவ்வொருவரிலும் ஏதாவது ஒரு குறை கண்டார். மனதுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் மாலதியைப் பார்த்தவுடனே பிடித்து விட்டது. அவளும் வீட்டில் இருவரில் ஒருத்தி. சீதனம் பற்றியே பேச்சே எழவில்லை.

எனது மகன் நிறைய சம்பாதித்து வைத்திருக்கிறான். அவனுக்கென்று ஏதுவும் தேவையில்லை. உங்கள் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணுக்கென்று எதைக் கொடுக்க விரும்புகிறீர்களோ அதைக் கொடுங்கள் என்று கூறிவிட்டார் மாமியார். அடக்கமான, அழகான, படித்த மகனுக்கேற்ற பெண் கிடைத்ததில் ஒரு மன நிறைவும் பூரிப்பும் இருந்தது.

நாங்களும் எங்கள் பெண்ணைச் சும்மா அனுப்பப் போவதில்லை. இரண்டு இலட்சத்திற்கு நகையும் வீடுவளவும் எழுதிக் கொடுக்கின்றோம் என்று மாலதியின் தாய், தந்தை ஏற்பாடுகளையும் செய்தனர்.

மாலதி, மாப்பிள்ளையை முதன் முதலில் படத்திலே தான் பார்த்தாள். அவளுக்குக் கண்டதும் காதல் ஏற்படவில்லை. இன்றைய சினிமா நாயகிகள் போல் கனவு சீன் ஓடவில்லை. டூயட்டும் பாடவில்லை. வெளிநாட்டு மாப்பிள்ளையாச்சே. நடந்தால்தான் நிச்சயம் என்று இருந்து விட்டாள். மாலதிக்கும் மாமியாரை நன்கு பிடித்துவிட்டது.

இரு பக்கச் சம்மதமும் பரிமாறப்பட்ட பின், மாலதியை நோர்வேக்கு எடுத்து, அங்கேயே திருமணம் முடிப்பதென்று தீர்மானம் ஆயிற்று. அதன் படி மணமகள் ஏற்றுமதியாவதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடந்தன. மணமகன் நிறையப் பலவித இடங்களில் பலவித போஸ்களில் எடுத்த படங்களை அனுப்பியிருந்தார். அதில் சிலவற்றிலே அவரின் தம்பி சதீஷும் இருந்தான். மாமியார் மருமகளையும் கலரில் விதம் விதமாகப் படங்கள் எடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார்.

மாலதிக்கு நகைகள் செய்யப்பட்டன. வீடு, காணி உறுதி அவள் பேரில் மாற்றப்பட்டது. மாமியார் தாலிக் கொடியையும் இங்கேயே செய்து மாலதியிடம் கொடுத்து அனுப்ப ஏற்பாடு செய்து இருந்தார்.

இந்த நிலையில்தான் யாழ். சென்று கஷ்டப்பட்டுத் திரும்பி இருந்தனர்.

இவர்கள் இப்படி இருக்க, விதி வேறு விதமாகச் சதி செய்து கோரமாக விளையாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் எல்லா ஏற்பாடும் முடிந்த வேளையில் அந்த அதிர்ச்சி செய்தி அவர்கள் காதுகளில் வேலாய்ப் பாய்ந்தது.

ஆமாம். ரமேஷ் வாகன அக்சிடென்டில் இறந்து விட்டான் என்பது தான் அது. கல்யாண ஏற்பாட்டை நோர்வேயில் கவனித்துக் கொண்டிருந்த சதிஷ் அழுதழுது தாயிடம் தொலைபேசியில் செய்தியைக் கூறினான்.

மாமியும் மருமகளும் ஒப்பாரி வைத்து அழுதனர். மரணச் சடங்கு நோர்வையில் நடந்தாலும் மரண வீடு கொழும்பில் நடந்தது. மாலதியின் பயணம் குறிப்பிட்டபடி இடம் பெறவில்லை. ஒத்திப் போடப்பட்டது. எட்டு முடிந்ததும் தன் மகளைக் கூட்டிச் செல்வதாக மாலதியின் தாயார் கூறினார்.

"அதெல்லாம் முடியாது எனக்கு மருமகள் இனி நீதான். அதில் நான் எந்த மாற்றமும் செய்யப் போவதில்லை" என்றார் மாமியார்.

"மாமி நான் பாவி மாமி. என்னைப் பேசியிருக்கும் பொழுதே உங்கள் பிள்ளையை விழுங்கி விட்டேன் என்று ஊரார் என்மீது பழி சொல்லப் போகிறார்கள். அப்படிப்பட்ட பாவியை இன்னும் உங்கள் மருமகள் என்று சொல்கிறீர்களா?" என்றாள் மாலதி.

"அவன் செத்ததற்கு, நீ காரணமில்லை. விதி என்று சொல்வார்கள். ஆனால், நான் வேறு விதமாக எண்ணுகின் றேன். மூத்த மருமகளாக உன்னைத் தேர்தெடுத்ததும் இளையவனுக்கும் உன்னைப் போல் ஒரு மருமகளை எங்கு எடுக்கப் போகிறேன் என்று ஏங்கினேன். அது முடியாது. இவளையே இளையவனுக்கு மருமகளாக ஏற்றுக் கொள் என்று இறைவன் தந்த தீர்ப்பு இது என்று தான் நான் நினைக்கிறேன். எப்படியும் நீதான் எனக்கு மருமகள். கவலைப்படாதே. உன் பயணம் சரி வரும். நான் சதீஷிடம் கதைத்து நாளையே முடிவு சொல்கிறேன்" என்றார் மாமியார்.

"மாமி, என்னால் அவருக்குத் தீங்கு ஏற்படுவதை நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பவில்லை. தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள் என்னை விட்டு விடுங்கள்" என்று அழுதாள் மாலதி.

மாலதியின் தலையை வருடிய மாமியார், "மாலதி, மகனை இழந்து தவிப்பவள் நான். என்னை எனது மருமகளையும் இழக்கச் சொல்கிறாயா? ஒன்றைத்தான் இழந்தேன். மற்றையதையும் நான் இழக்க தயாரில்லை. நீ என் மருமகளாக இருக்க வேண்டும்" என்ற அந்தத் தாயுள் ளத்திற்கு மாலதியால் பதில் கூற முடியவில்லை.

"மாலதி, மூத்தவனுக்கும் உனக்கும் ஏழு வயது வித்தியாசம். இளையவனுக்கும் உனக்கும் ஐந்து வயதுதான். மற்றும்படி இருவரும் ஒருவரைப் போலத்தான். நீதான் படத்தில் பார்த்து இருப்பாயே! அங்கும் திருமண ஏற்பா டெல்லாம் தயார். அவை வீணாகக் கூடாது. அந்த ஏற்பாட்டின் படி, நீ சதீஷையே திருமணம் செய்ய வேண்டும். இதுதான் என் ஆசை நிறைவேற்றுவாயா?"

அவளாள் பதில் பேச முடியவில்லை. அந்தத் தாயுள் ளத்தின் முன்னால் தலை குனிந்து நின்றாள். அவள் கண் களிலிருந்து கண்ணீர் வழிந்தது. மௌனத்தைச் சம்மதத்தின் அறிகுறி என்று செயற்பட்டார் மாமியார்.

சதீஷ், ஆரம்பத்தில் மறுத்தான் என்றாலும், தாயின் வற்புறுத்தலுக்கும் சொன்ன காரணங்களுக்கும் மீறி அவனால் மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை.

மாலதியின் ஊராரின் பழியை மாற்றுவது என்றால் இந்த ஏற்பாட்டை விரும்பித்தானாக வேண்டும். இல்லை யேல், இதைக் காரணம் காட்டி வேறு மணம் முடிப்பது கஷ்டம் என்ற நிர்ப்பந்தத்திற்குள்ளானாள். அதை விட, அன்பும் பாசமும் சொரியும் மாமியாரின் வேண்டுதலை தட்டிக் கழிக்க வும் முடியவில்லை.

அடுத்த சில நாட்களில் அதற்கான ஏற்பாடுகள் துரித மாக நடைபெற்றன. டிக்கட் திரும்பவும் ஓ. கே. பண்ணப் பட்டுப் பயணத்திற்கான திகதி அறிவிக்கப்பட்டது. அவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்கச் சதீஷ் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

அந்த நாளும் வந்தது.

எல்லாரிடமும் அழுதழுது விடைபெற்றாள். எயார்ப் போர்ட்டில், மாலதி, மாமியாரின் காலில் விழுந்து கண்ணீரால் கழுவினாள். மாமியார் அவளைத் தூக்கி நிறுத்தி ஆரக் கட்டித் தழுவி முத்தம் கொடுத்தார். கண்ணீரைத் துடைத்துவிட்டார்.

"நீ கெட்டிக்காரி, சாமர்த்தியசாலி என்று எனக்குத் தெரியும். முன்பின் அறிமுகம் இல்லாத இடம். அறிமுகமில் லாத மணமகன். மற்றும் ஆட்கள். அங்கேயும் அழுது கொண்டு இருக்காமல், திருமணத்தைச் சிறப்பாக முடித்துச் சிரித்த முகத்துடன் மாப்பிள்ளையுடன் இருக்கும் வீடியோவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். அனுப்பிவை நீ எனது மருமகள். செய்வாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது."

"சரி மாமி" என்று தலையாட்டி விட்டு உள்ளே செல்கிறாள். கஸ்டம்ஸ், லக்கேஜ், போடிங் பாஸ், ஏயார்ப் போட் ரக்ஸ், இமிக்கிரெஷன், யாவும் கடந்தாகிவிட்டது. திரும்பி நின்று எல்லோருக்கும் கையசைத்து விடை கொடுத்து விட்டு உள்ளே செல்கிறாள்.

சிறிது நேரத்தில் ஒரு பிளேன் அவளை ஏற்றிக் கொண்டு நேர்வே பறந்தது. இப்போது அவள் உள்ளம் சற்று இலேசாக இருந்தது. மாமியாரும் நிம்மதி பெருமூச்சுடன் வீடு திரும்பினார்.

திருமண வீடியோவை பின்னர் பார்க்கலாம். இப்போதைக்கு அவர்களை வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நவமணி*, ஆகஸ்ட் 1997

# வித்துக்குள் விருட்ஷம்!

நாவல் போட்டியில் பரிசு பெற்றமைக்காகப் பாராட்டுக் கூட்டம் நடந்தது. இலங்கையில், இலக்கிய கூட்டம் என்றால் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே வருவதுண்டு. இது மாறுபட்டுச் சனம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஏற்கனவே பத்திரிகையில் பல நாவல்களை எழுதிப் பிரபலம் பெற்ற எழுத்தாளர். அவர் இளம் உள்ளங்களைக் கவர்ந்தவர். அவர் எப்படி இருப்பார் என்பதைக் காணவே பெரும் கூட்டம். வயது வித்தியாசமின்றி பலரும் கூடியிருந்தனர்.

எழுத்தாளர் வித்தகனைப் பலரும் பாராட்டி பேசினார்கள். அகில இலங்கை ரீதியில் நாவல் எழுதிப் பரிசு பெறக்கூடிய தகுதி, அவருக்கு மட்டுமே இருப்பதாக மிகைபடக் கூறிய போது கூட்டம் கைதட்டியதும், பேசியவருக்குக் குஷி பிறந்து விட்டது. மேலும் புகழ்ந்து புளுகித் தள்ளினார். பலரும் அவரை எழுத்தாளர், சமூகத்திற்குக் கிடைத்த பொக்கிஷம் என்று பாராட்டிப் பேசினார்கள்.

எழுத்தாளர் வித்தகன், நன்றி தெரிவிக்கும் கட்டம் வந்தது. நன்றி தெரிவிக்கும் போது, எல்லாப்புகழும் இறைவனுக்கே என்றும், இந்தப் புகழ் எல்லாம் என்னை பெற்றவருக்கும், பிறந்த நாட்டுக்குமே உரியது என்றும் பலரும் பலவிதமாகக் கூறக் கேட்டிருக்கிறோம். ஆனால் வித்தகனின் பேச்சு இதிலிருந்து மாறுபட்டுத் தனது குருவுக்கு நன்றி கூறுவதாகவும் புகழ் சேர்ப்பதாகவும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இத்தனை புகழுக்கும் காரணம் என்னைப் பயிற்றுவித்த ஆசிரியரே, நான் எப்போதும் நன்றியுடன் நினைவு கூரும் எனது குருவுக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். தாரமும் குருவும் தலைவிதிப் படி என்பார்கள். எனது தலை விதி அப்படி அமைந்ததனா லேயே யாழ்ப்பாணத்தில் பிறந்த அவர் பட்டப் படிப்பு முடித்ததும் மட்டக்களப்பில் வந்து கடமையாற்றி எனக்குக் குருவாகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனாலன்றோ நான் இன்று நீங்கள் போற்றும் படியான ஓர் எழுத்தாளனாக நிற்கின்றேன். நான் ஆரம்பத்தில் பாடசாலையில் ஒரு பேச்சாளனாகவே பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தேன். என்னை அந்தத் திசையிலிருந்து மாற்றியவர் எனது குருதான். பாடசாலைப் பத்திரிகை ஒன்று வெளிவர இருப்பதாகவும், அதற்காக என்னிடமிருந்து ஒருகதை வேண்டும் என்று வற்புறுத்தி எழுதிப் பெற்றுக் கொண்டார்.

"கட்டுரையிலே, சாதாரணமாக எழுத்துப் பிழைகளுடன் எழுதும் என்னிடம் எப்படி இதை எதிர்பார்த்தார் என்று எனக்கு விளங்கவில்லை. முதலில் முடியாது என்று மறுத்தாலும் பின்னர் வற்புறுத்தலுக்காக எழுதிக் கொடுத்தேன். திருத்தும் போது பெரும் மாற்றம் பெறும் என்றும், இடையில் வெளிவராமலே போகும் என்பதுதான் எனது எதிர்பார்ப்பு.

"அதையும் மீறிக் கதை, அப்படியே பிரசுரமாகி இருந்தது. எனக்கு மகிழ்ச்சி பிடிபடவே இல்லை. பாடசாலையில் எனக்கு அறிமுகம் நடந்தது. அதன் பின்னர், எனது குரு என்னைப் புலவர் என்றே அழைப்பது வழக்கமாகிவிட்டது. இதைவிடத் தமிழ் பாடங்களின் போது பாடல்களுக்கு என்னிடமே விளக்கம் கேட்கும்படி மாணவரை விட்டுவிட்டுச் செல்வது வழக்க மாகிவிட்டது. அதனால் தமிழ் அகராதிகளுடன் போராடலானேன். இது எனக்கு ஒரு புனைபெயரையும் தேடிக்கொடுத்தது.

"அந்தக் குருநாதர் எனது எழுத்தார்வத்தைத் தூண்டி விட்டார். இரண்டாவது கதையையும் எழுதி வாங்கிக் கொண் டார். ஆனால், அடுத்த பிரசுரம் வெளிவராதது ஏமாற்றமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதன் பிறகு பாடசாலைப் பத்திரிகை வெளி வரவே இல்லை.

"அதுவே என்னை ஒரு கையெழுத்துப் பத்திரிகையை ஆரம்பிக்க வைத்தது. அவரையே ஆலோசகராகக் கொண்டு ஒரு பத்திரிகையை ஆசிரியராக இருந்து நடத்தினேன்.

"அதிகமாக எழுதிய பின்னர் ஒரு நூல் வெளியிட்டு அதனை எனது குருவுக்குத் தட்சணையாகச் சமர்ப்பிக்க விரும் பினேன். அவர் அதனை மறுத்து, அதனைப் பெற்றோர்க்குச் சமர்ப்பிக்கும் படி என்னை வற்புறுத்தினார். அப்படிப்பட்ட பெருந்தகையை இவ்விழாவுக்கு அழைத்துக் கௌரவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

"நாட்டு நிலைமை அதற்கு இடம் தரவில்லை. இள வாலையைச் சேர்ந்தவர் அவர். இப்போது எங்கு இருக்கிறார் எப்படி இருக்கின்றார். இல்லை இருக்கின்றாரா என்றே எனக்குத் தெரியவில்லை. அன்னாரின் பாதங்களில் எனக்க ளிக்கப்பட்ட கௌரவத்தையும் பாராட்டையும் சமர்ப்பிக்கின் றேன்." என்று கூறி, தனக்களிக்கப்பட்ட மாலையைக் கழற்றித் தரையில் வைத்தார். பார்த்திருந்த அனைவருமே அவரது நன்றியுணர்வைக் கண்டு திக்குமுக்காடிப் போனார் கள்.

கூட்டம் முடிந்தது. வித்தகன் வெளியேறிக் கொண்டி ருந்தார். பார்வையாளர்கள் கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டிருந்தனர். இந்தக் கிழம் இதுக்குள்ள என்று தள்ளிக் கொண்டு ஒரு பெண் முன்னேறினாள். அவருக்குக் கை கொடுத்து விட்டு விலக்கிப் பார்த்தார்.

அங்கே அவர் பஞ்சுப் பெட்டகமாக! அதிர்ச்சி நீங்கச் சிறிது நேரம் சென்றது. ஐயா நீங்களா இங்கே?

அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது.

தனக்கு அணிவித்த மாலை, பொன்னாடை அனைத் தையும் ,அவருக்கு அணிவித்துக் கால்களில் விழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கினார் வித்தகன்.

வித்தகனைத் தூக்கி நிறுத்தி, அந்தக் குருநாதர் பேசினார்.

"பிறந்ததின் பயனை அடையவென்று, இறைவன் என்னை இங்கு எதிர்பாராத விதமாக அழைத்து வந்திருக்கின்றார். நோய் வாய்ப்பட்டு வைத்தியத்துக்கு வந்த எனக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். ஆனால் இந்த விதைக்குள்ளே விருட்ஷம் இருப்பதைக் கண்டுகொண்டேன். உன்னுடைய திறமையை வெளிக்காட்டுவதற்கு என்னையேன் புகழ்கிறாய்? உன்னை மாணவனாகப் பெற்றது என் பாக்கியமே?" என்று தழுவிக் கொண்டார்.

"எல்லாம் உங்கள் ஆசீர்வாதம் தான் சார்" என்று கால்களில் மீண்டும் விழப் போனவரைப் பிடித்து உச்சி மோந்தார் ஆசிரியர்.

"இப்படியும் ஒரு மாணவனும் ஆசிரியருமா?" என்று வியந்தபடி கூட்டம் மெல்லவே கலைந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மித்திரன்,* ஏப்ரல் 1993

# அவள்

வேலைக்குச் சேர்ந்த முதல் வருடத்திலே, அந்தத் தூரத்து மாவட்ட கச்சேரிக்கு மாற்றம் கிடைத்தது. இளம் பிராயம். 26ஆவது வயதை எட்டிய நிலை. நாட்டின் எப்பாகத்திலும் வேலை செய்ய வேண்டும் என்ற ஆர்வம்.

வேலையில் பலவிதமான அனுபவங்களைப் பெற்று, எல்லாத் துறையிலும் தேறியவனாக வரவேண்டும் என்ற ஆர்வமும் இருந்ததனால், அவன் முன்பின் அறியாத இடம் என்ற கவலை இன்றி அங்கே சென்று சேர்ந்தான்.

எங்கே தங்குவது? எங்கு சாப்பாடு வைத்துக் கொள்வது? என்பது பற்றி அங்கு போனதும் யோசிக்கலாம் என்று எண்ணிச் சென்றான். ஆனால் அவன் எதிர்பார்த்தது போல் அங்கு எந்தப் பரிட்ச்சயமான உத்தியோகத்தரும் கடமையில் இல்லை.

அவன், ஒரு சூட்கேசுடன் கந்தோர் வந்து சேர்ந்தான். மற்றச் சாமான்கள், "ஒரு கட்டில், ஒரு மேசை, ஒரு புத்தகப்பெட்டி என்பன ரயில் மூலம் வந்து ஏஜென்ட் மூலம் அந்த நகருக்கு வர இருக்கின்றன" என்றும் "தனக்குத் தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் ஒரு வீடு தேவை" என்றும் அவன் சொன்னான்.

"எனது வீட்டில் ஒரு அறையைத் தரலாம். ஆனால் சாப்பாட்டைத் தான் வெளியில் வைத்துக் கொள்ள வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் இளவயது உத்தியோகத்தர்.

"பரவாயில்லை. நான் இப்போது இரண்டு மூன்று நாட்கள் தான் தங்கப்போகிறேன். பின்னர் வீட்டுக்கு லீவுக்குச் சென்று விடுவேன். அது வரை கடையில் சாப்பிடலாம். பிறகு வந்ததும் ஒரு வீட்டை ஒழுங்கு செய்தால் சரி" என்றான் அவன்.

அவனுக்கு இருப்பிடம் தருவதாகச் சொன்ன இள வயது உத்தியோகத்தர், மதியம் சாப்பிடச் செல்லும் போது அவனையும் அழைத்துக் கொண்டு போய் வீட்டைக் காட்டி னார். அவர்கள் போகும் போது அவர் மனைவி வாசலிலே ஒரு கைக்குழந்தையுடன் இருந்தாள்.

அவள் ஒரு மாவெள்ளை நிறம். இப்படி ஒரு நிறத்தை முதல் முதலாக அப்போது தான் பார்க்கிறான். இளமை ததும்பும் கவர்ச்சிகர உடல்கட்டு. கன்னங்கரு விழிகள்.

"இது தான் என் மனைவி. ஒரே ஒரு குழந்தை" என்று அறிமுகம் செய்து வைத்தார் அவர்.

அவள் சிரித்தாள். அவனும் பதிலுக்குச் சிரித்தான். அவள், அவனை எடை போட்டாள்.

கட்டுமஸ்தான உடம்பு. அரும்பு மீசை. துரு துருவெனப் பார்க்கும் பார்வை. எதிலும் முன் அனுபவம் இல்லாத தன்மை. அவளுக்கு நன்கு பிடித்துவிட்டது.

இந்த இளம் குடும்பத்திற்கு நாம் இடைஞ்சலாக இருக்கப் போகிறோமோ என்று எண்ணிக் கொண்டே அவன் சென்றான். ஆனால் அவனை வீட்டுக்குள் அழைத்துச் செல் லாமல் பின்பக்கமாக அழைத்துச் சென்று தனி வாசலுடன் கூடிய அறையைக் காட்டினார். அறை தனியாக இருந்ததும், வாசல் தனியே இருந்ததும், பின்பக்கமே பாத்றூம் வசதி இருந்ததும், அவனுக்குப் பிடித்தது. யாருடைய தலையிடும் இல்லாமல் இரவில் வேண்டிய மட்டும் பரீட்சைக்குப் படிக்கலாம் என்று எண்ணிக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இல்லாவிட்டால் இன்னுமொரு றூம் இருக்கிறது, என்று வீட்டின் முன்புறம் மண்டபத்தை ஒட்டி இருந்த அறையை அவர் காட்டினார். அதற்குள் வருவது போவதற்கு முன் கதவைப் பாவிக்க வேண்டும். பாத்ரூம் செல்லக் குசினியைக் கடந்து பின் கதவால் செல்லவேண்டும். எனவே, அந்த முன் அறையை அவன் விரும்பவில்லை.

"மாலையில் வருகின்றேன். எனது பொருட்கள் வரும் வரை படுப்பதற்குப் பாய், தலையணை ஏதும் தாருங்கள்" என்று கூறிவிட்டு அவன் வெளியேற முயற்சித்தான்.

"வீட்டுக்கு வந்த நீங்கள் ஏதும் சாப்பிடாமல் போறீங் களே. இருங்கள் டீ தருகிறேன்" என்றாள் அவள்.

"இல்லை நான் சாப்பிடப் போகிறேன்!"

"பிறகு சாப்பிடலாம். இருந்து டீ குடித்து விட்டுச் செல்லுங்கள்" என்றாள்.

வேறு வழியின்றி அமர்ந்தான். அவள் கணவர் சாப்பிடுவதற்கு உள்ளே சென்றுவிட்டார்.

சற்று நேரத்தில் அவள் தேனீரைக் கொண்டு வந்து குனிந்து வைத்த போது, அவனுக்கு என்னமோ மாதிரியாக இருந்தது. டீப்கட் பிளவுஸ் கையில்லாதது அணிந்திருந்தாள்.

தேனீரை அருந்தி விட்டு, நமக்கென்ன நாம் தனியாக இருக்கப் போகின்றோம். சாப்பாடு இங்கில்லையே என்ற எண்ணத்துடன் அவன் கந்தோர் சென்றான்.

மாலையில் அலுவலகத்தில் இருந்து, அவருடன் தனது சூட்கேஸையும் எடுத்து வந்த அவன், அதை அறையில் வைத்துவிட்டுக் குளித்து விட்டுக் கடைக்குச் சென்று சாப் பிட்டான். பின்னர், கடற்கரையில் கொஞ்ச நேரம் நின்று விட்டு வந்தான். கண்களை தூக்கம் தழுவியது. அறைக்கு வந்தவன், படுக்க ஒன்றும் இல்லாததால் மீண்டும் இவர்க ளிடம் வந்து கேட்க வேண்டி இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தும்புத்தடி, பெட்சீட், தலையணையுடன் வந்து அறையைக் கூட்டினாள். அவள் அணிந்து வந்திருந்த உடையைப் பார்த்ததும், அவன் வெளியே வந்து விட்டான். அங்கங்களை அப்பட்டமாகத் தெரிய வைக்கும் இதுவா? அட கண்ராவி! என்று கூறிக் கொண்டு அவள் போகும் வரை வெளியில் நின்றான்.

சென்றதும் அறைக்கதவை நன்கு பூட்டி விட்டு உறங்கினான்.

அடுத்த நாள் காலை அவன் பாத் ரூமில் குளிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அப்போது அவள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தாள். அவள் வந்த கோலம். அரைகுறையாக மார்பில் உள்ளாடை மட்டும், இடுப்பில் மெல்லிய கட்டை அண்டர்ஸ்கேட், அவன் ஓடுவதற்கு ஆயத்தமானான்.

"சேர். இவனுக்குக் குளிப்பாட்டக் கஷ்டம். இவர் மார்க்கட் சென்று விட்டார். கொஞ்சம் தண்ணி ஊத்துங்க" என்று பேசினில் குழந்தையைக் குனிந்து வைத்தாள்.

பாத்ரூமில் இருந்து தண்ணீரை எடுத்துக் கொண்டு வந்து அவன் கண்ணை மூடிக்கொண்டு பேசனில் ஊற்றி னான். சோப்புடன் அவள் குழந்தைக்குப் பக்கத்தில் குந்திய போது அவன் மெல்ல நகர்ந்து விட்டான். அவள் சோப்பைப் போட்டு விட்டுக் குழந்தை கத்த, "சேர்" என்று அழைத்தாள்.

அவன் மீண்டும் வந்து தண்ணீரை அள்ளி ஊற்றினான்.

ஈரம் வடியும் குழந்தையைத்தூக்கி அவள் இடுப்பில் வைக்க, பாத்ரூம் உள்ளே சென்று கதவை மூடிக் கொண்டான்.

சிறிது நேரம் பாத்ரூமினுள் குளிக்காமலே இருந்தான். நெஞ்சு படக் படக் கென்று அடித்துக் கொண்டிருந்தது.

அன்றைய நாளை எப்படியோ கடத்தியாகிவிட்டது. இனி இங்கு இருப்பதா இல்லையா என்பதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டும் என்று எண்ணியவனாய்க் கந்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றான்.

அடுத்த நாட்களில் அவன் அதிகாலையிலே எழுந்து, காலைக் கடன்களை முடித்து விட்டு வெளிக்கிட்டு விடு வான். கந்தோர் தொடங்க நேரம் இருந்தாலும் அது தொடங் கும் வரை நகரிலே பொழுதைப் போக்கினான்.

அடுத்த நாளில் இருந்தே விடுமுறைக்கு விண்ணப் பித்து விட்டு வீட்டுக்கு புறப்பட்டுவிட்டான்.

போகும் போது, லக்கேஜில் வரும் பொருட்களை எடுத்து வைக்க, ரசீதை வாங்கி வைத்துக் கொண்டார், அவள் கணவர்.

ஆனால் திரும்பி வந்து அங்கே தங்குவதா வேண்டாமா என்பதைச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டியவனாக இருந் தான் அவன்.

ஊர் சென்ற அவனுக்கு நான்கு நாட்கள் லீவுடன் சனி, ஞாயிறு நான்கும் விடுமுறை நாள் ஒன்றும் சேர்ந்து ஒன்பது நாட்கள் எப்படி ஓடியது என்று தெரியாது.

மீண்டும் கந்தோர் வந்து சேர்ந்து விட்டான். கந்தோ ருக்கு மதியம் வந்தவன் மாலையில் வீட்டுக்கு அவருடனே வந்தான்.

அடுத்த நாள் அதிகாலையில் குளித்து விட வேண்டும் என்று பல்லை விளக்கியபடி துவாயையும் சோப்பையும் எடுத்துக் கொண்டு பாத்ரூம் சென்றான். அங்கே அவள் நின்ற காட்சி அவனை திக்பிரமை கொள்ள வைத்து.

அப்படியே சிறிது நேரம் நின்றிருந்தான். அவள் கையை நீட்டி அவனைத் தொட்டதும், உணர்வு வரப்பெற்றவனாகத் தன் அறைக்கு ஓடிச் சென்று கதவை மூடிக் கொண்டான்.

அவளுடைய கணவனின் குரல் கேட்ட பின்பே எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டுக் கந்தோர் புறப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் போய்ச் சிறிது நேரத்தில் அவர் கந்தோர் வந்தார்.

கந்தோருக்கு வந்த அவர் போட்ட சத்தத்தில் எல்லோரும் கூடிவிட்டனர். "உதைப்பன்! அடிப்பன்! ராஸ்கல்! பாவம் என்று என் வீட்டில் இடம் கொடுத்தேன். எனக்கே துரோகம் செய்ய நினைத்தாயா? என் மனைவியை என்னவென்று நினைத்தாய்? உடனே இந்த நிமிஷமே வீட்டை விட்டுப் புறப்பட வேண்டும்" என்று என்னவெல்லாம் அவர் பேசினார்.

தலைகுனிந்து நின்றான் அவன். தகாத எண்ணத்துடன் தன்னை அணுகி ஏமாந்தவள், தன் கணவனிடம் முந்திக் கொண்டு விட்டாள் என்பது அவனுக்கு மட்டும் தெரியும்.

தன்னுடைய இச்சைக்கு நான் இணங்காததால் இப்படியும் பழிவாங்கலா? என்று அவன் மனம் அதிர்வுடன் கேட்டுக் கொண்டது.

அவனுக்குத் தலை சுற்றியது. மற்றவர்கள் வந்து அவனை அழைத்துச் சென்று கண்டீனில் வைத்தனர். தான் யாரிடமும் நடந்தவற்றை ஏற்கனவே சொல்லாமல் விட்டதால் ஏற்பட்ட தவறை இப்போது உணர்ந்தான் அவன். இனிச் சொல்லி யார் நம்பப் போகிறார்கள்?

அவளுக்குக் ஹிஸ்டீரியா போல. முன்னர் வீட்டில் இருந்தவனுடனும் இந்தப் பிரச்சனைதான் என்று யாரோ வெளியில் ப்பேசுவது அவன் காதில் விழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அகிலன்,* **1994 – ஆறுதல் பரிசு பெற்ற கதை**

# மீட்சி...!

கங்கா, கொட்டாஞ்சேனையில் பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான். பஸ் புறப்படுவது போல் ஸ்ராட்டில் நிற்பது வழக்கம். ஆனால், புறப்பட மணிக்கணக் காகும். ஆகவே, அவன் ஆறுதலாக நடந்து சென்றான்.

வழியில், சற்றுத் தொலைவில், தனக்கு முன்னால் குழந்தைகள் இருவரைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் பெண்ணைக் காட்டிப் பேசுவதும் அவன் காதுகளில் விழுந்தது.

"அங்க பார் மச்சான், அந்தக் குட்டியைப் பார், உனக்கு ஞாபகம் வரவில்லையா? அந்த ஹொட்டலில் சந்தித்துக் கூடிக்குலவி இருக்கிறோம். இன்று குழந்தைகளுடன் நம்பவே முடியவில்லை" ஒருவன்.

"எங்காவது வேலை செய்கிறாளாக்கும். அதுதான் பள்ளிக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்கிறாள்." மற்றவன்.

"பைத்தியமா உனக்கு. முன்னால முகத்தில் குங்குமப் பொட்டு, கழுத்தில் தாலிக் கொடி கிடப்பதைப் பார்த்தேன்."

"நம்ப முடியவில்லையே.."

கங்கா தன் கண்ணை லேசாக மேயவிடுகிறான். எங்கோ தான் கண்டு ரசித்தவள் என்று அவனுக்கும் புரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் யார் எங்கு என்றுதான் புரியவில்லை.

இன்னும் சற்று நேரத்தில் பஸ்ஸினுள் ஏறியதும் முகத்தைப் பார்த்ததும் தெரிந்து விடப்போகிறது என்று எண்ணியவாறு நடந்தான். ஆனால் அவனை அலட்சியம் செய்து பஸ் புறப்பட்டு விட்டது.

சே! அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை அவர் கள் பேசிய பேச்சுக் காதில் ரீங்காரமிட்டது. கண்கள் அவளது பின்னழகில் மயங்கிக் கிடந்தன? யாரது? அறியாமல் ஊண் இறங்காது, உறக்கம் வராது போல் இருந்தது அவனுக்கு.

யாராயிருந்தால் நமக்கென்ன? என்று விட்டு விட முடியவில்லை. அந்த எண்ணங்களும் காட்சிகளும் மாறிமாறி வந்து கொண்டே இருந்தன. இந்த எண்ணத்தில் வந்த வேலையையும் மறந்து, அடுத்த பஸ்ஸையும் விட்டுவிட்டு இருந்தான் அவன்.

நாளைக்கும் பாடசாலை நாள்தான். எப்படியும் இதே நேரம் இங்கே வந்து, அவளைக் காண வேண்டும் என்ற முடிவை எடுத்த பின்னரே, அவ்விடம் விட்டகன்றான் கங்கா தரன்.

அடுத்த நாள் காலை, கங்காவுக்கு விடிந்தது இதற்கா கவே என்றுதான் செல்ல வேண்டும்.

வேளைக்கு வந்து பஸ்தரிப்பில் நின்று கொண்டான்.

நேரம் வந்தது. அவளும் வந்தாள் பிள்ளைகளுடன். தீயை மிதித்தது போல் அவன் இதயம் துடித்து எழும்பி அடங்கியது.

இவள், இவள், அவன்... எண்ணம் எங்கோ சுழன்று, முடிவில் ஓரிடத்தில் வந்து நின்றது.

இரத்தம் சூடேறி இதமான சுகம் தேடி அலைந்த போது, அவளைக் கண்டது ஞாபகத்திற்கு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மஸாச் கிளப்புக்குப் போவோமா வேண்டாமா என்று எண்ணிக் கொண்டு தடுமாறிக் கொண்டிருந்தான் கங்கா. அப்போது இவள் பஸ்ஸில் இருந்து இறங்கி நடந்து கொண்டிருந்தாள்.

ஒரு குலக்கொடியாகத்தான் தான் இருக்க வேண்டும் என்று எண்ணினான். சேலை உடுத்தியிருந்தாள். மயில் போல் தோகை அசைந்து ஆடிச் செல்வது போல் அவள் சென்றதும், அவள் பின்னழகிலே கிறங்கி அழகை ரசித்த வண்ணம், இதற்கு இப்படி என்று அசிங்கமாக எண்ணிக் கொண்டு அவள் பின்னால் சென்றதும், அவள் பக்கத்தில் இருந்த ஹோட்டலை நோக்கிச் சென்றதும், சிறிது துணிவு பிறந்து அவனும் உள்ளே நுழைந்ததும், உள்ளே சென்றவள் வெளியே வராமல் தனித்ததும், அவனுக்கு ஞாபகம் வந்தது.

சற்று நேரத்தில் குத்து விளக்குப் போல் லட்சுமிகரமா கவும் மங்களகரமாகவும் இருந்தவள், பளிச்சிடும் மின்விளக் குப் போல் கட்டைப் பாவாடையுடனும் டீப்கட் பெனியனுடன் இளமைகள் தளும்ப நின்றதும் அதிர்ந்து போனான். குட்டைப் பாவாடையையும் மீறிய பின்னழகும் எப்போது துள்ளி விடுவோம் என்ற முன்னழகும் அவனைக் கிறங்க வைத்ததில் வியப்பில்லை.

முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு செயலில் இறங்கினான் கங்கா. காசு கைமாறியதும், பொருள் அறைக்கு வந்ததும், கைகளில் தவழ்ந்ததும் கனவல் லவே.

ஒரு முறை பார்த்து இருந்தால் மறந்து இருக்கலாம். ஆனால் அனுபவத்தை மறக்க முடியுமா? மீண்டும் அந்த எண்ணம் துளிர்விடுகின்றதே.

ஒரு கணம்தான். பஸ்ஸில் ஏறி அவள் பக்கத்திலே அமர்கின்றான். அந்த ஸ்பரிஷம். ஓ.. இனிமையான சந்திப்பு.

"ஹலோ ஊர்மிளா, என்னை ஞாபகம் இருக்கிறதா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான் சட்டென.

"சொறி, நீங்கள் வேறு யாரையோ..."

"இல்லை உங்களைத் தான் நான் ஏற்கனவே சந்தித்து மிருக்கிறேன்."

"டோன்ற் பி ஸில்லி. பைத்தியமா உங்களுக்கு."

சட்டென்று மூளையில் உறைந்தன இந்தச் சொற்கள். மௌனித்து விட்டான். ஆனால் மனம் அடங்கவில்லையே.

சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் வேறு வேறு பெயர்க ளைச் சொல்லிக் கொள்வார்களோ. அப்படியானால் அவள் சொன்ன கதை.. அதுவும் கற்பனைதானோ.

உடையை மாற்றிக் கொண்டு புறப்படப் போனபோது அவள் கண்கலங்கி நின்றாள்.

"என்னது? உனக்குரியதை முன்னாலேயே செலுத்தி விட்டேனே, உனக்கு ஏதும் ரிப்ஸ் தரவேண்டுமா?"

அவன் எதிர்பாரத விதமாக அவன் கால்களில் விழு கின்றாள்.

"என்ன நாடகமோ?" என்று எண்ணியவாறு கட்டிலில் அமர்கிறான் அவன்.

"ஐந்திற்கும் பத்துக்கும் உடலை விற்க வந்தவள் அல்ல நான். சந்தர்ப்ப வசத்தால் இந்தச் சாக்கடைக்குள் விழுந்து விட்டேன். என்னைக் காப்பாற்றும் படிதான் உங்களை வேண்டுகின்றேன்." என்றாள்.

"எப்படி நடந்தது?"

"என்னைக் காதலிக்கிறேன் என்று சொன்ன ஒருவனை நம்பிக் கிராமத்திலிருந்து பெற்றோருக்கும் தெரியாமல் அவ னுடன் ஓடிவந்தேன். எங்கெல்லாமோ என்னை அழைத்துச் சென்று, என்னை அனுபவித்து விட்டுக் கடைசியில் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோட்டலில் விட்டுவிட்டு ஓடிவிட்டான். கொழும்பு என்றால் என்ன என்று தெரியாத, கிராமத்தில் இருந்து வந்தவள் என்ன செய்வது என்று தெரியாது விழித்த போது, ஹோட்டல் பாக்கி இருக்கின்றது அதை உழைத்துக் கொடுத்து விட்டுப் போ. என்று இந்த வழியைக் காட்டினார்கள். எனது அடமும் அழுகையும் என்ன செய்யும்? அடி உதைக்குப் பிறகு எனக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டுது, இப்போது செக்கிழுக் கும் மாடாகி விட்டேன். இதிலிருந்து விடுதலை வாங்கித் தாருங்கள் எங்காவது கூலி வேலை செய்தாவது பிழைத்துக் கொள்கிறேன். பாதுகாப்பு உத்தரவாதமே எனக்குத் தேவை.." என்று தன் கதையை விரிவாகச் சொன்னாள். அதன் சுருக்கம் இது. வரும் வாடிக்கையாளர்களிடம் எல்லாம் வழக்கமாகச் சொல்லி அழும் கதைதான் இது. இப்படி எத்தனை கேட்டி ருப்பான் கங்காவும்.

சந்தர்ப்ப வசத்தால் கற்பிழந்த பெண்கள் மன்னிக்கப் பட வேண்டியவர்கள். அவர்கள் திருந்தி வாழப் புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என்று மாகாத்மா காந்தி சொன்னதாகப் படித்த ஞாபகம் வந்தது கங்காவுக்கு. கூடவே நான் ஒரு மாகாத்மா அல்லவே என்ற எண்ணம் வரவே, இப்போதைக்கு இதை வைத்துக் கொள், பின்னர் பார்க்கலாம் என்று கூறிவிட்டுத் தப்பிவிட்டான்.

அதன் பின்னர் அப்போதுதான் சந்திக்கின்றான். அன்று அனுபவித்த ஆசை. இப்போது காவலுக்குத் தாலி, காசில் லாமல் தொடர்பு கொள்ளலாம் என்ற நப்பாசை அவனை நாயாய் அலைய வைத்தது.

அடுத்த நாள், அதற்கடுத்த நாள், என்று தினமும் அவனது பயணம் தொடர்கின்றது. நண்பர்களுடன் பின்னால் அமர்ந்து அரட்டை, அவள் சொன்ன கதையை நக்கலாகக் கூறுவது, அவள் திரும்பி முறைப்பது, இப்படித் தொடர்ந் தது.

அவளால் பொறுக்க முடியவில்லை. எப்படியும் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். பொலிஸ், அடிதடி என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்க் கணவனை மாட்டி, அவன், தான் செய்தது பிழை என்று எண்ண வைக்கக் கூடாது. தானே சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அன்றும் அவன் வந்திருந்தான் தனியாக. பஸ்ஸில் இருந்து பாடசாலை செல்லும் வரை கூடவே வழமை போல் நடந்து வந்தான். பாடசாலை அண்மித்ததும் அவள் சொன் னாள், "கொஞ்சம் இருங்கள் பிள்ளைகளை விட்டு விட்டு வருகின்றேன்."

ஆனந்தத்தில் அவன் உள்ளம் துள்ளியது. சும்மாவா சொன்னார்கள், அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்று? என்று எண்ணிக் கொண்டு அவள் வரவுக்காக காத்திருந்தான்.

"இப்போது உங்களுக்கு என்ன வேண்டும்?" அவள் கேட்டாள்.

"நீதானே, அந்த ஊர்மிளா?"

"ஆமாம் நான்தான், அந்த ஊர்மிளா. அதற்கு என்ன இப்போ?"

"அந்த நாளை என்னால் மறக்கவே முடியவில்லை. அதுதான் இப்போது இன்னும் வசதியாகப் போச்சே." வழிந்தான் அவன்.

"ச்சீ. நீயும் ஒரு மனுசனா? உன்னுடைய கால்களிலும் நான் விழுந்து இருப்பேன். அப்போது எனக்குக் கைகொடுத் துக் கரையேற்ற உன்னால் முடியவில்லை. வெட்கங் கெட் டதுகள், ஒருத்தி தாலியோட தனியாகக் கிடைச்சா.. எப்படி பாதுகாப்பு.. வசதியாக இருக்கிறதா? நீ யெல்லாம்..."

உமிழை விழுங்கிக் கொண்டான் அவன்.

அவள் தொடர்ந்து பேசினாள்.

"கடந்த காலத் தொடர்பை வைத்துக் கொண்டு என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருட்டலாம், பயமுறுத்தலாம் என்று கனவு காணாதே. அது என் வாழ்க்கையில் ஏற்பட்ட விபத்து. இப்போது எனக்கே அது கனவு. அதில் நீயெல்லாம் வந்து போனதாக எனக்கு நினைவே இல்லை. அதில் நிறைந்து இருப்பது என் தெய்வம் மட்டும்தான்.

"என்ன பார்க்கிறாய் எனது கணவரும் ஒரு வாடிக் கையாளர்தான் என் கதையைக் கேட்டு அவர் ஓடிவிட வில்லை. மீண்டும் மீண்டும் என்னிடம் வந்தார்.

"அவர் சொன்னார், என்னுடைய அம்மா இலட்சத்தில் சீதனத்தை எதிர்பார்த்து என் வாழ்கையைப் பாழடித்து விட்டாள். எனக்கு இன்னும் திருமணமாகவில்லை. இருந்த ஒரே பற்றுக் கோடு அவள்தான். அவளும் போய்விட்டாள். இபபோது வீட்டில் நான் தனியேதான் இருக்கின்றேன். எனக்கும் ஒரு துணை வேண்டும். வயது நாற்பது என்பதால், என்னால் எனக்கொரு துணையைத் தனியே தேடிக் கொள்ள முடியவில்லை. வடிகாலாக இந்த வழியை நாடினேன்.

"நீ விரும்பினால் எனக்குத் துணையாக இருக்கலாம். எனது வயதை நீ பொருட்படுத்தவில்லை என்றால், சொல் என்றார்.

"வயதா எனக்குப் பெரிசு? வாழ்க்கைதான் எனக்குப் பெரிசாகப் பட்டது. சம்மதம் சொன்னேன்.

"கடந்த கால வாழ்கையை மறந்து வாழவேண்டும். அதைக் கனவிலும் நினைக்கக் கூடாது. என்னை ஏமாற்றக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டார்.

"அவர் தந்த பரிசுதான், இப்போது நேசரிக்கு விட்டு வந்த குழந்தைகள். நான் புனிதமானவள் இல்லைத்தான் ஆனால் அந்தத் தெய்வம் என்னை அந்தச் சாக்கடை யிலிருந்து மீட்டெடுத்தது. கங்கையில் கலந்தால் சாக்க டையும் புனிதமான கங்கை நீர்தானே.

"கடந்த காலத்தை மறந்து அமைதியாக என் வாழ்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிக் கொண்டிருக்கிறது. குருவிக் கூட்டில் கல்லெறிந்து கலைக்காதே. உன்னால் எனக்கொரு உதவி செய்ய முடிய வில்லை. உதவி செய்த அந்தத் தெய்வத்தின் அமைதியைக் குலைக்காதே.

"பிளீஸ் என் வழியில் என்னைப் போகவிடு" என்று கையெடுத்துக் கும்பிட்டாள் அவள்.

அவனுக்குப் பேச முடியவில்லை. அவள் விலகி நடந்து கொண்டிருந்தாள்.

அவள் இருந்த நிலையில் இருந்து மீட்சி பெற்று இனறு அவள் ஒரு குலமகளாக இருக்கின்றாள். அன்று நான் கண்ட குத்துவிளக்குப் போல. அவனால் நம்ப முடியவில்லை.

இயேசுக் கிறிஸ்து கல்லறையில் இருந்து உயிர்பெற்று எழுந்ததை அவரது சீடர்கள் சிலர் நம்பவில்லை. அவர் அவர்கள் முன் தோன்றித் தான் இறக்க முன்னர் அவர்கள் தனக்கு ஏற்படுத்திய காயத்தைத் தொட்டு பார்க்கும் படி கூறினார் அல்லவா? அப்போது அவரது மீட்பை நம்பினார்கள்.

அது போலப் பழைய ரணத்தைத் தொட்டுக் காட்டித் தான் மீண்டு விட்டதை நிரூபித்து விட்டுச் சென்றாள் அவள்.

அறியாமல் பாவம் செய்திருக்கிறாள். அவள் அதில் தீவிரமாக ஈடுபடவும் இல்லை. வியாபாரமாக்கி உழைக்கவுமில்லை. ஏதோ ஒரு நிர்ப்பந்தத்தில் தவறிவிட் டாள். இப்போது மீட்சி பெற்று விட்டாள். அவள் வாழ்வில் குறுக்கிடும் நானே பாவி.

அறியாமல் செய்யும் பாவத்தை இறைவன் என்றும் மன்னிப்பார். நான் அவள் வழியில் குறுக்கிட்டால் என்னை இறைவனும் கூட மன்னிக்க மாட்டார்.

"சொறி ஊர்மிளா" என்றது அவனது வாய். இது உள்ளத்திலிருந்து வந்தது. ஆனால் அதைக் கேட்க அவள் அங்கிருக்கவில்லை. அவள் எப்போதே பஸ் ஏறிப் போய் விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நவமணி*, நவம்பர் 1997

# ஊமைக் காயம்!

அசோக் விடுமுறை எடுக்கச் சிரமப்பட்டுப் பெரிய வரை நேரடியாகச் சந்தித்துக் கதைத்து விடுமுறையைப் பெற்றுக் கொண்டான். இப்போது அந்த மகிழ்ச்சியில், அந்த ரத்தில் நடப்பது போலவும் ஆகாயத்தில் நீந்துவது போலவும் இருந்தது.

இருக்காதா பின்னே? நடக்கவிருப்பது திருமணம் அல்லவா? எந்த இளைஞன் தான் இறும்பூதெய்த மாட்டான். தனது சேமிப்பை எடுத்துக் கொண்டு அன்று முழுவதும் மணப் பெண்ணில் இருந்து வீட்டார் அனைவருக்கும் உடுப்பு மற்றும் பொருட்களை எல்லாம் வாங்கிச் சேர்த்தான். கொழும் பில் மலிவாக வாங்கலாம் என்பது அவனது எண்ணம்.

அலுப்பில் வந்து படுத்தவனுக்கு, வண்ணக் கனவுகள் காத்துக் கிடந்தன. இத்தனை நாளாகத்தான் கனவு காண்கிறான். என்றாலும் விடுமுறை கிடைத்ததும் தேவிக்காக வாங்கிய சாரியை ஸ்பரிசித்ததும் மனதைக் கிளர்ந்தெழ வைத்தது. மீண்டும் ஒருமுறை எழுந்து கூறைச் சேலையைத் தொட்டுத் தடவிப் பார்த்துவிட்டுப் படுத்தான்.

நாளை அதிகாலை பயணப்பட வேண்டும் என்ற எண் ணம் அவனை முற்று முழுதாகத் தூங்க விடவில்லை. எதற்கும் பெட்டியில் உடுப்புகளை அடுக்கிப் பயணத்திற்குப் ஆயத்தம் செய்துவிட்டுப் படுத்தால் நல்லது என்ற எண்ணம் எழவே, எழுந்து அந்தப் பணியில் இறங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோக் விவாகமாகாதவர்களின் விடுதியில் நண்பர்களுடன் தங்கியிருந்தான். நண்பர் கூடி அவனைக் கேலி செய்து கொண்டிருந்தனர். எல்லாவற்றிக்கும் ஓரிரு வார்த்தையில் பதில் செல்லிவிட்டுச் சிலவற்றிற்குச் சிரித்துச் சமாளித்துவிட்டுத் தன் கடமையில் கண்ணாயிருந்தான் அசோக்.

அவள் இதுவரை அவனுக்கு அனுப்பிய கடிதக்கட்டை வைத்தபோதுதான் அவனுக்குச் சுரீர் என்றிருந்தது. ஏன் தேவி இரண்டு மாதமாகக் கடிதம் போடவில்லை என்பது தான். அது அவனுக்கு விளங்கவில்லை. அம்மாவிடமும் எழுதிக் கேட்க விரும்பவில்லை. அவள் போடாவிட்டாலும் அவன் நாலு கடிதம் எழுதிவிட்டுக் காத்திருந்தான். பதில் ஏதும் இது வரை வரவில்லை.

திருமணம் பேசி நிச்சயிக்கப்பட்டதால் ஏற்பட்ட கூச்சமாக இருக்கலாம் என்றுதான் அவனால் எண்ண முடிந்தது.

அதுவும் காரணமாக இருக்க முடியாது. ஏனெனில் கடந்த இரண்டு வருடமாக அவளைக் காதலிக்கின்றான். அப்படியிருக்க அவள் இப்படி மௌனமாக இருக்கக் கூச்சம் அல்லது நாணம் காரணமாக இருக்க முடியாது. காரணம் அவனுக்குத் தான் தெரியவில்லை. எல்லாம் ஊருக்குப் போனால் விளங்கிக் கொள்ளலாம் என்று அமைதியடைந்தான். கிணற்று நீரை ஆற்று வெள்ளமா கொண்டு போகப் போகிறது? என்ற எண்ணம் தான்.

அடுத்த நாள் வீடு வந்த சேர்ந்த போதுதான், அந்தச் செய்தி அவனுக்கு அதிர்ச்சி கொடுக்க காத்திருந்தது.

தான் வாங்கி வந்தவற்றை எல்லாம் தாயிடம் காட்டிவிட்டு, அம்மா நான் போய் தேவியைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று புறப்பட்டான் அசோக்.

"இப்ப போக வேண்டாம் மகன். நாளைக்கு போகலாம்.." என்று தாய் தடுத்ததும், அதில் இருந்த அசிரத்தையைப் புரிந்து கொண்டான். ஏதோ இருப்பது புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனம்மா ஏதும் பிரச்சினையா.?" என்று கேட்டான் அசோக்.

"இல்ல அப்படி ஒன்றும் இல்ல, கொஞ்ச நாளாகத் தேவி மாறிவிட்டாள். இங்கு வருவதும் இல்லை. கல்யாணத்திற்கு ஒழுங்கு செய்யச் சொன்ன மாமா அன்று ஒரு நாள் வந்திருந்தார்."

"வந்து என்ன சொன்னார் அம்மா?" அவசரப்படுத்தினான் மகன்.

"தேவிக்கு இந்த திருமணத்தில் விருப்பம் இல்லையாம்."

"என்ன விருப்பமில்லையாமா.? என்னை இரண்டு வருடமாக விரும்பியிருந்தவள் அம்மா, தேவி..?" என்றான் வியப்பு மேலீட்டால்.

"அதென்னமோ எனக்குத் தெரியாது. இப்ப அவள் விரும்ப வில்லையாம் கொஞ்சம் பொறுத்துச் செய்வோம் என்று சொல்லிப் போட்டுப் போனார்."

இடி விழுந்தது போல் அமர்ந்து விட்டான் அசோக். எத்தனை பாடுபட்டுத் திருமணம் என்று கூறி விடுமுறை பெற்று வந்திருக்கிறான். அப்படி இல்லாமல் போனால் நண்பர்கள் கேலி செய்ய மாட்டார்களா? அவன் கண்ட இளமைக் கனவெல்லாம் என்னாவது?

இதுவரை என்னைக் காதலித்தவளுக்கு இப்போது கல்யாணத்திற்கு விருப்பமில்லையா? இதன் அர்த்தம்தான் என்ன? அப்படியானால் என்னைக் காதலித்தது எல்லாம் என்ன விளையாட்டா? பொழுது போக்கா? நானா அவளை வலியத் தேடிப் போனேன்..? அவளாக அல்லவா என்னைத் தேடித் தேடி வந்தவள்? இப்படி அவனது உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது.

ஒருநாள் அசோக் பொலிஸ் வேலைக்கு விண்ணப்பித்து விட்டு வரும் வழியில், பிள்ளையாரிடம் சென்று, அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையைப் பெற்றுத் தரும்படி பிரார்த்தனை செய்துவிட்டு வெளியில் வந்த போது, பெண்கள் கூட்டமொன்று இளைஞர் கொடி விற்றுக் கொண்டு வந்தது. அப்போது அந்தக் கூட்டத்திலிருந்த தேவி, அசோக்கை மறித்து, அவனது சேட்டில் ஒரு கொடியைக் குத்தினாள்.

"ஆ" என்று நெஞ்சைப் பொத்தினான் அசோக்.

நெஞ்சத்தைக் கிள்ளாதே, என்று ஒருத்தி சொல்ல, மற்றவர்கள் சிரிக்க தேவி நாண, அசோக் அதை ரசித்தான்.

அசோக் நகரப் போக, "காசு போடவில்லையா!" என்று ஞாபகப்படுத்தினாள்.

"நெஞ்சைக் கொள்ளை கொண்டு விட்டீர்கள். அதனால்தான், என்னையே மறந்து விட்டேன்" என்றவன் சட்டைப் பையில் துளாவி, பதிவுத் தபால் செலவு போக, மிகுதியாக இருந்த இரண்டு ரூபாய்க் குத்தியை போட்டுவிட்டுச் சென்றான்.

அசோக் பகிடியாகக் கதைத்ததை அத்தோடு மறந்து விட்டான். அவள் நித்திரையின்றித் தவித்தது அவனுக்கு எங்கே தெரியப் போகிறது? அவள் வேதனைக்கு ஒரு விடிவு வேண்டாமா? தோழிகளுடன் மந்திராலோசனை நடந்தது.

அந்த நாட்களில் எந்த வீதியில் எந்தெந்த வீட்டில் பெட்டைகள் இருப்பார்கள் என்று பையன்களுக்குத் தெரியும். இன்று நாட்டில் பையன்களே இல்லாமல் குறைந்து விட்டது. இப்போது பெட்டைகளுக்கு, இவன் இன்னார் மகன், இந்த வீட்டில் இருக்கிறான் என்பதில் இருந்து, அவர்கள் பயோடேற்றாவே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

அவனது வீட்டுப் பக்கம் அவர்களது நடமாட்டம் அதிகரித்ததை உணர்ந்தான் அசோக். அந்த வழியால் போகும் போது அவர்கள், வீட்டில் பூப்பறிக்க வந்திருப்பதும், அவர்கள் பேச்சில் இருந்து அவள் தேவி என்றும், அவள் தன்னில் மையல் கொண்டிருப்பதையும், தன்னைப் பார்க்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி அந்தப் பக்கமாக வருகிறார்கள் என்றும் உணர்ந்து கொண்டான். அவனுக்குள் ஒரு விழிப்புணர்ச்சி அவனது பைசிக்கலுக்கும் இனி அடிக்கடி டயர் மாற்ற வேண்டியிருக்கும்.

தேவி தன் வீட்டுக்கு வந்து, கோயிலுக்குக் கொண்டு செல்லவென்று பூப்பறித்த போது, அவன், பூக்களைப் பறிக்காதீர்கள் என்று சொல்லவில்லை. அதுமட்டுமா, தான் கஷ்டப்பட்டு உண்டாக்கி வளர்க்கும் ரோஜாச் செடியில் யாரும் கை வைக்க விடமாட்டான். இப்போது தேவி அதிலும் பூப்பறித்துத் தன் தலையிலும் சூடிக்கொண்டாள். அதையும் அவன் தடுக்கவில்லை. அவள் ரோஜாப் பூவை மட்டுமா கிள்ளிச் சொருகினாள்? அவனது மனதையுமல்லவா கிள்ளிச் சொருகிவிட்டாள். இனி அவன் அவள் கைப்பொம்மை தானே. அந்த வியாதி அவனுக்கும் அரும்பிவிட்டது.

அசோக்குக்கு பொலிஸ் வேலைக்கு அழைப்பு வந்திருந்தது. ஆனால் அதற்குச் சிபார்சு எடுபடும் என்று அறிந்து, அவர்கள் காரியாலயம் ஏறி இறங்கிச் சிபார்சினைப் பெற்றுத் தேர்விலும் வெற்றி பெற்றுவிட்டான்.

அவனுக்கு, பயிற்சிக்குச் சென்றதும், பயிற்சி முடித்து வேலைக்குச் சென்றதும் கனவு போல் இருந்தது. காரணம் காதலியின் கடிதம் நாட்களை கணங்களாக்கிக் கொண்டிருந்தது. இந்தக் களிப்பில் இப்படி ஓர் இடி விழும் என்று யார் கண்டது? பொடியன்களுக்கும் அரசுக்கும் பேச்சு வார்த்தை முறிந்து மீண்டும் சண்டை மூண்டது. தமிழ்ப் பொலிஸாரெல்லாம் விலக்கப்பட்டனர். நல்ல வேளை அசோக், சிங்களப் பகுதியில் கடமையாற்றியதால் தப்பிவிட்டான்.

இருந்தும் ஊருக்குப் போக முடியாத நிலை. இங்கும் மதிப்பில்லாத நிலை. என்ன செய்வது? விதியை நொந்து கொண்டான். இத்தனைக்கும் தேவியின் ஆறுதல் கடிதம் மட்டுமே. நிலைமை விரைவில் சீரடையும் தானே! இவ்வாறான எதிர்பார்ப்புக்கள் தானே மனிதனை வாழவைக்கின்றது.

பிரச்சனை ஆரம்பத்தில், பொலிஸாருக்கு ஏற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய இழப்புக்களும், அதைத் தொடர்ந்து தமிழ்ப் பொலி ஸார் வேலையை விட்டுப் பயத்தில் ஓடியதும், வேலையை விட்டு ஓடினாலும், வீட்டை விட்டு ஓட முடியாதவர்களுக்குப் பின்னால் ஏற்பட்ட கதியும், தேவியின் மனதில் ஆழமான ஊமைக் காயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் காதலின் வேகத்தில் அந்த உணர்ச்சியால் ஆட்கொள்ளப் பட்டிருந்த தேவி அப்போது அதனைப் பொருட்படுத்த வில்லை எனலாம். எதற்கும் இப்போதைக்கு ஊருக்கு வரவேண்டாம் என்றே கடிதம் போட்டுக் கொண்டிருந்தாள்.

இரண்டு வருடங்கள், காதலில் இறுக்கத்தையும் இரு வரின் நெருக்கத்தையும் ஏற்படுத்தி மறைந்தன. நிலைமை அரசப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் சீராக இருக்கிறது என்பதால், ஒருமுறை ஊருக்கு வந்திருந்தான். அப்போது இருவர் வீட்டிலும் காதல் விவகாரம் அம்பலத்துக்கு வரவே ஏன் தாமதிப்பான் என்று கல்யாணப் பேச்சுவார்த்தை முற்றுப் பெற்றது. திருமணத்திற்கு இருசாராரும் வசதியான ஒரு திகதியை எடுத்ததும் அறிவிக்கும்படி கூறிவிட்டு, வந்து விட் டான். அதன் பின்னர் இப்போது தான் வந்திருக்கின்றான்.

அதனிடையில் என்ன நடந்திருக்கும்? ஏன் வேண்டாம் என்றாள்? அவனுக்குத் தெரியாது. தேவியின் பெற்றோருக் கும் தெரியாது.

திருமணப் பேச்சு நடந்த வேளை, தோழிகளிற் சிலர் தேவியின் மனதில் சலனத்தை ஏற்படுத்தியதை யார் அறிவர்?

"தேவி, என்னடி நீ பேசாமல் இருக்கிறாய்? எல்லாம் பேசி முடிந்து விட்டது என்கிறாய். இனித் திருமணம் என்ற தும் இன்பக் கனவுகள் காண்கிறாய்? என்ன ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க மறந்து விட்டாயா?" இது ஒருத்தி.

"பாவம்டி தேவி. அவரை முடிச்சிட்டு எப்படி அமைதியாக இருக்கப் போகிறாளோ? அவள் என்ன செய் வாள் காதலிச்சுத் தொலைத்து விட்டாளே!" இன்னொருத்தி.

"என்னடி சொல்றீங்க, எனக்கெண்டா ஒண்டும் விளங்கல்ல."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் விளங்குதே. காதல் உனக்குக் கண்ணை மட்டும் மறைக்கல்ல, புத்தியையும் மறைச்சிட்டுது. அவங்களுக்கு ஆயுதம் தாங்கிய எல்லாரும் எதிரிகள் தான். படைக்கலன் தாங்கியவர்கள் எப்போதும் தங்களைத் தாக்கலாம் என்று எதிர்பார்க்கலாம் இல்லையா? நீ எப்படி அவருடன் நிம்மதியாக குடும்பம் நடத்தப் போகிறாய்?"

இப்படி பலவாறாகக் கூறிவிட்டு அவர்கள் போய் விட்டார்கள். நுண்ணோக்கி மூலம் விரிவுபடுத்திப் பார்த்த தேவி, "இப்போது எனக்குத் திருமணம் வேண்டாம்" என்று மறுத்துவிட்டாள். யார் என்ன சொல்லியும் அவள் கேட்கவில்லை. மறுப்பதன் காரணமும் சொல்லவில்லை. அத்துடன் அசோக்குக்குக் கடிதம் போடுவதையும் நிறுத்தி கொண்டாள்.

என்ன செய்வது என்று அறியாமல் தவித்த அசோக், இரண்டு நாட்களின் பின்னர் நேரே தேவியிடம் கேட்டு விடுவது என்று அவள் வீட்டுக்கு வந்தான்.

அன்று அங்கு அப்போது தேவி இருக்கவில்லை. மாமாதான் வரவேற்றார்.

"என்ன மாமா இது நியாயமா? என்ன நடந்தது? ஏன் தேவி மறுக்கிறாள்?" என்று கேள்வி கேள்வியாகக் கேட்டு வைத்தான். அவனுக்கு இருக்கும் ஆத்திரம் அவருக்குப் புரிந்தது. ஆனால் மகள் மறுக்கும் காரணம் தான் புரியவில்லை.

"தம்பி அதுதான் எனக்கும் விளங்கவில்லை. ஆனால் உனக்கென்று பேசித் தீர்மானித்தது தீர்மானித்ததுதான். கோயிலுக்கு நேர்ந்த ஆடு மாதிரித்தான் அவள். நீ என்ன செய்வியோ? ஏது செய்வியோ? எனக்குத் தெரியாது" என்றார்.

"அவள் விரும்பவில்லை என்றால் நான் என்ன செய்வது மாமா? மனம் விரும்பாத ஒருத்தியுடன் எப்படிக் குடும்பம் நடத்துவது?"

"என்ன மருமகன், நீங்க இப்படிச் சொல்றது? உங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசார நேசித்தவள் தானே? இப்போது ஏதோ சலனம் ஏற்பட்டிருக்கலாம். கல்யாணத்திற்குப் பிறகு எல்லாம் சரியாகிவிடும். என்னால் தான் மகளை மீற முடியவில்லை என்றால் உங்களாலுமா?"

"என்ன செய்யச் சொல்லுகிறீர்கள் மாமா?"

"இவளுடைய விருப்பம் இல்லாமல் கல்யாண ஏற்பாட்டைத்தான் என்னால் செய்ய முடியாது. ஆனால் வாற நாலாம் திகதி நாங்க பக்கத்தூருக்குச் சொந்தத்தில் ஒரு கல்யாணத்திற்குப் போறம். தேவியைத் தனிய விட்டிட்டுத்தான் போறம். பக்கத்து வீட்டு ஆச்சிதான் துணை. நீங்க வந்தா யாரும் சந்தேகப் படமாட்டாங்க. இனி உங்க திறமையைப் பொறுத்தது" என்று கூறியவர் எழுந்து விட்டார்.

அசோக்கும் எழுந்தான்.

"இருங்க தேநீர் குடிச்சுட்டுப் போகலாம்" என்று அவர் உள்ளே செல்ல, மாமி தேநீருடன் வந்து, ரீப்போவில் வைத்து விட்டு, முந்தானையை இழுத்து மூடிக்கொண்டாள்.

தேநீரைக் குடித்ததும் எழுந்து, "நான் போயிட்டு வாறன் மாமி, மாமாட்ட சொல்லுங்க" என்று கூறிவிட்டு, வெளியேறி நடந்தான். அவனது திட்டங்கள் அவனுக்கு முன்னே ஓடின. மாமா உங்கட உதவி இருந்தா என்னதான் செய்யமாட்டேன், என்று எண்ணிக் கொண்டான். ஆனால் அதுவரை அமைதியாக இருக்கத்தான் முடியவில்லை.

அந்த நாளும் வந்தது.

தேவியின் வீட்டில் முன்னால் ஒரு கார் சப்தித்தது. ஒரு பெண்ணும் ஆணும் அதிலிருந்து இறங்கினர். தேவி வெளியே வந்து பார்த்தாள்.

தேவி என்பது யார்? நீங்களா? பஸ் அக்சிடன்டில் உங்கட அப்பாவுக்குச் சீரியஸ். உங்களை அழைத்து வரச் சொன்னார் என்றதுதான் தாமதம், அப்பா என்றவாறு ஓலமிட்டுக் கொண்டே கதவை இழுத்துப் பூட்டித் திறப்பைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வீட்டு ஆச்சியிடம் கொடுத்துவிட்டு ஓடி வந்து ஏறிக் கொண்டாள்.

கார் அசோக் வீட்டுக்குப் போய் நின்றதும், "ஏன் இங்கே..?" என்று கேட்டாள் சிறிது பதற்றத்துடன்.

"மருமகனாம் அசோக் என்பவரையும் கூட்டிவரச் சொன்னாரு. வரும் போது அவரிடம் விசயத்தைச் சொல்லி, தயாராக இருக்கும்படி கூறிவிட்டுத்தான் உங்களை அழைக்க வந்தோம். அதோ அவரும் வருகிறார்."

மௌனித்தாள்.

"அசோக் ஓடிவந்து காரில் ஏறிக் கொண்டான். என்ன தேவி, நீ என்னை மறந்தாலும் மாமா என்னை மறக்கல்ல பார்த்தாயா?" என்றான்.

அழுகைதான் பொத்துக் கொண்டு வந்தது. அவளுக்கு ஓர் ஆறுதல் அரவணைப்புத் தேவையாக இருந்தது. அசோக் மெல்ல தலையைத் தடவினான். அவள் தட்டிவிடவில்லை.

கார் ஒரு வீட்டுக்கு முன் போய் நின்றதும் அதிர்ச்சி யடைந்தாள். வியப்பு மேலிட்டது கண்களில் குளம் கரையை உடைக்கத் தயாராகின.

"மாமாவுக்கும் மாமிக்கும் ஒண்டுமில்ல. இன்று நமக்குத் தான் திருமணம். அதுதான், என்னைச் செய்ய நீ விரும்பாத தால் மாமா, மாமி, அம்மாவும் இல்லாமல் இது நடக்க வேண்டியிருக்கிறது வேறொன்றும் இல்லை. நல்ல பிள்ளை யாக நடந்து கொள்."

சிறிது நேரம் அடம்பிடித்து ஆர்பாட்டம் செய்தவள். அங்கு எதுவும் எடுபடாது என்றதும் அடங்கிப் போனாள். "நானென்ன அனாதையா? யாரும் இல்லாமல் இப்படிச் செய்ய?" என்று சிணுங்கினாள்.

"அதைத்தான் நீ வேண்டாமென்று விட்டாயே. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களில் அகதி முகாமிலே எத்தனை திருமணங்கள், எத்தனை சாந்தி முகூர்த்தங்கள் நடக்கின்றன. நமது இப்படி யாவது நடக்கிறது என்று திருப்திப்பட்டுக் கொள். எல்லாம் உன்னால்தான் என்பதை மறந்து விடாதே. விதி யாரை விட்டது?" என்றான் அவன்.

அவள் இப்போது அடம்பிடிக்கவில்லை. மனதார விரும்பாவிட்டாலும் மறுக்க முடியவில்லை. ஏற்கனவே மனதாரப் பிடித்து இருந்தவன் தானே!

எல்லா ஏற்பாடுகளும் துரித கதியில் நடந்தது. வீட்டுப் பெரியவர் ஒருவரின் வழிநடத்தலில் மூன்று வெற்றிலை, பாக்குப் பழத்துடன் திருமணம் சுபமுகூர்த்தத்தில் நடந்தேறியது. அன்றிரவே சாந்தி முகூர்த்தமும் முடிந்தது.

விடிந்தால் பதிவு நடக்கும். பகல் விருந்துக்கு வீட்டுக்கு வருவதாக மாமாவுக்கு செய்தி அனுப்பினான் அசோக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகில்வண்ணன்

முகில்வண்ணன் வே. சண்முகநாதன், சமாதான நீதவான் (Justice of Peace) அவர்கள், இலங்கையில் கல்முனை, பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்முனை, பற்றிமாக் கல்லூரியில் கல்வி பயின்றவர்.
லேடன் நிறுவனத்தில் கட்டிடப் பொறியியலாளராகக் கடமையாற்றியவர். வயதெய்தி ஓய்வு பெற்றவர். கல்வி கரையில் என்பதால் தன் வயது பாரார், தொழில் செய்து கொண்டே, தொடர்ந்து படித்தார், பொறியியலாளரானார், பதவி உயர்வு பெற்றார். ஓய்வு பெற்றார். பின்னரும் வெகுசனத் தொடர்புத் துறையில் பட்டயம் (Diploma), சட்டத்தில் பட்டயம் என்பன கற்றிருக்கின்றார்.
இலங்கையில் உள்ள வார இதழ்களிலும் சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. சிறுகதை, குறுநாவல், நாவல்,கவிதை, கட்டுரை, சிறுவர் நவீனம், சிறுவர்களுக்கான கதை - கவிதைகள், மொழிபெயர்ப்பு எனவும் சைவ சமயம், தமிழ் இலக்கியம் எனப் பல துறைகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி உள்ளார்.கடந்த சில ஆண்டுகளாக ஆன்மீகத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். ஆன்மீகக் கல்வியை மேற்கொண்டுவருகிறார். தற்சமயம் ஆன்மீகக் கவிதை கட்டுரைகள் எழுதி வருகிறார். ஆன்மீக நூல்களை மொழிமாற்றம் செய்வது இவரது சிறப்பான பணி.
2006இல் சென்னை, மித்ரா பதிப்பகத்தினூடாக அவள் ஒரு தமிழ்ப் பெண் என்னும் சிறுகதைத் தொகுதியையும் இரு குறுநாவல்களின் தொகுதியான ஆனந்தக் கண்ணீர் நூலையும் வெளியிட்டார்.
சிறுவயது முதல் சமூக, சமய சேவைகளில் ஆர்வம் கொண்டு உழைத்தவர். இதுவரை 17 சமூக, சமய நிறுவனங்களில் முக்கிய பதவிகளில் இருந்துள்ளார். இவரது வழிகாட்டலில் சில நிறுவனங்கள் முன்மாதிரி (Model) நிறுவனங்களாகப் பெயர் பெற்றன. இவரின் சமூக, சமயத் தொண்டுகளைப் பாராட்டிய இலங்கை அரசின் நீதியமைச்சு, இவருக்கு, அகில இலங்கைச் சமாதான நீதவான் பட்டமளித்துக் கௌரவித்துள்ளது.

9788189708325

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org